கடையிலிருந்து 415 குடும்ப அட்டைகளைப் பிரித்து கே.சி. பழவூர் கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை 24-1-2009 முதல் செயல்படுகிறது. ராதாபுரம் வட்டம், திசையன்விளை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்தும் அப்புவிளை நியாய விலைக் கடையில் மொத்தம் 393 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் காமராஜ் நகரில் உள்ள 36 குடும்ப அட்டைகளும் அடங்கும். அப்புவிளை நியாய விலைக் கடைக்கும், காமராஜ் நகர் பகுதிக்கும் இடையே உள்ள தூரம் 2 கிலோ மீட்டர் ஆகும். அரசின் நிபந்தனையின்படி அப்புவிளை நியாய விலைக் கடைக்கும் காமராஜ் நகர் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கிலோ மீட்டருக்கு மேல் இருந்ததாலும் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாக உள்ளதாலும், காமராஜ் நகர் பகுதியில் 36 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், மேற்படி பகுதியில் புதிய பகுதிநேரக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. ராதாபுரம் வட்டம், குட்டம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்பட்டு வரும் கரைசுத்து உவரி நியாய விலைக் கடையிலிருந்து 224 குடும்ப அட்டைகளைப் பிரித்து கீழ் உவரி கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை 22-2-2009 முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

27—

நியாய விலைக் கடை

வினா எண் 47061—டாக்டர். க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, சோழசிராமணி ஊராட்சி, சந்தைப்பேட்டையில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடையைத் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை தொகுதி, சோழசிராமணி ஊராட்சி, சந்தைப்பேட்டையில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்

2010 மே 14]

கடைக்கான கட்டடம் 15-8-2009 அன்று திறக்கப்பட்டு, சோழசிராமணி நியாய விலைக் கடை எண் 2 என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது.

28—

நியாய விலைக் கடை

வினா எண் 47074—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கம்பலாப்பட்டி ஊராட்சி, பாரமடையூர் கிராமத்திற்கு நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கோடங்கிபட்டி நியாய விலைக் கடை மொத்தம் 750 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையில் பாரமடையூரில் உள்ள 180 குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட்டுள்ளன. கோடங்கிபட்டி நியாய விலைக் கடைக்கும் பாரமடையூர் பகுதிக்கும் இடையே உள்ள தூரம் ½ கிலோ மீட்டர் ஆகும். பாரமடையூர் பகுதியில் 180 குடும்ப அட்டைகள் இருந்த போதிலும் கோடங்கிப் பட்டி நியாய விலைக் கடைக்கும், பாரமடையூர் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கிலோ மீட்டருக்குள் இருப்பதால் அரசின் நிபந்தனைப்படி பாரமடையூர் பகுதியில் புதிய பகுதி நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

29—

நியாய விலைக் கடை

வினா எண் 47468—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2010 மே 14

வள்ளியூர் ஒன்றியம், அச்சம்பாடு ஊராட்சி, பண்டாரகுளம் கிராமம், குமாரபுரம் ஊராட்சி, அந்தோணியார்புரம் கிராமம் ஆகிய பகுதிகளில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

வள்ளியூர் ஒன்றியம், அச்சம்பாடு ஊராட்சி, அச்சம்பாடு (இருப்பு) கிழவனேரி தாய்க் கடையிலிருந்து 122 குடும்ப அட்டைகளைப் பிரித்து பண்டாரகுளம் கிராமத்தில் 2-வது பகுதி நேரக் கடை 3-1-2009 முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

அந்தோணியார்புரம் கிராமத்தில் 52 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்குடும்ப அட்டைகள் அனைத்தும் இப்பகுதியிலிருந்து 1.8 கிலோ மீட்டர் தூரத்தில் மொத்தம் 413 குடும்ப அட்டைகளைக் கொண்டு சுவிசேஷபுரம் தொற்காள் மகளிர் சுய உதவிக் குழுவால் நடத்தப்பட்டு வரும் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி நியாய விலைக் கடைக்கான அத்தியாவசியப் பொருட்கள் சுய எடுப்பு முறையில் நுகர்வு செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. எனவே, அந்தோணியார்புரம் கிராமத்திற்கென தனியாக நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

30—

புதிய பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 48386—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், குப்பூர் ஊராட்சி பெரிய குரும்பட்டியில் இயங்கும் முழுநேர நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டவும், வி. முத்துப்பட்டி ஊராட்சி, திட்டம்பட்டி தண்டா கிராமத்திற்கு புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 மே 14]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், குப்பூர் ஊராட்சி, குப்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் பெரிய குரும்பட்டி நியாய விலைக் கடை 506 குடும்ப அட்டைகளுடன் ஊர் பொதுமக்கள் நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டடத்தில் இலவசமாக செயல்பட்டு வருகிறது. எனினும் இந்நியாய விலைக் கடைக்கென தனியே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. வி. முத்தம்பட்டி தாய் நியாய விலைக் கடையிலிருந்து ஏற்கெனவே 3 பகுதி நேர கடைகள் உள்ளதால் 4-வதாக திட்டம்பட்டி தண்டா கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை துவக்க அரசு விதிகளின்படி சாத்தியக் கூறுகள் இல்லை.

31—

நியாய விலைக் கடை

வினா எண் 49179—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஏற்காடு தொகுதி, மேட்டுப்பட்டி, தாதனூர் ஊராட்சி, முட்டக்கடை கிராமத்திற்கு நியாய விலைக் கடை புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், மேட்டுப்பட்டி, தாதனூர் ஊராட்சி முட்டக்கடை கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டு கடந்த 14-11-2009 முதல் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது.

32—

நியாய விலைக் கடை

வினா எண் 50028—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சிறுகுன்றம் எஸ்டேட் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, சிறுகுன்றம் எஸ்டேட் பகுதியில் 418 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே ஒரு நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. எனவே அப்பகுதியில் மீண்டும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

33—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 50312—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் சொக்கையன்பட்டி, குயவன்குளம் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 மே 14]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் ஏனாதி முழுநேர நியாய விலைக் கடையிலுள்ள 572 குடும்ப அட்டைகளில் சொக்கையன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 52 குடும்ப அட்டைகளும் குயவன்குளம் கிராமத்தைச் சேர்ந்த 42 குடும்ப அட்டைகளும் அடங்கும். சொக்கையன்பட்டி, குயவன்குளம் ஆகிய பகுதிகளில், ஏனாதி தாய் நியாய விலைக் கடையிலிருந்து 1.5 கிலோ மீட்டருக்கு மேல் தூரம் இருந்தாலும், மேற்படி பகுதிகளில் 150-க்கும் குறைவான குடும்ப அட்டைகள் உள்ளதாலும், உத்தேசிக்கப்பட்ட பகுதிநேரக் கடை அமைக்கப்பட்ட பின்னர் தாய் கடையில் 500-க்கும் குறைவான குடும்ப அட்டைகள் உள்ளதாலும், உத்தேசிக்கப்பட்ட பகுதி நேரக் கடை அமைக்கப்பட்ட பின்னர் தாய்க் கடையில் 500-க்கும் குறைவான குடும்ப அட்டைகள் இருக்க வாய்ப்புள்ளதாலும், சொக்கையன்பட்டி, குயவன்குளம் பகுதியில் பகுதி நேரக் கடை துவக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

34—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 55429—திரு. எம். பன்னீர்செல்வம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி-மாதிரி வேலூர் ஊராட்சி, கீழவாடி, சோதியக்குடி ஊராட்சி, கீரங்குடி, திருவாலி ஊராட்சி, கீழச்சாலை, கற்கோவில் ஊராட்சி, தொழுதூர், ஆணைக்காரன் சத்திரம் ஊராட்சி, நாதல்படுகை ஆகிய பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி-மாதிரி வேலூர் ஊராட்சி, கீழவாடி, சோதியக்குடி ஊராட்சி, திருவாலி ஊராட்சி, கீழச்சாலை, கற்கோயில் ஊராட்சி, தொழுதூர் கிராமங்களில் முறையே 21-6-2008, 13-6-2008, 29-3-2008 மற்றும் 29-1-2009 ஆகிய தேதிகளில் பகுதிநேர அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. ஆணைக்காரன் சத்திரம் ஊராட்சி, நாதல்படுகை கிராமத்தில் 140 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், இக்கிராமம் மிகத்தாழ்வான கொள்ளிடம் ஆற்றுப்படுகையில் உள்ளதாலும், அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு பாதிப்புக்கு உள்ளாவதாலும், அங்காடி அமைக்க வழங்கப்பட்ட கட்டடம் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாலும் இப்பகுதியில் பகுதிநேர அங்காடி திறக்க சாத்தியமில்லை.

35—

நியாய விலைக் கடை

வினா எண் 57311—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, ஒட்டம்பட்டு கிராமத்திற்கு நியாய விலைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முகையூர் தொகுதி, ஒட்டம்பட்டு கிராமத்திலுள்ள முழுநேரக் கடை ஏற்கெனவே அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் புதியதாக கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

2010 மே 14]

36—

புதிய நியாய விலைக் கடை

வினா எண் 57521—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் பேரூராட்சி, நியாய விலைக் கடை எண் **1**-*ஐப் பிரித்து கொளத்தூர்* **11**-*வது வார்டு சின்ன மேட்டூரில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி கொளத்தூர் பொன்னி-1 நியாய விலைக் கடையிலிருந்து 350 குடும்ப அட்டைகளைப் பிரித்து கொளத்தூர் 11-வது வார்டு சின்ன மேட்டூரில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை 12-11-2008 முதல் திறந்து செயல்பட்டு வருகிறது.

37—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 57522—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதி, சித்திரப்பட்டிப்புதூர் ஊராட்சி, பூமனூர் நியாய விலைக் கடையைப் பிரித்து மேல்மோளப்பறையூர் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொளத்தூர் வட்டாரம் சித்திரப்பட்டிப்புதூர் ஊராட்சி மேல்மோளப்பறையூர் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகியுள்ள போதிலும், அதற்குத் தேவையான கட்டடம் இலவசமாக அளிக்க யாரும் முன்வராததால் மேல்மோளப்பறையூர் பகுதியில் ஒரு புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

38—

நியாய விலைக் கடை

வினா எண் 61274—திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, கீழ்குப்பம் ஊராட்சி, துறையூர், பாப்பனூர் ஆகிய இரு கிராமங்களை ஒருங்கிணைத்து புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, கீழ்குப்பம் ஊராட்சி, பாரூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் கீழ்குப்பம் நியாய விலைக் கடையிலிருந்து துறையூர் மற்றும் பாப்பனூர் கிராமங்களை சேர்த்து 142 குடும்ப அட்டைகளைப் பிரித்து துறையூர் கிராமத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை 4-12-2008 முதல் செயல்பட்டு வருகிறது.

2010 மே 14]

39—

புதிய கட்டடம்

வினா எண் 64583—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் நாப்பாக்கம் கிராமத்தில் பொது விநியோக கடை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், நாப்பாக்கம் கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அரசுக் கட்டடம் கட்டப்பட்டு முடிக்கப்பட்டு விட்டது. எனவே, புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

40—

கட்டட வசதி

வினா எண் 64834—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், டேனிஸ்பேட்டை ஊராட்சி, காஞ்சேரி பகுதியில் புதிய நியாய விலைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம் டேனிஸ்பேட்டை கு. குட்டப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட காஞ்சேரி பகுதியில் உள்ள 110 குடும்ப அட்டைதாரர்கள் மோளகாட்டூர் நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகின்றனர்.

[2010 மே 14

மோளகாட்டூர் நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட சங்கத்தில் சொந்த நிலம் ஏதும் இல்லை என்பதாலும், இக்கடைக்கு கட்டடம் கட்ட இலவச நிலம் வழங்க எவரும் முன்வராததாலும் தற்போது அரசு கட்டடம் கட்ட சாத்திய கூறுகள் இல்லை. மேலும் காஞ்சேரி பகுதியில் நியாய விலைக் கடை ஏதும் இல்லை என்பதால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

41—

கட்டட வசதி

வினா எண் 88231—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, வலங்கொண்டான் விடுதி ஊராட்சி, மோலுடையான்பட்டி அங்காடிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, வலங்கொண்டான்விடுதி ஊராட்சி, மோலுடையான்பட்டி கிராமத்தில் நியாய விலைக் கடை ஏதும் செயல்படவில்லை. இக்கிராமத்தில் 92 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்குடும்ப அட்டைதாரர்கள் 1 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வலங்கொண்டான்விடுதி நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகின்றனர். எனவே, மோலுடையான்பட்டி கிராமத்தில் நியாய விலைக் கடை ஏதும் செயல்படாததால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

42—

கட்டடம்

வினா எண் 88723—திரு. வை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கச்சுப்பள்ளி ஊராட்சி, அய்யம்பாளையம், கோவலன்காடு மற்றும் கன்னந்தேரி கிராமம்

2010 மே 14]

ஒண்டிக்கடை பகுதிகளிலுள்ள பகுதிநேர பொது விநியோகக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கச்சுப்பள்ளி ஊராட்சி, அய்யம்பாளையம் கிராமத்தில் கோவலன்காடு பகுதிநேர நியாய விலைக் கடைக்கு அப்பகுதியில் உள்ள பொதுமக்களால் இலவச கட்டடம் வழங்கப்பட்டுள்ளது. கன்னந்தேரி கிராமம் ஒண்டிக்கடை பகுதிநேர நியாய விலைக் கடை அப்பகுதியில் உள்ள பொதுமக்களால் வழங்கப்பட்ட இலவசக் கட்டடத்தில் செயல்படுகிறது. மேற்படி இரண்டு நியாய விலைக் கடைகளுக்கும் அரசு கட்டடம் கட்ட அப்பகுதியிலுள்ள ஊர் பொதுமக்கள் யாரும் நிலம் தர முன்வராததால் கோவலன்காடு மற்றும் ஒண்டிக்கடை பகுதிநேர நியாய விலைக் கடைகளுக்கு அரசு கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

43—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 90811—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காடையாம்பட்டி ஒன்றியம், ராமமூர்த்தி நகர் நியாய விலைக் கடையை இரண்டாக பிரித்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பாண்டியன் நகரில் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சேதுநாயக்கன்பட்டி புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தால் நடத்தப்படும் கே. மோரூர்-1 மற்றும் கே. மோரூர்-2 நியாய விலைக்

கடைகளிலிருந்து 154 குடும்ப அட்டைகளைப் பிரித்து பாண்டியன் நகர் பகுதியில் புதிய பகுதிநேர கடை அமைத்து 8-10-2009 முதல் செயல்பட்டு வருகிறது.

44—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 92009—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரணமல்லூர் தொகுதி, பெரணமல்லூர் ஒன்றியம், விசாமங்கலம் ஊராட்சி, வெளுங்கம்பட்டு கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரணமல்லூர் தொகுதி, பெரணமல்லூர் ஒன்றியம், விசாமங்கலம் ஊராட்சி, வெளுங்கம்பட்டு கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை துவக்கப்பட்டு 17-6-2009 முதல் செயலபட்டு வருகிறது.

45—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 93201—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பானாபுரம் ஊராட்சி, முத்தாம்பட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2010 மே 14]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பானாபுரம் நியாய விலைக் கடையிலிருந்து 224 குடும்ப அட்டைகளை பிரித்து முத்தாம்பட்டி பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை 3-7-2009 முதல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

46—

புதிய நியாய விலைக் கடை

வினா எண் 96985—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டை குடியானவர் தெருவில் புதிய நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பொதட்டூர் பேட்டை கூட்டுறவுப் பண்டகசாலை 1 மற்றும் 2 ஆகிய நியாய விலைக் கடைகளை மறுசீரமைப்பு செய்து குடியானவர் தெருவில் முழுநேர நியாய விலைக் கடை 21-8-2009 முதல் செயல்பட்டு வருகிறது.

47—

நியாய விலைக் கடை

வினா எண் 101116—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, இராமிரெட்டிப்பட்டி ஊராட்சி, குருக்குப்பட்டியான் வளவு பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 மே 14

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம் தாரமங்கலம் தொகுதி, இராமிரெட்டிப்பட்டி ஊராட்சி, குருக்குப்பட்டியான் வளவு பகுதியில் 681 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருவதால் மீண்டும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

48—

நியாய விலைக் கடை

வினா எண் 101356—திரு. செ. பொன்னுதுரை: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெருந்துறை தொகுதி, நசியனூர் பேரூராட்சி, என். தயிர்பாளையம் கிராமம், ஆலிச்சாம்பாளையத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பகுதிநேர அங்காடி அமைக்கக்கோரும் ஆலிச்சாம்பாளையத்தில் 150-க்கும் குறைவான குடும்ப அட்டைகளே உள்ளன. இந்தப் பகுதியில் தாய்க்கடையான ஏபி 025 தயிர்பாளையம் அங்காடியில் ஆலிச்சாம்பாளையம் பகுதி குடும்ப அட்டைகளையும் சேர்த்து மொத்தம் 328 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால் ஆலிச்சாம்பாளையத்தில் பகுதிநேர அங்காடி திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

49—

நியாய விலைக் கடை

வினா எண் 101741—திரு. பெ. மோகன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2010 மே 14]

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், மேலபாண்டியாபுரம் கிராமத்தில் நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியம், மேலபாண்டியாபுரம் கிராமத்தில் 209 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, மேலபாண்டியாபுரம் கிராமத்தில் மீண்டும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

50—

பணியாளர் நியமனம்

வினா எண் 102007—திரு. போ. சின்னப்பன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, கீழ விளாத்திகுளம் நியாய விலைக் கடைக்கு பணியாளரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, கீழவிளாத்திகுளம் நியாய விலைக் கடைக்கு 17-8-2009 முதல் தனியாக விற்பனையாளர் திரு. செல்லத்துரை என்பவர் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

[2010 மே 14

51—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 102174—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், மல்லியகுந்தம் ஊராட்சி, பல்லக்காடு பகுதிக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம்/ தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம் மல்லியகுந்தம் ஊராட்சி, குப்பக்காரிப்பட்டி பகுதியில் முழுநேர நியாய விலைக் கடை ஒன்று செயல்பட்டு வந்தது. தற்போது மல்லியகுந்தம் ஊராட்சி பல்லக்காடு பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு கட்டடத்திற்கு மேற்படி நியாய விலை அங்காடி மாற்றி 11-11-2009 முதல் செயல்பட்டு வருகிறது.

52—

போக்குவரத்து அலுவலகம்

வினா எண் 98294—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் கிளை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 மே 14]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் போதிய அளவு வாகன எண்ணிக்கை இல்லை. மானாமதுரைக்கு அருகிலேயே 18 கி.மீ. தொலைவில் சிவகங்கை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைந்துள்ளது. எனவே, மானாமதுரையில் கிளை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பது குறித்தான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

53—

புதிய பேருந்து

வினா எண் 104172—திரு. வை. காவேரி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம்-எளம்பிள்ளை-பணிக்கனூர்-ஜலகண்டாபுரம்-மேச்சேரி வழியில் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம்-எளம்பிள்ளை-பணிக்கனூர்-ஜலகண்டாபுரம் தடத்தில் நேரடி மற்றும் பகுதி வாரியாக அரசு மற்றும் தனியார் பேருந்துகளும், ஜலகண்டாபுரம்-மேச்சேரி தடத்திலும் அதே போன்று அரசு மற்றும் தனியார் பேருந்துகள் இயக்கப்பட்டு அப்பகுதியினர்க்கு போதிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

54—

கூடுதல் பேருந்து

வினா எண் 107404—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2010 மே 14

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றத்திலிருந்து வள்ளிபுரம் வழியாக மதுராந்தகத்திற்கு கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருக்கழுக்குன்றம் முதல் மதுராந்தகம் வரை வள்ளிபுரம் வழியாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட் நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 24 நடைகளை இயக்குகிறது. தற்பொழுது இயக்கப்படும் நடைகள் இப்பொழுது உள்ள போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதென கருதப்படுகிறது.

55—

பேருந்து வசதி

வினா எண் 107412—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், பாண்டூர் கிராமத்திலிருந்து கிளாப்பாக்கம் காட்டூர், திருக்கழுக்குன்றம் வழியாக செங்கல்பட்டிற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருக்கழுக்குன்றம், காட்டூர், வெள்ளைப்பந்தல், கிளாப்பாக்கம் தடத்தின் நீளம் 27.0 கி.மீ. ஆகும். இத்தடத்தில் செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் வழியாக காட்டூர் வரையிலான 16.0 கி.மீ. தூரத்திற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக காஞ்சிபுரம் மண்டலம் மூலம் நகரத் தடங்கள் தினசரி 14 நடைகள் பேருந்து வசதி உள்ளது. கிளாப்பாக்கம் கிராமம் செங்கல்பட்டிலிருந்து நகரத் தடம் எண் டி27 மூலம் பேருந்து வசதி பெற்றுள்ளது. பாண்டூர் கிராமமும் செங்கல்பட்டிலிருந்து நகரத்தடம் எண் டி19 மூலம் பேருந்து வசதி பெற்றுள்ளது. இத்தடத்தின்

2010 மே 14]
அனைத்து கிராமங்களும் பகுதி வாரியாக பேருந்து வசதி பெற்றுள்ளது. இவை இப்பகுதி போக்குவரத்துத் தேவைகளுக்கு போதுமானதாக உள்ளது.

56—

கூடுதல் பேருந்து

வினா எண் 107417—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்பாக்கத்திலிருந்து-வாயலூர்-நெரும்பூர்-திருக்கழுக்குன்றம் வழியாக செங்கல்பட்டு வரை கூடுதலாக பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கல்பாக்கம்-வாயலூர்-நெரும்பூர்-திருக்கழுக்குன்றம்-செங்கல்பட்டு தடத்தின் நீளம் 34.0 கி.மீ. ஆகும். இத்தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட் புறநகர் பேருந்துகளின்மூலம் தினசரி 16 நடைகளும், தனியார் பேருந்துகளின்மூலம் தினசரி 17 நடைகளும் இயக்கப்படுகின்றன. தற்பொழுது உள்ள போக்குவரத்துத் தேவைக்கு இந்த இயக்கங்கள் போதுமானதெனக் கருதப்படுகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

57—

பேருந்து வசதி

வினா எண் 107463—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தொகுதி, பெரும்பாக்கம்-காஞ்சிபுரம் வரை இயக்கப்படும் தடம் எண் T 77 நகரப் பேருந்தை காலை *6.45* மணிக்கு பதிலாக *7.45* மணிக்கு பள்ளிக் குழந்தைகள் நலன் கருதி மாற்றி இயக்க அரசு ஆவன செய்யுமா?

[2010 மே 14

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்பொழுது நகரத் தடம் எண் டி77 காஞ்சிபுரம் பெரும்பாக்கம் ஊர்களுக்கு பலமுனைத்திட்டத்தின்கீழ் இயக்கப்படுகிறது. இந்த நகரப் பேருந்தை காலை 7.00 மணிக்கு பெரும்பாக்கத்தில் நடைஎடுத்து காஞ்சிபுரம் வந்து 8.15 மணிக்கு பனப்பாக்கத்திற்கு இயக்கப்படுகிறது. மேற்கண்ட நடைகளின் நேரத்தை மாற்றி அமைத்தால், மற்ற ஊர் பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள்.

58—

பேருந்து இயக்கம்

வினா எண் 108549—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம் III) நாகர்கோவில் மூலம் கஸ்தூரிரெங்கபுரம் வரை இயக்கப்படும் தடம் எண் 515F-ஐ அணைக்கரை ரெட்டைகுளம் வழியாக திசையன்விளை வரை இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தடம் எண் 515-எப் பேருந்து காலை 8.00 மணிக்கு நாகர்கோவிலிலிருந்து ராதாபுரம் வழியாக கஸ்தூரிரெங்கபுரம் வரையும் மாலை 5.00 மணிக்கு கஸ்தூரிரெங்கபுரத்திலிருந்து ராதாபுரம் வழியாக நாகர்கோவிலுக்கும், பள்ளி மாணவ, மாணவியர் வசதிக்காக இயக்கப்படுகிறது. இந்தத் தடப்பேருந்து நீட்டிப்பு செய்யப்படுமானால் இதனை தற்போது உபயோகித்துக் கொண்டிருக்கும் மாணவ மாணவியர் பாதிப்புக்குள்ளாவார்கள். எனவே, மேற்படி தடத்தில் பேருந்தை நீட்டிப்பு செய்தல் சாத்தியமில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

59—

பேருந்து வசதி

வினா எண் 108551—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம் III) நாகர்கோவில் மூலம் இயக்கப்படும் தடம் எண் 570, 573 (F.P) பேருந்துகளை காளிகுமாரபுரம் மற்றும் கோடாவிளை ஊர்களில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நாகர்கோவில் மண்டலம் மூலம் இயக்கப்படும் தடம் எண் 570, 573 (F.P) பேருந்துகள் காளிகுமாரபுரம் மற்றும் கோடாவிளை ஊர்களில் நின்று செல்ல அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

60—

நகரப் பேருந்து

வினா எண் 108982—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம்-கடும்பாடி-மணமை வழியாக குன்னத்தூர் வரை நகரப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நகரப் பேருந்து தடம் எண் டி.28 மூலம் செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம், கடும்பாடி, மணமை வழியாக குன்னத்தூருக்கு தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன.

[2010 மே 14

61—

தரம் உயர்த்துதல்

வினா எண் 44829—திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், முனைஞ்சிப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியத்தில் முனைஞ்சிப்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. தற்போது 50 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேசிய ஊரக நலத் திட்ட உதவியின்கீழ் தரம் உயர்த்த அரசாணை பெறப்பட்டு கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பட்டியலில் முனைஞ்சிப்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் இடம் பெறவில்லை. எனவே, முனைஞ்சிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

62—

விரிவுபடுத்துதல்

வினா எண் 45080—திரு. எம். அன்பழகன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், சாப்டூரில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

2010 மே 14]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

2009-2010 ஆம் நிதியாண்டில் தேசிய ஊரக நலத் திட்ட உதவியின்கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்கள் விரிவாக்கம் மற்றும் சீரமைப்பு பணிகள் செய்ய ரூ.16.80 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் சாப்டூர் சமுதாய நல மையத்தை விரிவுபடுத்த நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே, சாப்டூர் சமுதாய நல மையத்தை விரிவுபடுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

63—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 59239—திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் ஒன்றியம், கும்பாரஅள்ளி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கும்பாரஅள்ளி கிராமத்தின் மக்கள் தொகை 1,300 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இக்கிராமத்திற்கு 5 கிலோ மீட்டர் தொலைவில் காரிமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையமும், 21 கிலோ மீட்டர் தொலைவில் பாலக்கோடு அரசு மருத்துவமனையும் செயல்படுகின்றன. இக்கிராமம் காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,25,240 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி,

[2010 மே 14

காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது. மேலும் இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், கும்பாரஅள்ளி கிராமத்திற்கும் காரிமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் கும்பாரஅள்ளி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

64—

தரம் உயர்த்துதல்

வினா எண் 64484—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் முகையூர் தொகுதி ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றில் 30 படுக்கைகள் வசதி கொண்ட நிலையமாக ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் முகையூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இ.சி.ஜி. ஸ்கேன், எக்ஸ்ரே, பாய்ல்ஸ் அப்பாரட்டஸ், செமி ஆட்டோ அனலைசர் ஆகிய நவீன உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசின் கொள்கைப்படி, ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனடிப்படையில், முகையூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டுவிட்டதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மணலூர்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

2010 மே 14]

65—

தரம் உயர்த்துதல்

வினா எண் 64664—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனையை தரம் உயர்த்தி அறுவை சிகிச்சை அதிநவீன பிரிவு துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் ஆழியார் நகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் 4700 சதுரஅடி பரப்பளவு கொண்ட அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. ஆழியார் நகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சராசரியாக 6 பிரசவங்கள் நிகழ்கின்றன. சராசரியாக மாதமொன்றுக்கு 20 உள் நோயாளிகள் பயனடைகின்றனர். இம்மருத்துவமனைக்கு வருகைதரும் நோயாளிகளின் எண்ணிக்கையை ஒப்பிடுகையில், இவ்வாரம்ப சுகாதார நிலையத்திற்கு தற்போதுள்ள வசதிகளே போதுமானதாக உள்ளன. எனவே, வால்பாறை தொகுதி, ஆழியார் அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனையை தரம் உயர்த்தி அறுவை சிகிச்சை மற்றும் அதிநவீன பிரிவு துவங்க சாத்தியகூறுகள் இல்லை.

66—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 88034—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, கொண்டகரஅள்ளி ஊராட்சி, வத்தல்மலை பகுதி, பெரியூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் நிதியுதவி மற்றும் வழிகாட்டுதலின்படி தமிழகத்தில் 8706 துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு கோரிய கருத்துரு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்ட நிலையில், தற்சமயம் தருமபுரி தொகுதி, கொண்டகரஅள்ளி ஊராட்சி, வத்தல்மலைபகுதி, பெரியூரில் புதிய துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

67—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 97952—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நீலகிரி மாவட்டம், நுந்தளா பகுதியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழகத்தில், சமவெளிப் பகுதிகளில் 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதிகளில் 3,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற விகிதத்தில், மத்திய அரசின் நிதியுதவியுடன் இதுவரை 8,706 துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதிய துணை சுகாதார நிலையங்களுக்கான நிதி ஒதுக்கீடு கோரிய கருத்துரு

TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டமையால், தற்சமயம் புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

68—

புதிய துணை சுகாதார நிலையம்

வினா எண் 101608—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் தொகுதி, பாப்பிரெட்டிபட்டி வட்டம், கோபிசெட்டிபாளையம் ஊராட்சி, பாப்பிசெட்டிபட்டி கிராமத்தை உள்ளடக்கிய துணை ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

புதிய துணை சுகாதார நிலையங்களுக்கான நிதி ஒதுக்கீடு கோரிய கருத்துரு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளதால் தற்சமயம் புதிய துணை சுகாதார நிலையம் எதுவும் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

69—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 101979—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், மாகரல், கீழ் அம்பி கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 மே 14

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே (1) திருப்புக்குழி (2) பெரும்பாக்கம் (3) அவளூர் (4) கீழ்பேரமநல்லூர் ஆகியன செயல்படுகின்றன. மேலும், இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், மாகரல் கிராமத்திற்கும் கீழ்பேரமநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளது. காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கீழ் அம்பி கிராமத்திற்கும் திருப்புக்குழி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 4½ கிலோ மீட்டர் மட்டுமே உள்ளது. எனவே, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மாகரல் மற்றும் கீழ் அம்பி கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

70—

மருத்துவ முகாம்

வினா எண் 103788—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் ஒவ்வொரு கிராமங்கள்தோறும் வருமுன் காப்போம் மருத்துவ முகாம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதியில் ஓமலூர் வட்டாரத்திற்கு உட்பட்டு கருப்பூர், பாகல்பட்டி, சரக்கிபிள்ளையூர், தொளசம்பட்டி மற்றும் வெள்ளாளப்பட்டி ஆகிய 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையங்களும் 5,000 மக்கள் தொகை கொண்ட துணை சுகாதார பகுதிகளைத் தேர்வு செய்து வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. இந்த துணை சுகாதார பகுதிகளில் அனைத்து கிராமங்களும் அடங்கும்.

71—

தரம் உயர்த்துதல்

வினா எண் 108382—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, சந்தைதானம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் சந்தைதானம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. சந்தைதானம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 3 செவிலியர்கள் நியமிக்கப்பட்டு சுழற்சி முறையில் 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. எனவே, சந்தைதானம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

72—

மருத்துவர் நியமனம்

வினா எண் 108542—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2010 மே 14

சீர்காழி தொகுதி, சீர்காழி அரசு தலைமை மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள உதவி மருத்துவர் பணியிட எண்ணிக்கை 5. இந்த 5 உதவி மருத்துவர் பணியிடங்களும் தற்சமயம் ஒரு எலும்பு முறிவு, ஒரு குழந்தைகள் நலம், ஒரு மயக்கவியல், ஒரு மகப்பேறு மற்றும் ஒரு எம்.பி.பி.எஸ். பயின்ற மருத்துவர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளது. இம்மருத்துவமனைக்கு அறுவை சிகிச்சை மருத்துவரை நியமிக்க தற்சமயம் உதவி மருத்துவர் காலிப்பணியிடம் ஏதுமில்லை.

73—

தொழிற்சாலை

வினா எண் 18078—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன் புதூர் சந்தன மரங்களினால் அழகு சாதனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன் புதூரில் சந்தன மரங்களினால் அழகு சாதனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. எனவே, மேற்படி தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

2010 மே 14]

74—

அரிசி ஆலை குழுமம்

வினா எண் 63264—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயத்தில் அரிசி ஆலை குழுமம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) காங்கேயத்தில் குறு மற்றும் சிறுதொழில் நிறுவனங்கள் குழுமம் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் அரிசி ஆலை குழுமம் அமைப்பது தொடர்பாக மத்திய அரசின் திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களின்படி திருத்திய திட்ட அறிக்கை, குழுமத்திற்கான சிறப்பு நோக்க அமைப்பிடம் கேட்கப்பட்டுள்ளது. இக்குழுமத்திற்கு மாநில அரசு தனது பங்காக ரூ. 75.05 இலட்சம் வழங்க கொள்கை அளவில் ஒப்புதலளித்துள்ளது.

(ஆ) திருத்தப்பட்ட திட்ட அறிக்கை பெறப்பட்டதும், அது மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். அவ்வரசின் ஒப்புதல் பெறப்பட்டவுடன், குழுமம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை சிறப்பு நோக்க அமைப்பு மேற்கொள்ளும்.

75—

சிறு தொழில்கள்

வினா எண் 101971—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளாண்மை சிறு தொழில்களை கிராமப்புறங்களில் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளாண்மை சார்ந்த சிறு தொழில்களை கிராமப்புறங்களில் துவங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர் முன்வந்தால் மாவட்டத் தொழில் மையங்கள் தேவையான வழிகாட்டுதல்கள் செய்வதுடன், அத்தொழில்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை 2008-ல் அறிவிக்கப்பட்டுள்ள மானியங்கள் தகுதியினடிப்படையில் விண்ணப்பத்தின்பேரில் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

76—

நடுத்தர தொழில் வளாகம்

வினா எண் 105872—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கலசப்பாக்கம் தொகுதியில் நடுத்தர தொழில் வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்ற தொகுதியில் நடுத்தர தொழில் வளாகம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

தொழிற்சாலை

வினா எண் 109705—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2010 மே 14]

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் அலுமினிய பாத்திரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் அலுமினிய பாத்திரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

78—

மஞ்சள் தொழிற்சாலை

வினா எண் 109709—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் மஞ்சள் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் மஞ்சள் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

79—

சேமியா தயாரித்தல்

வினா எண் 109847—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 மே 14

(அ) காஞ்சிபுரம் தொகுதியில் சேமியா தயாரிக்கும் தொழில் துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் சேமியா தயாரிக்கத் தேவைப்படும் மூலப்பொருளான மரவள்ளிக் கிழங்கு போதுமான அளவிற்கு சாகுபடி செய்யப்படவில்லை. எனவே காஞ்சிபுரம் தொகுதியில் சேமியா தயாரிக்கும் தொழில் துவங்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

80—

தொழிற்சாலை

வினா எண் 110256—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் தேங்காய் துருவல் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலையைத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் தேங்காய் துருவல் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலையை அரசே நேரடியாக அமைக்கும் உத்தேசம் எதுவுமில்லை.

2010 மே 14]

81—

முத்திரைத் தாள்

வினா எண் 105931—திரு. பி. பலராமன்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முத்திரைத் தாள்களுக்கு மாற்று திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முத்திரைத் தாள்களுக்கு மாற்று திட்டமாக E-Stamping *என்னும் முறையை நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இம்முறை விரைவில் அமல்படுத்தப்படும்.*

82—

சிறுவர் பூங்கா

வினா எண் 106090—திரு. பா. செந்தமிழ்ச் செல்வன்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சிக் கோட்டையில் சிறுவர் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓர் இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அங்கு

[2010 மே 14

தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகளை மட்டும் சுற்றுலாத் துறை செய்து தருகிறது. விழுப்புரம் மாவட்டம், செஞ்சிக் கோட்டையில் சிறுவர் பூங்கா அமைத்தல் குறித்த கருத்துரு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

83—

விளம்பர பிரச்சாரம்

வினா எண் 106890—திருமதி ஜி. லதா: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களை விளக்கி பிரச்சாரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டத்தில் உள்ள சுற்றுலாத் தலங்கள் குறித்த தகவல்கள், படங்கள் மற்றும் வரைபடத்துடன் கூடிய மடிப்புக் கையேடு சுற்றுலாத் துறைமூலம் தயாரிக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. சுற்றுலாத் துறைமூலம் வெளியிடப்படும் விளம்பரங்கள் மூலமாகவும் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

84—

தாவரவியல் பூங்கா

வினா எண் 107387—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, தேக்கம்பட்டி ஊராட்சி, குருவம்பட்டியில் தாவரவியல் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2010 மே 14]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, தேக்கம்பட்டி ஊராட்சி, குருவம்பட்டியில் தாவரவியல் பூங்கா அமைக்கும் கருத்துரு ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை. தாவரவியல் பூங்க்கா அமைப்பது இத்துறையின் பணிகளில் இடம்பெறவில்லை. தொடர்புடைய துறை கருத்துரு அனுப்பினால் பரிசீலிக்கப்படும்.

85—

கிராமிய நிகழ்ச்சிகள்

வினா எண் 107429—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாமல்லபுரத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் தினமும் மாலையில் கிராமிய நிகழ்ச்சிகள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரத்தில் ஆண்டுதோறும் டிசம்பர் கடைசி வாரம் முதல் ஜனவரி கடைசி வாரம் வரை நாட்டிய விழா சுற்றுலாத் துறைமூலம் நடத்தப்பட்டு வருகிறது. தினமும் மாலையில் தமிழக கிராமியக் கலை நிகழ்ச்சிகள், நாட்டியங்கள், இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களின் நாட்டிய நிகழ்ச்சிகள் ஆகியன சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகிறது. நிகழ்ச்சிகளை காண வெளிநாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் மாமல்லபுரத்தில் தங்கி நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கின்றனர். தினமும் மாலையில் கிராமிய நிகழ்ச்சிகள் நடத்திடும் அளவு சாத்தியமும் இல்லை. வார இறுதியில் நடைபெற்ற நாட்டிய விழா மாதம் முழுமையும் நடைபெறும் 'இந்திய நாட்டியத் திருவிழா' வாகப் பரிணாம வளர்ச்சி அடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

[2010 மே 14

மாமல்லபுரத்தில் உள்ள புலிக் குகை பகுதியில் 26-12-2009 முதல் 31-12-2009 முடிய தொடர்ச்சியாக ஆறு நாட்கள் 'புலிக் குகை திருவிழா' சுற்றுலாத் துறைமூலம் சிறப்பான முறையில் நடத்தப்பட்டது.

86—

சுற்றுலாத் தலம்

வினா எண் 107526—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், கிளாப்பாக்கம் ஏரியில் புதிய வகை பறவைகள் அதிகம் வருவதனால் அதனைச் சுற்றுலாத் தலமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு சுற்றுலாத் துறைமூலம் தமிழகத்திலுள்ள அதிகம் அறியப்படாத சுற்றுலாப் பகுதிகள் மற்றும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகள் மட்டும் செய்து வருகிறது. செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், கிளாப்பாக்கம் ஏரிப் பகுதியை மேம்பாடு செய்தல் குறித்த திட்டக் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

வழிகாட்டி மதிப்பு

வினா எண் 107932—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு தற்போது உயர்த்தியுள்ள நில வழிகாட்டி மதிப்பினை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 மே 14]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) வெளிச்சந்தையில் நிலவும் மதிப்பினை கருத்தில் கொண்டும், பொது மக்களின் கருத்துகளைப் பெற்று பரிசீலித்தும், நில வழிகாட்டி மதிப்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. வழிகாட்டி மதிப்பு அதிகமாக உள்ளது என்று முறையீடு பெறப்பட்டால், அதனை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான மாவட்டக் குழுவின் அறிக்கை பெற்று பரிசீலித்து, பதிவுத் துறைத் தலைவரின் தலைமையிலான மைய மதிப்பீட்டுக் குழு முடிவு செய்து, குறைக்க வேண்டிய வழக்குகளில் மதிப்பினை குறைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) எழவில்லை.

88—

சுற்றுலாப் பயணிகள்

வினா எண் 113208—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, அக்காமலை மற்றும் புல்மலைப் பகுதிகளைப் பார்வையிட சுற்றுலாப் பயணிகளை அனுமதித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியிலுள்ள அக்காமலை மற்றும் புல்மலைப் பகுதிகள் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதாலும், இவற்றுக்குச் செல்லும் வழி தனியார் நிறுவனம் மற்றும் தனியாருக்குச் சொந்தமான இடத்தில் உள்ளதாலும், அக்காமலை மற்றும் புல்மலைப் பகுதிகளைப் பார்வையிட விரும்பும்

[2010 மே 14

சுற்றுலாப் பயணிகள் வனத் துறையினரின் அனுமதிக் கடிதத்தைப் பெற்று, அதனை உரிய தனியாரிடம் அளித்தால் மட்டுமே தனியாருக்குச் சொந்தமான பகுதி வழியாகச் செல்வதற்கு அனுமதிக்கப்படும் நடைமுறை உள்ளது. எனவே, வால்பாறை தொகுதியிலுள்ள அக்காமலை மற்றும் புல்மலைப் பகுதிகளைப் பார்வையிட விரும்பும் சுற்றுலாப் பயணிகள் வனத் துறையினரின் அனுமதி மற்றும் தொடர்புடைய தனியாரின் அனுமதியைப் பெற்ற பின்னரே அவ்விடத்திற்குச் செல்ல இயலும்.

89—

பெயர்ப் பலகைகள்

வினா எண் 102265—திருமதி ஆர். பிரேமா: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அவினாசி தொகுதியில் உள்ள கடைகள், வணிக நிறுவனங்கள், தொழில் நிறுவனங்களில் தமிழில் பெயர்ப் பலகைகள் வைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு கடைகள் நிறுவன சட்ட விதி, 1948 விதி 15-ல் தமிழில் பெயர்ப் பலகை வைப்பது தொடர்பாக சட்ட விதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப் பலகை வைப்பது தொடர்பாக தொழிலாளர் துறையின் சார்நிலை தொழிலாளர் ஆய்வர்கள் ஆய்வு மேற்கொண்டு வருவதுடன், அவ்வாறு தமிழில் பெயர்ப் பலகை வைக்காத நிறுவனங்கள்மீது வழக்குத் தொடர்ந்து அபராதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. அதன், அடிப்படையில் அவினாசி பகுதியில் 2009-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கை பின்வருமாறு:

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

		ஆய்வு	முரண்பாடு	அபராதத் தொகை
1	கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள்	223	18	ரூ. 900/-
2	உணவு நிறுவனங்கள்	63	ஏதுமில்லை	ஏதுமில்லை

(ஆ) எழாது.

90—

தொழிலாளர் நல வாரியம்

வினா எண் 104660—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டையில் தொழிலாளர் நல வாரிய அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) திருப்பூரில் தொழிலாளர் அலுவலர் (ச.பா.தி) அலுவலகம் ஏற்படுத்தப்பட்டு 26-10-2009 முதல் செயல்பட்டு வருகிறது. திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டையில் தொழிலாளர் நல வாரிய அலுவலகம் அமைப்பது தொடர்பாக நடவடிக்கை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

91—

கட்டடம்

வினா எண் 110295—திரு. என். நன்மாறன்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2010 மே 14

(அ) மதுரையில் உள்ள தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மதுரையில் உள்ள தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித் தருவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

92—

பொது நூலகம்

வினா எண் 49805—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, குரல்குட்டை ஊராட்சி, குரல்குட்டையில் பொது நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 50, பள்ளிக் கல்வித் துறை நாள் 11-4-2003-ன்படி கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, குரல்குட்டையில் 8-11-2003 முதல் ஊர்ப்புற நூலகம் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2010 மே 14]

93—

தொல்பொருள் ஆய்வு

வினா எண் 80584—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூரிலிருந்து பெங்களூரு செல்லும் நான்கு வழிச்சாலையில் வன்னியர் தேசம் பேருந்து நிறுத்தம் பகுதியில் காணப்படும் பெரும் சுரங்கப்பாதை குழி குறித்து தொல்பொருள் ஆராய்ச்சித் துறை மூலம் ஆய்வு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஓமலூரிலிருந்து பெங்களூரு செல்லும் சாலையில் தற்போது நான்கு வழிச்சாலை அமைக்கும் பொழுது தென்பட்ட குழிகள் தானியக் குழிகளேயன்றி இவை சுரங்கபாதை அல்ல என தொல்லியல் துறையின் ஆய்வறிக்கையில் தெரிய வந்துள்ளது.

94—

தலைமை நூலகம்

வினா எண் 95385—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பொறையாறில் இயங்கி வரும் பொது நூலகத்தை தலைமை நூலகமாகத் தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தின் தலைமை நூலகமாக மாவட்ட மைய நூலகம் செயல்பட்டு வருகின்ற நிலையில், பொறையாறு கிளை நூலகத்தை தலைமை நூலகமாக மாற்ற அவசியம் எழவில்லை.

95—

நூலகம்

வினா எண் 102522—திரு. எம். அன்பழகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, பழனி நகரத்தில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, பழனி நகரத்தில் சித்தா நகரில் சங்கிலிகேட் அருகில் இரண்டாம் நிலை நூலகம் ஒன்று செயல்பட்டு வருகின்றது. மேலும் கூடுதலாக பாரத அரசு வங்கி ரோட்டில் ஸ்ரீராம் பிளாசாவில் பழனி கிழக்கு மூன்றாம் நிலை நூலகம் ஒன்று செயல்பட்டு வருகின்றது.

96—

ஆரம்பப் பள்ளி

· **வினா எண் 103110—திரு. எம். அன்பழகன்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2010 மே 14]

பழனி தொகுதி, பழனி ஒன்றியம், ஆண்டிப்பட்டி ஊராட்சி, நரிப்பாறை கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, பழனி ஒன்றியம், ஆண்டிப்பட்டி ஊராட்சி, நரிப்பாறை கிராமத்தில் புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்க விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யவில்லை. எனவே, இக்கிராமத்தில் தற்போது புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்க இயலாத நிலை உள்ளது.

97—

தரம் உயர்த்துதல்

வினா எண் 103158—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சண்முகபுரம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியைத் தரம் உயர்த்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சண்முகபுரம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு தகுதி பெறவில்லை. ஏனெனில், 2 கி.மீ. தூரத்தில் 4 உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன.

98—

கட்டடம்

வினா எண் 115297—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, மானித அள்ளி ஊராட்சி, கீழ்பூரிக்கல், ப. கொள்ளப்பட்டி ஊராட்சி, மொடக்கேரி கிராமம், வெள்ளாளப்பட்டி ஊராட்சி, வெள்ளாளப்பட்டி ஆகிய இடங்களிலுள்ள துவக்கப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி தொகுதி, மானித அள்ளி ஊராட்சி, கீழ்பூரிக்கல், ப. கொள்ளப்பட்டி ஊராட்சி, மொடக்கேரி கிராமம், வெள்ளாளப்பட்டி ஊராட்சி, வெள்ளாளப்பட்டி ஆகிய இடங்களிலுள்ள துவக்கப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் இப்போதைக்கு பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

99—

ஆக்கிரமிப்பு

வினா எண் 15322—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2010 மே 14]

(அ) வால்பாறை தொகுதி, முருகாளி எஸ்டேட் நிறுவனம் வனத் துறை இடத்தை தொடர்ந்து ஆக்கிரமிப்பு செய்து வருவதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிக்குட்பட்ட காப்புக்காடு மற்றும் காப்பு நிலங்களில் முருகாளி எஸ்டேட் நிறுவனத்தால் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யப்படவில்லை.

100—

கட்டடம்

வினா எண் 114450—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி மாவட்ட வன அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதியில் மாவட்ட வன அலுவலகம் ஏதும் செயல்படவில்லை. சமூகக் காடுகள் கோட்ட அலுவலகம் செங்கல்பட்டை தலைமையிடமாகக் கொண்டு தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இது சிறப்புக் கோட்டமாதலால் இதற்கென சொந்தக் கட்டடம் கட்ட உத்தேசம் ஏதும் இல்லை. செங்கல்பட்டு தொகுதியை உள்ளடக்கிய காஞ்சிபுரம் மாவட்டத்திற்கான மாவட்ட வன அலுவலகம், காஞ்சிபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு வனத் துறைக்குச் சொந்தமான அரசு கட்டடத்தில் இயங்கி வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பட்டியல் 6

1—

குடியிருப்பு

வினா எண் 9262—திரு. வ. முல்லைவேந்தன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மொரப்பூர் தொகுதி, அ. பள்ளிப்பட்டி காவல் நிலையத்தில் பணியாற்றும் காவலர்களுக்குக் குடியிருப்பு கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மொரப்பூர் தொகுதி, அ. பள்ளிப்பட்டி காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்களுக்கு 39 புதிய குடியிருப்புகள் (1 ஆய்வாளர், 2 உதவி ஆய்வாளர், 36 காவலர் / தலைமைக் காவலர்) கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 1559, உள் (காவல் 10) துறை, நாள் 18-11-2008-ல் ஆணை வழங்கப்பட்டு, கட்டுமானப் பணி தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2—

கட்டடம்

வினா எண் 13235—திருமதி ரா. லீமா றோஸ்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியில் குலசேகரம் காவல் நிலையத்திற்குப் புதியக் கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், அத்துடன் இணைத்து புதிய காவலர் குடியிருப்பு கட்டப்படுமா?

(இ) திருவட்டாறு காவல் நிலையத்தின் நுழைவு வாயிலில் மின் விளக்கு பொருத்தப்படுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ), (ஆ) மற்றும் (இ) **காவல் நிலையம்:—** குலசேகரம் காவல் நிலையம் தற்போது அரசுக்குச் சொந்தமான பழைய கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் வருங்கால காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசீலனை செய்யப்படும்.

குடியிருப்பு:— குலசேகரம் காவலர்களுக்கு 17 குடியிருப்புகள் உள்ளன. (1—உதவி ஆய்வாளர், 16—தலைமைக் காவலர்/காவலர்) இவற்றில் 8 குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்து, குடியிருக்க இயலாத நிலையில் உள்ளன. இதனை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கான தகுதிச் சான்றிதழ் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்திலிருந்து பெற்று, தகுதியிருப்பின் ஆண்டுதோறும் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து எதிர்காலத்தில் புதிய குடியிருப்புகள் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

மின் விளக்கு:— கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு காவல் நிலையம் நுழைவு வாயிலில் மின் விளக்கு தனியாக இல்லை. மேற்படி நுழைவு வாயில் முன்பு தெரு விளக்கு வெளிச்சம் உள்ளது. தனியாக மின் விளக்கு பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3—

கட்டடம்

வினா எண் 14606—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தியில் உள்ள காவல் நிலையத்திற்குப் புதிதாகக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 மே 14

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், பூவந்தி காவல் நிலையம் தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மானாமதுரை வட்டம், பூவந்தி குருப் புல எண் 125/2-ல் 0.076.0 ஏர்ஸ் நிலம் பூவந்தி காவல்நிலையம் மற்றும் காவலர் குடியிருப்பு கட்டுவதற்கு நிலம் எடுப்பு செய்யப்பட்டு, மானாமதுரை தாசில்தார் அவர்களால் காவல் துறைக்கு 13-11-2008 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. சொந்தக் கட்டடம் இல்லாத 273 காவல் நிலையங்களுக்குப் படிப்படியாக வரும் 3 ஆண்டுகளில் புதியக் கட்டடம் கட்டித் தரப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க பூவந்தி காவல் நிலையத்திற்குப் புதியக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4—

நவீனப்படுத்துதல்

வினா எண் 41228—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தி காவல் நிலையத்தை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பாச்சேத்தி காவல் நிலையம் வகை நான்கைச் சேர்ந்தது. இக்காவல் நிலையம் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கு இரு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகன வசதி உள்ளன. மற்றும் தொலைபேசி, தொலையச்சு, கணினி, ஜெராக்ஸ் இயந்திரம் மேலும் காவல் துறை நவீனமயமாக்குதல் திட்டத்தின்கீழ் அகன்ற அலைவரிசையுடன் கூடிய தொலைபேசி இணைப்பு ஆகியவை வழங்கப்பட்டு போதுமான வசதிகளுடன் இயங்கி வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

5—

பஸ் பாஸ்

வினா எண் 49967—திரு. எஸ்.வி. சேகர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு இயல், இசை, நாடக சங்கத்தின் கலைமாமணி விருது பெற்றவர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய வாழ்நாள் இலவச பஸ் பாஸ் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கலைமாமணி விருது பெற்றவர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்வதற்கு வாழ்நாள் இலவசக் கட்டணச் சலுகை வழங்கும் திட்டம் எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

6—

கட்டடம்

வினா எண் 60740—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், வாழப்பாடியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குப் புதியக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், வாழப்பாடி காவல் துறை துணைக் கண்காணிப்பாளருக்கு இல்லத்துடன் கூடிய அலுவலகம் கட்ட தற்போது நிலம் கைவசமில்லை. நிலம் கையகப்படுத்தப்பட்டபின் புதிய அலுவலகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

[2010 மே 14

7—

குடியிருப்பு

வினா எண் 60746—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் ஸ்டீல் பிளான்ட் காவல் துறையினருக்குப் புதிய குடியிருப்பு கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் அவர்கள்:

சேலம் மாவட்டத்தில் உள்ள இரும்பாலை (ஸ்டீல் பிளான்ட்) காவல் நிலைய காவலர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்ட இடம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலம் தேர்வு செய்யப்பட்டு காவல் துறைக்கு நில மாற்றம் செய்யப்பட்ட பின்பு குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

8—

கட்டடம்

வினா எண் 73421—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, நெடுமாறன் நகர், இலஞ்ச ஒழிப்புத் துறை அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறை தருமபுரி பிரிவு அலுவலகம் நெ.30ஏ, இராமசாமி கவுண்டர் தெரு, கமலா லட்சுமி காலனி, தருமபுரி என்ற முகவரியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக இடம், தருமபுரி மாவட்ட ஆட்சியர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

அலுவலக வளாகம் அமைந்துள்ள விருப்பாச்சிபுர கிராம புல எண் 376/3 மற்றும் 377/3பி ஆகியவற்றில் 0.10.5 ஹெக்டேர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. நில மாற்றம் செய்யப்பட்டதும் மேற்கண்ட பிரிவிற்கு சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9—

அலுவலகம்

வினா எண் 86565—திருமதி ராணி வெங்கடேசன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சாத்தான்குளம் தொகுதி, சாத்தான்குளத்தில் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் அவர்கள்:

சாத்தான்குளம் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலும், சாத்தான்குளம் கிராம சர்வே எண் 490/2-ல் 0.09.0 ஹெக்டேர் நிலம் கண்டறியப்பட்டு காவல் துறையின் பெயருக்கு மாற்றம் செய்ய தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 31-1-2008 அன்று தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளரால் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. நிலம் மாற்றம் செய்யப்பட்ட பின்னர், புதிய அலுவலகம் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

10—

கட்டடம்

வினா எண் 96833—திரு. வை. காவேரி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, காக்காபாளையம் (மகுடஞ்சாவடி) காவல் நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் அவர்கள்:

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி காவல் நிலையத்திற்கான புதியகட்டடம் வருங்கால காவல் துறை நவீனமயமாக்கல் அல்லது பகுதி-2 திட்டத்தின்கீழ் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

11—

சாலை வசதி

வினா எண் 8269—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காங்கேயத்திற்குட்பட்ட ஈங்கூர் கிராமத்தில், சிப்காட்டில் சாலை வசதி செய்துதர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

காங்கேயம் தொகுதிக்குட்பட்ட ஈங்கூர் கிராமத்திற்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள சிப்காட் வளாகத்திற்கு ஏற்கெனவே தார்ச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. தொழில் வளாகங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட பகுதியில் மட்டுமே சிப்காட் நிறுவனத்தால் சாலை அமைத்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்துதர இயலும். சிப்காட் வளாகங்களைத் தவிர மற்ற பகுதிகளில் சாலை வசதி செய்வதை சிப்காட் நிறுவனம் மேற்கொள்ளாது.

12—

தொழிற்சாலை

வினா எண் 41203—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் மதுபானம், ரப்பர், சிமென்ட் தொழிற்சாலைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 மே 14]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் மதுபானம், ரப்பர், சிமெண்ட் தொழிற்சாலைகளை ஏற்படுத்த எந்த ஒரு திட்டமும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், தகுந்த தொழில் முனைவர்கள் தேவையான நிதி முதலீடுகளுடன் புதிய திட்ட செயற் குறிப்புகளுடன், மேற்கண்ட தொழிற்சாலைகளை அமைக்க முன்வந்தால் அவர்களுடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) இணைந்து திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து திட்டத்தைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

13—

காகித ஏற்றுமதி

வினா எண் 47389—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் காகித ஆலைகள்மூலம் காகித உற்பத்தியை அதிகரித்து கூடுதலாக ஏற்றுமதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) 1985 ஆம் ஆண்டில் ஆண்டொன்றுக்கு 90,000 டன் உற்பத்தித் திறனுடன் நிறுவப்பட்ட தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் உற்பத்தித் திறன் 1996 ஆம் ஆண்டில் 1,80,000 டன்னாகவும், 2003 ஆம் ஆண்டில் 2,30,000 டன்னாகவும், 2008 ஆம் ஆண்டில் 2,45,000 டன்னாகவும் படிப்படியாக அதிகரிக்கப்பட்டது. தற்போது, சுமார் 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்ற ஆலை விரிவாக்கத் திட்டத்தின் மூலமாக, உற்பத்தித் திறன் 4,00,000 டன்னாக உயரும்.

2008-2009 ஆம் நிதியாண்டில் 33,461 மெ.டன் காகிதம் ஏற்றுமதி செய்யப்பட்டது. 2009-2010 நிதியாண்டின் முதல் 9 மாத காலத்தில் (ஏப்ரல் 2009 முதல் டிசம்பர் 2009 வரை) 32,237 மெ.டன் காகிதம் ஏற்றுமதி செய்யப்பட்டது. மூன்றாம் காகித இயந்திரம் துவக்கப்பட்டபின் ஏற்றுமதி மேலும் அதிகரிக்கும். உயர்ந்து வரும் உற்பத்தித் திறன் மற்றும் காகித சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப இந்நிறுவனம் காகிதம் ஏற்றுமதி அளவை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

14—

சீரமைத்தல்

வினா எண் 49415—திரு. கு.ப. வேலுமணி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேரூர் தொகுதி, வேடப்பட்டி பேரூராட்சி நம்பியடிகம்பாளையம் தொகுப்பு வீடுகள் பழுதடைந்துள்ளதை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட வேடப்பட்டி பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, நம்பியடிகம்பாளையத்திலுள்ள தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்க்க தற்சமயம் இயலாது.

15—

சாலை வசதி

வினா எண் 50220—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி பேரூராட்சி, மோட்டுப்பட்டி மயானம் முதல் தாசனூர் வரை புதிய மண்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 மே 14]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேச்சேரி பேரூராட்சிக்குட்பட்ட 4-வது வார்டு மோட்டுப்பட்டி மயானம் முதல் தாசனூர் வரை உள்ள 600 மீட்டர் நீளத்திற்கு மண் சாலை அமைக்கப்பட வேண்டியுள்ளது. தற்போது நடைபாதையாக உள்ள அந்த இடம் நில மட்டத்தைவிடத் தாழ்வாக உள்ளதால் தண்ணீர் தேங்க வாய்ப்புள்ளது. எனவே, நடைபாதையாக உள்ள இதனை மண் சாலையாக மேம்பாடு செய்ய மண் வேலை செய்து சராசரியாக 0.60 செ.மீ. உயரத்திற்கு கிணற்று சரளை மண் கொட்டி சமன் செய்ய ரூ. 1.40 இலட்சமும், சாலை இருபுறமும் 100 மீ. நீளத்திற்கு 1:3:6 சிமெண்ட் கான்கிரீட்டில் தடுப்புச்சுவர் கட்ட ரூ. 2.90 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 4.30 இலட்சம் தேவைப்படுகிறது. பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் வரும் நிதியாண்டில் சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று முன்னுரிமை அடிப்படையில் இப்பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

16—

தொழிற்சாலை

வினா எண் 51806—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பருத்தியூரில் சிமெண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் சிமெண்ட் ஆலை ஏற்படுத்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2010 மே 14

17—

சுகாதார வசதி

வினா எண் 54936—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி சர்க்கரை விநாயகர் கோயில் அருகில் மற்றும் தாரமங்கலம் பேருந்து நிலையம் அருகில் நவீன பெண்கள் கழிப்பிடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் பேரூராட்சி சர்க்கரை விநாயகர் கோயில் அருகில் மற்றும் பேருந்து நிலையம் அருகில் தெப்பக்குளம் கிழக்குப்புறம் நவீன பெண்கள் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிலுள்ளன.

18—

நவீன கழிப்பிட வசதி

வினா எண் 58050—திரு. செ. பொன்னுதுரை: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெருந்துறை தொகுதி, 7-வது வார்டு செங்கமேட்டில் நவீன கழிப்பிட வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி, வார்டு எண் 7, செங்கமேடு

2010 மே 14]

பகுதியில் 150 வீடுகள் உள்ளன. இதன் மக்கள்தொகை சுமார் 600 பேர். 150 குடும்பங்களாக உள்ளனர். இதில் 25 குடும்பங்களுக்குச் சொந்தமாக கழிப்பிட வசதியுள்ளது. இதர மக்கள் வாரச்சந்தை அருகில் அமைந்துள்ள பொதுக் கழிப்பிடத்தினை பயன்படுத்தி வருகின்றனர். கூடுதலாக நவீன கழிப்பிடம் கட்டுவதற்கு இப்பகுதியில் போதிய இடவசதி இல்லை. எனவே இப்பகுதியில் தற்போது கழிப்பிடம் கட்ட இயலாது.

19—

எத்தனால் ஆலை

வினா எண் 67166—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எத்தனால் தயாரிக்கும் ஆலையை உடனடியாக திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை வடிப்பகத்தில் எத்தனால் தயாரிக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டு ஆகஸ்ட் 2008-ல் சோதனை ஓட்டம் முடிவடைந்துள்ளது. எனினும் எண்ணெய் நிறுவனங்கள், எத்தனாலுக்கான விற்பனை விலையை எரிசாராயத்தின் விலையைவிட குறைவாகவே நிர்ணயம் செய்துள்ளதால் எத்தனால் உற்பத்தி இலாபகரமாக இல்லை. எனவே, இந்த ஆலை எத்தனால் உற்பத்தி செய்ய முன்வரவில்லை.

20—

விரிவுபடுத்துதல்

வினா எண் 77585—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 மே 14

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி அருகே வாலிநோக்கத்திலுள்ள உப்பு நிறுவனத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

(அ) ஆம்.

(ஆ) தமிழக அரசு, தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு 5,524 ஏக்கர் நிலம் 1974 முதல் குத்தகைக்கு வழங்கியுள்ளது. இதில் சுமார் 3,210 ஏக்கர் நிலம் மட்டுமே மேம்படுத்தப்பட்டு, வருடம் சுமார் 1,70,000 டன் உப்பு உற்பத்தி செய்து வருகிறது.

13-7-2009 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி, இந்நிறுவனம் தற்போது பயன்படுத்தி வரும் 3,300 ஏக்கர் நிலத்துடன் மேலும் 2,200 ஏக்கர் நிலத்தை விரிவுபடுத்தி, வருடத்திற்கு சுமார் 4 இலட்சம் டன்கள் உப்பு உற்பத்தி செய்வதுடன், அப்பகுதியிலுள்ள சுமார் 1,000 நபர்களுக்கு கூடுதலாக வேலைவாய்ப்பு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணி குறித்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியினை அகமதாபாத்திலுள்ள ஆப்டெக் இன்ஜினியர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்கள் முதன்நிலை திட்ட அறிக்கையை 28-7-2009 அன்று சமர்ப்பித்தனர். தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், இயக்குநர்கள் குழுமம், முதுநிலை மேலாளர், திட்ட மேலாளர் அவர்களின் தொழில்நுட்ப கருத்துகளை விரிவான திட்ட அறிக்கையில் சேர்க்க கோரப்பட்டது. இந்த விரிவான திட்ட அறிக்கையில் (DPR) முதலீட்டுத் தொகை ரூபாய் 12.50 கோடியாக. நிர்ணயித்து, 12-2-2010 அன்று ஆப்டெக் நிறுவனம் சமர்ப்பித்துள்ளார்கள். இறுதி விரிவான திட்ட அறிக்கை திட்ட முதலீடு குழுமத்தின்மூலம் விரைவில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

2010 மே 14]

21—

தொழிற்சாலை

வினா எண் 78032—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சிப்காட் தொழிற்பேட்டையில் அரசு சார்பாக சிமெண்ட் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சிப்காட் வளாகத்தில் சிமெண்ட் ஆலை அமைப்பது குறித்த திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

22—

மின்விசை பம்பு

வினா எண் 83348—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம், திருவள்ளுவர் நகரில் (4-வது வார்டு) உள்ள பொதுக் கிணற்றை தூர்வாரி, மின்விசை பம்பு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக்குட்பட்ட (4-வது வார்டு) திருவள்ளுவர் நகர் பொதுக் கிணறு தூர்வாரி மின்விசை பம்பு அமைக்க வரும் நிதியாண்டில் (2009-2010) நடவடிக்கை எடுக்கப்படும்.

23—

விரிவுபடுத்துதல்

வினா எண் 101702—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, புதூர், குளத்தூர், எட்டையாபுரம், விளாத்திகுளம் ஆகிய இடங்களிலுள்ள பேருந்து நிலையங்களை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதியில் உள்ள புதூர், குளத்தூர் விளாத்திகுளம் தவிர எட்டையாபுரம் பேரூராட்சி பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தவும் எட்டையாபுரம் பேரூராட்சி பேருந்து நிலைய விரிவாக்கத்திற்கு புல எண் 365/3-ல் உள்ள 0.27.0 ஏர் நிலம் வருவாய் துறையிடமிருந்து கிடைக்கப்பெற்றதும் பேருந்து நிலைய விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

24—

குடிநீர்

வினா எண் 101706—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம் ஒன்றியம், குளத்தூர் ஊராட்சி, பனையூர் கிராமத்திற்கு 239 கடலோர கிராம கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 மே 14]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம் ஒன்றியம், குளத்தூர் ஊராட்சி, பனையூர் குடியிருப்பு, கடம்பூர், புதூர், விளாத்திகுளம் மற்றும் 180 வழியோர குடியிருப்புக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் பயன்பெற்று வருகின்றன.

239 கடலோர குடியிருப்புகள் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் பயனாளிகளின் எண்ணிக்கை 4,45,971 ஆகும். இவர்களுக்கு வடிவமைக்கப்பட்ட குடிநீர் வழங்க 24 மணி நேரமும் நீரேற்றம் செய்ய வேண்டியுள்ளது. மேலும் இரு மாவட்டங்களை இணைத்து இயக்கப்படும் திட்டமாக இருப்பதாலும், தொழில்நுட்பரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லாததாலும் பனையூர் குடியிருப்பை இத்திட்டத்தில் இணைக்க இயலாது.

25—

சுற்றுச்சுவர்

வினா எண் 103730—திரு. வ. முல்லைவேந்தன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மொரப்பூர் தொகுதி, கடத்தூர் பேரூராட்சி புதிய அலுவலகத்திற்குச் சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

தருமபுரி மாவட்டம், கடத்தூர் தேர்வுநிலைப் பேரூராட்சியில் 2008-2009-ஆம் ஆண்டின் கேளிக்கை வரி நிதியில் ரூ.20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு புதிய அலுவலகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி புதிய அலுவலகத்தைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் 12-வது நிதிக் குழு மானியம்மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2010 மே 14

26—

சுற்றுச்சுவர்

வினா எண் 105729—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, கடத்தூர் பேரூராட்சி புதிய அலுவலகத்திற்கு நுழைவு வாயிலுடன் கூடிய சுற்றுச்சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

தருமபுரி மாவட்டம், கடத்தூர் தேர்வுநிலைப் பேரூராட்சியில் 2008-2009-ஆம் ஆண்டு கேளிக்கை வரி மானியத்தில் ரூ.20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு புதிய அலுவலகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அவ்வலுவலகத்தைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் 12-வது நிதிக் குழு மானியம்மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

27—

வாரச் சந்தையை மேம்படுத்துதல்

வினா எண் 105732—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, கம்பைநல்லூர் பேரூராட்சியில் வாரச் சந்தையை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் தொகுதி, கம்பைநல்லூர் பேரூராட்சியின் வாரச் சந்தையினை மேம்படுத்துவது குறித்த திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

2010 மே 14]

28—

சாலைப் பாதுகாப்பு

வினா எண் 111911—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் வாரச் சந்தை சாலையில் நடைபெறுவதால் விபத்துகள் ஏற்படுவதைத் தவிர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் தேர்வுநிலைப் பேரூராட்சிக்குச் சொந்தமான இடத்தில் செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் வாரச் சந்தை நடைபெறும் நடைபாதையை ஒட்டி வியாபாரம் செய்யும் வியாபாரிகளை காவல் துறையின் உதவியுடன் வாரச் சந்தை வளாகத்திற்கு உள்ளேயே வியாபாரம் செய்ய அறிவுறுத்தப்பட்டு, சாலையின் ஓரத்தில் போடப்பட்ட தற்காலிக கடைகள் அப்புறப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன. மேற்கண்ட இருதினங்களுக்கு இப்பேரூராட்சிப் பணியாளர்கள்மூலம் போக்குவரத்து சீர் செய்யும் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டு, வாரச் சந்தை சிரமமின்றி நடைபெற உட்புறம் உள்ள முட்செடிகள் ஜெ.சி.பி. இயந்திரம்மூலம் அப்புறப்படுத்தப்பட்டு கடைக்காரர்கள் சந்தை நடத்த மையப் பகுதியில் இருந்த கால்நடைகளை ஏற்றும் இடத்தை வளாகத்தின் ஓரத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மற்றும் வாரச் சந்தை சாலையில் விபத்துகள் ஏதும் ஏற்படாதவாறு தொடர்ந்து சாலை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

29—

சுகாதார வசதி

வினா எண் 114335—திரு. எம்.என். கந்தசாமி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேரூராட்சிப் பகுதிகளில் தனியார் வீடுகளில் மானியத்துடன்கூடிய கழிவறை கட்டும் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) பேரூராட்சிகளின் துறையில், 2006-2007-ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகளின்படி ரூ.1,000/- மானியத்தில், சொந்தமாக கழிப்பிட வசதியில்லாத பொருளாதாரத்தில் நலிவுற்ற, ஏழை எளிய குடும்பத்தினருக்கு 38,319 எண்ணிக்கையிலான தனிநபர் கழிப்பறைகள் கட்டித் தரப்பட்டுள்ளன. தற்போது மத்திய அரசு திட்டமான ஒருங்கிணைந்த குறைந்த செலவிலான சுகாதாரத் திட்டத்தின் (Integrated Low Cost Sanitation Scheme)கீழ் ரூ.9,000/- மானியத்தில் தனிநபர் கழிப்பிடம் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட நடவடிக்கையில் உள்ளது.

30—

கட்டடம்

வினா எண் 62151—திரு.ஆர்.சாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூர் நகர் மற்றும் புறநகர் பகுதிகளுக்கான மின்வாரிய அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

மேலூர் தொகுதி, மேலூர் நகர், மதுரை மாவட்டம் மற்றும் புறநகர் பகுதிகளுக்கான மின்வாரிய அலுவலகங்க்ளுக்குச் சொந்தமான இடம் உள்ளது. நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

31—

மின் பிரிவு அலுவலகம்

வினா எண் 100762—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் ஒன்றியம், பாலமேடு கிராமத்தில் மின்சார வாரிய பிரிவு அலுவலகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

நாமக்கல் மின் பகிர்மான வட்டம், திருச்செங்கோடு கோட்டம், மல்லசமுத்திரம் உபகோட்டத்திற்குட்பட்ட மல்லசமுத்திரம் புறநகர் பிரிவு, பாலமேடு கிராமத்தில் பிரிவு அலுவலகம் அமைக்கக் கோரும் இடம், மின் நுகர்வோரின் எண்ணிக்கை மற்றும் அப்பகுதியில் உள்ள மின் மாற்றிகளின் எண்ணிக்கையினை கணக்கில்கொண்டால், புதிய பிரிவு அலுவலகம் ஒன்று தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

32—

அலுவலகம்

வினா எண் 104538—திரு. ஞா. ஜாண் ஜோசப்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டத்தில், மின் செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டத்தில் மின் செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

33—

கட்டடம்

வினா எண் 107237—திருமதி ஜி. லதா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில் மின்சார வாரிய செயற்பொறியாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) குடியாத்தம் தொகுதியில் மின்சார வாரிய செயற்பொறியாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

34—

கட்டடம்

வினா எண் 64513—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, ஜம்பை கிராமத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கும், நியாய விலைக் கடைக்கும் தனி கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முகையூர் தொகுதி, ஜம்பை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு சொந்த நிதி ஏதும் இல்லாததாலும், மேற்படி வங்கி தொடர்ந்து நட்டத்தில் இயங்கி

2010 மே 14]

வருவதாலும், ஜம்பை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு கட்டடம் கட்ட தற்போது வாய்ப்பு இல்லை.

ஜம்பை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் ஜம்பை நியாய விலைக் கடைக்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.2.65 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கட்டுமானப் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

35—

அலுவலக மாற்றம்

வினா எண் 104055—திரு. வை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூரில் செயல்படும் கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகத்தை மேச்சேரியில் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) ஓமலூரில் செயல்படும் கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகத்தை மேச்சேரியில் மாற்றியமைக்க வாய்ப்பு இல்லை.

சேலம் மாவட்டம், மேச்சேரி, ஓமலூர் சரகத்தில் மேட்டூர் வட்டத்திற்குட்பட்ட ஒரு ஊராட்சி ஒன்றியப் பகுதியாகும். வருவாய் கோட்டம் அமைந்துள்ள தலைமையிடத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப் பதிவாளர் அலுவலகம் அமைக்கப்பட வேண்டுமென்ற அரசின் கொள்கையின் அடிப்படையில் ஓமலூரில் தற்போது கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. எனவே, ஓமலூரில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப் பதிவாளர் அலுவலகத்தை மேச்சேரியில் மாற்றியமைக்க வாய்ப்பு இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

36—

கூட்டுறவு வங்கி

வினா எண் 106203—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பெரிய ஆவரங்காடு கிராமத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மண்டலத்தில், மானாமதுரை வட்டத்தில் 250 குடும்பங்கள் கொண்ட 1,375 ஏக்கர் சாகுபடிக்கான பரப்பளவுள்ள பெரிய ஆவரங்காடு கிராமம் தஞ்சாக்கூர் தொடக்க வேளண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் விவகார எல்லையில் உள்ளது. இக்கிராமத்தில் உள்ள 310 விவசாயிகள் தஞ்சாக்கூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினர்களாகவும், அச்சங்கத்தில் கடன் பெற்றும் வருகின்றனர். குறுகிய கால கடனமைப்பு சீரமைப்பின்கீழ் தஞ்சாக்கூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் முதலீட்டு நிதி ரூ. 1.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 310 உறுப்பினர்களுக்கு என தனியே ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்கப்பட்டால் அச்சங்கம் வாழ்திறனுடன் செயல்பட வாய்ப்பு இருக்காது. பெரிய ஆவரங்காடு கிராமத்திற்கென புதிய சங்கம் அமைக்கப்பட்டால் தஞ்சாக்கூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் வாழ்திறனும் பாதிக்கப்படும். மேலும், அரசு ஆணை எண் 376, நாள் 3-10-2006-ல் உள்ள நிபந்தனைகளின்படியும் பெரிய ஆவரங்காடு கிராமத்தில் புதிய சங்கம் தொடங்க சாத்தியக் கூறுகள் இல்லை.

2010 மே 14]

37—

சுற்றுச்சுவர்

வினா எண் 106659—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலை கவுண்டச்சிபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மண்டலம், காங்கேயம் தொகுதி, ஈரோடு சரகத்திற்குட்பட்ட சென்னிமலை வட்டாரம், கவுண்டச்சிபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கமானது 2001 ஆம் ஆண்டிலிருந்து எவ்வித லேவாதேவியுமின்றி செயலிழந்துள்ள நிலையில் இச்சங்கத்திற்கு தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து மானியத்துடன் சிறப்பு நகைக் காசுக்கடன் ரூ.20 இலட்சம் ஏப்ரல் 2008 முதல் அனுமதிக்கப்பட்டு நகைக் கடன் வழங்கி வருகிறது. மேலும், சங்கத்தில் நிதி ஆதாரம் இல்லாததாலும் சங்கத்திற்கு கடனை திருப்பி செலுத்தும் சக்தி இன்மையாலும் சுற்றுச்சுவர் கட்ட கடனுதவி ஏதும் பெறப்படவில்லை. இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் மூலமாக சுமார் ரூ.2.50 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்ட தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

38—

கட்டடம்

வினா எண் 111773—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 மே 14

(அ) சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைந்த கூட்டுறவுச் சங்கங்களின் தலைமை அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டத் தலைமையிடத்திலுள்ள கூட்டுறவுத் துறை அலுவலகங்களை ஒருங்கிணைத்து, கூட்டுறவு கட்டட வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யும்.

(ஆ) சிவகங்கை மாவட்டத்தில் மண்டல இணைப் பதிவாளர், சிவகங்கை சரக துணைப் பதிவாளர், துணைப் பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) ஆகிய அலுவலகங்களை ஒருங்கிணைத்து கூட்டுறவு அலுவலக வளாகம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகத்தில் பகுதி-2 பிளாட் எண் 3-ல் உள்ள 2,900 ச.மீ. அல்லது 71.06 சென்ட் நிலம் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் கூட்டுறவு அலுவலக வளாகம் கட்டும் பணி தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்மூலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட உள்ளது. இந்தக் கூட்டுறவு அலுவலக வளாகம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு வரும். கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து நிதியுதவி பெற்று கட்டப்படும்.

39—

இலவச சட்ட முகாம்

வினா எண் 75346—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதியில் கிராமங்கள்தோறும் இலவச சட்ட முகாம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு அதன்கீழ் இயங்கும் அனைத்து மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள் மற்றும் வட்ட சட்டப் பணிகள் குழுக்கள், அதன் வரம்பிற்குள் வரும் அனைத்து கிராமங்கள்தோறும் இலவச சட்ட உதவி முகாம்கள் நடத்த ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டு சட்ட உதவி முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

40—

குடியிருப்பு

வினா எண் 108750—திரு. மா. தண்டபாணி: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேடசந்தூர் சிறைத் துறைக் காவலர்களுக்கு புதிய குடியிருப்பு கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள அனைத்து கிளைச் சிறைகளில் பணிபுரியும் காவலர்களுக்கென குடியிருப்பு கட்டுவது தொடர்பாக சம்பந்தப்பட்ட கிளைச் சிறையின் கட்டுப்பாட்டு அலுவலர்கள் வருவாய்த் துறை அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு காலி நிலம் தேர்வு செய்வது குறித்து அறிவுறுத்தப்பட்டுள்ளது. கிளைச் சிறையின் அருகே நிலம் தேர்வு செய்யப்பெற்றதும் சிறைப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 14

41—

பேருந்து அட்டை

வினா எண் 111804—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிறைக் காவலர்களுக்கு இலவச பேருந்து அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிறைக் காவலர்களுக்கு இலவச பேருந்து அட்டை வழங்குவது குறித்தான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும் சிறைக் காவலர்கள் ஒரு சிறையில் இருந்து மற்ற அலுவலகங்களுக்கு அலுவல் நிமித்தம் செல்ல நேரிட்டால் பேருந்து வாரண்ட் மட்டும் வழங்கப்பட்டு வருகிறது.

42—

அதிநவின துப்பாக்கி

வினா எண் 111809—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிறைத் துறைக் காவலர்களுக்கு அதிநவீன துப்பாக்கிகள் மற்றும் காமிராக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள அனைத்து கிளைச் சிறைகளிலும் பல ஆண்டுகளாக 410 துப்பாக்கிகள் மட்டுமே

2010 மே 14]

பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள சூழ்நிலையில் இவை பழமையானதாக உள்ளதாலும், நவீன ரக ஆயுதங்கள் வளர்ந்துவிட்ட நிலையில் மத்திய சிறைகளில் தீவிரவாதிகள், நக்சலைட்டுகள் மற்றும் இதர சிறைக் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களாலும் மற்றும் இவர்களைச் சார்ந்த அமைப்புகளாலும் சிறைப் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படாமல் இருக்கவும் அல்லது விரும்பத்தகாத சம்பவங்கள் ஏதும் நடைபெறாமல் இருப்பதற்காகவும், மத்திய சிறைகளின் பாதுகாப்பிற்கு கீழ்க்கண்ட நவீன ரக ஆயுதங்கள் சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன:

1. 7.62 SLR with Accessories
2. 9mm Sten carbine gun with accessories
3. 9mm pistol
4. 12" Bore Pump Action gun.

மேலும் தமிழகத்தில் உள்ள மத்திய சிறை, வேலூர், கடலூர், சேலம், கோவை, மதுரை, பாளையங்கோட்டை, திருச்சி மற்றும் மத்திய சிறை-I புழல் ஆகிய 8 மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறை, வேலூருக்கு ரூ.54.17 இலட்சம் செலவில் சிறைவாசிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொருட்டு கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு சிறைவாசிகள் மற்றும் அவர்களைக் காண வரும் உறவினர்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மேலும், தற்போது 2009-2010 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ. 17.11 இலட்சம் செலவில் மத்திய சிறை-2, புழலுக்கு சிறைவாசிகளைக் கண்காணிக்க கேமிராக்கள் வாங்கி வழங்கிட அங்கீகரிக்கப்பட்டு கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

43—

பேருந்து வசதி

வினா எண் 107412—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், பாண்டூர் கிராமத்திலிருந்து கிளாப்பாக்கம், காட்டூர், திருக்கழுக்குன்றம் வழியாக செங்கல்பட்டிற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருக்கழுக்குன்றம், காட்டூர், வெள்ளைப்பந்தல், கிளாப்பாக்கம் தடத்தின் நீளம் 27.0 கி.மீ. ஆகும். இத்தடத்தில் செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் வழியாக காட்டூர் வரையிலான 16.0 கி.மீ. தூரத்திற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக காஞ்சிபுரம் மண்டலம்மூலம் நகரத் தடங்கள் தினசரி 14 நடைகள் பேருந்து வசதி உள்ளது. கிளாப்பாக்கம் கிராமம், செங்கல்பட்டிலிருந்து நகரத் தட எண் டி 27 மூலம் பேருந்து வசதி பெற்றுள்ளது. பாண்டூர் கிராமமும் செங்கல்பட்டிலிருந்து நகரத் தடம் எண் டி19 மூலம் பேருந்து வசதி பெற்றுள்ளது. இத்தடத்தின் அனைத்து கிராமங்களும் பகுதி வாரியாக பேருந்து வசதி பெற்றுள்ளன. இவை இப்பகுதி போக்குவரத்துத் தேவைகளுக்குப் போதுமானதாக உள்ளன.

44—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 62417—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, அரசு மருத்துவமனையில் போதிய மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கலசப்பாக்கம் தொகுதியில் கலசப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம், திருவண்ணாமலை பொது சுகாதார மாவட்டத்தின்கீழ் இயங்கி வருகிறது. கலசப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு

2010 மே 14]

ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் எண்ணிக்கை ஒன்றாகும் (Single Medical Officer Post). *தற்போது ஒரு ஆண் மருத்துவர் இந்நிலையத்தில் பணியில் உள்ளார். எனவே, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் காலிப் பணியிடம் ஏதும் இல்லை.*

45—

மருத்துவர் நியமனம்

வினா எண் 104026—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ராதாபுரம் அரசு மருத்துவமனைக்கு மேலும் ஐந்து மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் ராதாபுரம் அரசு மருத்துவமனை 38 படுக்கை வசதிகளுடன் இயங்கி வரும் வட்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு 90 புறநோயாளிகளும், 6 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு 3 பிரசவங்கள் மட்டுமே நடைபெற்று வருகின்றன. இம்மருத்துவமனையில் அறுவை சிகிச்சைகள் ஏதும் நடைபெறுவதில்லை. இம்மருத்துவமனைக்கு ஒரு முதுநிலை குடிமை மருத்துவர், ஒரு பல் மருத்துவர் மற்றும் இரண்டு உதவி மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இவை தவிர, இம்மருத்துவமனையில் மகப்பேறு அறை, சித்தா பிரிவு ஆகிய சிறப்புப் பிரிவுகளும், ஸ்கேன் வசதிகளும் உள்ளன. மேலும் இம்மருத்துவமனையில் மிகக் குறைந்த அளவு நோயாளிகளே சிகிச்சை பெற வருவதால் இம்மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்கள் நியமிக்க வேண்டியதன் அவசியம் தற்போது எழவில்லை.

[2010 மே 14

46—

தொழிற்பேட்டை

வினா எண் 108944—திருமதி ஜி. லதா: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில் தேங்காய் நார் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதியில் தேங்காய் நார் உபபொருள் தயாரிக்கும் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

வேலூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தொழிற் பேட்டையின் விவரங்கள்:

தொழிற்பேட்டை	*தொழிற்கூடங்கள்*		*மேம்படுத்தப்பட்ட தொழிற் மனைகள்*	
	அமைக்கப் பட்டவை	*ஒதுக்கப் பட்டவை*	*அமைக்கப் பட்டவை*	*ஒதுக்கப் பட்டவை*
காட்பாடி	*9*	*9*	*42*	*42*
அரக்கோணம்	*13*	*13*	*119*	*98*
இராணிப்பேட்டை	*162*	*162*	*71*	*71*
முகுந்தராயபுரம்	*30*	*30*	*38*	*38*
வன்னிவேடு	—	—	*7*	*7*
விண்ணமங்கலம்	—	—	*38*	*38*

2010 மே 14]

போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும் தொழில் துவங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் கணிசமான அளவில் முன்வந்தால் புதிதாக தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியருடன் கலந்து ஆலோசித்து கருத்தாய்வு செய்து மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

47—

கண்காட்சி

வினா எண் 109713—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டத்தில் குறு சிறு தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விளம்பரப்படுத்த மாவட்ட தலைமையிடத்தில் கண்காட்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் சிட்கோ தொழிற்பேட்டையில் கண்காட்சி மையம் அமைக்க உபரிநிலம் இல்லாத காரணத்தால், சேலம் மாவட்டத்தில் குறு சிறு தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை விளம்பரப்படுத்த மாவட்ட தலைமையிடத்தில் கண்காட்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

48—

பயிற்சி

வினா எண் 109926—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதியிலுள்ள மகளிர் மற்றும் ஆடவர் சுய உதவிக் குழுக்களுக்கு கால்நடைத் தீவன சிறு தொழில் சார்ந்த பயிற்சிகளை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

[2010 மே 14

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கால்நடை பராமரிப்புத் துறையில், கால்நடைத் தீவன சிறு தொழில் சார்ந்த பயிற்சிகள், மகளிர் மற்றும் ஆடவர் சுய உதவிக் குழுக்களுக்கு அளிக்கப்படுவதில்லை. இது தொடர்பான பயிற்சி தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்கீழ் காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் மையத்தின் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது.

49—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 48759—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாநகர், சொக்கம்புதூர் மயானத்தைச் சார்ந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகர், சொக்கம்புதூர் மயானத்திலுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, தற்போது சுற்றுச்சுவர் கட்டப்பட்டு வருகிறது.

LEGISLATIVE ASSEMBLY VERITY ALONE TRIUMPHS

50—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 57114—திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி கிராமம், கீழப்புதூர் பாண்டி கோவில் வடபுறம் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

2010 மே 14]

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

மேற்படி இடம் ஊரணி புறம்போக்கு என்பதாலும், நீர்நிலைப் புறம்போக்கில் பட்டா வழங்க நீதிமன்றத் தடை ஆணை உள்ளதாலும், அவ்விடத்தில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

51—

இலவச காப்பீடு

வினா எண் 102166—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச காப்பீடு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

விவசாயத் தொழிலாளர்கள் அனைவரும் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்—விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் 2006-ல் உறுப்பினர்களாக உள்ளனர். இத்திட்டத்தினை மாவட்டங்களில் செயல்படுத்தும் அலுவலராக செயல்படும் தனித் துணை ஆட்சியர் (ச.பா.தி.) அவர்களே கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் உறுப்பினர் அட்டை வழங்கும் பணியினையும் மற்றும் திட்டத்தினை கண்காணிக்கும் அலுவலராகவும் உள்ளதால் அவரது அதிகாரத்திற்குட்பட்ட தனி வட்டாட்சியர் (ச.பா.தி.) அவர்களது கண்காணிப்பில் கிராம வாரியாக காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அடையாள அட்டை வழங்க சிறப்பு முகாம் மூலம் நடவடிக்கை எடுத்து விவசாயத் தொழிலாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சியர் ஆகியோர் தலைமையில் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் முகாம்களின்போதும், மாவட்ட அளவில் நடைபெறும் அரசுத் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு

[2010 மே 14

முகாம்களின்போதும் இத்திட்டம் குறித்து விளக்கம் தரப்பட்டு தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

52—

தனி இடம்

வினா எண் 107935—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திர விற்பனையாளர்களுக்கு பத்திரப் பதிவு அலுவலக வளாகத்திற்குள்ளேயே தனி இடம் ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) முத்திரைத்தாள் விற்பனையாளர்களுக்கு பத்திரப் பதிவு அலுவலக வளாகத்திற்குள்ளேயே தனி இடம் ஒதுக்க இயலாது.

(ஆ) எழவில்லை.

53—

கட்டணம்

வினா எண் 107937—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய நிலங்கள் பாகப்பிரிவினையில் பத்திரப் பதிவு செய்ய முத்திரைத்தாள் கட்டணத்தை குறைந்த அளவில் நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) விவசாய நிலங்கள் பாகப்பிரிவினை செய்யும்போது முத்திரைத் தீர்வையை குறைந்த அளவில் நிர்ணயம் செய்ய கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

2010 மே 14]

54—

சுற்றுலா மேம்பாடு

வினா எண் 108972—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரம் அருகேயுள்ள கடும்பாடி கிராமியச் சுற்றுலாப் பகுதிகளை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மாமல்லபுரத்திற்கு அருகேயுள்ள கடும்பாடி கிராமியச் சுற்றுலாப் பகுதிகளை மேம்படுத்திட சுற்றுலாத் துறையின் ஆலோசனையின்பேரில், ஊராட்சி ஒன்றிய நிதிமூலம் கடும்பாடி கிராமத்தில் வரவேற்பு வளைவு, சாலையோரத்தில் இருபுறமும் சுமார் 200 மரங்கள் நடுதல், குளம் உருவாக்கி அதில் தண்ணீர் நிரப்பி பரிசல் இயக்குதல் ஆகிய பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து திட்டப் பணிகளுக்கான நிதி வரப்பெற்றதும், பரிசல்கள் வாங்கப்பட்டு அக்குளத்தில் பரிசல்கள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

55—

சுற்றுலா வளர்ச்சிப் பணிகள்

வினா எண் 110142—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், சுற்றுலாத் தலமான கொல்லிமலையை மேம்படுத்தும் பணிகளை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

[2010 மே 14

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

மாநில அரசு நிதி உதவித் திட்டத்தின்மூலம் 2008-2009 ஆம் ஆண்டில் கொல்லிமலை மேம்பாட்டிற்காக, பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ.100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டு மேற்காண் தொகை நாமக்கல் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. மைய அரசு நிதி உதவித் திட்டத்தின்மூலம் கொல்லிமலை மேம்பாட்டிற்காக ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள ரூ.327.98 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு அதில் ரூ.262.38 இலட்சம் முதல் தவணையாக விடுவிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

56—

சுற்றுலா வழிகாட்டி பயிற்சி

வினா எண் 110143— திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழக சுற்றுலாத் தலங்களைப்பற்றி விவரிக்க தன்னார்வம் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியர்களை குழுவாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

தமிழக சுற்றுலாத் தலங்களைப்பற்றி விவரிக்க தன்னார்வம் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியர்களை குழுவாக அமைத்தல் குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. வேலையில்லா இளைஞர்களுக்கும், ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களுக்கும் சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மை பயிற்சி மையத்துடன் ஒருங்கிணைந்து வழிகாட்டிகள் பயிற்சி முகாமை தமிழ்நாடு சுற்றுலாத் துறை நடத்தி வருகிறது. ஊரக வளர்ச்சித் துறை, 400 நபர்களுக்கு வழிகாட்டிகள் பயிற்சி முகாமை

2010 மே 14]

நடத்த ரூ.22.10 இலட்சம் வழங்கி இருக்கிறது. இப்பயிற்சித் திட்டத்தில் ஒவ்வொரு குழுவிற்கும் 10 நாட்கள் பயிற்சியுடன் மூன்று நாட்கள் கள ஆய்வும் ஏற்பாடு செய்யப்பட்டு, முதற்கட்டமாக 2008-2009 ஆம் ஆண்டில் 133 நபர்களுக்கு வழிகாட்டி பயிற்சி அளிக்கப்பட்டது. 2009-2010 ஆம் ஆண்டில் 103 நபர்களுக்கு சுற்றுலா வழிகாட்டி பயிற்சி அளிக்கப்பட்டது, 14 ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகளுக்கு வழிகாட்டி பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சி பெற்ற 64 நபர்களுக்கு ஒருங்கிணைப்பு பயிற்சியும் வழங்கப்பட்டு, பயிற்சி பெற்ற வழிகாட்டிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

57—

சுற்றுலா வசதிகள்

வினா எண் 110778—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையை சுற்றுலாத் துறை மூலமாக அழகுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதியை மேம்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

(i) 2009-2010 ஆம் நிதியாண்டில் மாநில அரசின் நிதி உதவிமூலம் பகுதி-II திட்டத்தின்கீழ் வால்பாறையில் ஒருங்கிணைந்த சுற்றுலா வசதிகள் ஏற்படுத்துவதற்காக ரூ.100.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

(ii) 2009-2010 ஆம் ஆண்டில் மாநில அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள வால்பாறையில் "யாத்ரி நிவாஸ்" கட்டுவதற்கு மொத்த திட்ட மதிப்பீடு ரூ.71.14 இலட்சத்தில் சுற்றுலாத் துறையின் பங்காக ரூ.41.14 இலட்சத்திற்கு அரசின் ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 14

(iii) 2009-2010 ஆம் ஆண்டில் மைய அரசு சுற்றுலாத் தலங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கோவை மாவட்டம், வால்பாறை, ஆழியாறு அணை மற்றும் டாப்சிலிப் பகுதிகளை மேம்படுத்த ரூ. 737.30 இலட்சத்திற்கான திட்டக் கருத்துரு மைய அரசின் ஒப்புதலுக்காக 3-11-2009-ல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

58—

பூங்கா அமைத்தல்

வினா எண் 110786—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பழைய வால்பாறை, வால்பாறை முதன்மை சாலையிலுள்ள பழைய சினிமா திரையரங்கம் மற்றும் சோலையாறு பகுதிகளில் சுற்றுலாத் துறையின்மூலம் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழைய வால்பாறை, வால்பாறை முதன்மைச் சாலையிலுள்ள பழைய சினிமா திரையரங்கம் மற்றும் சோலையாறு பகுதிகளில் சுற்றுலாத் துறைமூலம் பூங்கா அமைத்தல் குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

59—

செட்டிநாடு பாரம்பரிய விழா

வினா எண் 111854—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் செட்டிநாடு பாரம்பரிய விழாவை நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 மே 14]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்திலுள்ள காரைக்குடியில் 2009 ஆம் ஆண்டில் அக்டோபர் 12 மற்றும் 13 ஆம் தேதிகளில் சுற்றுலாத் துறையின்மூலம் ரூ.2.00 இலட்சம் செலவில் "செட்டிநாடு பாரம்பரிய விழா" சிறப்பான முறையில் நடத்தப்பட்டுள்ளது. இது குறித்த விழிப்புணர்வு முகாம்கள் காரைக்குடி மற்றும் பள்ளத்தூரில் நடத்தப்பட்டுள்ளன. இனி வருங்காலங்களில் இதுபோன்ற பாரம்பரிய விழாவினை தொடர்ந்து நடத்தவும், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பாரம்பரியமிக்க செட்டிநாட்டு கட்டடங்கள் உள்ள ஏனைய கிராமங்களைக் கண்டறிந்து, அவ்விடங்களிலும் விழிப்புணர்வு முகாம்களை நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

60—

தங்கும் அறை

வினா எண் 111874—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர், சின்ன திருப்பதி பெருமாள் கோயிலுக்கு சுற்றுலாத் துறை நிதியின்மூலம் தங்கும் அறையும், கூடுதலாக திருமண மண்டபமும் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

ஓமலூர், சின்ன திருப்பதி பெருமாள் கோயிலுக்கு, சுற்றுலாத் துறை நிதியின்மூலம் தங்கும் அறையும், கூடுதலாக திருமண மண்டபமும் கட்டுதல் குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 14

61—

அடிப்படை வசதி

வினா எண் 12644—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளிலும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மொத்தம் 5 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளும், 17 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. இதில் அரசு கட்டடங்களில் இயங்கி வரும் 3 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் மற்றும் 15 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் போதுமான உட்கட்டமைப்பு வசதிகளுடன் இயங்கி வருகின்றன. மேலும், தனியார் கட்டடங்களில் செயல்பட்டு வரும் விடுதிகளுக்கு அரசின் நிதி நிலைமைக்கேற்ப நவீன கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

62—

கைத்தறித் தொழில் துணை அலுவலகம்

வினா எண் 95369—திரு. வை. காவேரி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியில் கைத்தறித் தொழில் துணை அலுவலகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 மே 14]

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடியில் கைத்தறித் தொழில் துணை அலுவலகம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

63—

அலுவலக மாற்றம்

வினா எண் 106293—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூரில் உள்ள கைத்தறித் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தைத் திருத்தணிக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

திருவள்ளூரில் உள்ள கைத்தறித் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தைத் திருத்தணிக்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

64—

ஜவுளிச் சந்தை

வினா எண் 113162—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகரில் கைத்தறி ஜவுளிச் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

சேலம் மாநகரில் கைத்தறி ஜவுளிச் சந்தை அமைப்பது தொடர்பான கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

65—

நிறுவனம் திறத்தல்

வினா எண் 108931—திருமதி ஜி. லதா: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை அப்பல்லோ டியூப்ஸ் நிறுவனத்தை மீண்டும் திறக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராணிப்பேட்டை அப்பல்லோ டியூப்ஸ் என்ற நிறுவனத்தில் 336 தொழிலாளர்களும், 50 பணியாளர்களும் பணியாற்றி வந்துள்ளனர். இந்நிறுவனம் நலிவுற்ற நிறுவனமாக 1996 ஆம் வருடம் BIFR முன் பரிந்துரை செய்யப்பட்டு BIFR புனரமைப்பு ஆணைகள் வழங்கியதன்பேரில் நிறுவனம் நடைபெற்று வந்தது.

நிறுவனம் நலிவுற்ற நிறுவனமாக மீண்டும் BIFR முன் பதிவு செய்து பரிந்துரைத்ததன்பேரில், டெல்லி உயர் நீதிமன்றம் 24-8-1998 அன்று கலைப்பு அதிகாரியை நியமித்து உத்தரவிட்டது. மேலும், இத்தொழிற்சாலை 4-11-1998 அன்று மூடப்பட்டது. டெல்லி தீர்ப்பாயத்தின் ஆணைப்படி, நகரும் பொருட்கள் (Movable Properties) 2004, டிசம்பர் மாதம் ஏலம் விடப்பட்டு அதை நால்வர் இணைந்து வாங்கியுள்ளனர். இந்த ஏலத்தை இரத்து

2010 மே 14]

செய்யுமாறு கோரி சி.ஐ.டி.யூ. தொழிற்சங்கம் சென்னை, உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண் டபிள்யூ. ப்பி எண் 26408/2009 ஒன்றினை தாக்கல் செய்துள்ளது. மேலும், இவ்வழக்கு தற்போது சென்னை, உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

கலைப்பு அதிகாரி நியமிக்கப்பட்ட இந்த ஆலையைப் பொறுத்த வரையில், மீண்டும் திறப்பது என்ற வினா எழாது. நிதி நெருக்கடி காரணமாக மூடப்பட்டுள்ள இந்நிறுவனத்தை மீண்டும் திறந்து இயக்குவது தொழிலாளர் துறையின் வரம்பிற்குள் இல்லை. எனவே, இந்நிறுவனத்தை மீண்டும் திறப்பதற்கான திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

66—

அடிப்படை வசதிகள்

வினா எண் 101368—திரு. ஆர். டி. கணேசன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி தொகுதி, வீரபாண்டி கௌமாரியம்மன் கோயிலுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தேனி மாவட்டம், வீரபாண்டி, அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயிலுக்கு குடிநீர் வசதிக்காக சின்டெக்ஸ் குடிநீர்த் தொட்டி மற்றும் பேரூராட்சிமூலம் செய்யப்பட்டுள்ள குடிநீர்க் குழாய் வசதி உள்ளது. பெண்கள் உடை மாற்றுவதற்காக 3 அறைகள், ஆண்கள் மற்றும் பெண்கள் தனித்தனியே பயன்படுத்துவதற்கு 10 நவீன கழிப்பறைகள் மற்றும் பக்தர்கள் இளைப்பாறுவதற்கு முன் மண்டபம் ஆகிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் சுற்றுலாத் துறைமூலம் பக்தர்கள் ஓய்வு எடுப்பதற்கு ஓய்வு மண்டபம், வாகன நிறுத்துமிடம், சுகாதார, வளாகம் கட்டுதல் மற்றும் திருக்கோயிலில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2010 மே 14

67—

கட்டட வசதி

வினா எண் 62567—திரு. ஞா. ஜான் ஜோசப்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, சானல்கரை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொடக்கப் பள்ளிக்கு கட்டட வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, சானல்கரையில் இயங்கும் பள்ளி அரசு தொடக்கப் பள்ளியாகும். இப்பள்ளிக்கு கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

68—

தரம் உயர்த்துதல்

வினா எண் 84275—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், டேனிஸ்பேட்டை ஊராட்சி, விதை பண்ணை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம் விதை பண்ணையில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி இல்லை. ஆகையால் விதை பண்ணை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் கேள்வி எழவில்லை.

2010 மே 14]

69—

தரம் உயர்த்துதல்

வினா எண் 84311—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் நகராட்சி, 21-வது வார்டு ஒக்கப்பிறந்தான்குளம், புதுத்தெரு நகராட்சி ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் நகராட்சி, 21-வது வார்டு ஒக்கப்பிறந்தான்குளம், புதுத்தெரு நகராட்சி ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலையுயர்த்தி அரசாணை (நிலை) எண் 208, பள்ளிக் கல்வி (சி2) துறை, நாள் 12-8-2009-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

70—

தரம் உயர்த்துதல்

வினா எண் 84800—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, கணக்கம்பாளையம் நகராட்சி தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை தொகுதி, கணக்கம்பாளையம் நகராட்சி தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலையுயர்த்தி

[2010 மே 14

அரசாணை (நிலை) எண் 216, பள்ளிக் கல்வி (சி2) துறை, நாள் 21-8-2009-ல் அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

71—

சுற்றுச்சுவர்

வினா எண் 104565—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வட்டம், மலையாண்டிபட்டினம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின் மூலம் சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டமைப்பு செய்து கொடுக்க வழிவகை இல்லை என்பதால் உடுமலைப்பேட்டை வட்டம், மலையாண்டிபட்டினம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுவது குறித்த கருத்துருவினை அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் பரிசீலிக்க இயலாத நிலை உள்ளது.

72—

கூடுதல் வகுப்பறைகள்

வினா எண் 110668—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டியிலுள்ள நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2010 மே 14]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டியிலுள்ள நடுநிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

73—

தளவாடச் சாமான்கள்

வினா எண் 110828—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காருவள்ளி ஊராட்சி, புதூர்காருவள்ளி நடுநிலைப் பள்ளிக்கு தளவாடச் சாமான்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காருவள்ளி ஊராட்சி, புதூர்காருவள்ளி நடுநிலைப் பள்ளிக்கு ரூ.50,000/- கற்றல், கற்பித்தல் மானியமாக வழங்கப்பட்டு இதில் 2 செட் மேஜை, 2 செட் நாற்காலி மற்றும் 11 செட் டெஸ்க்/பெஞ்ச் ஆகிய தளவாடச் சாமான்கள் வழங்கிட சேலம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரால் (அனைவருக்கும் கல்வித் திட்டம்) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

74—

வரிச் சலுகை

வினா எண் 98328—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் தயார் செய்யப்படும் பொருட்களுக்கு வரிச் சலுகை அளிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

கையினால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு (Handicrafts) வரி விலக்கு உள்ளது. மேலும், மகளிர் சுயஉதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் பொருட்கள் கைவினைப் பொருட்களாகவோ அல்லது கைத்தறி நெசவுப் பொருட்களாகவோ இருக்கின்ற தருணத்தில் அவை 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம். 4 ஆம் அட்டவணைப் பிரிவு, வரிசை எண் 40 மற்றும் 41-ன்கீழ் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

75—

குடிநீர் வசதி

வினா எண் 60548—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வெள்ளிமுடி பகுதியில் குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி மற்றும் நடைபாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறை வனச் சரகத்தில் உள்ள வெள்ளிமுடி பகுதியில் 2009-2010 ஆம் நிதியாண்டில் மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் குடிநீர் வசதிக்கு ரூ.2.30 இலட்சம் மதிப்பீடு ஒப்பளிக்கப்பட்டு, தடுப்பணை கட்டி குடிநீர் வசதி வழங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த செட்டில்மென்டிற்கு நடைபாதை வசதியும், சூரிய மின்சாரம் மூலம் தெரு விளக்கு வசதியும் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2010 மே 14]

76—

மூங்கில் வளர்த்தல்

வினா எண் 69862—திரு. வை. காவேரி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, பக்கநாடு குண்டுமலைக்காட்டில் மூங்கில், சந்தனமரம் மற்றும் சூரிய மலையில் மூங்கில் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே மூங்கில் உட்பட பல்வகை மரத் தோட்டங்கள் சூரியமலை காப்புக் காடு மற்றும் பக்கநாடு நிலத்தில் இடை நடவாக நடப்படுவதால், மூங்கில் செடிகள் நட்டு வளர்க்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும் காப்பு நிலங்கள் மற்றும் காப்புக் காட்டில் சந்தன மரங்கள் வளர்வதற்கு ஏற்ற சூழல் இல்லாதபடியால், சந்தன செடிகள் நட்டு வளர்க்க செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

77—

மரக் கன்றுகள்

வினா எண் 107582—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியிலுள்ள அனைத்து குக்கிராமங்கள் தோறும் காடு வளர்ப்புத் திட்டத்தில் மரக் கன்றுகள் நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதிக்குட்பட்ட வனத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் மற்றும் தனியார் நிலங்களில் மரம் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மரக் கன்றுகள் நடப்பட்டு காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

78—

மரக் கன்று

வினா எண் 107773—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வனத் துறை காடுகளில் ஆயா, வாகை போன்ற மரக் கன்றுகளுக்கு பதிலாக முந்திரி மரக் கன்றுகளை நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

முந்திரி மரங்கள் தோட்டப் பயிர்களைப்போல் முறையாக பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும். 1980 ஆம் ஆண்டின் இந்திய வனப் பாதுகாப்புச் சட்டம், காடுகளில் தோட்டப் பயிர்கள் வளர்ப்பதைத் தடை செய்துள்ளது. மேலும், 1988 ஆம் ஆண்டின் தேசிய வனக் கொள்கையின்படி, வனங்களில் இயற்கையாகவே உள்ள தாவர மற்றும் உயிர்ப்பரவலையும், வளத்தினையும் பாதுகாக்க வேண்டும். வன வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளும்போது, அயல் வகைகளை நடவு செய்யக்கூடாது. எனவே, இயற்கைக் காடுகளில் முந்திரி மரங்கள் வளர்ப்பது சம்பந்தமான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் இல்லை.

79—

விருது

வினா எண் 107778—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அதிக மரங்கள், செடி, கொடிகள் வளர்க்கும் பள்ளி, கல்லூரிகளுக்கு விருது வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

சிறந்த முறையில் மரம்/செடி வளர்க்கும் பள்ளி/கல்லூரிகளுக்கு வனத் துறைமூலம் விருது வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

2010 மே 14]

80—

மரக் கன்று

வினா எண் 109541—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதியிலுள்ள சாலை ஓரங்களில் மரக் கன்று மற்றும் பாதுகாப்புக் கூண்டுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2008-2009 ஆம் ஆண்டு தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் சாலை ஓரங்களிலும், நகர தெருக்களிலும் அங்கு வசிக்கும் மக்களின் ஒத்துழைப்போடு 3,000 மரக் கன்றுகள் நடப்பட்டு பாதுகாப்புக் கூண்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

2. 2009-2010 ஆம் நிதியாண்டில் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற இடங்களில் வன வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (Forest Development Fund) *சாலையோரங்களில் மரக் கன்றுகள் மற்றும் பாதுகாப்புக் கூண்டுகள் அமைக்கவும், தவிர 2009-2010 ஆம் நிதியாண்டில் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ்* (Urban Afforestation Scheme) *சென்னை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் மரக் கன்றுகள் நடுவதற்கும் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்கண்ட இரு திட்டங்களின்கீழ் செயல்படுத்தப்படும் மரக் கன்றுகள் மற்றும் பாதுகாப்புக் கூண்டுகள் அமைக்கும் திட்டமானது தாம்பரம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும் செயல்படுத்தப்படுகிறது.*

81—

வன சூழ் ஆராய்ச்சி மையம்

வினா எண் 113709—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2010 மே 14

ஓமலூர் தொகுதி, டேனிஷ்பேட்டை வனச் சரகத்தில் வன சூழ் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, டேனிஸ் பேட்டையிலிருந்து சுமார் 5 கி.மீ. தூரத்தில் 18.50 எக்டர் பரப்பில் லோக்கூர் வன ஆராய்ச்சி மையம், நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சி மையத்தில் தேக்கு, பல வகையான மூங்கில், சந்தனம், குமிழ், புங்கன் போன்ற மர விதை உற்பத்தித் தோட்டங்கள் எழுப்பப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. டேனிஷ்பேட்டை வனச்சரகத்தில், புதிதாக வன சூழ் ஆராய்ச்சி மையம் அமைக்க அவசியம் எழவில்லை.

82—

வன எல்லை

வினா எண் 113725—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், வெள்ளோடு பறவைகள் சரணாலயம் பகுதியில் வன எல்லை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், வெள்ளோடு பறவைகள் சரணாலயப் பகுதி மொத்தம் 77.185 எக்டேர் பரப்பளவு கொண்டதாகும். வெள்ளோடு சரணாலயப்பகுதி அரசாணை (நிலை) எண் 44, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்-5) துறை, நாள் 29-2-2000-ல் பறவைகள் சரணாலயமாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இச்சரணாலயப் பகுதியின் எல்லைகள் நில அளவை செய்யப்பட்டு வன எல்லைக்

2010 மே 14]

கற்கள் (Cairns) நடும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும் கடந்த நான்கு ஆண்டுகளில் 586 மீட்டர் நீளத்திற்கு வன எல்லையில் வலை கம்பி வேலியும் அமைக்கப்பட்டுள்ளது.

83—

சாலை செப்பனிடல்

வினா எண் 114482—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, அக்காமலை சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) 2009-2010 ஆம் ஆண்டு பகுதி-I திட்டம் சாரா தலைப்பின் கீழ் அரசு ஆணை (டி) எண் 300, சுற்றுச்சூழல் வனத் துறை, நாள் 12-10-2009-ல், பிறவற்றுடன், கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, அக்காமலை கோனலார் சாலையை 2 கி.மீ. தூரத்திற்கு மேம்பாட்டுப் பணி மேற்கொள்ள ரூ.16 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, இச்சாலை மேம்பாட்டு பணி, திருச்சி வனப்பொறியாளரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) 2009-2010 ஆம் நிதியாண்டில், மேற்காணும் பணி செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

84—

கான்கிரீட் சாலை

வினா எண் 47348—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம் ஊராட்சியிலுள்ள நெடுஞ்சாலைத் துறை சாலைகளை கான்கிரீட் சாலைகளாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம் ஊராட்சி சாலைப் பகுதியானது, ஆனைமலை நெடுஞ்சாலை உட்கோட்டத்தால் பராமரிக்கப்பட்டு வரும் மாநில நெடுஞ்சாலையான பொள்ளாச்சி வால்பாறை சாலை கி.மீ. 0/0-64/0 வரையுள்ள சாலையில் கி.மீ. 8/0-9/0 வரையுள்ள பகுதியாகும். இச்சாலை தற்போது போக்குவரத்திற்கு ஏற்ற முறையில் நல்ல நிலையில் உள்ளது. மேலும், மேற்படி சாலையை கான்கிரீட் சாலைகளாக அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

85—

சாலை வசதி

வினா எண் 47544—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, இராஜாக்கமங்கலம் - வில்லுக்குறி சாலையைப் பலப்படுத்தி அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி இராஜாக்கமங்கலம்—வில்லுக்குறி (கி.மீ. 0/0-10/4) சாலை மாவட்ட இதர ஒருவழித்தட சாலையாகும். அரசு கொள்கையின்படி மாநில நெடுஞ்சாலைகளை இருவழித்தடச் சாலையாகவும் மற்றும் மாவட்ட முக்கியச் சாலைகளை இடைவழித்தடமாக அகலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்சமயம் இச்சாலையின் போக்குவரத்து செறிவு 3,250 PCUS ஆகும். இச்சாலையின் போக்குவரத்து செறிவு 6,000 PCUயைவிட அதிகரிக்கும்போது இடைவழித்தடமாக படிப்படியாக அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

2010 மே 14]

86—

சாலை வசதி

வினா எண் 47545—திரு. எஸ். ஜெயபால்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, குளச்சல்-திக்கணங்கோடு-முளகுமூடு சாலையைப் பலப்படுத்தி அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். நாகர்கோவில் (நெ) கோட்ட பராமரிப்பிலுள்ள முளகுமூடு-குளச்சல் சாலை கி.மீ. 0/0-11/2 வரை மாவட்ட முக்கிய சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 3/8-11/0 வரை (CRIDP) *ஒரு வழித்தடத்தை இடைவழித்தடமாக அகலப்படுத்த ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 2009-2010-ல் ரூ.170.00 இலட்சத்திற்கு ஒப்பந்தம் கோரப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டு, தற்போது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.*

87—

சாலை வசதி

வினா எண் 47546—திரு. எஸ். ஜெயபால்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, பார்வதிபுரம்-பெருவிளை, ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி சாலையை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 மே 14

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நாகர்கோவில் (நெ) கோட்ட பராமரிப்பிலுள்ள "பெருவிளை சாலை கி.மீ. 0/0-2/0" எனும் 2.0 கி.மீ. நீளமுள்ள ஒரு வழித்தடமான மாவட்ட இதர சாலையாகும்.

மேற்படி சாலையை ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2008-2009-ன்கீழ் ஒரு வழித்தடத்திலிருந்து இடைவழித்தடமாக அகலப்படுத்த, ரூ.48.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது.

88—

சாலை வசதி

வினா எண் 51931—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறையில் ஊசிமலை, அக்காமலை, கரும்பாலம் சாலைகளைச் சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை ஊசிமலை, அக்காமலை, கரும்பாலம் சாலையானது தனியார் நிருவாகத்திற்குட்பட்ட சாலையாக இருப்பதால் இத்துறையின்மூலம் சாலை அமைத்திட இயலாத நிலை உள்ளது.

2010 மே 14]

89—

பாலம்

வினா எண் 101577—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டாறு தொகுதி, தக்கலை கோட்டம், செருப்பாலூர் - மாத்தூர் தொட்டிப்பாலம் இணைப்புப் பாலம் புதிதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவட்டாறு தொகுதி, தக்கலை கோட்டம், செருப்பாலூர் - மாத்தூர் தொட்டிப்பாலம் இணைப்புப் பாலம் புதிதாக அமைக்க குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது, நாகர்கோவில் (நெ.) கோட்ட பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலையான, கல்லடி - மாமூடு அண்டூர் சாலையிலிருந்து மாத்தூர் தொட்டிபாலம் செல்லும் சாலை கி.மீ. 0/0-2/0 வரை ஆகும். இச்சாலையில் கி.மீ. 1/2-ல் குறுகிய வளைவில் அமைந்துள்ள பாலமாகும். பாலம் தற்போது நல்ல நிலையில் இருந்தாலும், குறுகலாக இருப்பதால் வரும் ஆண்டில் நிதிநிலைமைக்கேற்ப அகலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

90—

டைடல் பார்க்

வினா எண் 98265—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியில் டைடல் பார்க் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே இரண்டாம் நிலை நகரமான (Tier-II city) *சேலத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைய விருப்பதாலும் ஆத்தூர் சேலம் மாவட்டத்தில் உட்பட்டு இருப்பதாலும் ஆத்தூர் தொகுதியில் டைடல் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.*

91—

தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு

வினா எண் 108407—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகம் முழுவதையும் இணைப்பதற்கான தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) *மூலமாக மாநிலத் தலைநகரமான சென்னையுடன் மாவட்டத் தலைநகரங்கள், வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்ட அலுவலகங்கள் மற்றும் வட்டார வளர்ச்சி நிறுவனங்கள் இணைக்கப்பட்டுள்ளன.*

தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பை இந்தியாவில் முதன்முதலாகச் செயல்படுத்திய மாநிலம் தமிழ்நாடு ஆகும். தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு வெற்றிகரமாகத் தொடங்கப்பட்டு, இவ்வலையமைப்பின் BOOT *(உருவாக்கம், சொந்தமாக்குதல், செயலாக்கம் மற்றும் மாற்றுதல்) பணிகள் 1-12-2007 முதல் தொடங்கப்பட்டன. இவ்வலையமைப்பின் செயலாக்கம் மற்றும் பராமரிப்புக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் பிரத்யேகப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.*

2010 மே 14]

தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பில் மொத்தம் 708 இருப்பு முனைகள் (Points of Presence) உள்ளன. இவை தவிர அரசு அலுவலகங்கள், இந்த இருப்பு முனைகளுடன் சமதள இணைப்பு (Horizontal Connectivity) மூலம் இணைக்கப்படும். இதற்கான முடிவிட மையங்கள் (Termination Port), தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு இருப்பு முனைகளில் அமைக்கப்பட்டு அவற்றிலிருந்து அரசு அலுவலகங்களுக்குத் தக்க இணைப்புகள் வழங்கப்படும்.

தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பின் இருப்பு முனைகளிலிருந்து அலுவலகங்களுக்கு சமதள இணைப்பு வழங்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இதன் மூலம் அலுவலகங்கள் தங்களுடைய மின்னாளுமைப் பணிகளைச் செயல்படுத்த இயலும்.

இத்திட்டத்திற்கான முகமையாக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் கண்டறியப்பட்டு, அந்நிறுவனம் இத்திட்டத்திற்கான நிதி உதவியைப் பெறுதல், செயல்படுத்துதல் மற்றும் உபயோகச் சான்றளித்தல் ஆகிய பொறுப்புகளை ஏற்றுள்ளது.

92—

கட்டடம்

வினா எண் 63123—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, விளாப்பாக்கம் பேரூராட்சி நாராயணபுரத்தில் ஊட்டச் சத்து மையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு தொகுதி, விளாப்பாக்கம் பேரூராட்சி, நாராயணபுரத்தில் அங்கன்வாடி மையம் மார்ச், 2004 முதல் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

இம்மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. அந்நிதியினைக் கொண்டு வேலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் அரசு ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

93—

செவிலியர் பயிற்சி

வினா எண் 104577—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள ஆதி திராவிடர்களுக்கு உணவு தயாரித்தல், பரிமாறுதல் பயிற்சி மற்றும் உதவி செவிலியர் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

நடப்பு நிதியாண்டு 2009-2010-ல் அரசு ஆணை எண் 318, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 15-12-2009-ல், உணவு தயாரித்தல் மற்றும் பரிமாறுதல் பயிற்சிக்காக ரூ.300.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் 2,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு தமிழக அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் பதிவு செய்துள்ள, முன்னோடி நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படும். மேலும் நடப்பாண்டில் ரூ.200.00 இலட்சம் செலவில் 1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிருக்கு உதவி செவிலியர் பயிற்சி மாவட்ட அளவில் முன்னோடி மருத்துவமனைகளில் அளிக்கப்படும்.

2010 மே 14]

94—

தொழில் பயிற்சி மையம்

வினா எண் 106970—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடலூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர், நீலகிரி, தருமபுரி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, திண்டுக்கல், சிவகங்கை, வேலூர், கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, ஈரோடு, நாமக்கல், நாகப்பட்டினம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, பெரம்பலூர், தஞ்சாவூர், அரியலூர் ஆகிய மாவட்டங்களில் ஆதி திராவிடர்களுக்குத் தொழில் பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர், நீலகிரி, தருமபுரி, கன்னியாகுமரியில் உள்ள நாகர்கோவில், தூத்துக்குடி, திண்டுக்கல், சிவகங்கை, வேலூர், கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, ஈரோடு, நாமக்கல், நாகப்பட்டினம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, பெரம்பலூர், தஞ்சாவூர், அரியலூர் மாவட்டங்களில் நடப்பாண்டில் தாட்கோ மூலம் ஆதி திராவிடர்களுக்குத் தொழில் பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் தற்சமயம் ஏதும் இல்லை.

95—

தொழிற்பயிற்சி மையம்

வினா எண் 106993—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கரூர், தேனி, விழுப்புரம், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, சேலம், சென்னை, திருப்பூர், விருதுநகர், வால்பாறை

ஆகிய மாவட்டங்களில் ஆதி திராவிடர்களுக்குத் தொழில் பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர், தேனி, விழுப்புரம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள செங்கல்பட்டு, திருவள்ளூர், சேலம், சென்னை, திருப்பூர், விருதுநகர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள வால்பாறை ஆகிய மாவட்டங்களில் தாட்கோமூலம் நடப்பாண்டில் ஆதி திராவிடர்களுக்குத் தொழில் பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் தற்சமயம் ஏதும் இல்லை.

96—

தொழில்பயிற்சி மையம்

வினா எண் 107070—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் ஆதி திராவிடர்களுக்குத் தொழில் பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடப்பாண்டில் தாட்கோ மூலம் வால்பாறை தொகுதியில் ஆதி திராவிடர்களுக்குத் தொழில்பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் தற்சமயம் ஏதும் இல்லை.

2010 மே 14]

97—

மரங்களைப் பாதுகாத்தல்

வினா எண் 83507—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை, சேத்துப்பட்டு இரயில் நிலையம் அருகில் ஏரியின் நடுவிலுள்ள மரங்களைப் பாதுகாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, சேத்துப்பட்டு இரயில் நிலையம் அருகில் ஏரியின் நடுவிலுள்ள மரங்கள் மீன் வளத் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

98—

ஆவின் பாலகம்

வினா எண் 103771—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

ஓமலூர் பேருந்து நிலையத்தில் ஏற்கெனவே சேலம் ஒன்றியம் பாலகம் அமைத்து இலாபகரமாக இயங்காததால் பாலகத்தை மூடும் நிலை ஏற்பட்டது. எனவே, ஒன்றியம் நேரடியாக ஓமலூர் பேருந்து நிலையத்தில் பாலகம் அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை. இருப்பினும், திருமதி கே. தனம், 57, இந்தியன் வங்கி காலனி, நரசோதிப்பட்டி, சேலம்-4 என்பவருக்கு பாலகம் நடத்த 9-7-2009 அன்று உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

99—

பால் உற்பத்தி

வினா எண் 106957—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர், அரியலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, கடலூர், சேலம், திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை ஆகிய மாவட்டங்களில் பொதுமக்கள் எருமைப் பால் அதிகமாக வாங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எருமைப் பால் உற்பத்தியில் உள்ள அனுகூலங்களை விளம்பரப்படுத்துதல் மற்றும் உற்பத்தியின் அவசியம் குறித்து பிரசாரம் செய்ய கீழ்க்கண்டவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது:

எருமைப் பாலின் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு, பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் வாங்கப்படும் கறவை மாடுகளில், 30 சதவிகிதம் எருமை மாடுகளாக வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2007-2008 முதல் தேசிய விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எருமைக் கன்றுகள் வளர்க்கும் பிரத்யேகத் திட்டம் அமல்படுத்தப்பட்டு பால் உற்பத்தியாளர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

2010 மே 14]

தமிழக அரசு, கடந்த 3 ஆண்டுகளில், எருமைப் பாலின் விலையை ஆண்டுதோறும் படிப்படியாக உயர்த்தி உத்தரவிட்டதன் பேரில் தற்போது கொள்முதல் விலையாக லிட்டருக்கு ரூ.23.00 வழங்கப்பட்டு வருகிறது.

எருமைப் பாலில் உள்ள அனுகூலங்களை விளம்பரப்படுத்திட சங்கத்தில் அறிவிப்புப் பலகைகள் வைக்கப்படுகின்றன. கிராமங்களில் இது குறித்து அறிவிப்புகளும் செய்யப்படும். பிரதம பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குப் பயிற்சிக் காலங்களில் எருமைப் பால் உற்பத்தி செய்வதில் உள்ள அனுகூலங்கள் குறித்தும், திடமான பால்பொடி, வெண்ணெ, ஏற்றுமதி தரமுள்ள நெய் மற்றும் பால் பொருட்களின் வரவேற்பு போன்றவை பற்றி எடுத்துரைக்கப்படுகிறது.

100—

சோப்பு உற்பத்தி

வினா எண் 107812—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றத்திலுள்ள சோப்பு உற்பத்தி அலகை (யூனிட்) அபிவிருத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

2006-2007 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ், ரூ.10.00 இலட்சம் மானியமாகப் பெறப்பட்டு, நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, திருக்கழுக்குன்றம் மற்றும் மாமண்டூர் குளியல் சோப்பு அலகுகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. அபிவிருத்திக்குப்பின், திருக்கழுக்குன்ற குளியல் சோப்பு அலகில் உற்பத்தி செய்யப்படும் 'கிளிசரின் வகை சோப்புகள்' பொது மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதால் பெறப்படும் தேவை நமூனாக்களின் அடிப்படையில், குளியல் சோப்பு உற்பத்தி

செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், "நித்தம் ஹெர்பல்" என்ற மூலிகை சோப்பும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. திருக்கழுக்குன்றத்திலுள்ள சோப்பு அலகு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதால், மீண்டும் அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு. (குறுக்கீடு) Wait for a minute. உங்கள் பிரச்சினைக்கு வருகிறேன். (குறுக்கீடு) I will come to that.

(ஆ) காலாவதியான, போலி மருந்துகள் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு, சொல்லுங்கள்.

செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், "நித்தம் ஹெர்பல்" என்ற மூலிகை சோப்பும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. திருக்கழுக்குன்றத்திலுள்ள சோப்பு அலகு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதால், மீண்டும் அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு. (குறுக்கீடு) Wait for a minute. உங்கள் பிரச்சினைக்கு வருகிறேன். (குறுக்கீடு) I will come to that.

(ஆ) காலாவதியான, போலி மருந்துகள் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு, சொல்லுங்கள்.

செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், "நித்தம் ஹெர்பல்" என்ற மூலிகை சோப்பும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. திருக்கழுக்குன்றத்திலுள்ள சோப்பு அலகு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதால், மீண்டும் அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு. *(குறுக்கீடு)* Wait for a minute. உங்கள் பிரச்சினைக்கு வருகிறேன். *(குறுக்கீடு)* I will come to that.

(ஆ) காலாவதியான, போலி மருந்துகள் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு, சொல்லுங்கள்.

2010 மே 14]

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை மாத்திரமல்ல, இந்தியத் திருநாட்டையே இதயம் குலுங்க வைத்த பிரச்சினை, போலி மற்றும் காலாவதி மருந்துப் பிரச்சினை என்பதை நாம் அனைவரும் அறிவோம். கடந்த மாதம் 20 ஆம் தேதிகூட இதே அவையிலே காலாவதி, போலி மற்றும் தரமற்ற மருந்துகளைப் பற்றி எழுப்பப்பட்டது....*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One minute. *கேளுங்கள் முதலிலே. நீங்கள் இன்றைக்குக் காலையிலே இந்தப் பிரச்சினை பற்றி அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். ஏற்கெனவே இந்த விவகாரம் அவையிலே கவன ஈர்ப்பாக எடுக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு, அதன்மீது மாண்புமிகு அமைச்சர் தரப்பிலேயிருந்து பதிலும் சொல்லப்பட்டுவிட்டது. இப்போது இரண்டாவதாக அதையே திரும்ப எடுக்கக்கூடிய நிலையில் இல்லை. (குறுக்கீடுகள்) அடுத்ததாக, விதியிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை முதலிலே தெரிந்துகொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் முதலிலே கேளுங்கள். 'அதே கூட்டத் தொடரில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் வாயிலாகவோ அல்லது வேறு வகையிலோ, பேரவையில் விவாதிக்கப்பெற்ற ஒரு பொருள் பற்றி மீண்டும் விவாதம் எழுப்புவதாகத் தீர்மானம் இருத்தல் ஆகாது'. அதுதான் விதி. (குறுக்கீடு) அடுத்ததாக, நீங்கள் கொடுத்திருக்கிற* issue *இப்போது* police *விசாரணையிலே இருக்கிறது. (குறுக்கீடு) நான் சொல்கிறேன், கேளுங்கள்.* Police *விசாரணையில் இருக்கிறது.* It is under investigation. Investigation-*லே இருக்கிற விஷயத்திலே யாரும் தலையிடக்கூடாது. அதுதான் முறை. (குறுக்கீடு) அதனாலே,* if you want any representation, *எதுவென்றாலும் நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால்* police-*லே போய்ச் சொல்லுங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடு) கூடுதல் விவரங்களை நீங்கள்* police station-*லே போய்ச் சொல்லுங்கள்.* The matter is under investigation. (Interruptions) *அனுமதியில்லை. விதி 65. அதிலே பாருங்கள்,* sub-clause (iv)-*லே என்ன இருக்கிறது என்று பாருங்கள். அதற்கப்புறமும் நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமென்று நினைத்தால், அந்த வழக்கு சம்பந்தப்பட்டதிலே ஏதாவது சொல்ல வேண்டுமென்று நினைத்தீர்கள் என்றால்,* police station-*லே போய், "எங்களுக்குப் புதிதாக* evidence *கிடைத்திருக்கிறது, அந்த* evidence *இதோ இருக்கிறது, இது சம்பந்தமாக விசாரியுங்கள்" என்று சொல்லுங்கள். அதுதான் முறை. (குறுக்கீடுகள்) சட்டமன்ற விதிப்படி, இரண்டாவது முறை அந்தப் பொருள் குறித்து*

விவாதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பிரச்சினையை இந்த அவையில் எழுப்புவதாக இருந்தாலும் அவைத் தலைவர் அனுமதித்தால்தான் எழுப்புவதற்கு நியாயம் உண்டே தவிர, அனுமதிக்காவிட்டாலும் ஒரு பிரச்சினையை எழுப்புவேன் என்றால், இந்த அவையில் ஓர் எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகத் தொடங்குகிற ஒரு காரியமாகத்தான் நான் இதைக் கருதுகிறேன். எனவே, பேரவைத் தலைவர் அவர்கள் விதிப்படியும், முறைப்படியும் அனுமதிக்கத் தேவையில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், வேறு ஏதாவது பொருள் குறித்து raise பண்ணுகிறீர்களா? (குறுக்கீடு) வேறு விஷயம் குறித்து ஏதாவது raise பண்ணுகிறீர்களா? (குறுக்கீடு) நான் என்னுடைய முடிவைச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) வேறு ஏதாவது விஷயம் இருக்கிறதா என்றுதான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினையை எடுக்க முடியாது என்று நான் சொல்லிவிட்டேனே! (குறுக்கீடுகள்) விதியிலே தெளிவாக இருக்கிறது. விதி 65, sub-clause (iv)-ஐ எடுத்துப் படித்துப் பாருங்கள். (குறுக்கீடு) ஒரு வழக்கு, ஒரு விஷயம் ஏற்கெனவே விவாதிக்கப்பட்டதற்குப்பிறகு மீண்டும் அதை எடுக்கக்கூடாது என்று விதியில் இருக்கிறது. (குறுக்கீடு) அதில், அதற்குப்பிறகு கூடுதல் விவரங்கள் இருக்கின்றன என்றால், police station-லே போய்ச் சொல்லுங்கள். The case is pending in police station. The case is under investigation. (Interruptions)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்

(இ) வறட்சி மாவட்டங்களில் உள்ளோர்க்கு நிவாரண நிதி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்தது, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

விவாதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பிரச்சினையை இந்த அவையில் எழுப்புவதாக இருந்தாலும் அவைத் தலைவர் அனுமதித்தால்தான் எழுப்புவதற்கு நியாயம் உண்டே தவிர, அனுமதிக்காவிட்டாலும் ஒரு பிரச்சினையை எழுப்புவேன் என்றால், இந்த அவையில் ஓர் எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகத் தொடங்குகிற ஒரு காரியமாகத்தான் நான் இதைக் கருதுகிறேன். எனவே, பேரவைத் தலைவர் அவர்கள் விதிப்படியும், முறைப்படியும் அனுமதிக்கத் தேவையில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், வேறு ஏதாவது பொருள் குறித்து raise பண்ணுகிறீர்களா? (குறுக்கீடு) வேறு விஷயம் குறித்து ஏதாவது raise பண்ணுகிறீர்களா? (குறுக்கீடு) நான் என்னுடைய முடிவைச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) வேறு ஏதாவது விஷயம் இருக்கிறதா என்றுதான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினையை எடுக்க முடியாது என்று நான் சொல்லிவிட்டேனே! (குறுக்கீடுகள்) விதியிலே தெளிவாக இருக்கிறது. விதி 65, sub-clause (iv)-ஐ எடுத்துப் படித்துப் பாருங்கள். (குறுக்கீடு) ஒரு வழக்கு, ஒரு விஷயம் ஏற்கெனவே விவாதிக்கப்பட்டதற்குப்பிறகு மீண்டும் அதை எடுக்கக்கூடாது என்று விதியில் இருக்கிறது. (குறுக்கீடு) அதில், அதற்குப்பிறகு கூடுதல் விவரங்கள் இருக்கின்றன என்றால், police station-லே போய்ச் சொல்லுங்கள். The case is pending in police station. The case is under investigation. (Interruptions)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்

(இ) வறட்சி மாவட்டங்களில் உள்ளோர்க்கு நிவாரண நிதி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்தது, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

2010 மே 14]

முற்பகல் 9-35

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் கடுமையான வறட்சியில் சிக்கி, அங்கே குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது என்பதை எல்லோரும் வலியுறுத்தியதற்கேற்ப, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் முதற்கட்டமாக குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நிதி ஒதுக்கி, தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, இன்னும் கடுமையான வறட்சி நிலவுகின்ற காரணத்தினாலே, ஒதுக்கிய நிதி பற்றாக்குறையாக இருப்பதால், கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும். அதே நேரத்தில், இந்த வறட்சி மாவட்டங்களில் உணவிற்கே வழியில்லாமல் விவசாயிகள், கூலிகளெல்லாம் அலைந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, இந்த மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, இந்த மாவட்டங்களில் வசிக்கக்கூடியவர்களுக்கு நிவாரண நிதியாக, குடும்பத்திற்கு ரூபாய் 5 ஆயிரம் என்ற வகையில் நிவாரண நிதி வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் மாண்புமிகு திரு. கோ.க. மணி அவர்கள் பல மாவட்டங்களைக் குறிப்பிட்டுச் சொல்லி, அந்த மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய குடிநீர்ப் பிரச்சினையை அடிப்படையாக வைத்து, ஏற்கெனவே அதற்கான நிதியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு ஒதுக்கப்பட்டிருந்தாலும், இன்னும் சில மாவட்டங்களில் அது போதுமான வகையில், அந்தக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய வகையில் இல்லை; எனவே, மேலும் அதற்கு வேண்டிய நிதியொதுக்கீடு செய்ய வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறார்கள். எனவே, ஒவ்வொரு மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர்கள் மூலமாக நாங்கள் தொடர்ந்து அதைக் கண்காணித்து, அவர்களிடமிருந்து தொடர்ந்து அறிக்கையைப் பெற்று வருகிறோம். எனவே, திரு. மணி அவர்கள்

[திரு. மு.க ஸ்டாலின்] [2010 மே 14

சொன்னதுபோல, எந்த மாவட்டத்திற்கு அப்படி அவசியம் ஏற்படுகிறதோ, அந்த நேரத்தில் நிச்சயமாக அரசு அதற்குரிய நிதியை ஒதுக்கி, அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) சென்னை, தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு கான்கிரீட் வீடுகளும், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அடுக்குமாடி வீடுகளும் கட்டித் தருதல் மற்றும் கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தைப் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விஸ்தரித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. ஜெயக்குமார், வேறு பிரச்சினையாக இருந்தால் மட்டும் நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) சரி சொல்லுங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் பிற்பகல் 2-30 மணியளவில் சென்னை, திருவான்மியூர் மீனவர் குப்பத்தில் ஏற்பட்ட கடுமையான தீ விபத்தின் காரணமாக, சுமார் 350-க்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து, தரைமட்டமாகி சாம்பலாகியிருக்கின்றன. பல பேர் காயமுற்றிருக்கின்ற நிலையில், குடிசைகள் தீப்பிடித்து எரிகின்ற சூழ்நிலை ஒரு புறம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் மாவட்டங்களில் ஒரு சர்வே எடுக்கப்பட்டு, எவ்வளவு குடிசைகள் இருக்கின்றன என்பதை அறிந்து, அவற்றை கான்கிரீட் வீடுகளாகக் கட்டித் தருவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், அந்தத் திட்டத்தில் சென்னை சேர்க்கப்படவில்லை. எனவே, சென்னையில் அந்தத் திட்டம் சேர்க்கப்படுகின்ற நிலை உள்ளதா? ஏற்கெனவே குடிசை மாற்று வாரியம் ஒன்று உள்ளது. குடிசைப் பகுதிகளை அகற்றி, அந்தக் குடிசைப் பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டுகின்ற திட்டம். ஏற்கெனவே அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு, அந்த அடுக்கு மாடிக் குடியிருப்புகளைப் பெற்றவர்களுக்கு இலவசமாக, கட்டணம், வாடகை எதுவும் வசூல் செய்யாமல், அவர்களுக்கே சொந்தமாக்குவதுதான் இந்த concept-ன் சரியான தீர்வாகும். எனவே, ஒரு பக்கம் கிராமங்களிலே இலவச வீடுகளைக் கட்டிக் கொடுத்துவிட்டு, சென்னையில் இருக்கின்ற குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளில் குடியிருப்பவர்களிடம் வாடகை வசூல்

[திரு. மு.க ஸ்டாலின்] [2010 மே 14

சொன்னதுபோல, எந்த மாவட்டத்திற்கு அப்படி அவசியம் ஏற்படுகிறதோ, அந்த நேரத்தில் நிச்சயமாக அரசு அதற்குரிய நிதியை ஒதுக்கி, அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவையிலே 20 கோடி ரூபாய் செலவில் செம்மொழிப் பூங்கா உருவாக்கப்பட்டு வருகிறது. மதுரையிலே 14.15 ஏக்கரில் தொல்காப்பிய உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2009 ஆம் ஆண்டில் தொழில் துறையில் மட்டும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யவில்லை. தமிழை வளர்க்கவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளார்கள். அந்த வகையிலே உகாண்டா, கேமரூன், ரோம், இத்தாலி போன்ற நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களோடு தொடர்பு கொண்டு தமிழ் இலக்கிய மொழி வளர்வதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகிலே 600 மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றில் 6 மொழிகள் மட்டுமே செம்மொழி என்ற பெருமையைப் பெற்றுள்ளன. அவை, கிரேக்கம், இலத்தீன், வடமொழியான சமஸ்கிருதம், ஹீப்ரு, சீனம், தமிழ்—திராவிட மொழி ஒப்பிலக்கியம் கண்ட கால்டுவெல் என்ற பேரறிஞர், அவரைத் தொடர்ந்து பல ஆண்டுகள் இடைவெளிக்குப்பின் தமிழ் செம்மொழி ஆக்கப்பட வேண்டுமென்று முதல் குரல் கொடுத்த சூரிய நாராயண சாஸ்திரிகள் என்ற பரிதிமாற் கலைஞர், அவரைத் தொடர்ந்து தமிழ்ச் சங்கங்கள், தமிழ்ப் புலவர்கள் பலர், தமிழ்ப் பேரறிஞர்கள் பலர், இப்படி நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் எழுப்பிய உணர்வுகளையெல்லாம் உள்வாங்கிய முதல்வர் அவர்கள், பரிதிமாற் கலைஞர் தூக்கிய கொடியை இந்தக் கலைஞர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உயர்த்திப் பிடித்து, உலகிற்கு, தமிழ் செம்மொழி ஆகிவிட்டது என்று அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக தமிழ்ச் சமுதாயம் என்றென்றும் உங்களுக்குக் கடமைப்பட்டுள்ளதாக இருக்கும். செம்மொழி அறிவிப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டபோது, "தந்தை பெரியார் என்னைத் தொட்டு, தட்டிக் கொடுத்துப் பாராட்டியபோதெல்லாம், அறிஞர் அண்ணா

அவர்கள் என்னை அரவணைத்து, உச்சி முகர்ந்து அன்பு மழை பொழிந்தபோதெல்லாம் அடைந்த மகிழ்ச்சிக்கு ஈடான மகிழ்ச்சி இப்போது என்னுள் குடிகொண்டிருக்கிறது'' எனத் தெரிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் மொழி செம்மொழிப் பெருமை பெற்ற வாய்ப்பைக் கருதி, உலகெங்கும் தமிழ் மொழி ஆட்சி கொள்ளும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதன்காரணமாக, நம்முடைய முதல்வர் அவர்கள், ஜூன் மாதம் 23 முதல் 27 வரை கோவையிலே உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தி, உலகத் தமிழர்களுக்கெல்லாம் செம்மொழியாம் தமிழ் மொழி வளர வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். அன்பழகன், நேரமாகிவிட்டது. உரையை முடித்துவிடுங்கள்.

திரு. எம். அன்பழகன்: எனது தொகுதி சம்பந்தமான கோரிக்கைகள். பழனி தொகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையான பச்சையாறு அணைத் திட்டம் நிறைவேற்றித் தரப்பட வேண்டும். பழனியிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டித் தரப்பட வேண்டும். பாப்பம்பட்டி அரசுப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள், அண்ணா விட்டுச் சென்ற பணியை மட்டுமல்ல, நம்முடைய முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் தஞ்சைப் பல்கலைக்கழகத்திலே, மேலிருந்து நோக்கினால் தமிழ் நாடு என்று தெரியும் அளவிற்குப் பல்கலைக்கழகத்தை நிறுவினார்கள். அந்த பல்கலைக்கழகத்திலே "ழ்" மட்டும் எம்.ஜி.ஆர். அவர்கள் நிறுவியிருக்கிறார்கள். "தமி"-யை நம்முடைய முதல்வர் அவர்கள் ரூ.550 கோடி மதிப்பில் இந்த ஆண்டு நிறுவ இருக்கிறார்கள். அதற்கு 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிக் கொடுத்த அன்புச் சகோதரி, மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை 25 இலட்சம் ரூபாயாகத் தொடங்கிய நம்முடைய முதல்வர் அவர்கள், இந்த ஆண்டு அதை 2½ கோடி ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அன்பழகன், உரையாற்றியது போதும், உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கு. ஜெயக்குமார். நீங்கள் பேசுவதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் 8 நிமிடங்கள்.

முற்பகல் 10-45

***முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த அவையிலே ஐந்தாவது முறையாக இதே மானியங்களின்மீது பேசுகின்ற ஒரு அரிய வாய்ப்பினை அளித்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த எனதருமை சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும், சட்டப் பேரவை தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதித் துறை எந்த அளவிற்கு முக்கியம் வாய்ந்தது என்று நான் சொல்லி இங்கே தெரிய வேண்டிய அவசியம் இல்லை. உடலுக்கு எப்படி உதிரம் தேவையோ, அதுபோன்று இந்த நிதியானது ஆட்சியை நடத்துவதற்குத் தேவை. அந்த அளவிலே,

> "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்ல தரசு"

என்று பொய்யாமொழிப் புலவர், தமிழ்மறை யாத்த திருவள்ளுவர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்த வழியிலே இந்த அரசானது, சுருங்கச் சொல்லின், நடந்துகொண்டிருக்கின்றது என்பதைக் கூறி, ஐந்தாவது முறையாக நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நல்லதொரு நிதிநிலை அறிக்கையை அளித்திருக்கின்றார்கள். வரியில்லா ஒரு நிதிநிலை அறிக்கை, பற்றாக்குறை இல்லா ஒரு நிதிநிலை அறிக்கை. இத்தகையதொரு அறிக்கையை அளித்த அவருக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று மிக முக்கியமானது திட்டத் துறை. இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்றபொழுது, ஆங்காங்கே நம்முடைய திட்டத் துறையினுடைய பதிவுகள் தெரிகின்றன. குறிப்பாக, எங்களுடைய இயக்கத்தைச் சார்ந்த திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகின்றபோது பல முறை இந்த அவையிலே ஒரு கருத்தைச் சொல்லி இருக்கின்றார்கள். தொழிற்சாலைகள் எல்லாம் சென்னையைச் சுற்றியே

அமைந்துகொண்டிருக்கின்றன, இவை வெளியே செல்ல வேண்டுமென்று சொன்னார். இந்த நிதிநிலை அறிக்கையிலே அதற்கு வழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. தற்போது சிவகங்கை, மதுரை, மானாமதுரை, திண்டுக்கல், தூத்துக்குடி ஆகிய இடங்களில் எல்லாம் பெரும் தொழிற்சாலைகள் அமைக்க வழிவகுத்துத் தந்திருக்கின்றது இந்த நிதிநிலை அறிக்கை. அதற்காக வழிவகுத்த திட்டத் துறைக்கு என்னுடைய வாழ்த்துதலைச் சொல்லிக்கொள்கின்றேன், மின் அணுவைவிட வேகமாக இயங்கி, தமிழகத்தை முன்னேற்ற வேண்டும் என்று துடிக்கின்ற இளைஞர் நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் தொழில் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதிலளிக்கின்றபொழுது சொன்னார்கள், தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சியானது உலக அளவிலே ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய அளவிற்கு இருக்கின்றது என்றும், கடந்த காலங்களிலே தமிழ்நாட்டினுடைய வளர்ச்சி ஒட்டுமொத்தமாக 1.7 சதவிகிதம் இருந்த காலத்திலேகூட தொழில் துறையானது 11.6 சதவிகிதத்தை எட்டியிருக்கின்றது என்றும், இது I.I.T.யினுடைய அறிவிப்பு என்றும் சொன்னார்கள்.

இந்த நேரத்திலே இந்த வளர்ச்சி நீடிக்க வேண்டுமென்றால், மின் துறையானது சரியாகச் செயல்பட வேண்டும். சரியான அளவிலே மின்சாரம் உற்பத்தி செய்யப்பட வேண்டும். மின்சாரம் இல்லாமல் எந்த ஒரு தொழிற்சாலையும் வேண்டிய உற்பத்தியைக் கொடுக்க முடியாது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. நம்முடைய மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் மின்சாரத் துறையின்மீது பதிலளித்துப் பேசுகின்றபொழுது சொன்னார்கள், தமிழகத்தில் இந்த ஆண்டு 3,500 மெகா வாட் மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கின்றது என்றும், 2011-2012 ஆம் ஆண்டிலே இந்தப் பற்றாக்குறை இருக்காது என்றும் சொன்னார்கள். 3,500 மெகா வாட் மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்றால், ஒரு மெகா வாட்டுக்கு 4 கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டும் என்று எடுத்துக்கொண்டாலும்கூட, 14 ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படுகின்றது வருகின்ற இரண்டு ஆண்டுகளிலே. அதற்கு நிதிநிலை இடம் அளிக்குமா என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்ட வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். அது சாத்தியமா என்றும் நான் அறிய விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல, மின் உற்பத்தி செய்வதற்கு 60 சதவிகிதம் செலவு செய்கின்றோம் என்றால், மீதி 40 சதவிகிதத்தை transmission and distribution—மின்சார விநியோகத்திற்காகப் பயன்படுத்த வேண்டும். அதற்கும் இடம் இருக்கின்றதா என்பதை நாம் அறிய வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பல துறைகளிலே முன்னேறிக்கொண்டிருக்கின்ற தமிழகம், பல நிலைகளிலே முன்னிலையிலே இருக்கின்ற தமிழகம், ஒரு புள்ளிவிவரத்தின்படி தென் மாநிலங்களை எடுத்துக்கொண்டால், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களை எடுத்துக்கொண்டால், வறுமைக்கோட்டிற்குக் கீழாக வாழ்கின்ற மக்கள் தமிழகத்திலே மற்ற மாநிலங்களைவிட சற்று அதிகமாக இருக்கின்றார்கள். இந்த நிலையைப் போக்கவேண்டுமென்றால், அதற்காக வேலைவாய்ப்பு வசதிகளை நாம் பெருக்கிக்கொள்ள வேண்டும். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே சொன்னார்கள், கடந்த ஆட்சியிலே 6 ஒப்புணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின என்றால், இப்பொழுது 25 ஒப்புணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன என்ற கருத்தை இங்கே எடுத்து வைத்தார்கள். அப்படி அந்த ஒப்புணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்ற நேரத்திலே இந்த அரசுக்கு நான் சிரம் தாழ்த்தித் தெரிவித்துக்கொள்வதெல்லாம், இந்த வேலைவாய்ப்பு வழிகள் அதிகப்பட வேண்டுமானால், அந்த ஒப்பந்தங்களைக் கையெழுத்திடுகின்ற நேரத்திலே, குறைந்தபட்சம் 50 சதவிகித உற்பத்தியையாவது சிறு தொழில்கள்மூலமாக எடுத்துக்கொள்ள வேண்டும். சிறு தொழில்கள்தான் அதிக வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

சிறப்பு உட்கூறுத் திட்டத்தைப் பற்றி நான் பேசாமல் இருந்தது கிடையாது. ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு மத்திய அரசுக்கும், நிதி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்திருக்கின்றேன். 19% சிறப்பு உட்கூறுத் திட்ட நிதியை இந்த முறை செயல்படுத்தியிருக்கின்றீர்கள். ஆனால் ஒரு ஒப்பீட்டையும் சொல்லியிருக்கின்றீர்கள். 2005-2006-லே ரூ.567 கோடியாக இருந்த சிறப்பு உட்கூறு நிதி இன்றைக்கு ரூ.3,828 கோடியாக உயர்ந்திருக்கின்றது என்றும், இது 2005-2006-ஐவிட

ஏழு மடங்கு அதிகமாக இருக்கின்றது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இடத்திலே நாம் ஒன்றை உற்று கவனிக்க வேண்டும். ஏழு மடங்கு இங்கு நிதி அதிகமாக இருக்கின்றது என்றால், எந்தச் சமுதாயத்திற்காக இந்தச் சிறப்பு உட்கூறுத் திட்டம் பயன்படுத்தப்படுகின்றதோ, அந்தச் சமுதாயத்து மக்கள் அந்த அளவிற்கு முன்னேறி இருக்கின்றார்களா என்பதை நம்முடைய திட்டத் துறை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அந்த அளவுக்கு வளர்ச்சி இருக்காது என்பதே என்னுடைய கருத்தாக இருக்கின்றது. காரணம், நாம் ஏழு மடங்கு இந்த நிதியை ஒதுக்கிக் கொடுத்தாலும், அந்த ஏழு மடங்கு நிதி அவர்களுக்குச் சென்று அடைகின்றதா என்பது எனக்குச் சற்று சந்தேகத்தைக் கொடுக்கின்றது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஓய்வூதியங்களைப் பொறுத்த மாத்திரத்திலேயே முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியத்தை ரூ.15,000/-ஆக உயர்த்த வேண்டுமென்றும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இன்றைய நிலையில் 60, 70 வயதைத் தாண்டியவர்களாக இருப்பார்கள், அதிகம் பேர்கள் இருப்பார்கள் என்றும்கூட நான் கருதவில்லை. எனவே, அவர்களுக்கு மருத்துவச் செலவாக வருடத்திற்கு ரூ.15,000/-ஆவது கொடுக்க வேண்டும். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சுங்கச்சாவடி வழியாகச் செல்கின்றபோது, அவர்களுடைய வாகனங்களுக்கு சுங்கச்சாவடிக் கட்டணம் செலுத்துவதில் விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும். முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு ஓய்வூதியம் உயர்த்தப்பட வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்பது என்னுடைய கருத்து. ஏனென்றால், நான் சட்டமன்றக் குடியிருப்பிலே சற்று அதிகமாகத் தங்குகின்ற ஒரு சட்டமன்ற உறுப்பினர். எங்கு பார்த்தாலும் குப்பையும், கூளமுமாக இருக்கின்றது; அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் அதனைச் சற்று சரியாகக் கவனிக்க வேண்டும். இதற்காகக் குழுக்கள்கூட அமைக்கப்பட்டு, அந்தக் குழுக்கள் எல்லாம் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நேற்றையதினம் அந்தக் குழுக்களுடைய பணிகள் எல்லாம் முடிவடையவில்லை, குழுக்களுடைய

பணிக்காலத்தை நீட்டிக்க வேண்டுமென்றும், ஒரு வருடம் நீட்டித்துக் கொடுத்திருக்கின்றீர்கள். ** இதைப் பார்த்துக்கொள்ளும் உயர் அதிகாரிகள் அடிக்கடி இந்த சட்டமன்றக் குடியிருப்பு வளாகத்தை சற்று வந்து பார்க்க வேண்டுமென்றும், அது எந்த நிலையில் இருக்கின்றது என்பதையும் சொல்லி, (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம் நம்முடைய உணவகத்தைப் பற்றிப் பேச வேண்டும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நீங்கள் உணவகத்திற்கு வருவது கிடையாது. உங்களுடைய அறையில் உணவை எடுத்துக் கொள்கின்றீர்கள். இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருகின்ற உணவகத்தில், சட்டமன்ற உறுப்பினர்களும், மற்றவர்களும் ஒரே நேரத்தில் அங்கே உணவு உட்கொள்வதால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அது வசதியாக இல்லை. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முனைவர் ஜெயக்குமார், ஒரு நிமிடம். ** என்ற வாசகத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். You are part of that. ** சொல்லக்கூடாது என்று சொல்கிறேன்.

முனைவர் கு. ஜெயக்குமார்: Honourable Deputy Speaker Sir, it doesn't mean that I need not point out the shortfalls. ** It is the primary function of a Member. I think you are aware of it and it is my privilege also as the member of this Assembly to point out to the Government and it is expected from me. Thank you.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற கடிதங்களுக்கு, அமைச்சர் பெருந்தகைகள் நேரத்திலே பதில் அளிப்பதில்லை என்ற குறைபாட்டை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நேரத்திலே பதில் அளிக்க வேண்டுமென்று சொல்லி, இந்த அவையிலே நடக்கின்ற நிகழ்ச்சிகளை, பாராளுமன்றத்தில் ஒளிபரப்புவது போன்று நேரடி ஒளிபரப்புச் செய்ய வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, மாண்புமிகு கலைஞர் அவர்களே 1997-லே இந்தத் திட்டத்தை நீங்கள் தான் துவக்கி வைத்தீர்கள். ரூபாய் 25 இலட்சத்தில் துவக்கப்பட்டுள்ள இந்த நிதி—இன்றைக்கு உங்களுடைய தலைமையில் நடந்து

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொண்டிருக்கின்ற இந்த அரசு... (மணியடிக்கப்பெற்றது) உங்களுக்கும் சேர்த்துத்தான் பேசுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கூடுதல் நேரம் கொடுக்க முடியாது.

முனைவர் கு. ஜெயக்குமார்: ரூபாய் 1.7 கோடியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது, இதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் செல்வதில்லை. மக்களுக்குக் கொடுக்கப்படுகின்ற, மக்களுடைய திட்டத்திற்காகக் கொடுக்கப்படுகின்ற பணம். எனவே, இதனை ரூபாய் 2.5 கோடியாக உயர்த்த வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு தமிழ் வளர்ச்சி தொடர்பாக ஒரே ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்றைக்கு I.T.I. தொழில் பயிற்சிப் பள்ளிகள் நிறைய இருக்கின்றன. ஆனால், இது மைய அரசின் நேரடிப் பார்வையில் வருகின்ற காரணத்தினால் தமிழகத்திலேயே பரிட்சை எழுதுகின்ற I.T.I. மாணவர்களுக்கு ஆங்கிலத்திலும் மற்றும் இந்தியிலும் கேள்வித் தாள்கள் வழங்கப்படுகின்றன. இது பரிட்சை துவங்கியதும் 15 நிமிடத்திலே மொழிபெயர்க்கப்பட்டு மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. இந்த நிலையை மாற்ற வேண்டும். ஆந்திராவிலும், கர்நாடகாவிலும் இதே நிலைதான். இதற்கு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் முன்னின்று இந்தக் கேள்வித் தாள்களையெல்லாம் அந்தந்த மாநில மொழியிலே கொடுப்பதற்கும், தமிழகத்திலே தமிழிலே கொடுப்பதற்கும் முயற்சி எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

நாமக்கல்லிலே இருக்கிற பொது மருத்துவமனையானது இன்றைக்கு தேசிய அளவிலே அங்கீகரிக்கப்பட்டு தேசிய தரச் சான்றிதழ் பெற்றுள்ளது. அதற்காக என்னுடைய தொகுதியைச் சார்ந்த மருத்துவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியினை இங்கு பதிவு செய்து, நல்லதொரு நேரத்தை வழங்கியமைக்காக உங்களுக்கும் என்னுடைய நன்றியினைப் பதிவு செய்து, அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம், தமிழ் வளர்ச்சி உள்ளிட்ட 7 துறைகளில் இம்மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்கள் தமிழினப் போராளி மாண்புமிகு மருத்துவர் அய்யா அவர்களுக்கும், பசுமை நாயகர் எங்கள் சின்ன அய்யா திரு. அன்புமணி இராமதாஸ் அவர்களுக்கும், ஓய்வறியா உழைப்பாளி சட்டப் பேரவைக் கட்சித் தலைவர் அண்ணன் திரு. கோ.க. மணி அவர்களுக்கும், எங்கள் சட்டப் பேரவைக் கட்சி கொறடா அண்ணன் திரு. வேல்முருகன் அவர்களுக்கும், இங்கே இந்தத் துறையிலே இன்று பதில் சொல்ல இருக்கிற முத்தமிழ்க் காவலர் கலைஞர் அவர்களுக்கும், நமது இளைய தளபதி, துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஸ்டாலின் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைச் சொல்லி, இந்தத் துறையின்மீது பேசுவதற்கு முன்னால் என்னுடைய தொகுதிக் கோரிக்கைகள் சிலவற்றைச் சொல்லிவிடுகிறேன். அவற்றை நிறைவேற்றித் தர வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பூம்புகார் சுற்றுலா வளாகம் நமது மாண்புமிகு தமிழக முதல்வரின் எண்ணத்திலே உருவெடுத்து, எழுநிலை மாடம் அங்கே சிறப்பாக அமையப்பெற்றது. இன்று அதை மேம்படுத்தி அங்கு விடுதிகளை அமைத்து, பூங்காக்களை அமைத்துத் தர வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காவிரி கடலோடு கலக்கும் இடத்தில் தடுப்பணை கட்டுவதாக கடந்த ஆண்டே இம்மாமன்றத்தில் நமக்கு அறிவிப்பு கிடைத்தது. ஆனால், இன்று வரை அங்கு பணி நடைபெறவில்லை, அதை உடனடியாகத் தொடங்க வேண்டும்.

அடுத்து, பூம்புகார் தொகுதி, ஆக்கூரில் 110 மெகா வாட் துணை மின் நிலையம் அமைக்க அனுமதி கிடைத்தும், இன்னும் அது தொடங்கப்படவில்லை, ஆகவே, அதை அமைத்துத் தர வேண்டுகிறேன்.

ஆக்கூர்-காத்திருப்பு தேசிய நெடுஞ்சாலை N.H. 45 பல ஆண்டு காலமாகப் பாழடைந்து கிடக்கிறது. நமது நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வருகை தந்தபோது, அந்த மாவட்டத்திலே இருக்கிற பலருடைய கோரிக்கைகளில், காத்திருப்பிலிருந்து ஆக்கூர் வரையுள்ள சுமார் 15 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலையைச் சீரமைக்க வேண்டும் என்பதுதான்

முக்கியக் கோரிக்கையாக இருக்கிறது; அதை எனக்குச் செய்து தர வேண்டும்.

அடுத்து, சங்கரன்பந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் மற்றும் அங்கே மருத்துவர்களையெல்லாம் நியமித்து மேம்பாடு செய்து தர வேண்டும்.

நல்லடை, கருவிழந்தநாதபுரம், திருக்கடையூர் பகுதி வரை கால்நடை மருத்துவமனையை முழு நேர மருத்துவமனையாக மாற்றித் தர வேண்டும்.

வானகிரி கடல் அரிப்பைத் தடுக்க தூண்டில் வளைவும், தரங்கம்பாடி, சின்னங்குடி கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவரும் அமைத்துத் தர வேண்டும்.

அடுத்து, மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படுவதைப்போல, தரங்கம்பாடியில் அமைத்து, அதை எனக்குக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து, கீழையூர், காளகஸ்தினாபுரம், சங்கரன்பந்தல், மாமாக்குடி, தில்லையாடி ஆகிய ஊர்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. இதற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தரங்கம்பாடியை இரண்டாம் நிலை ஊராட்சியாக ஆக்க வேண்டும். திருவெண்காடு, திருக்கடையூர், செம்பை ஆகிய மூன்று ஊர்களையும் பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வருகிறேன். நம்முடைய தமிழ் மொழி—நான் தமிழ் மொழியிலே கொஞ்சம் பேச வேண்டும் என்று நினைக்கிறேன். ஆகவே, நம்முடைய தமிழ் மொழிக்கு, இப்போது நம்முடைய மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள் . . .

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படி என்றால், இவ்வளவு நேரம் எந்த மொழியில் பேசிக்கொண்டிருந்தீர்கள்? (சிரிப்பு)

திரு. மு.க. பெரியசாமி: தமிழ் வளர்ச்சியைப் பற்றி (குறுக்கீடுகள்) தமிழ் மொழியின் வளர்ச்சியைப் பற்றி நான் இப்போது சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழையே பேசி ஒரு ஆட்சி, தமிழையே பற்றி, தமிழகத்திலே நீடித்துக்கொண்டு இருக்கிறது என்று சொன்னால், அது நமது மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய ஆட்சியாகத்தான் இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படித் தமிழ்மீது, அந்தத் தமிழ் மக்கள் மீது எவ்வளவு பற்றும், பாசமும் வைத்திருந்தால், இந்த ஆட்சியைத் தொடர்ந்து ஆட்சியில் வைத்திருப்பார்கள் என்பதற்கு நான் இப்போது ஒன்று சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழ் மொழி மூத்த மொழி-"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி" என்று இதற்கு அவ்வளவு பெருமை இருக்கிறது. இந்தத் தமிழ் மொழி கன்னித் தமிழ், இன்றும் இளமை மாறாமல் இருக்கின்ற தமிழ், அவ்வளவு சக்தியைத் தன்னிடத்திலே பெற்றிருக்கிறது; எந்த ஆதிக்கம் செலுத்தினாலும் அது தன்னை அழிக்க முடியாத சக்தியைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. அதற்கு எவ்வளவு வளங்கள் இருக்கின்றன. இலக்கிய வளம், இலக்கண வளம், முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என்றெல்லாம் இப்படிப்பட்ட சங்கம் வைத்து அவ்வளவு பெருமைகள் இருக்கின்ற தமிழ். ஆனால், இடையிலே சில காரணங்களால் அயலாருடைய வருகை, அயலாருடைய ஆதிக்கம், அயல் மொழியினுடைய ஆதிக்கத்தாலே, இப்படிப் பல மொழிகளினுடைய ஆதிக்கத்தினாலே இடையிலே சிறிது குன்றிய நிலை ஏற்பட்டது. ஆனால், அதைத் தூக்கிப் பிடிக்கத்தான் முத்தமிழ் அறிஞர் அவர்கள் பல அறிஞர் பெருமக்களுக்குப் பிறகு இப்போது நமக்குக் கிடைத்திருக்கிறார். அவருடைய காலத்திலேதான் இன்று தமிழுக்கு ஒரு செம்மொழி அந்தஸ்து கிடைத்திருக்கிறது என்று சொன்னால், அதற்கு அவர்கள் நிறைய முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள். அவருடைய காலத்தில் இந்தத் தமிழுக்கு, தமிழ் அன்னைக்கு, ஐம்பெரும் காப்பியங்கள் அணிகலன்களாக இருந்த தமிழுக்கு இன்று நம்முடைய கலைஞர் அவர்கள் மேலும் பல அணிகலன்களைத் தமிழ் அன்னைக்குச் சூட்டியிருக்கிறார்கள். அதிலேதான் அவர்கள் கண்ட அந்தச் செம்மொழி அந்தஸ்து. ஆக, செம்மொழி அந்தஸ்து பெற்றுள்ள இந்தத் தமிழை— நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்கூடச் சொன்னார்கள், நான் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய

கைபேசியில் தொடர்பு கொண்டேன். அதிலே அருமையான ஒரு பாட்டு—"செந்தமிழ் நாடெனும்போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்ற அந்த வரிகளைக் கேட்கிறபோது தமிழ்மீது அவருக்கு எவ்வளவு பாசமும், பற்றும் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஆகவேதான், இந்த இடைப்பட்ட குறுகிய காலத்திலே நம்முடைய தமிழ் அறிஞர்களும், புலவர்களும் அதைப் பற்றிப் பார்க்கிறபோது சற்று எழுச்சிக் கவிஞர்களாக மாறியிருக்கிறார்கள். புரட்சிக் கவிஞர்களாக மாறியிருக்கிறார்கள். அதனால் அந்தத் "தமிழ் அயர்ந்தால் தமிழன் வீழ்ந்தான், தமிழ் உயர்ந்தால் தமிழன் வாழ்ந்தான்" என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் நமக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். ஆக, இப்படிப்பட்ட இந்த அன்னைத் தமிழை இன்று நம்முடைய முத்தமிழும் உணர்ந்த, பல தமிழும் உணர்ந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இந்த ஆட்சியிலே, எவ்வளவு குறைபாடுகள் இருக்கின்றன என்பதைக் கொஞ்சம் சுட்டிக் காண்பிக்க வேண்டித்தான் இருக்கிறது.

1956-லே ஆட்சி மொழிச் சட்டம். ஆட்சி மொழிச் சட்டத்திலே என்ன சொல்லியிருக்கிறது? நம்முடைய அரசு அலுவல் மொழிகளிலே எல்லா இடங்களிலும் தமிழ் இருக்க வேண்டும். ஆக, 53 ஆண்டு காலம் ஆட்சி மொழியாக ஆன பிறகும், இன்றும் அந்த நிலை இருக்கிறதா என்று பார்க்கிறபோது, நமக்குச் சற்று வருத்தமாகத்தான் இருக்கிறது. ஆக, இந்த நிலைகளைச் சிறிது எடுத்துச் சொல்லியாக வேண்டும். அதனால்தான் இன்று செம்மொழி நடக்கும் இந்த நேரத்திலாவது நாம் அதிலே மிகுந்த அக்கறை கொண்டு இருக்க வேண்டியிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் அந்த ஆட்சி மொழிச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலையினைத் தமிழுக்குக் கொண்டு வந்து, அதை மேம்படுத்தவேண்டும் என்று பல திருத்தங்களைச் செய்து கொண்டு வந்தார்கள். அதன்படி நமக்கு இன்று நமது அரசு அலுவலகங்களிலே ஆட்சி மொழியாக, அலுவல் மொழியாக அனைத்துக் கோப்புகள், கடிதங்கள், ஏனைய அரசு ஆவணங்கள் அனைத்திலும் அது இடம் பெற்று வருகிறதா என்றால், இன்று வரை இல்லை.

முற்பகல் 11-05

செம்மொழி மாநாட்டு அழைப்பிதழிலேகூட என்ன இருக்கிறது என்று சொன்னால்--நமது தலைமைச் செயலாளர் திரு. ஸ்ரீபதி

அவர்கள் அரசாணையில் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், எல்லோரும் தமிழிலே கையெழுத்திட வேண்டும் என்று. தமிழக அரசில் வேலை பார்க்கின்றவர்கள் யாராக இருந்தாலும் தமிழிலேதான் கையெழுத்திட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பெருந்தலைவர் காமராசர் அவர்கள்கூட கு. காமராஜ் என்று தமிழிலேதான் கையெழுத்திட்டார். தமிழ்நாட்டு அரசியலில் King maker-ஆக இருந்தவர் என்று சொல்கின்ற திரு. காமராஜ் அவர்கள்கூட டெல்லிக்குச் சென்றாலும் 'கு. காமராஜ்' என்றுதான் கையெழுத்திட்டார். அதைப்போல நம்முடைய கலைஞர் அவர்கள் இன்று ஆசானாக ஏற்றுக்கொண்டிருக்கின்ற, வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டிருக்கின்ற திரு. ஈ.வெ.ரா. அவர்கள்கூட தமிழிலேதான் கையெழுத்திடுவார். அதைப்போல இப்போது நம்முடைய கலைஞர் அவர்கள்கூட 'மு. கருணாநிதி' என்றுதான் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அதைப் பின்பற்றவேண்டும் என்பதற்காக இதைச் சொல்கிறேன். ஆக, தொலைக்காட்சி, ஆலயங்களில்கூட அனைத்தும் சட்டமாக்கப்பட்டு போயிருக்கிறது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மு.க. பெரியசாமி, உரையை முடியுங்கள். இன்று 1½ மணிக்கு voting இருக்கிறது. Please co-operate with the Chairperson. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி. (குறுக்கீடு) நான் அவரைப் பேச அழைத்துவிட்டேன், உட்காருங்கள். அவர் கட்சித் தலைவராக இருக்கிறார். தவறாக நினைத்துக்கொள்வார், உட்காருங்கள். செல்வி கே. பாலபாரதி, நீங்கள் பேசுவதற்கு 8 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போராடிய தியாகிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்துவதற்கு மாநில அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சுதந்திரப் போராட்ட வீரர்களின் மறைவுக்குப் பின் அவர்களது மனைவிக்கு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க வேண்டுகிறேன். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களின் மருத்துவப்படியை உயர்த்தித் தர வேண்டுகிறோம்.

ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களின் மருத்துவப்படியை உயர்த்துவதோடு, மருத்துவ நிதியுதவித் திட்டத்தின்கீழ், திரும்பப் பெறும் தொகையையும் உயர்த்த வேண்டும்.

2009 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு, ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாணை எண் 371, 272 மற்றும் 273 ஆகியவற்றின் பலன்களை 1-6-1988 முதல் 31-12-1995 வரை ஓய்வு பெற்றவர்களுக்கு விரிவுபடுத்தி ஆணை வழங்கிட முன்வர வேண்டுகிறேன்.

விதவைப் பெண்கள் உதவித் தொகை பெறுவதற்கு வறுமைக் கோட்டுக்குக்கீழ் இருக்கவேண்டுமென்ற நிபந்தனையோடு அரசாணை இருப்பதாகக் கூறி வட்ட ாட்சியர்கள் அதைக் கட்டாயப்படுத்துகிறார்கள். 49 வயதுக்குமேல் விதவையானால்தான் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இல்லையென்றால் அது மறுக்கப்படுகிறது. இது நியாயமானது அல்ல. வயது வரம்பையும், வறுமைக் கோட்டுக்குக்கீழ் என்ற நிபந்தனையையும் நீக்குவதற்கு அரசு முன்வர வேண்டும்.

சட்டப் பேரவை கூடுகின்றபோது பேரவைச் செயலகத்தில் தற்காலிகமாக, தினக் கூலி அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களை நிரந்தரப்படுத்த அரசு முன்வர வேண்டும். அவர்களில் பெண்கள் 55 பேர்கள் உட்பட மொத்தமாக 155 பேர்கள் இருக்கிறார்கள். கோட்டையிலே குறைந்த அளவு தினக் கூலி பெறக்கூடியவர்களாக இருக்கின்ற நிலையை மாற்றுவதற்கு அரசு முன்வர வேண்டும்.

சட்டப் பேரவைக் கூட்டம், நிதிநிலை அறிக்கை, மானியக் கோரிக்கைகள்மீது விவாதங்கள் ஆகியவற்றை நடத்திவிட்டு, இன்று இறுதி நாள் விவாதத்திற்கு நாம் வந்திருக்கிறோம். இக்காலக்கட்டத்தில்தான், காலாவதியான மருந்துகள், போலி மருந்துகள் விற்பனை; உணவுப் பொருட்களில் கலப்படம் நிகழ்வதைப் பற்றிய சம்பவங்கள் அடுக்கடுக்காக முன் வந்து நம்மை அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கின்றன. அரசு கட்டிய அடுக்கு மாடித் தொகுப்பு வீடு அம்மன்குளத்தில் சாய்ந்த கோபுரமாக மண்ணுக்குள் புதைந்து கொண்டிருப்பதையும், வரலாறு காணாத மின்வெட்டும்; பன்னாட்டு நிறுவனங்களில் தொழிற்சங்க உரிமைப் பறிப்பும்; மிகக் குறைந்த ஊதியத்தில் உழைப்பை விலைக்கு

வாங்கும் தனியார் நிறுவனங்களும்; குடிப்பதற்கான தண்ணீரை விலை கொடுத்து வாங்கக்கூடிய வறட்சி நிலையும்; கட்டுப்படியான விலை கிடைக்காத விவசாயிகள் விளைநிலங்களை விற்பனை செய்யக்கூடிய அவல நிலை என இவற்றையெல்லாம் மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

சட்டமன்ற ஜனநாயகத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்கள், அறுசுவை பட்ஜெட் என்று வர்ணித்துக் கொண்டிருந்தாலும், விலைவாசி உயர்வு விஷம்போல் ஏறிக்கொண்டிருப்பதை நாங்கள் கூறியிருக்கிறோம். On-line வர்த்தகம்; கள்ளச் சந்தை; பதுக்கல்; பெட்ரோல், டீசல் விலை உயர்வு; உலகமயமாக்கல் கொள்கை ஆகியவற்றால் விலைவாசி உயர்ந்துகொண்டிருக்கும் வேளையில், மாண்புமிகு நிதி அமைச்சர் உட்பட, வாங்கும் சக்தி உயர்ந்தால்தான் விலைவாசி உயர்ந்து கொண்டிருக்கிறது என்று கூறுவது கவலையளிப்பதாக இருக்கிறது. வாங்கும் சக்தி உயர்ந்திருந்தால், 47 ரூபாய்க்கு விற்கக்கூடிய அரிசியை வெளியிலே வாங்கியிருப்பார்கள். ஆனால், அரசாங்கம் ஒரு ரூபாய்க்கு அரிசி கொடுக்கின்ற காரணத்தால், அதை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, யதார்த்த நிலைமை என்பது, விலை உயர்விலே மாட்டிக் கொண்டு இருக்கக்கூடிய, மக்களைக் காக்க வேண்டிய கடமையை மாநில அரசுக்கு மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்துவதோடு, சட்டம்-ஒழுங்கு போன்றவற்றிலும் இன்றைக்குத் தமிழக மக்கள் மிகப் பெரிய சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவற்றையும் நாங்கள் இந்த நேரத்திலே நினைவூட்டி, சட்டமன்ற ஜனநாயகம் என்பது மெலிந்து, நலிந்து, நூலாகி வருகிறது என்பதை வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

சட்டப் பேரவைத் தலைவர் அவர்களை உண்மையிலேயே நாங்கள் எந்த இடத்திலும் விமர்சிப்பது கிடையாது. நெல்லைத் தமிழ் உணர்வோடு அவர்கள் இந்தச் சபையினுடைய உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதுகாத்து வருகிறார்கள். ஆனாலும், இந்தச் சபையினுடைய ஜனநாயத்தை பலப்படுத்துவதில் அவர்கள் இன்னமும் கூடுதலாக செயலாற்றி இருந்திருக்கலாமோ என்ற கருத்தும் எங்களைப் போன்றவர்களுக்கு வருகிறது. பேரவைத் தலைவர் அவர்களுடைய அறையிலே காலையில் சென்று வணக்கம் தெரிவிக்கின்றபோது, 'வாங்கம்மா, உட்காருங்கம்மா'

என்று பாசத்தோடு சொல்வார். இங்கே வந்தாலும், 'உட்காருங்கம்மா' என்பதை அதே தொனியோடுதான் சொல்கிறார்.

ஆகவே, பெண் உறுப்பினர்கள் உட்பட கேள்வி நேரத்திலே கை உயர்த்தி, கை உயர்த்தி—ஒரு மூன்றாண்டு காலமாக துணைக் கேள்விக்குக்கூட எனக்கு அனுமதியே இல்லை என்று எங்களுடைய உறுப்பினர் திரு. ஜாண் ஜோசப் உட்பட, காங்கிரஸ் உறுப்பினர் டாக்டர் காயத்ரி தேவி உட்பட, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பெண் உறுப்பினர்கள்கூட ஓய்வு அறையிலே புலம்பக்கூடிய நிலையை நான் பார்த்திருக்கிறேன்.

ஆகவே, பெண்கள் அரசியலுக்கு வருவதே அபூர்வமாக இருக்கக்கூடிய சூழ்நிலையில், ஆளும் கட்சி பெண் உறுப்பினர்கள் என்றாலும் சரி, எதிர்க்கட்சி பெண் உறுப்பினர்கள் என்றாலும் சரி, அவர்களுக்கு விசேஷமாக கவனம் செலுத்த வேண்டும். இதிலே மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பாராட்டுப் பெறுகிறார்; பெரியார் பிறந்த மண்ணான ஈரோட்டிலிருந்து வந்ததன் காரணமாக. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எங்கள் கூட்டணியைப் பிரித்துவிடாதீர்கள்.

செல்வி கே. பாலபாரதி: ஈரோட்டிலிருந்து வந்ததனால், இயற்கையாகவே பெண் உரிமையினுடைய தந்தையான பெரியாருடைய பாரம்பரியத்தில் இருப்பதன் காரணமாக அவர் அனுமதிக்கிறார் என்ற கருத்தையும்கூடச் சொல்லியிருக்கிறார்கள். இதைக் குற்றச்சாட்டாக நான் கூறவில்லை, இன்னமும் சட்டப் பேரவைத் தலைவர், பெண் உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குக் கூடுதலாக அவர்களுடைய உரிமையைப் பாதுகாக்க முன்வர வேண்டும்.

இந்தச் சபை நிகழ்ச்சி என்பது வெறும் நிகழ்வுகள் அல்ல, இது வரலாற்றுப் பதிவு என்ற முறையிலே நாம் பார்க்கவேண்டும். இந்த ஒலிபெருக்கியை ஏக்கத்தோடு பார்த்துப் பார்த்து எந்தப் பிரச்சினையையுமே பேசமுடியவில்லை என்று வீடு திரும்பினால், அது எப்படிச் சரியாக இருக்கமுடியும்? ராஜா வேடமிட்டு கையேந்தக்கூடிய நிகழ்ச்சியைத் தமிழக அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு அனுமதிக்கக்கூடாது. ஆகவே, எங்கள் உரிமையை பலப்படுத்துவதற்கு நீங்கள் முன்வர வேண்டுமென்று தாழ்மையோடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சபை 44 நாட்கள்தான் கூடுகிறது. அதைக் கடந்த காலத்திலே அகில இந்திய அளவிலே சட்டப் பேரவைத் தலைவர்கள் கூட்டத்திலே, 100 நாட்கள் நடத்தவேண்டுமென்று முடிவெடுத்தார்கள். ஆனால் 44 நாட்கள்தான் கூடுகிறது. அதுமட்டுமல்லாமல், கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கத்தை கத்தையாக நாங்கள் கொடுக்கிறோம். இசைவு மறுக்கப்படுகிறது என்று கடிதம் வருகிறது. வெட்டுத் தீர்மானங்கள் எழுதிக் கொடுக்கிறோம், அதற்கான பதிலே வருவதில்லை. அதிகாரிகளுடைய கோப்புகளிலேயே தங்கிவிடுகின்றன. ஜனநாயகத்திலே உள்ள இத்தகைய முரண்பாடுகளையெல்லாம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு கொண்டு வந்தால், சீர்திருத்துவதற்கு உதவியாக இருக்குமென்ற முறையிலேதான் நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாலை நேரத்திலேகூட நாம் சபைக் கூட்டத்தை நடத்தலாம். என்னதான் அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் நாம் கலந்து பேசினாலும், அங்கே ஆளுங்கட்சியாக நீங்கள் முன்மொழியக் கூடிய அந்தத் தாள்களில் இருந்துதான் நாங்கள் எங்கள் கருத்துகளைப் பதிவு செய்கிறோம். ஆகவே, இன்னும் இந்தக் கூட்டத் தொடரை விரிவுபடுத்தி நடத்துவதற்கு முன்வந்தால்தான் பல பிரச்சினைகளைப் பேசமுடியும். இரண்டாம் வரிசையிலிருக்கும் மாண்புமிகு அமைச்சர்களைக்கூட அவ்வப்போது மணியடித்து அமர வைத்துவிடுகிறீர்கள். அவர்களும்கூட ஆர, அமர தங்களுடைய கருத்துகளையெல்லாம் பேச முடிவதில்லை. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் இந்த மானியங்களிலே பேசுவதாக— அந்த உரிமையைப் பயன்படுத்தி, இந்தச் சட்டமன்றத்தினுடைய உரிமையைப் பாதிக்கக்கூடிய முறையில், மணியடித்து உட்கார வைக்கின்றீர்கள்—வேறு எப்படி அடித்து உட்கார வைப்பது? மணி அடிப்பது ஒரு எச்சரிக்கைக்காக, நேரமாகிவிட்டது என்பதற்காக. வேறு வழி கிடையாது. மற்றொன்று, உட்கார வைப்பதன் மூலமாகத்தான் அடுத்தவரை எழுப்பிப் பேச வைக்கலாம். ஒருவரை உட்கார வைக்காமல், அடுத்தவரை எப்படிப் பேச வைப்பது?

சட்டமன்ற முறை என்பது இந்தியாவிலேயே—இந்தியப் பாராளுமன்றமாக இருந்தாலும், வேறு எந்த மாநிலச் சட்டமன்றமாக இருந்தாலும், நான் அறிந்த வரையில் தமிழ்நாடு சட்டமன்றத்திலே எவ்வளவு நேரம் வாதம் நடைபெறுகிறதோ, எவ்வளவு நேரம் கருத்துகள் பரிமாறப்படுகின்றனவோ, எவ்வளவு தாறுமாறான பேச்சுகள் இருந்தாலும்கூட, மொத்தத்திலே கருத்துகள் பரிமாறப்படுகின்றனவோ, அந்த அளவு வேறு எந்தச் சட்டமன்றத்திலும் (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெறுவதாக பத்திரிகைச் செய்திகள் மூலமாக என்னால் அறிய முடியவில்லை. எனவே நான் தெரிவிக்க விரும்புகிறேன்; நம்முடைய சட்டமன்றம், சிறப்பாக நடைபெறுவதற்கு மேலும் நீங்கள் ஆர்வம் எடுத்துக் கொண்டு, இந்த நேரத்தை வீணாக்குகிற முறையில் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகிறவர்களுக்கு நீங்கள் தடையாக இருப்பீர்களேயானால், அதிக நேரம் நமக்குக் கிடைக்கும்.

முற்பகல் 11-15

அதைப்போல, மகளிருக்கு உரிமை தரவேண்டுமென்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். ஒவ்வொரு கட்சியிலுமுள்ள மகளிருக்கு, அந்தக் கட்சி அவருடைய பெயரை முன்மொழிந்து விவாதத்திலே கலந்துகொள்வதற்குத் தருமானால், அவர்களுக்குத்தான் முதலிடமே தவிர, வேறு யாருக்கும் தரப்படுவது இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி. (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செல்வி பாலபாரதி அவர்கள் இவ்வளவு நேரம் அடுக்கடுக்காக, சரமாரியாக சபாநாயகர்மீதும், மற்றவர்கள்மீதும் குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசுவதற்கு இடம் கொடுத்ததே நாங்கள் கடைப்பிடிக்கின்ற ஜனநாயகம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னுடைய யதார்த்த அனுபவங்களிலிருந்துதான் சொல்கிறேனே தவிர, குற்றச்சாட்டுகள்

சொல்வது என்னுடைய நோக்கமே அல்ல. இதை நீங்களும் சேர்ந்து கவனித்தால்தான் சட்டமன்றத்தினுடைய ஜனநாயகத்தை, வரக்கூடிய காலங்களில் நாம் பலப்படுத்த முடியும் என்ற அடிப்படையில்தான் சொன்னேனே தவிர, அதற்கு வேறு நோக்கம் இல்லை என்பதைத் தாழ்மையோடு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தனிப் பிரிவிற்கு மனு அனுப்புகின்றபொழுது, பல நேரங்களில் அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கடிதங்களும் வருகின்றன. ஆனால், மாண்புமிகு அமைச்சர்களுக்கு அனுப்பினால், அநேகமாக அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அரசுச் செயலாளர்கள் பதில்கள் அனுப்புவதே இல்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறையினுடைய அதிகாரிகளோடு கறாராகப் பேசி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள உரிமை என்ற முறையிலே, என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள், எடுத்த நடவடிக்கை என்ன என்பதற்கான பதிலை எழுத்துமூலமாகக் கொடுப்பது நல்லது.

அதேபோன்று, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வாரத்தில் அலுவலகத்தில் எத்தனை நாட்கள் இருக்கிறார்கள் என்பதையும் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்தால், அந்த நாட்களிலே வரக்கூடிய பிரச்சினைகளின்பால் அவர்களைப் பார்ப்பதற்கு உதவியாக இருக்கும். அதேபோன்று, அமைச்சர்களையோ, முதலமைச்சரையோ பார்ப்பது எளிமையான முறையிலே இருக்கிறது என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை.

மக்களினுடைய பிரச்சினைகளை நிருவாக ரீதியாகக் கொண்டு செல்வதிலும் இந்த ஜனநாயகத்தை, உரிமையை, கீழ் வரை எடுத்துச் செல்ல வேண்டிய அவசியத் தேவை என்பது இருந்துகொண்டிருக்கிறது.

அரசு விழாக்கள் இப்போது வர வர அரசியல் விழாக்களாகவே மாறிக் கொண்டிருக்கின்றன. அரூர் தொகுதியில், சட்டமன்றக் கூட்ட நேரத்திலேயே அணைக்கட்டுத் திறப்பு விழாவிற்கு சட்டமன்ற உறுப்பினரை அழைக்காமலேயே நடந்து கொண்டிருக்கின்றது. எங்களுடைய கட்சியினுடைய இரண்டு உறுப்பினர்கள் திருமதி லீமா றோஸ், திரு. ஜாண் ஜோசப் போன்றவர்கள் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்

சென்ற விழாவின்பொழுது அதிகாரிகளால் அழைக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதேபோன்று, ஒரு மானியக் கோரிக்கைக்கு ஒரு நாள் என்ற முறையிலே நடத்தப்பட வேண்டும். இதுபோன்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடித்துவிடுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: இதை மட்டும் சொல்லி முடித்துவிடுகின்றேன். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்கு முன்வர வேண்டும்.

தோழர் திருமதி லதா, சட்டமன்ற உறுப்பினர், அவர் தாக்கப்பட்டார். அவர் இந்தச் சபையினுடைய உறுப்பினர் என்ற முறையிலாவது அனுதாபத்தோடு அந்தப் பிரச்சினையை அரசு கவனித்திருக்க வேண்டும் என்ற முறையிலே, அரசினுடைய அணுகுமுறையில் அதில் எங்களுக்கு மிகுந்த மன வருத்தம் இருக்கிறது. அது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. அவரை நம்முடைய உறுப்பினராக, நம்முடைய சகோதரியாகப் பார்ப்பதற்குப் பதிலாக காவல் துறை அதிகாரிகள் தாக்குவதை ஆதரித்தது என்பதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. அந்த வகையிலே, சட்டமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு முன்வரவேண்டும்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செல்வி கே. பாலபாரதி, கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி லதா அவர்கள் தாக்கப்பட்ட ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிட்டுச் சொல்கிறார். நான் ஏற்கெனவே காவல் துறை மானியக் கோரிக்கைக்குப் பதிலளித்து உரையாற்றுகின்றபோதே அதற்குரிய விளக்கத்தைத் தெளிவாக தந்திருக்கின்றேன். காவல் துறையில் இருக்கக்கூடிய அதிகாரிகள் அங்கே ஊர்வலம் நடத்துவதற்கு, அங்கே கூட்டம் நடத்துவதற்குத் தடை விதித்திருக்கிறார்கள். ஆகவே சட்டம்-ஒழுங்கை அடிப்படையாக வைத்து, நீங்கள் எல்லாம் கலைந்து செல்ல வேண்டுமென்று எவ்வளவோ

அவரிடத்திலே சமாதான முறையிலே கூறியிருக்கிறார்கள். ஆனால் அதையும் மீறி, 'நாங்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்துவோம், ஊர்வலத்தை நடத்துவோம்' என்று சொல்லி, சட்டம்-ஒழுங்கைக் கெடுக்கின்ற ஒரு சூழ்நிலை உருவான காரணத்தினால்தான் அங்கே தள்ளுமுள்ளுகள் நடந்து, அதனால் தாக்கப்பட்டதாகச் சொல்லக்கூடிய அந்த நிலவரம்கூட ஏற்பட்டிருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆக, அதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் காவல் துறை மானியக் கோரிக்கைக்குப் பதிலளித்து உரையாற்றுகிறபோதும் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். எனவே, மீண்டும் அந்தப் பிரச்சினையை நம்முடைய பாலபாரதி அவர்கள் எழுப்புவது அவ்வளவு நியாயம் அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, நேரம் முடிந்துவிட்டது. முடித்துவிடுவீர்களா? (குறுக்கீடு) அவர்கள் உரையை முடித்து விடட்டும்.

செல்வி கே. பாலபாரதி: நன்றி சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் மீது எங்களுக்கு நம்பிக்கையும், மரியாதையும் எப்போதும் உண்டு. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை, தாழ்த்தப்பட்ட மக்களைக் கோயிலுக்குள் அழைத்துச் செல்வதற்குத்தான் திருமதி லதா அவர்கள் சென்றார்கள். அதுவும் அவருடைய தொகுதி அல்ல. ஆகவே, இது ஒரு சமூகப் பிரச்சினை. காவல் துறை என்ன சொன்னாலும் அதில் உண்மையை இன்னும் கண்டறிவதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்பதைத்தான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இவர் இந்தச் சபையினுடைய உறுப்பினர். காவல் துறை அரசால் நடத்தப்படக்கூடிய ஒரு நிருவாக அமைப்பு. இந்த நேரத்தில், விசாரணையில் இருக்கும்பொழுது, அந்தக் காவல் துறைக் கண்காணிப்பாளருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) ஒன்றை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். ஆகவே, மீண்டும் நீங்கள் அந்தப் பிரச்சினையினுடைய உண்மையைக் கொஞ்சம் கண்டறிந்து உதவ வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

2010 மே 14]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், நேரம் அரை நிமிடம்தான்.

திரு. தி. வேல்முருகன்: சரி. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்களால் கட்டி நிர்மாணிக்கப்பட்டிருக்கிற இந்த மாபெரும் சபை, இங்கிருக்கிற தலைமைச் செயலகம். தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்படுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலே ஒரு சட்டம் இயற்றப்பட்டு, எத்தனை சென்டி மீட்டரில் பெயர்ப் பலகை இருக்கவேண்டுமென்றெல்லாம் விதி இருக்கிறது. சில தமிழ் அறிஞர்களும், சில திரைப்படக் கவிஞர் பெருமக்களும் ஒரு மனுவை என்னிடத்தில் தந்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்ற அடிப்படையில், 'தலைமைச் செயலகம்' என்று இருக்கிற எழுத்துக்களைக் காட்டிலும், நம்முடைய 'தமிழ்நாடு அரசு' என்று தலைமைச் செயலகத்தில் பொறிக்கப்பட்டிருக்கிற அந்த முகப்பு எழுத்து என்பது சிறிதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆக, தமிழ்நாட்டில், இந்தியாவில் எந்தவொரு மாநிலத்திற்கும் கிடைக்காத ஒரு பெருமையாக "தமிழ்நாடு" என்கிற அந்தப் பெயரைப் பெற்றிருக்கிற அந்தப் பலகையினுடைய அகலத்தை அல்லது அதனுடைய எழுத்துக்களைப் பெரிதாக்கித் தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று சொல்லி இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வரின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன். தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 7 நிமிடங்கள். (குறுக்கீடு) அவர் பேசி முடித்தவுடன் கூப்பிடுகிறேன்.

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகின்ற இந்த மானியக் கோரிக்கைகளில் நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கும், இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழ் வளர்ச்சி பற்றி சில கருத்துகளைச் சொல்ல விரும்புகின்றேன். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்கின்ற முறையில் தமிழ்நாட்டில் அனைத்து விளம்பர போர்டுகளாக இருந்தாலும் சரி அல்லது அரசு அலுவலகங்களாக இருந்தாலும் சரி, தமிழிலே கொடுக்கப்படவேண்டும் என்கின்ற கொள்கையை உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்க் கல்வெட்டுகள், பெங்களூருவில் 60,000 கல்வெட்டுகள் தமிழ்க் கல்வெட்டுகள் இருப்பதாகச் சொல்கின்றார்கள். அதைப்போல, கேரள மாநிலத்திலும் கல்வெட்டுகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அங்கேயிருந்து கல்வெட்டுகளைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்து, அவற்றைப் பாதுகாக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

மத்திய அரசு துவக்கக்கூடிய முன்மாதிரிப் பள்ளிகள் இப்பொழுது அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பள்ளிகளுக்கு தமிழ் விருப்பப் பாடமாகச் சொல்கின்றார்கள். தமிழை விருப்பப் பாடமாக எடுத்துக்கொள்ளலாம் அல்லது எடுத்துக்கொள்ளாமலும் இருக்கலாம் என்று சொல்கிறார்கள். அப்படி ஒரு நிலை தமிழ்நாட்டில் வர இருக்கக்கூடிய அந்தப் பள்ளிக்கு இருக்கக்கூடாது. தமிழ்தான் முதன்மையாக இருக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

சிறுசேமிப்பில் முகவர்கள் 70,000 பேர் பணியாற்றுகின்றார்கள். இவர்களுக்கு ஒரு சதவிகித ஊதியம் வழங்கப்பட்டது. கமிஷன் வழங்கப்பட்டது. அந்த கமிஷனை தற்பொழுது மாற்றி அரை சதவிகிதமாகக் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இந்த அரசு உடனடியாக அவர்களுக்கு ஒரு சதவிகித கமிஷன் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வயதானவர்களாக இருக்கின்றார்கள். சில குடும்பங்கள் மிக நலிந்த நிலையில் இருக்கின்றன. ஆகவே, அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஓய்வூதியம் என்பது உயர்த்தப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த, முதலாவதாக கலைஞர் அமைச்சரவையில் பங்குகொண்ட திரு. கே.வீ. சுப்பையா அவர்களுடைய குடும்பம் மிக மோசமாக இருக்கின்றது; நலிந்த நிலையிலே இருக்கின்றது. அவருக்கு, அந்தக் குடும்பத்திற்குப் பாதுகாப்பளிக்கக்கூடிய முறையில் நிதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கக்கூடிய மருத்துவப்படி இன்றைக்கு வருடத்திற்கு 4,000 ரூபாய் என்று இருக்கின்றதை, மாதத்திற்கு 2,000 ரூபாய் அதிகமாக உயர்த்தித் தரவேண்டும்.

முற்பகல் 11-25

எங்களுடைய கட்சியினுடைய நிலை, மேலவை தேவையில்லை என்பதுதான். ஆனால், இன்றைக்கு சட்டம் இயற்றப்பட்டு, மத்திய அரசு, நாடாளுமன்ற மக்களவையிலும், நாடாளுமன்ற மேலவையிலும் சட்டம் நிறைவேற்றப்பட்டு, வர இருக்கின்றது. அப்படி வருகின்றபோது, மேலவை அமையவிருக்கின்றபோது, பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகள் வாங்குகின்ற வாக்குகளின் அடிப்படையில் மேலவை உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை என்னுடைய கட்சியின் சார்பாக இங்கே சொல்ல விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மேலவை வரக்கூடாது என்பதுதான், தேவையில்லை என்பதுதான் எங்களுடைய கொள்கை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிவிட்டு, அந்த மேலவை வருமானால், அப்படி வருகிற மேலவையில் ஒவ்வொரு கட்சியும் பொதுத் தேர்தலில் வாங்குகிற வாக்குகள் விகிதாச்சாரத்திலேதான் அங்கே இடம் தர வேண்டுமென்கிறார். அதற்கு ஒரு மேலவையே தேவையில்லை. அந்த விகிதாச்சாரப்படிதான் இங்கேயே இடம் பெற்றிருக்கிறோம். இந்த விகிதாச்சாரப்படியே மேலவையில் இடம் தரவேண்டும் என்பதற்கு அர்த்தம் இல்லை. ஆகவே, அந்த மேலவைக்கென்று சில தனிப்பட்ட அடிப்படைகள் இருக்கின்றன. அது நீண்ட பாரம்பரியம் உள்ள அடிப்படை, அந்த அடிப்படை காப்பாற்றப்படும்.

திரு. எஸ். இராசசேகரன்: சட்டமன்ற உறுப்பினர்கள் மானியக் கோரிக்கையிலோ அல்லது மற்ற நேரங்களிலோ பேசுகின்றபோது பல்வேறு கோரிக்கைகளை வைத்துப் பேசுகின்றார்கள். அந்தக் கோரிக்கைகள் பற்றி எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பதைப் பற்றி துறை வாரியாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பின்னர் தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவிக்கப்படுவதில்லை. அது தெரிவிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீண்ட காலம் பணியாற்றக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களே இந்தக் கோரிக்கையைச் சொல்லுகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மானியக் கோரிக்கை விவாத நாட்களை அதிகப்படுத்த வேண்டும். மானியக் கோரிக்கைகளுக்கு, ஒரு மானியத்திற்கு ஒரு நாள் என்கின்ற விகிதத்தில் ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுத்துகின்றபோதுதான் நம்முடைய கருத்துகளைச் சொல்ல முடியும். சட்டப் பேரவையில் பேசுவதற்கு கட்சிப் பெரும்பான்மை என்ற வகையில் நேரம் ஒதுக்காமல், அனைத்து சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும் அவர்களுடைய கோரிக்கைகளைச் சொல்லக்கூடிய அடிப்படையில் நேரத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிருவாகத்தின் கீழ்மட்டத்திலிருந்து மாநிலச் செயலகம் வரை கோப்புகள் தேங்கிக் கிடக்கின்றன. உதாரணமாக ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். என்னுடைய தொகுதியில் இருக்கிறது வல்லத்தராக் கோட்டை பழப் பண்ணை. அந்தப் பழப் பண்ணையிலே 10 ஆண்டுகள் வேலை செய்த தொழிலாளர்களுக்குப் பணி நிரந்தரம் செய்யப்பட்டது. அப்படி நிரந்தரம் செய்யப்பட்ட ஒரு பெண் ஊழியர் பெயர் சகாயமேரி என்பதற்குப் பதிலாக வேறு பெயர் வந்துவிட்டது. 2 ஆண்டுகளாகப் பெயரை மாற்றுவதற்கான முயற்சி எடுக்கப்படுகிறது. அந்தப் பெயரை மாற்றி அவர் நிரந்தரத் தொழிலாளராக மாற்றப்படவில்லை. எப்போது கேட்டாலும், அது நிதித் துறையிலே இருக்கிறது, அதற்கான பதில் வரும் என்று சொல்லுகின்றார்கள். இப்படிக் காலதாமதம் ஏற்படக்கூடாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர் ஜீவா அவர்கள் டாக்டர் கலைஞருக்கு நெருக்கமான நண்பர். எனவே, எங்களுடைய கட்சியினுடைய தலைவர் ஜீவா அவர்களுடைய படம் இந்தச் சட்டப் பேரவையிலே வைக்கப்பட வேண்டுமென்று தோழர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் கேட்டார்கள். முதல்வர் அவர்கள் இதுவரையில் அதற்கு எந்தப் பதிலும் தரவில்லை. ஆகவே, அவருடைய படத்தை வைக்க வேண்டும்.

இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள், காலையில் zero hour-ல், பல்வேறு மாவட்டங்களிலே வறட்சியாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். குறிப்பாக, புதுக்கோட்டை மாவட்டம், சிவகங்கை மாவட்டம் ஆகியவை மிகவும் வறட்சியாக இருக்கின்றன. அந்த வறட்சியைப் போக்கக்கூடிய முறையில் நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக, கடைசியாக ஒன்றை இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன், ஆளுநர், சட்டப் பேரவை உறுப்பினர்களைப் பற்றியெல்லாம் இங்கே வந்திருக்கிறது. அந்த ஆளுநரைப் பற்றி அண்ணா அவர்கள் சொன்னார்கள், அந்தப் பதவி தேவையில்லை என்று சொன்னார்கள், 'ஆட்டுக்கு தாடியும், நாட்டுக்கு கவர்னரும் தேவையில்லை' என்று சொன்னார்கள். ஆகவே, இன்றைக்குப் பல்வேறு மாற்றங்கள் வருகிறபோது, ஆளுநர் தேவையில்லை என்கின்ற அந்த அடிப்படையில் மத்திய அரசுக்கு இந்த அரசு சிபாரிசு செய்யுமா என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

முற்பகல் 11-30

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய விவாதத்தில் கலந்துகொள்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர், கடையநல்லூர், தென்காசி ஆகிய தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் பயணம் செய்யப் பயன்படுத்தும் பொதிகை எக்ஸ்பிரஸ் இரயிலில் முன்பதிவில் quota இல்லாமல் இருக்கிறது. அதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு quota பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதியில் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் இல்லத்திலும் குடிநீருக்காக mineral water plant ஒன்று ஏற்படுத்தித் தந்தால், சட்டமன்றக் கூட்டம் நடைபெறாத காலங்களிலும் அது பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ஊரகப் பகுதிகளில் கண்டறியப்படும் அடிப்படை வசதிகளை இன்னும் சிறப்பாகச் செய்திட, சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியினை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதாரப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, சட்டமன்ற உறுப்பினர்களின் வீடுகளில் வராண்டாக்களையும் சுத்தமாக வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விடுதிகளின் வளாகத்தில் B.S.N.L. cell phone மற்றும் landline phone சரியாக இயங்க ஆவன செய்ய வேண்டுகிறேன். Intercom பொருத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அது இன்னும் செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்தித் தாள்கள் குறித்த நேரத்தில் குறைந்தபட்சம் காலை 6 மணிக்குள் கிடைத்திடச் செய்ய வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் சுமார் 10 ஆண்டுகளாகத் தற்காலிகமாகப் பணிபுரியும் electricians, watchmen, lift operators போன்ற பணியாளர்களையும், சட்டமன்றத்தில் நீண்ட காலமாக தற்காலிகமாகப் பணிபுரியும் O.A.க்கள், typists போன்ற பணியாளர்களையும் நிரந்தரப்படுத்தி, அவர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்க வேண்டுகிறேன்.

தமிழக சட்டப் பேரவை உறுப்பினர்களுக்குத் தற்போது வழங்கப்படுகின்ற படிகள் உட்பட மொத்தச் சம்பளத்தில் பாதித் தொகையையும், மேலும் எப்போதெல்லாம் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்குப் படிகள் உட்பட சம்பளம் உயர்த்தப்படுகிறதோ, அப்போதெல்லாம் அதில் பாதித் தொகை அளவு பேரவை மற்றும் மேலவை முன்னாள் உறுப்பினர்களுக்கும் ஓய்வூதியமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்களில் சுமார் 65 விழுக்காட்டினர் முன்னாள் உறுப்பினர்கள். 65 விழுக்காட்டினர் மற்றும் அவர்கள் வாழ்க்கைத் துணையினர் 60 வயதைத் தாண்டியவர்களாக இருக்கிறார்கள். தற்கால வாழ்க்கை முறையாலும், உணவுப் பழக்க வழக்கங்களாலும் அவர்களில் பெரும்பான்மையோர் சர்க்கரை வியாதி, உயர் இரத்த அழுத்தம் போன்ற வியாதிகளால் அவதிப்படுகின்றார்கள். மாரடைப்பு நோய் வந்த இதயம் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறதோ, அதேபோல் இந்நோய் வந்தவர்களின் இதயமும் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்குக் குறைந்தபட்சம் மாதம் ரூபாய் 2,000 அளவுக்கு மருந்து, மாத்திரைகள் வாங்க வேண்டிய அவசியம் இருப்பதால், தற்போது

அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவப்படி வருடம் ரூபாய் 4,000 என்பதை குறைந்தபட்சம் மாதம் ரூபாய் 2,000 ஆவது உயர்த்தி, வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டப் பேரவை, மேலவை முன்னாள் உறுப்பினர்களின் வாழ்க்கைத் துணைவிகளுக்கும் அரசு மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவ சிகிச்சை இலவசமாக அளிக்க வேண்டும்.

முன்னாள் உறுப்பினர்கள் தங்குவதற்கு அனைத்து வசதிகளோடு புதிய வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும்.

இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அடையாள அட்டையைப்போல், குறிப்பாக, பிறந்த தேதி, இரத்தப் பிரிவு போன்ற அனைத்து விவரங்களும் அடங்கிய அடையாள அட்டை முன்னாள் உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

டெல்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் தற்போதைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்குவதற்கு அளிக்கப்படுகின்ற சலுகை வாடகைபோல், முன்னாள் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கும் வழங்க வேண்டும்.

நாடாளுமன்ற மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர்கள் தங்கள் letter pad-ல் அரசு அனுமதியுடன் அசோகச் சின்னத்தைப் பயன்படுத்திக்கொள்வதுபோல், தமிழக முன்னாள் உறுப்பினர்கள் தமிழக அரசுச் சின்னத்தைத் தங்கள் letter pad-ல் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.

Bye-pass surgery போன்ற இதய அறுவை சிகிச்சை செய்துகொள்ள அதிக நிதி தேவைப்படுவதால், முன்னாள் சட்டப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு சிறப்பு விதியாக, முதல்வர் நிவாரண நிதியிலிருந்து அதுபோன்ற சிகிச்சைகளுக்குத் தேவையான நிதியைக் கொடுக்க வேண்டுகிறேன்.

தேசிய நெடுஞ்சாலைகளிலுள்ள வாகனச் சுங்கச் சாவடிகளில் கட்டணம் இல்லாமல் செல்வதற்கு ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற வாகன அனுமதிச் சீட்டைப்போல், முன்னாள் சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கும் வழங்கவேண்டும்.

தம் பெயரிலோ, தனது குடும்பத்தாருடைய பெயரிலோ வீடு இல்லாத முன்னாள் உறுப்பினர்களுக்கு, அவர்கள் வாழும் நகரிலோ அல்லது அருகிலுள்ள நகரிலோ இருக்கும் வீட்டு வசதி வாரிய வாடகைக் குடியிருப்புகளில் முன்னுரிமை கொடுத்து, முன்னாள் உறுப்பினர் மற்றும் அவர்கள் வாழ்க்கைத் துணை வாழும் காலம் வரை குடியிருக்க அனுமதி அளிக்க வேண்டும்.

முற்பகல் 11-35

முன்னாள் உறுப்பினர் ஒருவர் மரணம் அடைந்தால், அவரது வாரிசு ஒருவருக்குத் தகுதியின் அடிப்படையில் அரசுப் பணி ஒன்று வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழின் செம்மைத் தன்மை குறித்த பாடத்தினைப் பள்ளிக் கல்வியில் சேர்ப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அதை, உயர் கல்வித் துறையிலும் கொண்டு வர வேண்டும்.

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையில் அமைக்க இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதை விரைவில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். I.T.I. வினாத் தாள்களைத் தமிழில் அச்சிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன். நாடாளுமன்றத்தில் முன் அனுமதியின்றி தமிழில் பேச உரிமை கோர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்த தங்களுக்கு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எனது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் மூன்று நிமிடங்கள்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, அதற்கு வித்திட்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை, இன்றைக்கு உலகமெல்லாம் இருக்கின்ற தமிழர்கள் போற்றிப் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். இது தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து கிடைத்ததற்குப் பிறகு நடைபெறுகின்ற முதல் மாநாடு என்ற அளவில் மட்டுமல்லாது, இன்றைக்குத் தமிழ் மொழியின் தொன்மையைப் பற்றிக் கேள்வி எழுப்புகிறவர்களுக்கெல்லாம் பதில்

அளிக்கின்ற ஒரு மாநாடாகவும் விளங்கப் போகிறது என்பதுதான் இந்த மாநாட்டின் முக்கியமான ஒரு சிறப்புத் தன்மையாகும்.

இன்றைக்கு சமஸ்கிருதத்திலே ஆய்வுகளை மேற்கொண்டிருக்கின்ற பல்வேறு அறிஞர்கள், மேலைநாட்டு சிந்தனையாளர்களெல்லாம் ஒரு கருத்தைத் தொடர்ந்து பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். தமிழினுடைய தொன்மைத் தன்மையைப் பற்றி அவர்கள் தொடர்ந்து சந்தேகங்களை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, ஷெல்டன் பொல்லால், ஹெர்மன் டீக்கன் போன்ற அறிஞர்கள், சங்க இலக்கியங்களுடைய காலமே பல்லவர் காலத்திற்குப் பிற்பட்டது, அதாவது, கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது என்கின்ற கருத்தைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கி.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று நாம் சங்க இலக்கியத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, சமஸ்கிருத ஆய்வுகளிலே ஈடுபட்டிருக்கின்ற அறிஞர்கள் சங்க இலக்கியத்தின் தனித்துவமான தன்மை என்று இன்றைக்கு உலகே வியந்து ஏற்றுக்கொண்டிருக்கின்ற திணைக் கோட்பாடுகூட சமஸ்கிருதக் கோட்பாடுகளிலிருந்து அல்லது குறிப்பாக, நாட்டிய சாஸ்திரத்திலிருந்து கடன் வாங்கப்பட்டது என்கின்ற கருத்தைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய தவறான கருத்துகளுக்கெல்லாம் விடையளிக்கும் விதமாகத்தான் இன்றைக்கு உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, இந்த மாநாட்டிலே இந்தப் பிரச்சினையை, அதாவது, சங்க இலக்கியத்தின் காலத்தை வரையறுப்பதற்கென்றே ஒரு சிறப்புக் கருத்தரங்கமும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அந்த விதத்திலே, தமிழினுடைய சிறப்பை அறிவிப்பதாக மட்டுமல்லாமல், தமிழினுடைய தொன்மையை உலகிற்கு உணர்த்துவதாகவும் இந்த மாநாடு அமையப் போகிறது. அத்தகைய மாநாட்டை ஏற்பாடு செய்த நம்முடைய முதல்வர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, ஒவ்வொரு முறையும் இங்கே உலகத் தமிழ் மாநாடு நடந்தவுடனேயே, ஒரு நிறுவனம் ஒன்றைத் துவக்குகிற ஒரு மரபு தமிழகத்திலே இருக்கின்றது. அப்படித்தான் தமிழ்ப் பல்கலைக்கழகம் துவக்கப்பட்டது. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமும்

துவக்கப்பட்டது. இன்றைக்கு உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெற இருக்கின்ற நேரத்திலே, அந்த மாநாட்டைத் தொடர்ந்து இதுபோன்றே ஒரு நிறுவனத்தை துவக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக, இன்றைக்குத் தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து கிடைத்திருப்பது போலவே, உலகில் பல்வேறு செம்மொழிகள் இருக்கின்றன. அந்தச் செம்மொழிகளையெல்லாம் ஒப்பிட்டு ஆய்வு செய்வதற்கென்று தனியான நிறுவனம் எதுவும் இதுவரை தமிழகத்திலே இல்லை. எனவே, உலகச் செம்மொழிகள் ஆய்வு நிறுவனம் ஒன்றை மாநாட்டைத் தொடர்ந்து நம்முடைய அரசு உருவாக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

நம்முடைய தமிழ் மொழிக்கென்று உருவாக்கப்பட்டிருக்கின்ற ஒரே பல்கலைக்கழகம் தஞ்சையிலே இருக்கின்ற தமிழ்ப் பல்கலைக்கழகம். 1981 ஆம் ஆண்டிலிருந்து மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிற அந்தப் பல்கலைக்கழகம் நிதித் தட்டுப்பாட்டினால் தடுமாறிக் கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு அதற்கு 3.81 கோடி ரூபாயைத் தொகுப்பு நிதியாக நம்முடைய அரசு வழங்கியிருக்கிறது. என்றாலும், அந்த நிதி அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய செயல்பாடுகளுக்குப் போதுமானதாக இல்லை. அங்கே சுமார் 55 பேராசிரியர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள் un-sanctioned என்று தொடர்ந்து சொல்லப்பட்டு, அவர்களுக்கான ஊதியங்கள் அரசால் வழங்கப்படாத நிலை இருக்கிறது. அவற்றை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-40

அதுமட்டுமல்லாமல், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை சீரமைப்புச் செய்வதற்காக திரு. அனந்தகிருஷ்ணன் அவர்களுடைய தலைமையிலே அமைக்கப்பட்ட சீராய்வுக் குழு தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பித்து இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகியும்கூட, இன்னும் அது தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே தமிழ்ப் பல்கலைக்கழக...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடித்துவிடுங்கள், Please. (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. து. ரவிக்குமார்: தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குக் குறைந்தபட்சம் ஆண்டுக்கு 10 கோடி ரூபாயாவது நம்முடைய அரசு நிதி ஒதுக்கி, தமிழ் மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டு, அமைகின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி. சுடலையாண்டி. (குறுக்கீடு) வாய்ப்பில் சின்ன வாய்ப்பு, பெரிய வாய்ப்பு என்ன?. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். திரு. எம்.பி. சுடலையாண்டி, ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன்.

திரு. வி.பி. கலைராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் மொழிக்கு என்று பேரகராதி (லெக்சிகன்) பல ஆண்டுகளாக உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிற செய்தி வருகிறது. ஆனால், இதுவரை அது முடிவு செய்யப்பட்டதாக ஒன்றும் இல்லை. நீங்கள் ஒரு committee-ஐப் போட்டிருக்கிறீர்கள். இந்த ஆண்டிலாவது அந்தப் பேரகராதி வெளியிடப்படுமா?

இரண்டாவது, தமிழகத்தினுடைய தமிழ்ப் பள்ளிகள் எல்லாம் கர்நாடகத்திலே மூடப்படுவதாகத் தகவல் வந்திருக்கிறது. எந்த அளவிற்கு உண்மை என்று தெரியவில்லை. கர்நாடகத்தில் தமிழ்ப் பள்ளிகள் மூடப்படுவதாக இருந்தால், அதற்கேற்ற நடவடிக்கையை முதலமைச்சர் எடுப்பாரா என்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதி கொடுத்து, ஏற்கெனவே இங்கே சட்டமன்றத்தில் இருக்கின்ற அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் ஒரு கோரிக்கையை வலியுறுத்தி, ஒட்டுமொத்தக் கருத்தாகத் தெரிவித்திருக்கின்றோம். அரசிடமிருந்து அதற்கு ஒரு நல்ல பதில் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். ஜல்லிக்கட்டு நடத்துவது சம்பந்தமாக, தடையை நீக்கி, பணம் கட்டாமல் நடத்துவதற்கு, ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத்தில் இருக்கின்ற அனைத்து சட்டமன்ற

உறுப்பினர்களும் ஒரே கோரிக்கையாக வைத்திருக்கின்ற கோரிக்கை, அரசு தடையின்றி ஜல்லிக்கட்டு நடத்துவதற்கும், பணம் கட்டாமல் நடத்துவதற்கும், விதிகளைத் தளர்த்துவதற்கும் இங்கே இருக்கின்ற நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இதை அறிவிப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி. சுடலையாண்டி.

***திரு. எம்.பி. சுடலையாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கொடுத்த அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய பொதுச் செயலாளர், எங்களுடைய அன்புத் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களுக்கும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. கே.வி. தங்கபாலு அவர்களுக்கும், சட்டப் பேரவை காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. சுதர்சனம் அவர்களுக்கும், தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாபெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டசபை வளாகத்திற்கு அன்னை சோனியா காந்தி அவர்களையும், பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களையும் அழைத்து, திறப்பு விழா நடத்திய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அதேபோன்று தமிழகத்தினுடைய துணை முதல்வர் தளபதியார் அவர்களுக்கும், மத்திய உரம் மற்றும் இரசாயனத் துறை அமைச்சர் அண்ணன் அஞ்சா நெஞ்சன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழக சட்டசபைக்கு என்று ஒரு தனித் தொலைக்காட்சி அமைக்க வேண்டும், பாராளுமன்றத்தில் இருப்பதுபோன்று இங்கேயும் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து, பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிப் பிரச்சினைகள், பொதுப் பிரச்சினைகள் அனுப்பும்போது முதல்வரும், துணை முதல்வர் அவர்களும் உடனுக்குடன் பதில் அனுப்புவதுபோல், மற்ற துறைகளைச் சார்ந்த அமைச்சர்களும் அதைப்போன்று சட்டப் பேரவை உறுப்பினர்களுடைய கோரிக்கைகளுக்குப் பதில் கொடுக்கும் விதமாகத் தனி அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கின்றேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சட்டப் பேரவை உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியாக 1 கோடியே 70 இலட்சம் ரூபாய் இருக்கின்றது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1 கோடியே 70 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தந்ததற்கு நன்றி தெரிவித்து, தொடர்ந்து அந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய மேம்பாட்டு நிதியை 2½ கோடி ரூபாயாக உயர்த்த வேண்டும் என்ற எங்களுடைய கோரிக்கையை வைக்கின்றேன்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஓய்வூதியம் தற்போது 10,000 ரூபாயாக உள்ளது. அதை 20,000 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை வைக்க விரும்புகின்றேன்.

என்னுடைய தொகுதி, ஸ்ரீவைகுண்டம் பேரூராட்சிப் பகுதியில் உள்ள மேலக்கோட்டைவாசல் தெருவில் வாடகைக் கட்டடத்தில் அரசு குழந்தைகள் காப்பகம் செயல்பட்டு வருகின்றது. மேற்படி அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் வகையில் இடம் இல்லாததால் ஸ்ரீவைகுண்டம் வியாபாரிகள் சங்கம் மூலமாக நிதி திரட்டி, குழந்தைகள் காப்பகத்திற்கு கட்டடம் அரசின்மூலம் கட்டுவதற்குத் தேவையான 29 சென்ட் நிலத்தை வாங்கி, சமூக நலத் துறைக்கு ஸ்ரீவைகுண்டம் சார் பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 17-3-2008 ஆம் ஆண்டு ஆவணமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் பேரூராட்சிப் பகுதி, சர்வே எண் 239-ல் அரசு குழந்தைகள் காப்பகம் கட்டித் தர வேண்டுகின்றேன்.

முற்பகல் 11-45

அதேபோன்று, ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பழையகாயல் மீனவர் கிராமத்தில் அங்கே நாட்டுப் படகு மற்றும் கட்டுமரம் வைத்து மீன்பிடித் தொழில் செய்து வருகிறார்கள். இந்தப் பகுதி மீனவர்களுக்கு சிறு மீன்பிடித் துறைமுகமும், தூண்டில் வளைவும் அமைக்கப்பட வேண்டுமென்றும், மீனவர்கள் பிடித்து வரும் மீன்களை விற்பனை செய்வதற்கு விற்பனைக் கூடமும் அமைத்துக் கொடுக்குமாறும் மீன்வளத் துறையைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைத் தவிர, கிராம கர்ணங்களுடைய எதிர்பார்ப்பாக கிராம கர்ணம் மற்றும் முன்சீப்களின்கீழ் பணியாற்றும் தலையாரிகள் அவர்களைவிட அதிகமாக ஓய்வூதியம் பெறும் வகையில் குளறுபடியான ஓய்வூதியம் நிர்ணயக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியம்

பெறுபவர்கள் நலன் குறித்து ஆராய தமிழக அரசு அமைத்த ஓய்வூதியப் பரிந்துரைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், அரசாணை எண் M.S. 235 நிதித் துறை, நாள் 1-1-2009 என்ற அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, தமிழக அரசின் ஓய்வூதியத் தொகையை குறைந்தபட்சம் ரூ.3,050/- ஆக வழங்க வேண்டுமென்று அரசு அறிவித்துள்ளது. அதன்படி அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் வழங்கியதைப்போல கிராம கர்ணம், முன்சீப் மற்றும் தலையாரிகளுக்கு 3 மாத ஓய்வூதிய நிலுவைத் தொகை வழங்கப்பட்டுள்ளது. ஆனால், குறைந்தபட்ச ஓய்வூதியமான ரூ.3,050/- இதுவரை நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படவில்லை என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஸ்ரீவைகுண்டம் தொகுதி முழுவதுமாக 90 சதவிகிதம் மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்கின்றார்கள். அந்தப் பகுதியினுடைய விவசாயிகளுக்குத் தண்ணீர் திறந்துவிடுவதில் அதிகக் குளறுபடிகள் இருக்கின்றன. இப்போது அரசாணையின்படி தண்ணீர் திறந்துவிடுவதில் பாதிப்பாக கீழக்காலில் 7,785 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டதிலே பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. மேலக்காலுக்கும், தென்காலுக்கும் தண்ணீர் திறந்துவிட்டிருக்கிறார்கள். கீழக்காலில் பாதிப்பின் மூலமாக விவசாயம் நடக்கவில்லை. கலியாவூரிலிருந்து வல்லநாடு, மணக்கரை, ஆறாம்பண்ணை, கொங்கராயன்குறிச்சி, பத்மநாபமங்கலம், ஸ்ரீவைகுண்டம் கஸ்பா, பேரூர், சிவகளை, பெருங்குளம், மேட்டுக்குளம் போன்ற பகுதிகளெல்லாம் தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. உடனடியாக அரசு தனிக் கவனம் செலுத்தி, விவசாயிகளுடைய நலன் கருதி, அங்கே விவசாயிகளுடைய கார் சாகுபடிக்குத் தண்ணீர் திறந்துவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தொண்டாமுத்தூர் சட்டமன்ற உறுப்பினருடைய பூண்டி, வெள்ளையங்கிரி ஆண்டவர்கோவில் மலை சுமார் 6 கிலோ மீட்டர் நீளம் இருப்பதால், ஒரு இழுவை இரயில் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து, சத்துணவு மையங்களில் அதிகமான பணியிடங்கள் காலியாக இருப்பதால், புதிய ஆட்களைத் தேர்வு செய்து காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு வைப்புத் தொகையாக ரூ.2 இலட்சம் கட்டுவதைத் தளர்த்தி, எப்போதும்போல் நடத்த அனுமதி வழங்கவேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ளவர்களின் பெயர்களை, தமிழக அரசு ஆணைகளில் கூறப்பட்ட முறையிலும், தமிழர்கள் தலைமுறை தலைமுறையாய் பெயர்களைத் தமிழில் உரிய தமிழ்த் தலைப்பெழுத்துடன் எழுதி வந்த முறையில் எழுத வேண்டுமென்றும், குறிப்பாக இங்கே பேசிய பாட்டாளி மக்கள் கட்சி இயக்கத்தைச் சேர்ந்த, சட்டமன்ற உறுப்பினர் அய்யா மு.க. பெரியசாமி அவர்கள் சொன்னார்கள். அதாவது, நமது தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத ஐயர், கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம் பிள்ளை, தந்தை ஈ.வே. ராமசாமி, பெருந்தலைவர் கு. காமராசர், தெய்வத் திருமகன் பசும்பொன் உ. முத்துராமலிங்கத் தேவர், தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் போன்ற நம்முடைய பெரியோர்களெல்லாம் உபயோகித்தது போன்று அனைத்து அரசு அதிகாரிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும் தமிழிலே பெயரை உபயோகிக்குமாறு அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களின் குடியிருப்பில், சட்டமன்ற உறுப்பினர்களுடைய உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதற்கு ஜிம் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: ஒரு point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் 4 ஆண்டு காலம் முடித்து 5-ஆவது ஆண்டில் நேற்று அடியெடுத்து வைத்து, இன்று இரண்டாவது நாளில் அடியெடுத்து வைத்திருக்கிற நாள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே அவர் 18 ஆண்டுகள் முதலமைச்சராகப் பதவியேற்று, 19-ஆவது ஆண்டில் இப்போது அடியெடுத்து வைக்கின்ற விழா.

முற்பகல் 11-50

அதேபோல, கோவையிலே வரலாற்றுச் சிறப்பு மிக்க உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டைக் கூடிய விரைவிலே நடத்துவதற்கான ஏற்பாட்டைக் கொண்டிருக்கிற இந்த ஆண்டினுடைய ஆண்டு விழா மற்றும் பவள விழா என்றெல்லாம் பல விழாக்களைக் கொண்டாடுகிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக, பேரறிஞர் அண்ணாவினுடைய வழியில் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் இன்று அண்ணாவினுடைய நூற்றாண்டு நிறைவு விழாவையும் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இத்தனை விழாக்களையும் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டாடிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், இதுவரை எந்த முதலமைச்சரும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைத் தமிழகத்திலே கொடுத்ததில்லை. நீங்கள்தான் 25 இலட்சம் ரூபாய் என்று முதலிலே தொடங்கி வைத்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது படிப்படியாக உயர்ந்து, இன்று ஒரு கோடியே 70 இலட்சம் ரூபாயாகப் போயிருக்கிறது. அந்த 25 இலட்சத்திற்குப் பக்கத்திலே ஒரு சுழியைப் போட்டு, 2½ கோடி ரூபாயாக நீங்கள் உயர்த்தினால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்களுடைய பிரச்சினைகள் தீரும்.

இப்போதெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்கொள்வதெல்லாம், எங்கு பார்த்தாலும் இருக்கக்கூடிய பிரச்சினைகள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிற ஒரே கவுரவம், எங்களைக் காப்பாற்றிக் கொண்டிருப்பது தொகுதி மேம்பாட்டு நிதிதான் என்கிற காரணத்தினாலே, நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், நாங்கள் அந்தப் பணத்தை அங்கேயிருக்கக்கூடிய தண்ணீர்ப் பிரச்சினை, அதேபோல கால்வாய் வசதி, சாலை வசதி, மின் விளக்கு வசதி, பள்ளிக்குக் கட்டடங்கள், இப்படி மக்கள் பிரச்சினைகளுக்காக, நீங்கள் அரசுத் தொகுப்பிலிருந்து கொடுக்கக்கூடிய பணத்தை எங்களிடம் கொடுத்து, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதி மூலமாகத்தான் மக்களுக்குக் கொடுக்கிறீர்கள். ஆகவே, எந்த வகையிலும் அரசுக்கு நிதி இழப்பு என்கிற பேச்சுக்கே இடமில்லாத காரணத்தினாலே, கருணை மனம் படைத்த நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், எங்களுடைய கோரிக்கையெல்லாம் ஒரே கல்லில் இத்தனை மாங்காய்களை

அடிக்கின்ற ஆண்டாக இந்த ஆண்டு இருக்கிற காரணத்தினாலே, நாங்களும் ஒரு மாங்காய் அடிப்பதற்கு ஒரு வாய்ப்பைத் தந்து, தொகுதி வளர்ச்சி நிதியை நீங்கள் 2½ கோடி ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று பணிவன்போடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, நல்ல clarification கேட்டீர்கள். உரையை முடித்துவிடுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: இதோ உரையை முடித்துவிட்டேன். 'ஒரு வீட்டைக் கட்டிப் பார், கல்யாணத்தைப் பண்ணிப் பார்' என்பார்கள். ஒரு வீடு கட்டுவதற்கே 1,008 பிரச்சினைகள். ஆனால் இவ்வளவு பெரிய கட்டடத்திலே இன்று உள்ளோம். நாமெல்லாம் ஒரு வாடகைக் கட்டடத்திலே இருந்ததுபோல செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே, தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்குச் சொந்தமான ஒரு கட்டடத்திலே இருந்தோம். இன்று ஒரு சொந்தக் கட்டடத்திலே எங்களை அமர வைத்த பெருமை உங்களுக்குத்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட வரலாற்றைப் படைத்திருக்கிற நீங்கள், எங்களுடைய, சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை நீங்கள் பரிசீலிக்காவிட்டால், யார் இனி பரிசீலிக்கப் போகிறார்கள் என்கிற ஒரே காரணத்திற்காக நாங்கள் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறோம். 2½ கோடி ரூபாய், இன்னும் அடுத்த முறை வந்தீர்கள் என்றால், அதை 3 கோடி ரூபாய் என்று கொண்டு போனால்தான், எங்களுடைய பிரச்சினைகளை ஓரளவிற்கு நாங்கள் தொகுதியிலே தீர்க்க முடியுமென்கிற காரணத்தால் நான் மீண்டும், மீண்டும் மாண்புமிகு முதல்வர் அவர்களை பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிறைய மற்ற கோரிக்கைகள், Ex.M.L.A.க்கள், Ex.M.L.C.க்களினுடைய பிரச்சினைகளை தயவுசெய்து மாண்புமிகு முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 'பாம்பின் கால் பாம்பறியும்' என்று சொல்வார்கள். ஒரு சாமான்யக் குடும்பத்திலேயிருந்து வந்த சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களாக ஆகிவிட்டால், இந்த pension ஒன்றுதான் ஆதரவு. மத்திய அரசு இன்றைக்குப் பார்த்தீர்கள் என்றால், சுதந்திரப் போராட்ட வீரர்கள், மற்றவர்களுக்கெல்லாம் கொடுக்கிறபோது, 10,000 ரூபாய் என்று pension வந்துவிட்டது. சட்டமன்ற உறுப்பினர்கள் என்று வரும்போது, அவர்களுக்கு மக்கள் தொடர்பு கொஞ்சம் அதிகமாக இருக்கிற காரணத்தினால்,

10,000 ரூபாய் என்பது போதவில்லை. ஆகவே, அதை இரண்டு மடங்காக உயர்த்தித் தர வேண்டுமென்கிற பணிவன்பான வேண்டுகோளை உங்கள் முன்னால் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, எல்லோருக்குமே 60 வயதுக்கு மேல் ஆகிவிட்டது. அப்படி இருக்கிற அந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மேலவை உறுப்பினர்களைப் பார்த்தோம் என்றால் நாம் கொடுக்கிற மருத்துவப் படி 4,000 ரூபாய் என்பது போதவில்லை என்கிற ஒரு கருத்து நிலவுகிறது. ஆகவே எவ்வளவோ, வாரி, வாரி வழங்குகிற வள்ளலாக இருந்துகொண்டிருக்கிற தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், அந்த Ex. M.L.A.க்கள், Ex. M.L.C.க்களினுடைய மருத்துவப் படியை 2,000 ரூபாய் அதிகரித்துக் கொடுத்து, அவர்களுக்கு 6,000 ரூபாய் என்று உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று இருக்கக்கூடிய பிரச்சினைகள், பொதுவாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான்கூட தொடர்ந்து (மணியடிக்கப்பெற்றது) இதோடு உரையை முடித்துவிடுகிறேன். இன்னும் நேரம் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று இருக்கக்கூடிய உரிமைகள், பொதுவாக அரசாணை போட்டு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய காலத்தில்தான், அரசாணை எண் 1277, நாள் 1-8-1989-இல் போடப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்களை ஆங்காங்கே விழாக்கள் நடக்கிறபோது invitation-இலே போட வேண்டும், கல்லிலே பொறிக்க வேண்டும், அவர்கள் அழைக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறோம். நீதிமன்றம் எங்களைப் புறக்கணித்துக் கொண்டுதான் இருக்கிறது. சட்டத் துறை அமைச்சரிடமும் பல முறை நாங்கள் கோரிவிட்டோம். இனி, அந்தப் பிரச்சினைக்கு நிச்சயமாக இடமளிக்காமல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய அந்த உரிமையை நீங்கள் தயவுசெய்து கட்டிக் காப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இப்போது தொடர்ந்து பல சட்டமன்ற உறுப்பினர்களுடைய உணர்வுகளை இங்கே பிரதிபலிக்க வேண்டுமென்று சொன்னால், இங்கே எல்லோருமே ஜல்லிக்கட்டு

வீர விளையாட்டைப் பற்றிச் சொன்னார்கள். அது பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பல முறை சொல்லியிருக்கிறோம். அவரும் விளையாட்டை நிச்சயமாக ரசிக்கக்கூடியவர். வீரத்தை விரும்புபவர். தமிழின்பால் பற்று இருக்கக்கூடிய, தமிழர் பண்பாட்டை எப்பொழுதுமே போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கக்கூடிய நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் இதற்கு ஏதாவது--ஏனென்றால் அந்த ஜல்லிக்கட்டை வரன்முறைப்படுத்துவதற்காகத்தான் சட்டத்தை இயற்றியிருக்கிறோம். ஆனால், காவல் துறையினர் அனுமதிக்க மறுக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்படியாவது--கருணை கூர்ந்து அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

கர்நாடகா மற்றும் ஆந்திரா போன்ற மாநிலங்களில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுடைய உரிமைகளையெல்லாம் நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய பிரச்சினைகளை அவராகவே, சொல்லாமலே நிச்சயமாகத் தீர்த்து வைப்பார் என்ற நம்பிக்கையோடு, அவர்கள் வாழ்க பல்லாண்டு, வாழ்க பல்லாயிரத்தாண்டு என்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, என்ன இது? (குறுக்கீடு) சரி, சீக்கிரம் சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சட்டமன்றப் பேரவையினுடைய நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தினுடைய நிறைவான நாள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களும் பல்வேறு கோரிக்கைகளையெல்லாம் முன் வைத்து எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதெல்லாம், நிறைய சலுகைகளை நாட்டு மக்களுக்கு

வழங்கிக் கொண்டிருக்கிற அதே வேளையில், மக்களுக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற சட்டப் பேரவை உறுப்பினர்கள் வண்டி வேண்டுமென்று கேட்டார்கள், வங்கியிலே கடன் பெற்றுக்கொள்ளலாம் என்று உத்தரவிட்டாலும்கூட, அது ஈடேறவில்லை. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தொகுதியிலேயே சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆன காரணத்தினாலே, அந்தத் தொகுதியிலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மக்கள் பிரச்சினையைக் கேட்டு வருவதற்கு, பணியாற்றுவதற்கு, தொகுதிக்கு ஒரு வண்டி, ஓர் ஓட்டுநரை அரசே வழங்கிவிட்டால், இப்பொழுது இருக்கிற சட்டமன்ற உறுப்பினர் அந்த வண்டியை எடுத்துக்கொள்ளலாம், பணியாற்றலாம். அந்தத் தொகுதிக்கு மீண்டும் தேர்தல் வந்து வேறு யாராவது உறுப்பினராக வந்தால், அவர்களும் பணியாற்றலாம், அந்த வண்டியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆகவே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு, மற்ற அலுவலகங்களுக்கு எல்லாம் வழங்கப்பட்டிருப்பதைப்போல, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு ஒரு வண்டியும், ஓர் ஓட்டுநரும், ஓர் அலுவலக உதவியாளரும் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பிலே முன்வைக்க விரும்புகிறேன்.

அதைப்போல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தொகுதி மேம்பாட்டு நிதி இரண்டரைக் கோடி ரூபாய் வேண்டும் என்பது எல்லோருடைய கோரிக்கை. ஆகவே, கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், தொகுதி மேம்பாட்டு நிதியைப் பணிகளுக்கு எடுத்துக்கொள்கிற நேரத்தில், இன்னின்ன பணிகளுக்குத்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அதிகாரிகள் நிபந்தனை விதிப்பதால், உறுப்பினர்களெல்லாம் திக்குமுக்காடுகின்றனர். எது அந்தத் தொகுதியிலே அவசியத் தேவையோ, அதற்குப் பயன்படுத்தும்படி நிபந்தனையற்ற நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதுதான். இன்றைக்கு வயதாகிவிட்டது, ஆண்டுக்கு 4,000

ரூபாய்தான் மருத்துவச் செலவுக்காகக் கொடுக்கிறார்கள், அது போதவில்லை. ஆகவே, மாதத்திற்கு 2,000 ரூபாய் மருத்துவச் செலவும், மாதத்திற்கு 20,000 ரூபாய் ஓய்வூதியமும் வழங்க வேண்டுமென்று அனைவரின் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், திரு. ஜி.கே. மணி, உரையை முடியுங்கள்.

திரு. ஜி.கே. மணி: ஜல்லிக்கட்டிற்கு விதித்திருக்கிற அந்த நிபந்தனை, வைப்புத் தொகை இரண்டு இலட்சம் ரூபாய் என்பதைத் தளர்த்தி, அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிறைவான கூட்டத்தை நடத்திக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அனைவருக்கும் நன்றி சொல்லி, சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகளுக்கு பதிலை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறை, தமிழ் வளர்ச்சி, மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை போன்ற பல்வேறு மானியக் கோரிக்கைகள் குறித்துப் பேசுகிற ஒரு வாய்ப்பினைத் தந்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நீதியரசர் சிவசுப்பிரமணியம் அவர்களுடைய அறிக்கை அவையிலே வைக்கப்பட்டது. அந்த அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே 28-2-2010 அன்று நீதியரசர் அவர்கள் ஒப்படைத்திருக்கிறார்கள். அதில் ஆங்கிலத்தில் இருக்கிற பிரதிகள் மட்டும்தான் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ மூன்று மாத காலம் கழித்துக்கூட அந்த அறிக்கை இங்கே தமிழிலே சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதைப்போல, நீதியரசர் சிவசுப்பிரமணியம் அவர்களுடைய அறிக்கையைப் பொறுத்த வரையிலும், இன்றைக்குத் தமிழ்நாட்டிலே செல்வாக்குப் பெற்றிருக்கிற. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், ஒரு சிறு விஷயத்தை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். சட்டத்தின்படி பேரவை மேசை முன் வைக்கப்பெறும் எந்த ஏட்டினையும் உறுப்பினர் எவரேனும் பேரவை விதிகளில் வகை செய்யப்பட்டுள்ளவாறு பொருத்தமான தீர்மானம் ஒன்றிற்கு அறிவிப்புக் கொடுத்து, பேரவைத் தலைவரால் அனுமதிக்கப் பெற்றபின் பேரவையில் விவாதிக்கலாம்.

எனவே, அதுகுறித்துத் தீர்மானம் போட்டுத்தான் எடுக்க முடியும். *(குறுக்கீடுகள்)* அதாவது, அந்த Committee Report-ன் மீது நீங்கள் எதுவும் பேச முடியாது.

நண்பகல் 12-00

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: நான் அந்த Report-க்குள்ளே பேச வரவில்லை. அந்தக் கருத்துக்குள் நான் போகவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதியரசர் சிவசுப்பிரமணியம் கமிஷன் அறிக்கை குறித்து நான் பேசவில்லை. அதுபற்றி இல்லாமல் நான் பேசுகிறேன். சிறுதாவூரில் இருக்கிற நிலம், செல்வாக்குப் பெற்றிருக்கிற, இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராகவும், முன்னாள் முதலமைச்சர் அவர்களாகவும் இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், அதுவும் நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய விஷயம். *(குறுக்கீடுகள்)* நீங்கள் இரண்டு விஷயங்கள் குறித்துச் சொல்கிறீர்கள். *(குறுக்கீடுகள்)* சொல்கிறேன், கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* இங்கே பாருங்கள், முதலில் விதி 31-இலே என்ன இருக்கிறது என்பதை நீங்களே படித்துப் பாருங்கள். *(குறுக்கீடுகள்)* அடுத்ததாக விதி 92-இலேயும் அதேமாதிரி இருக்கிறது. *(குறுக்கீடுகள்)* விதி 31 மற்றும் விதி 92 ஆகியவற்றில், கமிஷன்களுடைய ரிப்போர்ட் அல்லது கமிட்டியினுடைய ரிப்போர்ட்டுகளின்மீது எதையும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என இருக்கிறது. *(குறுக்கீடுகள்)* அவ்வாறு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். *(குறுக்கீடுகள்)* அடுத்ததாக, வழக்கு நிலுவையில் இருக்கிறது. எனவே, அது குறித்து இப்போது விவாதிக்க முடியாது. *(குறுக்கீடுகள்)*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த விவாதத்திற்குள் செல்லவில்லை. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், இந்த சிறுதாவூருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை இங்கே நீதியரசர் சிவசுப்பிரமணியம் அவர்களுடைய கருத்துகள் வெளிப்படுத்தியிருக்கின்றன. இருந்தபோதிலும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்கள், அந்த நீதிபதி தந்திருக்கிற அந்தத் தீர்ப்பிற்குள்ளே உள்ள வாசகங்களுக்குள் போகிறார். அது, அந்த நீதிபதி என்ன சொல்லியிருக்கிறாரோ, அது தொடர்புடையது. (குறுக்கீடுகள்) அதற்கு பதில் வேறு இருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், சொல்கிறேன் கேளுங்கள். உங்கள் பக்கம் நியாயம் இருந்தால் கோர்ட்டிலே விவாதித்து ஜெயித்துவிட்டுப் போங்களேன். இது எதற்கு? அதை விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நீதிபதி தந்திருக்கிற அந்தக் கருத்தில் "தொடர்பில்லை" என்ற ஒரு கருத்தும் இருக்கிறது. யாருக்குத் தொடர்பு இருக்கிறது என்ற கருத்தும் இருக்கிறது. (குறுக்கீடுகள்) அதையெல்லாம் பேசுவதற்குத் தனித் தீர்மானம் தந்து பேசவேண்டுமே தவிர, இந்தப் பிரச்சினையிலே இன்றைக்கு விவாதிப்பதற்கு நியாயம் கிடையாது. அப்படி விவாதிப்பதாக இருந்தால், பத்திரிகையிலே வந்த செய்திகளையெல்லாம் விவாதிக்க வேண்டிய அவசியம் வரும்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் இருக்கிற எதிர்க்கட்சித் தலைவருடைய நிலை குறித்துப் பேசுவதிலே தவறில்லை. இப்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்காகத்தான் இங்கு வாதாடினீர்கள். இரண்டரைக் கோடி அளவிற்குத் தொகுதி மேம்பாட்டு நிதி எல்லாம் கேட்டீர்கள். இப்படி எத்தனையோ வாதாடியிருக்கிறீர்கள். ஆகவே, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற முன்னாள்

முதலமைச்சர் அவர்களுடைய பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு இந்தச் சட்டமன்றத்திலே இடம் இருக்கிறது. நீதியரசருடைய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், சொல்கிறேன் கேளுங்கள். இதற்கெல்லாம் விதிமுறைகள் என்று இருக்கிறது. (குறுக்கீடுகள்) விதிகளை எதற்கு வைத்திருக்கிறார்கள்? (குறுக்கீடுகள்) நீங்கள் என்ன வேண்டுமானாலும் பேசுவதற்கில்லை. (குறுக்கீடுகள்) திரு. கே.ஏ. செங்கோட்டையன், அதுகுறித்துப் பேசுவதற்கு இல்லை. (குறுக்கீடுகள்) விதிமுறைப்படிதான் பேச முடியும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அனுமதித்தால்தான் எந்தப் பிரச்சினை குறித்தும் இங்கே பேசலாம். அவருடைய அனுமதியில்லையென்றால் பேச முடியாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நீதியரசர் சிவசுப்பிரமணியம் விசாரணை கமிஷனுடைய அறிக்கை சட்டமன்றத்திலே வைக்கப்பட்டது. அது குறித்து நேற்று முன்வரிசையில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துகளை எடுத்துச் சொல்லி, இங்கு அதைப் பதிவும் செய்திருக்கிறார்கள். அதற்குள்ளேயே சென்று, அண்ணன் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது, அந்த வழக்கை சீக்கிரமாக முடியுங்கள் என்ற ஒரு கருத்தைக்கூட இங்கு சொன்னார்கள். அதற்கெல்லாம் நீங்கள் அனுமதி தந்தீர்கள். ஆனால், நாங்கள் அந்த வழக்குகளுக்குள் போய்--நீதியரசர் அளித்த தீர்ப்பில் நல்லதும் இருக்கிறது. கெட்டதும் இருக்கிறது. அதுகுறித்து நாங்கள் விவாதிப்பதற்கு வரவில்லை. சம்பந்தம் இல்லாமல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது பொய்யான குற்றச்சாட்டை சுமத்தி, கடந்த நான்கு வருடங்களாக நீங்கள் எந்த அளவிற்கு அதைப் பெரிதுபடுத்தி, அதாவது தமிழகத்திலேயே மக்கள் செல்வாக்கைப் பெற்ற தலைவரை, 10 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்த முன்னாள் முதலமைச்சர் அவர்களை, இன்றைக்கு சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வேண்டுமென்றே, அவதூறாக நீங்கள் இந்த வழக்கிலே சம்பந்தப்படுத்தி, ஆதி திராவிட மக்களுடைய நிலங்களை அபகரித்தார் என்ற பொய்யான குற்றச்சாட்டைப் பதிய வைத்து--(குறுக்கீடு)

பிற்பகல் 12-05

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் ஒன்றை மட்டும் கேட்டுக்கொள்கிறேன், கடந்த பிப்ரவரி மாதம் இந்த கமிஷனுடைய அறிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டு விட்டது. 14-4-2010 அன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் நடத்திய விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள். அன்றைக்குக்கூட, ஆதி திராவிட மக்களின் நிலங்களை முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அபகரித்துக் கொண்டு வீடு கட்டிக் கொண்டதாக அந்தப் பொதுக் கூட்ட மேடையிலே பேசினார்கள். மக்கள் செல்வாக்குப் பெற்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பற்றி வேண்டுமென்றே, பொய்யான தகவலைத் தமிழ்நாட்டு மக்களிடத்திலே பரப்பி, அம்மா அவர்களுக்கு ஒரு அவப் பெயரை உண்டு பண்ண வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில், இந்த முயற்சி செய்யப்பட்டது என்பதைத்தான் நாங்கள் இந்த சட்டமன்றத்திலே வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கிறோமேயொழிய, விசாரணை கமிஷனுக்குள்ளே நாங்கள் போகவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விசாரணை கமிஷனுக்குள்ளே நீங்கள் போகவில்லையென்றால். . . (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறுதாவூர் விவகாரம் பற்றி நீதியரசர் அவர்கள் வெளியிட்டுள்ள, தந்துள்ள அறிக்கை குறித்த, எந்தக் கருத்துகளைப் பதிவு செய்ய வேண்டுமோ, அவற்றையெல்லாம் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு இதிலே விவாதம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. வேண்டுமென்றே, முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாமீது அவதூறு கூறப்பட்டிருப்பதாகச் சொல்லி, யாரோ நினைத்ததாக அவர் குற்றம் சாட்டுகிறார்.

அந்தக் குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமேயானால், அது எங்களுக்குரியதல்ல. அந்தக் குற்றச்சாட்டுகளைக் கொடுத்து, இதை விசாரணைக் கமிஷனுக்கு அனுப்ப வேண்டுமென்று ஊர்வலமாக வந்து கோட்டையிலே என்னிடத்திலே அதை வழங்கியவர்கள்--இன்றைக்கு அ.தி.மு.க.விற்குத் தோழமைக் கட்சியாகவோ, அல்லாமலோ இருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த நண்பர்கள்தான். குறிப்பாக, அருமை நண்பர் திரு. என். வரதராஜன் அவர்கள்தான் அதைக் கொண்டு வந்து கொடுத்தார்.

இப்போது இங்கே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்ன குற்றச்சாட்டுகளெல்லாம் உண்மையென்றால், அது யாருக்குப் பொருந்தும் என்றால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர்களுக்குத்தான் அது பொருந்தும். அவை எங்களுக்குப் பொருந்தக்கூடியவைகளல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களும் உண்மையைச் சொன்னார்களா அல்லது உண்மைக்கு மாறான ஒன்றை எழுதிக் கொடுத்து விசாரிக்கச் சொன்னார்களா என்பதெல்லாம் முழு விவரங்களும் விரிவாக வெளி வந்த பிறகுதான் தெரியும். இப்பொழுது நாங்களும், இதை வைத்துக்கொண்டு எந்த நடவடிக்கையையும் எடுத்துவிடவில்லை.

இந்த அறிக்கையில் நடவடிக்கை எடுத்து, நிலத்தையெல்லாம் கைப்பற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே முன்னாள் முதலமைச்சருக்கு வேண்டியவர்கள் அல்லது அவர்களுக்கு உறவினர்கள் என்றிருந்தாலும்கூட நாங்கள் அவசரப்பட்டு எந்த நடவடிக்கையையும் எடுக்க முற்படவில்லை. இந்த அறிக்கை சில நாட்களுக்கு முன்பே வந்திருந்தாலும்கூட, உடனடியாக நாங்கள் நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம், பொறுத்திருந்து, பொறுமை காட்டி, விவரங்களை அவையிலே விவாதித்துச் செய்யலாம் என்பதற்காகத்தான்.

அவையிலே ஒரு அறிக்கையைப் பற்றி விவாதிப்பது என்றால், அவைத் தலைவர் அவர்களிடத்திலே சொல்லி, அவர் குறிப்பிடுகிற நாளில், எல்லாக் கட்சித் தலைவர்களுடைய ஆலோசனையின்பேரில்--அந்தக் கட்சித் தலைவர்களெல்லாம் குறிப்பிடுகின்ற ஒரு நாளில்-அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்து-அந்த அறிக்கைமீதான விவாதத்தை வைத்துக் கொள்வதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது.

TAMIL NADU LEGISLATURE
TRUTH ALONE TRIUMPHS

முன்னாள் முதலமைச்சர்மீது ஒரு தூசி விழவோ அல்லது ஒரு களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்பதல்ல எங்கள் நோக்கம். அந்தக் களங்கத்தை யாராவது ஏற்படுத்தினால், அதற்கு இடம் தரக்கூடாது என்ற நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய நேர்மையான குணம் அதற்கு இன்றைக்கு உடன்படுமேயானால், அதற்காகக் காத்திருந்து, நம்முடைய சட்டமன்றத்தினுடைய கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தை, அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தைக் கூட்டி, ஒரு நாள் இந்த அறிக்கையின்மீது விவாதம் வைத்துக்கொண்டு, எந்த விவரங்களைச் சொல்ல வேண்டுமோ, அந்த விவரங்களைச் சொல்ல வாய்ப்பு ஏற்படும். அதுவரையிலே பொறுத்திருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். நாங்கள் எப்படி அவசரப்பட்டு எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லையோ, அதையும் நீங்கள் கவனத்தில் வைத்துகொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே ஒரு நீண்ட விளக்கத்தினைத் தந்தார்கள். நான் அவரிடம் கேட்பது ஒரே ஒரு கேள்விதான். 14-4-2010 அன்று விடுதலை சிறுத்தைகள் கட்சியினுடைய விருது வழங்குகின்ற விழாவில் ஏற்கெனவே முதலமைச்சராக இருந்த ஒருவர் சிறுதாவூர் என்கிற இடத்தில் பஞ்சமர்களுக்கு என்று இருந்த நிலங்களையெல்லாம் அபகரித்து வீடு கட்டிக்கொண்டு, அந்த ஊரிலே இருந்த ஆதி திராவிட மக்களையெல்லாம் வெளியே விரட்டிவிட்டதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசி இருக்கின்றார்கள். கமிஷனுடைய அறிக்கை மாண்புமிகு முதலமைச்சரிடம் பிப்ரவரி மாதம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதற்குப் பின்னால் ஏப்ரல் மாதம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுக் கூட்ட மேடையிலே இதைப் பேசி இருக்கின்றார்கள். அதாவது, சட்டமன்றத்திலே இந்த அறிக்கை வைப்பதற்கு முன்பாகவே இந்தக் குற்றச்சாட்டு நிரூபணம் ஆகி இருக்கின்ற மாதிரி ஒரு தோற்றத்தை வெளியிலே பொது மக்களிடத்திலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நற்பெயருக்கு

அவப்பெயர் வர வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இதைப் பேசி இருக்கின்றார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் என்ன பதில் சொல்லப் போகிறார் என்பதுதான் என்னுடைய கேள்வி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில் சொல்வது ஒன்றும் பெரிதல்ல. உண்மை என் பக்கம் இருக்கும்போது, வாய்மை என் பக்கம் இருக்கும்போது; பதில் சொல்வது ஒன்றும் பிரமாதமான காரியம் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுதும் சொல்கிறேன். செங்கல்பட்டு வட்டம், சிறுதாவூர் கிராமத்தில் பங்களா அமைக்கப்பட்டு, காம்பவுண்டு மற்றும் வேலிக்குள் அமைந்துள்ள மொத்த நிலப்பரப்பு 115 ஏக்கர். இதில் அரசுப் புறம்போக்கு நிலம் 35 ஏக்கர். காம்பவுண்டுக்கு வெளியில், நிலமற்ற ஏழைகள் மற்றும் தலித்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தை பரணி ரிசார்ட் நிறுவனத்தார் விதிமுறைக்கு முரணாக வாங்கியது 53 ஏக்கர். இவர்கள் எல்லாம் யார் என்ற இந்த விவரத்தைத்தான் பொதுக் கூட்டங்களிலே பேசி இருப்போம். ஒருவரைக் குறிப்பிட்டுக் குற்றஞ்சாட்டுவது, தேர்தல் நேரத்தில் பொதுக் கூட்டங்களில், நீங்களும் அதற்குச் சளைத்தவர்கள் அல்ல, நாங்களும் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல. அதை மறந்துவிடாமல், பொதுக் கூட்டத்திலே பேசினாய், இங்கே பேசினாய் என்றெல்லாம் பேசுவது, ஏதோ கதைவிடுவதுபோல ஆகிவிடும். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்தப் பிரச்சினையை அப்படியே விடுங்கள். மற்றவற்றிற்குப் போங்கள்.* You go to other subjects.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, பொதுக் கூட்டத்திலே பேசினார் என்று சொன்னார்கள். பொதுக் கூட்டத்திலே பேசியது பத்திரிகைச் செய்தியிலே வந்திருக்கிறது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செங்கோட்டையன், சொல்கிறேன் கேளுங்கள். அடுத்த* subject-*க்குப் போங்கள். (குறுக்கீடு)*

2010 மே 14]

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, யார் அந்தப் பேரணியாக வந்தார்கள் என்பதெல்லாம் எங்களுக்குக் கவலையில்லை. புரட்சித் தலைவி அம்மாவைப் பொறுத்த வரையிலும், அவர்களுக்கு சிறுதாவூரிலே கட்டப்பட்டிருக்கிற பங்களாவோ அல்லது இடமோ ஒரு சென்ட்கூட அவர்களுக்குச் சொந்தமானது இல்லை என்பதைத்தான் அவர் வலியுறுத்தி இருக்கிறார். அதை முதலிலே தெரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்ற subject-க்குப் போகிறீர்களா, இல்லையா? திரும்பத் திரும்ப நான் சொல்கிறேன் இல்லையா? அடுத்த subject-க்குப் போங்கள். நேரம் ஆகிவிட்டது. இன்றைக்கு கில்லட்டின் நேரம் இருக்கிறது.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: எனவே, அவர்களுக்கு எந்தவிதமான பங்கும் அதிலே இல்லை என்பதை விசாரணைக் கமிஷன் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அப்படி இருக்கின்றபோது, முதலமைச்சர் அவர்கள் இதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு, பத்திரிகைகள் வாயிலாக வருவது--இன்றைக்குச் சொன்னார்களே, நேற்றையதினம் வட மாநிலங்களிலே எப்படி நம்முடைய ஒற்றுமை இருக்கிறது, டெல்லியிலே எப்படி ஒற்றுமை இருக்கிறது என்று சொல்கிறபோது--எதிர்க்கட்சியை எப்படிப் பழி வாங்கிக்கொண்டிருக்கிறார் என்பதை நாடு இன்றைக்குத் தெரிந்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தலைவிக்கும், அதற்கும் தொடர்பு இல்லை என்கிறார். அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. திரு. வி.என். சுதாகரன் என்பவர் யார்? ** அதைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், வேறு subject-க்குப் போங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

பிற்பகல் 12-15

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணைக் கமிஷனே முடிந்துவிட்டது. அம்மாவிற்கும், அதற்கும் சம்பந்தமில்லை. யாரைப் பற்றியும் எங்களுக்குக் கவலையில்லை. அம்மா அவர்கள் புடம் போட்ட தங்கம். அதில் அவர்களுக்கும், அவருக்கும் சம்பந்தமில்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கமிஷன் ரிப்போர்ட்டில் இருக்கிறது. அந்த செல்வாக்கை, அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தித்தான் அன்றைக்கு அவர்கள் பெயரில் வாங்கியிருக்கிறார்கள். அதை ஒத்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாம் இருக்கட்டும். திரு. கே.ஏ. செங்கோட்டையன், அடுத்த subject-க்குச் செல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறீர்களா, இல்லையா? அவர் குற்றவாளி இல்லை. அவருக்கும், அதற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னதற்குப் பிறகு, செய்தித் துறை அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே அவர்கள் யார் என்று கேட்கிறார்கள். அவர்கள் யாராக இருந்தாலும் நீங்கள் தண்டியுங்கள். அதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. அம்மாவைப் பொறுத்த வரையிலும் அதிலே எந்தவிதமான பங்குமில்லை என்பதைத்தான் நாங்கள் இங்கே வலியுறுத்துகின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் இன்றைக்கு அறிவிக்கப்பட்ட விவாதங்கள் முடிந்து 1½ மணிக்குள்ளாக பல்வேறு சட்டமுன்வடிவுகள் எடுத்து நிறைவேற்றப்பட வேண்டும், எனவே, இந்தப் பிரச்சினைகளிலே நேரத்தைக் கடத்துவது நியாயம்

அல்ல. அதைவிட முக்கியமாக, அந்த நீதிபதி தந்த தீர்ப்பைப் பற்றி யாரேனும் வாதிக்க வேண்டுமென்றால், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அதனோடு தொடர்புடைய பிரச்சினை, தொடர்பு இல்லாத பிரச்சினை அல்ல. வெளியிலே பேசப்பட்ட பேச்சுக்கள் எல்லாம் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. இன்னும் சொல்லப் போனால், நான் உண்மையாகவே பத்திரிகையில் படித்ததைச் சொல்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நிருபர்கள் கேட்கிறார்கள், "நீங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளப் போகிறீர்களே, எங்கே எடுத்துக்கொள்ளப் போகிறீர்கள், அந்த சிறுதாவூர் பங்களாவிலா?" என்று இந்த இடத்தைச் சொல்கிறார்கள். "இந்த இடம் உங்களுடைய இடமா?" என்று கேட்கிறார்கள். "அது யாருடைய இடம் என்று எனக்குத் தெரியாது. ஆனால் நான் ஓய்வு எடுத்துக்கொள்ளப் போகிறேன்." என்கிறார். "எவ்வளவு வாடகை கொடுக்கிறீர்கள்?" என்று கேட்கிறார்கள். "அதுவும் எனக்குத் தெரியாது." என்கிறார். ஏதோ அரசாங்கம் அந்த இடத்தை வாடகைக்கு எடுத்து அந்த அம்மையாருக்குத் தருவதைப்போல ஒரு கருத்து அந்தப் பத்திரிகையில் வந்தது. ஆக, அம்மையார் சொன்ன பதிலில், அவர் நான் அங்கு போகவில்லையென்று சொல்லவில்லை, ஓய்வெடுக்கவில்லையென்று சொல்லவில்லை, அந்த இடத்தோடு தொடர்பு இல்லையென்று சொல்லவில்லை, ஆனால் அந்தத் தொடர்பு என்ன தொடர்பு என்பதை நான் கேட்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேறு subject-க்குச் செல்லுங்கள் அல்லது உரையை முடித்துவிடுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு என்ன time? இரண்டு நாட்களுக்கு முன்னாலே முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, தேனியில் ஒரு இடத்திலே நான் தங்கினேன். எனக்கும், அதற்கும் சம்பந்தமில்லை என்று அன்றைக்குக் கோடிட்டுக் காட்டி, குழந்தைவேலு அவர்கள் குற்றம் சாட்டினார் என்று சொன்னாரே, அதைப்போல அம்மாவுக்கும், அவர்களுக்கும் அது சம்பந்தமில்லை. அதைத்தான் நாங்கள் இங்கே வலியுறுத்துகிறோம். நீங்கள் எப்படி அன்றைக்குச் சொன்னீர்களோ, அதேநிலைதான் எங்களுக்கும். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீதிமன்றத்தில் போய்ச் சொல்லுங்களேன். இங்கே ஏன் சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள்? மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்வதற்காகச் சொல்கிறேன். அம்மாவுக்கும், அதற்கும் சம்பந்தமில்லையென்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். எங்களுக்கு எந்த மறுப்பும் கிடையாது. ஆனால், அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆதி திராவிடர் பஞ்சமி நிலம் வாங்கப்பட்டிருக்கிறது என்ற கருத்து அந்த அறிக்கையிலே இருக்குமானால், அந்த அதிகாரம் எங்கே இருக்கிற அதிகாரம் என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரத்தைப் பயன்படுத்தியதாக கமிஷனில் இருக்குமானால், அதிகாரத்தைப் பயன்படுத்தியவர்கள்மீது நடவடிக்கை எடுங்கள். எங்களுக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் நீங்கள் சொல்கிற குற்றச்சாட்டுகளைப் பார்க்கிறபோது, நீங்கள் எங்கே சுற்றி வருகிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார்மீது நடவடிக்கை எடுப்பதாக இந்த அரசாங்கம் எப்பொழுதும் சொல்லவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி. (குறுக்கீடு)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: இந்தக் கருத்து எதிர்க்கட்சியின் சார்பாகச் சொல்லப்படுகிறது. நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, எந்த வழக்காக இருந்தாலும், உச்ச நீதிமன்றத்திற்குப் போனாலும், விடுதலையே கிடைத்தாலும், அந்த விடுதலையைத் தருகிறபோது அதில் எழுதப்படுகின்ற வாசகங்கள் என்னவெனில் விடுதலைதான், ஆனால், குற்றச்சாட்டோடுகூடிய விடுதலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வேறு subject-க்குச் செல்லுங்கள். எனக்கு நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைக்கெல்லாம் காரணமானவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவர்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்ற கருத்தை அவர்களிடம் கேட்க வேண்டும் இங்கே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

பிற்பகல் 12-20

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுதாவூர் நிலப் பிரச்சினையில் பாதிக்கப்பட்ட அந்த 20 தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த அந்த விவசாயிகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியிடம் புகார் கொடுத்ததன் அடிப்படையில் அதைத்தான் அரசுக்குக் கொடுத்து, அரசால் விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டு, அதனுடைய விவரங்கள் எல்லாம் நேற்று அறிக்கையிலே கொடுக்கப்பட்டது. ஆகவே, அரசுத் தரப்பிலேயிலிருந்து அந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டுதான் அது முன் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை மீண்டும் ஒரு விவாதப் பொருளாக ஆக்க வேண்டியதில்லை. அரசு அந்த இடத்தைக் கைப்பற்றி நிலமற்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பதுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய வேண்டுகோள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இது குறித்து மீண்டும், மீண்டும் விவாதத்திற்குள் செல்ல வேண்டாம் என்று நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள். (குறுக்கீடு) வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசுகிறபோது, நீதிமன்றத்திலே விடுதலையாகலாம், அதற்கு என்னவெல்லாம் பதில் சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். உங்களைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு நீதிமன்றங்களிலே கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. உங்கள் இயக்கத்தைப் பற்றியும், ** அதையெல்லாம் நாங்கள் சொல்ல விரும்பவில்லை. (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் சொன்ன ** பற்றிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அது என் இஷ்டம். (குறுக்கீடுகள்) அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே வார்த்தை சொல்லி முடித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** எங்களைப் பற்றிச் சொல்லியிருப்பதாகச் சொல்லப்படுகிற செய்திகளைப் பற்றிய முழு விவரம் தெரிந்துதான் அந்தச் செய்தி எவ்வளவு அவதூறான கருத்து என்பதை நாட்டுக்கு எங்களால் தெரிவிக்க முடிந்து, தெரிவித்திருக்கிறோம். அதைவிட ** அதிகாரி சொன்னது இருக்கட்டும். ** கடந்த காலத்தில் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள் என்ன சொன்னார்? அவரைக் கேட்டபோது, “இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு என்னிடத்திலே எந்த ஆதாரமும் இல்லை, ஒருவர் சொன்ன செய்தியைத்தான் நான் சொன்னேனே தவிர, எனக்கு எந்த ஆதாரமும் இல்லை என்று அவரே ** தெரிவித்தார்”. ஆகவே, எம்.ஜி.ஆரைவிட ** அதிகாரி சொன்னதுதான் உண்மை என்று கருதுவதாக இருந்தால், எம்.ஜி.ஆரைவிட ** அவரை மதிப்பவர்கள் தாராளமாக மதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள், திரு. ஓ. பன்னீர்செல்வம். (குறுக்கீடுகள்) ஒன்று, நீங்கள் பேசுங்கள் அல்லது அவரைப் பேச விடுங்கள். இரண்டு பேரும் எழுந்து, எழுந்து உட்கார்ந்தீர்கள் என்றால் எப்படி?

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நேரம் இருக்கிறது அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நீதிபதி சிவசுப்பிரமணியனுடைய விசாரணைக் கமிஷனுடைய ரிப்போர்ட்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் குற்றமற்றவர் என்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கின்றது. அதாவது, அம்மா மீது அவதூறாகச் சொன்னார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. அவர்கள் ** என்று அவர் சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், பேசுங்கள். (குறுக்கீடு) உரை முடிந்ததா? திரு. சுதர்சனம், பேசுங்கள்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இங்கே தெளிவான ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள், சிறுதாவூர் நிலத்தைப் பற்றி நான் அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். அந்த சிறுதாவூர் நிலத்தைப் பற்றி அரசுக்கு மனுச் செய்தது இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியினுடைய அன்றைய பொதுச் செயலாளர் திரு. வரதராஜன் அவர்கள். அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்த நிலத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சட்டமன்றத்திலே சொல்கிறார்கள். அதுகுறித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் என்ன சொல்கிறார்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி. (குறுக்கீடு) திரு. நன்மாறன், சொல்லுங்கள்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேரவைக்கு ஒரு தலைவர் இருப்பதாகத்தான் நாங்கள் அறிகிறோம். இடையிலேயே ஒரு உப தலைவர் உங்கள் அனுமதியோடு எழுந்து, எழுந்து புதிய, புதிய வடிவத்தில் திருப்புவது எந்த அளவிற்குப் பொருத்தமாக இருக்கும் என்பது தெரியவில்லை. ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல தீர்ப்பைத் தந்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் நாம் நடந்துகொள்வது, இன்றைய நோக்கங்கள் நிறைவேறுவதற்கு உதவி செய்யும் என்று கருதுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய பதிலுரை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை அறிவிப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-25

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டு இந்தப் பேரவையிலே தலைவராக இருந்த தமிழறிஞரும், என்னுடைய அருமைத் தம்பிகளில் ஒருவருமான மறைந்த காளிமுத்து அவர்கள் இங்கே ஒரு ஆணையை வெளியிட்டார். அவர் அப்போது இங்கே என்ன சொன்னார் என்றால், அவையிலே குழப்பம் ஏற்பட்டபோது, வெளியேற்றப்பட்டவர்கள் வெளியே சென்று பேட்டி கொடுப்பது--அமைச்சர்களை அவதூறாகப் பேசுவது--இவைகளைப் பற்றிச் சொன்னார். அவர் சொன்ன வாசகத்தை அப்படியே சொல்கிறேன்.

"இங்கேயிருந்து புறப்பட்டுப் போனவர்கள் லாபியிலே நிருபர்களுக்குப் பேட்டி அளித்துக்கொண்டு, அங்கேயே Press Conference நடத்திக்கொண்டிருப்பதைப் போலத் தகவல் வருகிறது. இது உண்மையாக இருக்குமேயானால், அதைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி நடைபெறுமேயானால், அவைக் காவலர்கள் உடனடியாக அந்தத் தலைவர்களை, கட்சித் தலைவர்களை உடனடியாக அங்கேயிருந்து வெளியேற்ற வேண்டும் என்று நான் ஆணையிடுகிறேன். அதேபோல, பத்திரிகையாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன், பத்திரிகை நிருபர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன், அவையிலிருந்து வெளியேறிய, வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவது பேட்டியளித்தால், சட்டமன்ற வளாகத்திற்குள்ளே அவர்களுடைய பேட்டிகள் எதையும் பதிவு செய்யக்கூடாது, அப்படிப் பதிவு செய்யக்கூடிய பத்திரிகை நிருபர்கள் பிறகு இங்கே உள்ளே அனுமதிக்கப்பட மாட்டார்கள். அந்த அளவிற்கு நிலைமை வரும் என்பதை எச்சரிக்கையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று அன்றைய பேரவைத் தலைவர் காளிமுத்து அவர்கள் ஒரு அச்சுறுத்தலை வெளியிட்டார், இந்த அவையில், கடந்த அவையில்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், வெளியிலே செல்கின்றவர்கள் இப்போதுகூட, சில நேரத்திற்கு முன்பு வெளியிலே சென்றவர்கள், என்னைப் பற்றியும், தங்களைப் பற்றியும் "ஒழிக" கோஷம் போட்டது மாத்திரமல்ல, மிகுந்த கேவலமான வார்த்தைகளையெல்லாம் சொல்லி, ஒரு முதலமைச்சரைப் பற்றி எந்த அளவிற்குத் தங்களது ஆத்திரத்தைக் காட்ட வேண்டுமோ, அந்த அளவிற்கு ஆத்திரத்தைக் காட்டி கோஷம் போட்டிருக்கிறார்கள். நான் அதற்கெல்லாம் கவலைப்படவில்லை. நான் கவலைப்படுவது, decorum—அவையினுடைய மொத்தப் பண்பாடு; இதற்கென்று இருக்கின்ற ஒரு அமைப்பு ரீதியான அங்கீகாரம் சூறையாடப்படுகிறதே என்பதுதான். அதனால்தான், அந்தக் காலத்திலே காளிமுத்து அவைத் தலைவராக இருந்தபோது எடுத்துச் சொன்ன அந்த அச்சுறுத்தலை இங்கே நான் வெளியிட விரும்பினேன். தயவுசெய்து அதைப் பின்பற்றி தாங்கள் நடந்துகொள்ள வேண்டும் என்று அவைத் தலைவராகிய தங்களையும், இந்த அவையிலே உள்ள கட்சித் தலைவர்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எடுத்து வைக்கப்பட்ட மானியக் கோரிக்கைகள், பொதுத் துறை, தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை), மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றம் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகிய இந்தத் துறைகளைப் பற்றி இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. மகேந்திரன், திரு. எம். அன்பழகன், முனைவர் கு. ஜெயக்குமார், திரு. மு.க. பெரியசாமி, செல்வி கே. பாலபாரதி, திரு. எஸ். இராசசேகரன், டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. து. ரவிக்குமார், திரு. எம்.பி. சுடலையாண்டி, திரு. கே.ஏ. செங்கோட்டையன், இடையிலே point of order என்ற முறையில் திரு. சி. ஞானசேகரன் ஆகிய அவ்வளவு பேரும் இதிலே கலந்துகொண்டு உரையாற்றியிருக்கிறார்கள். உரையாற்றியவர்களுக்கெல்லாம் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, இன்று பல்வேறு

தலைப்புகளில் வெவ்வேறு செய்திகளை எடுத்துப் பேச வேண்டிய ஒரு நிலையில், ஏராளமான வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கியிருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களில் சொல்லப்பட்டிருக்கின்ற கருத்துக்களைப் பற்றி அரசினுடைய நிலையை விளக்கி, அந்தத் துறையைச் சார்ந்த செயலாளர்கள் எனக்கு அதற்குரிய பதில்களையெல்லாம் வழங்கியிருக்கிறார்கள். வெட்டுத் தீர்மானங்களினுடைய பதில்களையெல்லாம் இங்கே சொல்வது என்று சொன்னால், இன்றைக்கு இந்த அவை 1½ மணிக்குள்ளாக நிறைவு செய்ய வேண்டியுள்ள கடமையை 'கில்லட்டின்' என்ற அடிப்படையிலே நிறைவேற்ற முடியாமல் போகும். ஆனால், ஒன்றிரண்டு செய்திகளை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 12-30

இங்கே பேசிய திரு. மகேந்திரன் அவர்கள், இன்றைக்கு கோவையிலே நடைபெறவிருக்கின்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, ஏதோ முறையற்ற ஒரு காரியத்தைப் போலவும், நடைபெறக்கூடாத ஒரு காரியத்தைப் போலவும், இது தமிழுக்கும், தமிழருக்கும் கேடு பயக்கின்ற ஒன்றாகத்தான் அமையும் என்றும் அவர் பேசினார். ஒருவேளை அவருக்குக் கடந்த காலத்திலே நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடுகளால் அவர் பெற்ற அனுபவத்தைத்தான் சொன்னாரோ என்றுதான் நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்துகின்றவர், அதற்குப் பொறுப்பேற்றிருக்கின்ற முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உலகத் தமிழறிஞராக இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றவர். (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்தின் எந்தப் பகுதியிலிருந்து வருகின்ற அறிஞராக இருந்தாலும்; புலவராக இருந்தாலும்; தமிழ் எழுத்தாளராக இருந்தாலும்; கலைத் துறையைச் சார்ந்தவராக இருந்தாலும், "தமிழகத்திலே உள்ள கலைஞர் அளவுக்கு நீண்ட அனுபவம் பெற்ற இன்னொருவர் இந்தத் துறைகளுக்கு உரியவராக இல்லை" என்ற கருத்தை எங்களிடம் தெரிவித்துள்ளனர். அதைப் பல முறை கேட்டிருக்கிறோம். எனவே, அவர் நடத்துகின்ற மாநாடு என்பதுகூட அல்ல, இந்த மாநாட்டுக்கு ஏறக்குறைய 500 பேர்களுக்கு மேற்பட்ட மேல்நாட்டு அறிஞர்கள் வரவிருக்கிறார்கள். பல துறை சார்ந்த அறிஞர்கள் அவர்கள், அத்தனை பேர்களும் தமிழிலே பெரும் புலவர்களாக இருக்கத் தேவையில்லை. தமிழை

அறிந்தவர்கள். அதேபோல, தமிழ்நாட்டிலே இருந்தும், இந்தியாவின் பல பகுதிகளிலே இருந்தும் ஏறக்குறைய குறைந்தது 5 ஆயிரம் பேர்களுக்கு மேற்பட்டவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கிறார்கள். அவ்வளவு பேரும் கலந்துகொள்ளும் மாநாட்டில், பல்வேறு பொருள் பற்றிய ஆய்வரங்கங்களிலே பங்குபெற உள்ளனர். குறிப்பிட்ட பொருள் பற்றிய கருத்துக்களைக் கட்டுரைகளாகத் தந்து, பின்னர் அறிஞர்களால் ஏற்கப்பட்டு, அந்தக் கருத்துக்களெல்லாம் விவாதிக்கப்பட இருக்கின்றன. ஆகவே, இந்த மாநாடு எல்லா வகையிலும் தமிழுக்கு ஆக்கம் தருகின்ற மாநாடாகத்தான் இருக்கும். உலகத் தமிழ் மாநாட்டை எந்த வரிசையிலே நடத்துகிறீர்கள் என்றும் அவர் கேட்டார். இந்த வரிசையை நாங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு என்ற முதல் வரிசையிலே இந்த மாநாடு நடைபெறுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இதற்கு முன்பு எத்தனை மாநாடுகள் நடைபெற்றிருந்தாலும், அவற்றை நாங்கள் மதிக்கிறோம்; பாராட்டுகிறோம், அது வேறு. ஆனால் இந்த மாநாடு, செம்மொழி என்று அறிவிக்கப்பட்ட அடிப்படையில், உலகத்திற்குத் தமிழ் மொழியின் தகுதியை எடுத்துக்காட்டுகின்ற ஒரு மாநாடாக இந்த மாநாடு நடைபெறவிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்த மாநாடு குறித்து இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன் பேசும்போது, இந்த மாநாட்டின் பெருமை பற்றி நீண்ட நேரம் பேசினார். குறிப்பாக, தமிழ் மொழி, செம்மொழி என்று எந்தக் காலத்திலிருந்து எடுத்துச் சொல்லப்பட்டது என்பதை, அதற்கான ஆய்வு குறித்த அரங்குகளிலே பேசக்கூடிய அந்தக் கருத்தை, டாக்டர் கால்டுவெல்லிலிருந்து தொடங்கி, யார் யார் அதற்குப் பாடுபட்டார்கள் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லி, இன்றைக்கு அது இன்றைய முதலமைச்சருடைய முயற்சியால் மத்திய அரசு ஏற்று அங்கீகரித்தது என்று சொன்னார்கள். ஓர் உண்மை என்னவென்றால், இதைச் செம்மொழி என்பதிலே ஏன் பெருமை கொள்கிறோம் என்றால், என்றைக்கும் உள்ள தமிழ் மொழிதான் இன்றைக்கும் இருக்கிறது. தமிழ் மொழியிலே பெரிய மாற்றமில்லை. ஆனால், செம்மொழி என்பதனாலே என்ன பெரிய மாற்றம் பெறப்பட்டது என்றால், அதை நீச மொழி என்று சொன்னவர்களுக்கு, தகுதியற்ற மொழி என்று சொன்னவர்களுக்கு, அது இழிந்த சாதியினருடைய மொழி என்று சொன்னவர்களுக்கு,

அது இழிந்தவர்களுடைய மொழியல்ல; தாழ்ந்த மொழியல்ல என்று ஜி.யு. போப் சொன்னதைப்போல, தமிழ் உயர்ந்தவர்களுடைய மொழிதான், தகுந்த மொழிதான் (மேசையைத் தட்டும் ஒலி) 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று உலகத்தவர்க்கெல்லாம் அறிவித்த மொழிதான் அது; திருவள்ளுவனைத் தந்த மொழிதான் அது என்று அறிவிக்கின்ற முறையில் அமையும் அந்தச் செம்மொழி என்ற அறிவிப்புக்காகவே இந்தக் கோவை மாநாடு கூடுகிறது. அதற்கான பல பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அதேபோல, இங்கே பேசிய வேறு பல நண்பர்கள் திரும்பத் திரும்ப அந்த மாநாட்டைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கெல்லாம் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி பேசும்போது, 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்று சொன்னார். இன்றைக்கு அதற்கான பணிகள் முழு அளவிலே நடைபெறவில்லை என்ற கருத்தை ஒரு வகையிலே சொன்னார். ஆட்சியிலே எல்லாத் துறைகளிலும் தமிழ் இடம் பெறவில்லை என்று சொன்னார். நான் இங்கே சான்றுகளோடு சொல்ல முடியும். அரசு பல நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு துறைக்கும், உங்களுடைய கோப்புகள் தமிழிலேயேதான் வரவேண்டுமென்றும், தமிழிலேயேதான் கையெழுத்திட வேண்டுமென்றும் அறிவுறுத்தியவாறு அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகிறது. நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் சில கோப்புகளில் ஏற்கெனவே வெளியிட்ட கருத்துக்களைத் திரும்ப எடுத்துக் காட்டுகின்ற அடிப்படையில் இடையிடையே ஆங்கிலம் இடம் பெற்றாலும்கூட, தமிழிலேதான் கோப்பின் முடிவான அந்தக் கருத்து, எங்களிடத்திலே கையெழுத்துக்கு வரவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் சொல்லப் போனால், இன்றைக்கு இருக்கின்ற தலைமைச் செயலாளர் அவர்கள் மூலமாக எல்லாத் துறைகளும் தமிழிலேதான் கோப்புகளை வரையவேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-35

இங்கே செல்வி கே. பாலபாரதி பேசுகிறபோது, மகளிருக்கு உரிமை தரவேண்டும், அதுவும் இந்த அவையிலேயே மகளிருக்கு அதிக இடம் தரவேண்டுமென்று சொன்னார்கள். அது

எதிர்காலத்திலே நாடாளுமன்றத்திலே அதற்குரிய சட்டம் நிறைவேறுமானால், விகிதாச்சார அடிப்படையிலே மகளிருக்கு இட ஒதுக்கீடு செய்கிறபோது, இந்த அவையிலேயே அவர்களின் எண்ணிக்கை மிகுதியாக அமைவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதைவிட, கடந்த காலத்திலேயே இந்த அரசு உள்ளாட்சி மன்றத் தேர்தல்களிலே மகளிருக்கு 100-க்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கி, தமிழ்நாட்டிலே உள்ள 6 மேயர்களில் 2 மேயர்கள் மகளிராகத்தான் வரமுடியும் என்ற நிலைமையை உருவாக்கி, 100-க்கு மேற்பட்ட நகராட்சி மன்றங்களிலே மூன்றில் ஒரு பங்கு நகராட்சி மன்றத் தலைவர்கள் மகளிராக வரக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி, மகளிருக்கு உரிமை வழங்கியிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், தந்தை பெரியாருடைய உணர்வைப் பிரதிபலிக்கின்ற முறையில் கலைஞர் அவர்கள் மகளிருக்கான தனி இடங்களை மேலும் வளர்ப்பதற்கு எல்லா வகையிலும், வாய்ப்புள்ள நேரத்தில் எல்லாம் வழி செய்வார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதைப்போல, இங்கே பேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் நிதிநிலை அறிக்கை சிறப்பாக வெளி வந்திருப்பதைப் பாராட்டிவிட்டு, பல கருத்துகளை எடுத்துச் சொல்லி, தமிழ்நாட்டிலே ஓராண்டு காலத்திலே மின்சாரப் பற்றாக்குறையை நீக்கவேண்டுமானால், இவ்வளவு மின்சாரம் தேவை, அந்தத் தேவைப்படுகிற மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான மின் நிலையங்களை ஏற்படுத்த வேண்டுமானால், உற்பத்தி நிலையங்களுக்கு ரூபாய் 16,000 கோடி தேவை, அந்த நிதிக்கு என்ன வழி செய்வீர்கள் என்று ஒரு கருத்தைக் கேட்டார்கள்.

இப்படிப்பட்ட நிதிக்கு வழி செய்வதற்குத் தமிழக அரசுக்குத் திறமையிருக்கிறது. என்ன திறமை என்றால், தமிழக அரசு அகில உலக நம்பிக்கையைப் பெற்ற ஓர் அரசாக, மிகப் பெரிய வணிக நிலையங்கள் நம்பிக்கை வைக்கிற ஓர் அரசாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 16,000 கோடியையும் கடனாகத் திரட்டக்கூடிய வாய்ப்பு நமக்கு இருக்கிறது. எவ்வளவு தேவைப்படுகிறதோ, நிச்சயமாக அத்தொகையைக் கடனாகப் பெற்றாவது மின்சார உற்பத்தியை இந்த அரசு நிறைவேற்றும்.

நான் மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்ல வேண்டுமானால், இன்று வரையில் தமிழக அரசு எவ்வளவு கடன் திரட்டலாமோ,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY SATYAMEVA JAYATE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அதைவிடக் குறைவாகத்தான் கடன் திரட்டியிருக்கிறது. 15 விழுக்காடு திரட்டலாம் என்றால் 12 விழுக்காடுதான் திரட்டியிருக்கிறோம். மொத்தத்தில் 25 விழுக்காடு கடன் இருக்கலாம் என்றால், 20 விழுக்காட்டைக்கூட நாம் எட்டவில்லை. ஆக அப்படியே அந்தப் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. நான் அதைப் படித்துக் காட்டுவதாக இருந்தால் சற்று நேரமாகும். இருந்தாலும் சொல்ல விரும்புகிறேன்.

உலகம் முழுவதிலும் அரசுகள் நிதிப் பற்றாக்குறையைச் சந்தித்து வருகின்றன. ஆனால், அரசின் சொந்த நிதி ஆதாரங்கள் தேவையான அளவிற்குப் பெருகும் வரை மக்களுக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் நலத் திட்டங்களைச் செயல்படுத்தாமல் ஒத்திப் போடமுடியாது. போதுமான சொந்த நிதி ஆதாரங்களை எதிர்நோக்கி, அரசு ஒரு திட்டத்தைச் செயல்படுத்தாமல் காத்திருந்து, பின்னர் நிதி ஆதாரம் கிடைத்து, அந்தத் திட்டத்தினைச் செயல்படுத்தும்போது செலவினம் பல மடங்கு உயர்ந்துவிடும். எனவே, இதனைக் காட்டிலும் கடன் பெற்று அப்பணியினை முன்னதாகவே செய்து முடிப்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை என்று சொல்ல விரும்புகின்றேன். மேலும், தமிழ்நாட்டு அரசின் மொத்தக் கடன் பொறுப்பு 2009-2010 ஆம் ஆண்டு இறுதியில் 89,149 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் பிற மாநிலங்களில் மத்திய அரசின் கடன் பொறுப்பு மற்றும் தனி நபர் கடன் பொறுப்பு கீழ்க்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது: அதன்படி மகாராஷ்டிராவிலே அதை விவரித்து இருக்கிறார்கள்.

நாம் இங்கே ரூபாய் 89,149 கோடி கடன் வைத்திருக்கிறோம் என்றால், மகாராஷ்டிரா-ரூபாய் 1,79,727 கோடி. ஆந்திரப் பிரதேசம்-ரூபாய் 1,09,757 கோடி, கர்நாடகா-ரூபாய் 79,644 கோடி, கேரளா-ரூபாய் 70,017 கோடி, தமிழ்நாடு-ரூபாய் 89,149 கோடி மட்டுமே.

இந்தியாவினுடைய, மைய அரசினுடைய கடன் மொத்தம் ரூபாய் 35,15,606 கோடி. இதில் தமிழ்நாட்டு மக்கள் தலைமீது ஏற்றப்பட்டுள்ள கடன் சுமை மிகுதி என்றெல்லாம் அறிக்கை வந்திருக்கிறது. அதற்காகச் சொல்கிறேன், தமிழ்நாட்டில் இந்தக் கடன் காரணமாக சராசரி ஒருவருக்கு 14,353 ரூபாய்தான் per capita கடன். ஆனால், மகாராஷ்டிராவில்-18,576 ரூபாய்,

ஆந்திராவில்-14,494 ரூபாய், கர்நாடகத்தில்-15,103 ரூபாய், கேரளாவில்-21,991 ரூபாய். மத்திய அரசினுடைய மொத்தக் கடனை வைத்துப் பார்த்தால் per capita கடன் ரூபாய் 34,231. ஆக, இவற்றிலே மிகக் குறைந்த per capita கடன் உள்ள மாநிலம் தமிழ்நாடு. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, கடன் பெறுவதற்கான தகுதி நமக்கிருக்கிறது. பெற வேண்டிய அவசியம், குறிப்பாக இப்படிப்பட்ட 16 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்ய வேண்டிய நிலையில். அந்தத் திட்டங்களை அரசு ஒருவேளை தனியாரிடத்திலே முழுவதும் ஒப்படைக்காமல் இணைந்து செய்வதாக இருந்தால் அந்தக் கடனைத் திரட்டிச் செய்யக்கூடிய வாய்ப்பு நிறைவாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-40

அதேபோல, நமக்கு இந்தக் கடனுக்காக ஆகிற வட்டி 2010-2011 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, நமது மாநிலத்தின் வட்டிச் செலவினம் மொத்த வருவாய் வரவுகளில் 12 விழுக்காடேயாகும். மத்திய அரசின் கடன் தொகுப்பு மற்றும் கடன் நிவாரணத் திட்ட வழிகாட்டுதல்களின்படி 15 விழுக்காடு உச்ச வரம்பு வரை உகந்தது. மத்திய அரசே அறிவித்தது 15 விழுக்காடு. நாம் 12 விழுக்காடுதான் வட்டிச் செலவினத்திற்காக இப்பொழுது செலுத்திக் கொண்டிருக்கிறோம். எனவே, எல்லா வகையிலேயும் தமிழகத்தினுடைய பொருளாதாரம் இதை நிறைவேற்றவல்லதாகத்தான் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, இங்கே நண்பர் திரு. இராசசேகரன் அவர்கள் பேசுகிறபோது, பெங்களூருவிலே தமிழ்நாட்டைச் சேர்ந்த, இந்த நாட்டுப் பகுதியிலேயிருந்து எடுத்துச் செல்லப்பட்ட கல்வெட்டுகள், 50 ஆயிரம் கல்வெட்டுகள் அங்கே இருக்கின்றன; அவையெல்லாம் தமிழிலே உள்ள கல்வெட்டுகள்; அவை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்பட வேண்டும்; அவை அச்சிட்டு வெளியிடப்பட வேண்டும் என்ற கருத்துகளை இங்கே பேசினார்கள். அந்த முயற்சியை ஏற்கெனவே தமிழக அரசு எடுத்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு அந்தத் தொல்லியல் துறை சார்பான பொறுப்பிலே உள்ள அமைச்சருக்கு எழுதி, அது பிரதமருக்குக்கூடத் தெரிவிக்கப்பட்டு, அந்தக் கல்வெட்டுகளைத் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அந்தக் கல்வெட்டுகள் வருமானால், அந்தக் கல்வெட்டுகளை எல்லாம்

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகமே ஏற்று, அவற்றை எல்லாம் படியெடுத்து, அதன்மூலமாக வெளியிடுவதற்கான நடவடிக்கையிலே ஈடுபடுவதற்குத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் முன் வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதைப்போல, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குப் போதுமான மானியம் கொடுக்க வேண்டுமென்ற கருத்திலே இங்கே திரு. ரவிக்குமார் அவர்கள் பேசினார்கள். அந்தப் பல்கலைக்கழகத்திற்கு கடந்த ஆண்டிலே 3 கோடி ரூபாய் அளவுக்கு வழங்கியிருக்கிறோம். இன்னும் மேலும் பல துறைகளுக்கு வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்கள். ஆராய்ச்சி நடத்துகிறபோதோ அல்லது ஒரு புதிய திட்டம் வருகிறபோதோ, அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் என்று பல்கலைக்கழகம் அரசுக்குத் தெரிவித்து, அந்தத் திட்டம் ஏற்கப்பட்டால், அந்தத் திட்டத்தினுடைய அடிப்படையிலேதான் நிதி தரமுடியும். இல்லையென்றால், அங்கே பணியாற்றுகிறவர்களுக்கு ஊதியம் என்ற அடிப்படையிலே தருவதற்கு ஏற்கெனவே உள்ள ஏற்பாட்டு முறைப்படி ஆண்டுதோறும் தரப்படுகின்ற அந்த நிதிதான் வழங்கமுடியும். சிறப்பு நிதி வழங்குவதாக இருந்தால், சிறப்பான திட்டம் எதைத் தெரிவித்தாலும், அது ஆராயப்பட்டு, அது அந்தப் பல்கலைக்கழகத்திலே நடைபெற வேண்டும் என்று தீர்மானித்தால், நிச்சயமாக அவர்களுக்கு அதற்கான நிதி ஆதரவு தரப்படும், உரிய நிதி வழங்கப்படும் என்று நான் திரு. ரவிக்குமார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, இங்கே திரு. சுடலையாண்டி அவர்கள் பேசினார்கள், திரு. செங்கோட்டையன் அவர்கள் பேசினார்கள், இன்னும் பல நண்பர்கள் பேசினார்கள். குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஒட்டுமொத்தக் கோரிக்கைகளை எல்லாம் ஏற்று நிறைவேற்ற வேண்டும் என்றார்கள். இந்த ஒரு கோரிக்கையிலேதான் ஒட்டுமொத்தமாக இருக்கிறீர்களே தவிர, வேறு எதிலேயும் அத்தனை பேரும் ஒன்றாக இருக்கிறோம் என்று வேறு நேரத்திலே சொல்லக்கூடிய வாய்ப்பு இருந்தால் நான் மகிழ்ச்சி அடைவேன். கேட்கிறபோது ஒன்றாக இருப்பது, கிடைத்த உடனே பங்கு போடுகிறபோது பிரிந்துவிடுவது என்பது போன்ற ஒரு சூழ்நிலையினுடைய தாக்கம் நம்மிடத்தில் இருக்கிறது.

இருந்தாலும்கூட, இங்கே பல பிரச்சினைகளை வலியுறுத்துகிறபோது எல்லாவற்றையும் அரசு உடனே ஏற்றுக்கொண்டு செய்யக்கூடிய நிலை இல்லை. இல்லையானால், கோரிக்கை என்றும், அந்தக் கோரிக்கை ஆய்வு செய்யப்படுகிறது என்றும், பரிசீலிக்கப்படுகிறது என்றும் சொல்வதற்கு அர்த்தம் இல்லை. கோரிக்கை என்று சொல்வதற்கு அர்த்தம் இல்லை. கோரிக்கை என்றால், முடிந்தால் ஏற்றுக்கொள்வதற்குப் பெயர்தான் கோரிக்கை. முடிந்தால் ஏற்றுக்கொள்ளாமல், எப்படி இருந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றால் அது உத்தரவு. நீங்கள் கோரிக்கை வைக்கிற இடத்திலே இருக்கிறீர்கள்; நாங்கள் ஆய்வு செய்கிற இடத்திலே இருக்கிறோம். நிலைமை இடம் தருமானால், உங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதிலே மகிழ்ச்சி அடைவோம். காரணம், உங்களைப்போல நாங்களும் உறுப்பினர் என்ற உரிமையும் உடையவர்கள், ஆனால் இங்கே அவர்கள் சொன்ன அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்தி 2½ கோடி ரூபாய் வரையிலே கேட்டார்கள். ஏன் அதைவிட ஏலம் போட்டால் 3 கோடி ரூபாய் அளவுகூடக் கேட்பார்கள். (சிரிப்பு) திரு. ஞானசேகரனைவிட நான் இன்னும் நன்றாக உறுப்பினர்களுக்காக வாதாடுகிறேன் என்று சொல்லி இன்னோர் உறுப்பினர் விரும்பினால், அவர் 3 கோடி ரூபாய்கூடக் கேட்கலாம். ஆனால் நிலைமை அதற்கெல்லாம் இப்பொழுது இடம் தராத காரணத்தால், ஏற்கெனவே இந்த அரசு மத்திய அரசு வழங்குகிற நிதியை அதே ஊதியத்தை, அந்த அளவு ஊதியத்தை, அதேபோல அகவிலைப் படியை, இவற்றையெல்லாம் அவர்கள் எந்தத் தேதியிலிருந்து தருகிறார்களோ, அந்தத் தேதியிலிருந்து தருவதனை ஒரு கொள்கை அடிப்படையிலே ஏற்றுக்கொண்டு, மத்திய அரசுதான் உயர்த்தித் தரும் என்று கருதாதீர்கள், மாநில அரசும் தரும். அலுவலர்களை, அரசு ஊழியர்களை மதிப்பதிலே மாநில அரசு பின்தங்கியது அல்ல. "மக்கள் பிரச்சினை என்ற முறையில், அவர்களுடைய ஊதியத்தை உயர்த்துவதிலே தயக்கமின்றி நாங்கள் முன் நிற்போம்" என்று கலைஞர் அவர்கள் அந்தக் கொள்கை அடிப்படையிலே, கடந்த காலத்திலே அவர்கள் அறிவித்ததை மாநிலத்தில் அறிவித்து, அதைச் செயல்படுத்திய காரணத்தினால் ஏராளமான நிதி தேவைப்படுகிற ஒரு கட்டத்திலேதான் நாம் இருக்கிறோம். ஆனாலும், வளர்ச்சித் திட்டங்கள் எதுவும் எந்தவொரு குறைக்கும் ஆளாகாமல் தொடர்ந்து நிறைவேற்றப்படுகின்றன. அந்த முறையில், தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.1,70,00,000/-ஆக வழங்கப்படுவதை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கேட்டு, அவர்கள் ரூ.5,00,000/- தான் இப்பொழுது உயர்த்த முடியும் என்று சொல்லி, ரூ.1,75,00,000/-ஆக இந்த ஆண்டு வழங்குவதற்கு ஏற்றுக்கொண்டுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் யாரும் கவலைப்படத் தேவையில்லை. மறுபடியும் நாம்தான் வருவோம், நிச்சயமாக மேலும் உயர்த்துவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-45

அதைப்போல, சட்டமன்ற உறுப்பினர்களாக உள்ளவர்களுடைய ஒய்வூதியம். இப்பொழுது வேறு எந்த மாநிலத்திலேயும் இந்த ஒய்வூதியம் என்பது ஏறத்தாழ சம்பளம் அளவுக்கு வழங்கும் நிலை மற்ற மாநிலங்களிலே இல்லை. நாம்தான் 10,000 ரூபாய் அளவுக்கு ஒய்வூதியம் வழங்குகிறோம். அவர்களுக்கு மருத்துவப் படி குறைவாக இருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். 4,000 ரூபாய்தான் வழங்கப்படுகிறது, அது குறைவு என்றார்கள். ஏற்கெனவே ரூ. 2,000/-ஆக இருந்ததை 4,000 ரூபாயாக ஆக்கினோம். இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை 10,000 ரூபாயாக ஆக்குவதற்கு இசைந்திருக்கிறார்கள், மருத்துவப் படி என்ற முறையில். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அதே நேரத்தில், இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள், பேரவை உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள், குடும்ப ஒய்வூதியம் பெறுபவர்கள், அவர்களுக்கெல்லாம் அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் C.T. Scan, M.R.I. Scan, இவற்றிற்கெல்லாம் ஏற்கெனவே கட்டணம் விதிக்கப்பட்டிருந்தது. குறைந்த கட்டணம்தான் விதித்திருந்தாலும்கூட, இப்பொழுது அந்தக் கட்டண வார்டுகளில் சிகிச்சை பெறுவதற்குக் கட்டணங்கள் வசூலிப்பதை நீக்கி, அவர்களுக்கு மேற்கூறிய சிகிச்சைகள் இனி இலவசமாக வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது, முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி. எனவே, அதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இந்த ஆண்டு நடைபெறவிருக்கிற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினுடைய பெருமைக்கு சிறப்புச் சேர்க்கிற வகையில், சென்னையிலே உள்ள மாநகராட்சி மன்றத்தினுடைய தலைவர், மேயர் ஒரு கடமையை மேற்கொண்டு, சென்னை மாநகரத்திலே உள்ள அத்தனை வணிக நிலையங்களிலேயும் அவற்றின் பெயர்ப் பலகைகள் தமிழில் பெரிய அளவிலே

அமையுமாறு, ஏறத்தாழ பலகையினுடைய அளவிலே, எழுத்துகளினுடைய அளவிலே 60 விழுக்காடு தமிழாக அமையக்கூடிய முறையிலே பெயர்ப் பலகை அமைய வேண்டும்; ஒரு 25 விழுக்காடு அளவு இடத்தில் ஆங்கிலத்திலே பெயர் அமைய வேண்டும்; 15 விழுக்காடு அளவுக்கு இடம் பிற மொழிக்கு. எந்த மொழியிலே அவர்கள் தெரிவிக்க விரும்புகிறார்களோ, அது மூன்றாவது மொழியாக இடம் பெறலாம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அதை இந்த மே திங்களுக்குள்ளாக நிறைவேற்றித் தருவதாக வணிகர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கடமை நிறைவேறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, செம்மொழித் தமிழ் ஆய்வு மையத்தைப் பற்றி இங்கே சில கருத்துகள் சொல்லப்பட்டன. அவர்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், செம்மொழி ஆய்வு மையத்தினுடைய ஆட்சிக் குழுவினுடைய தலைவராக முதலமைச்சர் இருக்கிற காரணத்தால், அந்தச் செம்மொழி ஆய்வு மையம் மேலும் சிறப்பாக வளருவதற்கு, பணிகள் ஆற்றுவதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது. அதற்கென்று ஒதுக்கப்பட்ட இடம், நிலம் இருக்கிறது. பெரும் பரப்புள்ள அந்த நிலத்தில் செம்மொழி ஆய்வு மையத்திற்காகவே புதியதோர் கட்டடம், தனிக் கட்டடம் கட்டப்படவிருக்கிறது. அதற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கி இருக்கிறது. எனவே, செம்மொழிப் பணிகள் எல்லாம் நடைபெறும், அதனுடைய நிறைவாக உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவையிலே நடைபெறுகிறது. ஒரு வகையில் இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் அந்தக் கோவை தமிழ்ச் செம்மொழி மாநாட்டை முழு அளவிலே பயன்படுத்திக் கொள்ளுமாறும், அந்த மாநாட்டினைச் சிறப்பிக்குமாறும், நீங்கள் அனைவரும் பங்கேற்கவேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக்கொண்டு, இந்த மானியங்களைப் பற்றிய என்னுடைய உரையை நான் நிறைவு செய்கிறேன்.

வெட்டுத் தீர்மானங்களை, யாரேனும் தமது வெட்டுத் தீர்மானங்களுக்குப் பதில் கேட்பார்களேயானால், அவர்களுக்கு நாங்கள் அனுப்புவதற்குத் தயாராக உள்ளோம். ஒரு வெட்டுத் தீர்மானம்-அதன் கருத்துக்காக உங்களுக்குப் படித்துக் காட்டுகிறேன். எத்தனையோ இங்கே வைத்திருக்கிறேன், இருந்தாலும்கூட ஒன்றைச் சொல்கிறேன். நம்முடைய திரு. தமிழரசு அவர்கள் தந்திருக்கிற

வெட்டுத் தீர்மானம் இது. "சட்டமன்ற உறுப்பினர்கள் எளிய வாழ்க்கை மற்றும் உயரிய இலட்சியத்திற்கு உழைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" என்பது அது. இதைப் பற்றி எப்படி விவாதிப்பது? வேண்டுமானால், என்னுடைய கருத்தைச் சொல்லலாம். விவாதிக்க முடியாது. இது அனைவரும் ஏற்றுக்கொள்கிற ஒரு நியாயம். இது வெட்டுத் தீர்மானத்திற்கு உரியது அல்ல. இது அவரவர் உள்ளத்தில் கொள்ள வேண்டிய ஒன்று. இது ஒரு பாரம்பரிய அடிப்படையில் வர வேண்டிய உணர்வு. இந்த உணர்வையும், திரு. தமிழரசு இங்கே குறிப்பிட்டதற்காக, இந்த வெட்டுத் தீர்மானங்களிலும் இப்படிப்பட்ட ஒரு நல்ல தீர்மானம் இருப்பதற்காக அவரைப் பாராட்டி, என்னுடைய பதிலுரையை நான் நிறைவு செய்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். அடுத்து Bills நிறைய இருக்கின்றன. அதற்கு நேரம் ஆகும். (குறுக்கீடு) சரி, திரு. ஜி.கே. மணி, பேசுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக இங்கே இருக்கிற எல்லாக் கட்சிகளின் சார்பிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், தொகுதி மேம்பாட்டு நிதியைப் அருள்கூர்ந்து, கருணைகூர்ந்து குறைந்தது ரூ.2 கோடியாவது ஒதுக்க வேண்டும். ரூ.5 இலட்சம்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். அதற்குமேல் ரூ.25 லட்சம் என்பது பெரிய தொகை அல்ல. இன்னும் ஓராண்டில் சட்டமன்றத் தேர்தல் வர இருக்கிற காரணத்தினாலே, இப்போது பயன்படுத்தக்கூடிய நிதி, இந்த ஆண்டாகத்தான் இருக்கும். ஆகையினால், எல்லாக் கட்சிகளின் சார்பிலேயும், எல்லா உறுப்பினர்களின் சார்பிலேயும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வது, கருணைகூர்ந்து, ரூ.2 கோடியாக உயர்த்தித் தாருங்கள். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

2010 மே 14]

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், மகாராஷ்டிரா, ஆந்திரா, கேரளா, கர்நாடகா ஆகிய எல்லா மாநிலங்களையும்விட தமிழ்நாடு அந்த நிதிநிலையைப் பொறுத்த அளவிலே மிகவும் standard-ஆக இருந்து கொண்டிருக்கிறது; மற்றவர்கள் எல்லாம் நிறையக் கடன் வாங்கியிருக்கிறார்கள்; அதில் முன்னணியில் இருக்கிறது என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் இத்தனை ஆண்டு காலம் அனுபவமிக்கவர்களாக இருந்து, எங்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கிற அவர் நிச்சயமாக இதைப் பரிசீலிப்பார். இதில் பார்த்தீர்கள் என்றால், நீங்கள், அரசாங்கத் தொகுப்பிலே இருந்து செய்யக்கூடிய செலவை எம்.எல்.ஏ.—க்கள் மூலமாக ரோடு வசதி மற்றும் குடிநீர் வசதி செய்யப் போகிறீர்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.5 இலட்சம்தான் ஏற்றினார் என்றால், வெளியே யாரும் நம்பமாட்டார்கள். இவ்வளவு தாராள மனமுள்ள கருணை மிக்க முதலமைச்சர் ரூ.5 இலட்சம் தானா கொடுத்தார்கள் என்று சொல்லுவார்கள். ஆகவே, நாங்கள் 2½ கோடி ரூபாய் என்று கேட்டதைக் கொஞ்சம் குறைத்துச் சொல்கிறோம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, எங்களுடைய ஒட்டுமொத்த, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், இதை ரூபாய் 2 கோடியாக உயர்த்த வேண்டும். ஏனென்றால், தேர்தல் வேறு வரப் போகிறது. போகிற இடங்களில் பொது மக்கள் ஆங்காங்கே எங்களைப் பிடித்துக்கொள்வார்கள், இந்தப் பணி செய்யுங்கள், அந்தப் பணி செய்யுங்கள் என்று. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை ரூ.2 கோடியாக உயர்த்தித் தர வேண்டுமென்று பணிவன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** திருக்குறளில் அறம், பொருள், இன்பம், வீடு என்று நான்கு பகுதிகள் உண்டு. இதிலே நான்காவது பகுதியை ஒவ்வோர் ஆண்டும் ஞாபகப்படுத்தி, கேட்டுக்கொண்டிருக்கும் வழக்கத்தை திரு. ஞானசேகரன் கடைப்பிடித்து வருகிறார். அறம், பொருள், இன்பம் என்று மூன்றும் கொடுத்தாலும், எங்களுக்குக் கவலையில்லை. எங்களுக்கு வீடு

வேண்டும், வீடு வேண்டும் என்று கேட்டுக்கொண்டே இருக்கிறார். வீடு என்பதற்கு வட மொழியிலே இன்னொரு பொருள் உண்டு, மோட்சம் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தர நான் விரும்பவில்லை. இருந்தாலும், அது பற்றி அதிகாரிகளோடும், அமைச்சர் பெருமக்களோடும், நம்முடைய அவை முன்னவரோடும் கலந்தாலோசித்து, ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகின்றேன். நற்செய்திதான். சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களுக்கு வீடுகள் கட்டிக்கொண்டு வசிக்க ஏற்ற வகையில் அரசு வீட்டுமனைகள் வழங்க உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நீண்ட காலமாகவே உறுப்பினர்கள் கேட்டு வருகின்றீர்கள். அவர்களுக்கு சென்னைக்கு அருகில் பழைய மாமல்லபுரம் சாலையையொட்டி சுமார் 50 ஏக்கர் நிலப் பரப்பில் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கான வீடுகள் கட்டிக்கொள்ள வீட்டுமனைகள், அவற்றிற்குரிய சந்தை மதிப்பை வசூலித்துக்கொண்டு வழங்க அமைச்சரவையில் பரிசீலனை செய்து முடிவெடுத்து அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல்முருகன்.

பிற்பகல் 12-55

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த சில ஆண்டுகளாக சட்டப் பேரவை உறுப்பினர்கள் கையொப்பமிட்டு வைத்த அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தந்தமைக்காக நன்றி கூறிக்கொள்கிறேன். அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதிக்கும் தங்களுடைய அறிவிப்பு வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்தோம். அந்த அறிவிப்பையும் தங்களிடம் எதிர்பார்க்கிறோம். மேலும், . . .

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் அதை வற்புறுத்தினால், அந்த ஐந்து இலட்சமும் குறைக்கப்படும். (சிரிப்பு)

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். நன்மாறன். (குறுக்கீடு) திரு. தி. வேல்முருகன், சொல்லுங்கள்.

2010 மே 14]

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறொரு சப்ஜெக்ட். மேலும் ஒரு சப்ஜெக்ட். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் ஒரு முக்கியமான நிகழ்வை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். கடந்த 18 ஆண்டு காலமாக இந்தச் சட்டப் பேரவைச் செயலகத்தில் பணி செய்கின்ற நிரந்தரமில்லாத தொழிலாளர்கள் இதுபோன்ற கூட்டத் தொடர் மற்றும் ஆளுநர் உரையின்மீதான விவாதத்தின்போது மட்டும் உதவியாளர்களாக மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும், அரசுத் துறை அலுவலர் பெருமக்களுக்கும் அவர்கள் உதவி செய்துவிட்டு வேறு பணிகளுக்குச் சென்றுவிடுகிறார்கள். பல்வேறு துறைகளில் 10 ஆண்டு காலம், 5 ஆண்டு காலம் பணி செய்கின்றவர்களை நிரந்தரப்படுத்தி, சம்பளத்தை அதிகப்படுத்தி அவர்களுக்கு வாழ்வளித்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், ஒன்று அவர்களுக்கு ஊதியத்தை உயர்வாகத் தந்தும், அல்லது இவ்வளவு ஒரு பிரம்மாண்டமான சட்டப் பேரவைச் செயலகம் மற்றும் தலைமைச் செயலகத்தைக் கொண்டு வந்திருக்கிற தாங்கள், அதன் பராமரிப்புப் பணிகளுக்காகவாவது, அலுவலகப் பராமரிப்புப் பணிகளிலாவது அவர்களைப் பணி நிரந்தரப்படுத்துவதற்காக எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொண்டு, அந்தத் துப்புரவுப் பணியாளர்கள், இங்கேயிருக்கிற அலுவலக உதவியாளர்களுடைய வாழ்வில் ஒளியேற்றுவதற்கும், சம்பளத்துடன்கூடிய உயர்வு ஏதாவது ஒன்று தருவதற்கும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களும், நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும் முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. ஜெயக்குமார், கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு பரிவுடன் பரிசீலிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, சென்னையைப் பொறுத்தவரையில் செலவு செய்வது மிகவும் சிரமமாக இருக்கின்ற சூழ்நிலையில் ஒரு கருத்துச் சொல்லப்பட்டு, aided schools, அதாவது, அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளில் கட்டடங்கள் மற்றும் நூலகங்கள் அமைப்பதற்கு அந்த நிதியைப் பயன்படுத்துவதற்கு ஆணை வெளியிடப்படுமா என்று கேட்டதற்கு, அது பரிசீலனை செய்யப்பட்டு, இப்போது ஆணையும் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த ஆணையில் அதற்கு ஒரு கொக்கி போட்டு, query வைத்தாற்போல அரசு, 100 சதவீதம் அளவிற்குத் தமிழ்வழிக் கல்வி இருந்தால் அதற்கு மட்டும்தான் அதை உபயோகப்படுத்த முடியும் என்று சொன்னால், நிறையப் பள்ளிகள் பயன்பெறுகின்ற ஒரு நிலை ஏற்படாது. எனவே, அந்த ஆணையைத் திருத்தி, 100 சதவீதம் அல்ல, எல்லா அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளிலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்தலாம் என்கின்ற அந்த ஆணையை அரசு வழங்குமா என்பதை அறிய விரும்புகின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், என்ன சொல்லப் போகிறீர்கள்? சொல்லுங்கள். நன்றிதானே சொல்லப் போகிறீர்கள்?

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய, சட்டமன்ற உறுப்பினர்களுடைய நெடுநாளைய கோரிக்கையை, 'குருவிக்குக்கூட ஒரு கூடு உண்டு, மனிதனுக்கு வீடு நிச்சயமாகத் தேவை' என்பதை உணர்ந்து, இங்கே சட்டமன்றத்திலேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்காக மாநிலத்தினுடைய தலைநகராம் சென்னைக்கு அருகில் ஓர் எம்.எல்.ஏ.—க்களின் காலனி என்று, ஏற்கெனவே கர்நாடகா மற்றும் ஆந்திராவிலே அமைக்கப்பட்டுள்ளதுபோல ஓர் அருமையானதொரு சட்டமன்ற உறுப்பினர்களுடைய காலனியை அண்ணா நூற்றாண்டு விழா நினைவாக அமைப்பதற்கு இங்கே அறிவிப்பை வெளியிட்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களில் யார் பேசுகிறீர்கள்? உறுப்பினர் திரு. நன்மாறனா அல்லது உறுப்பினர் செல்வி பாலபாரதியா? (குறுக்கீடு) திரு. என். நன்மாறன், பேசுங்கள்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் நாட்டு மக்களுக்கான கோரிக்கைகளை முன்வைக்க வந்திருக்கிறோமே தவிர, தங்கள் கோரிக்கைகளைத் தாங்களே முன்வைத்துக்கொள்வது பொருத்தமானது அல்ல என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) எனவே, அந்த வீடு வழங்கும் திட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை சம்பளம் ஏற்றுகின்றபோது, வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால், மாதா மாதம் சம்பளம் வாங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) யாருக்கு விருப்பம் இல்லையோ, அவர்கள் வாங்கிக்கொள்ள மறுப்பது அவர்களுடைய உரிமை. அரசாங்கம் கொடுப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். வாங்குவதும், வாங்காததும் உங்களுடைய விருப்பம். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள்கூட இப்போது எவ்வளவோ பிரச்சினைகளில் மாறியிருக்கின்றீர்கள். முன்புபோலவா இருக்கிறீர்கள்? மாற்றங்கள் நிறையவே வந்துகொண்டுதான் இருக்கின்றன. நேற்று ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேசுகின்றோம், இன்றைக்கு ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேசினோம், நாளைக்கு வேறொரு பிரச்சினையைப் பற்றிப் பேசுவோம். அதனாலே, உங்களுக்கு வேண்டாம் என்று சொன்னால், விட்டுவிடுங்கள். அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. (குறுக்கீடுகள்)

செல்வி. கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் கேட்டது போதும். எல்லோரும் உட்காருங்கள். போதும், போதும். இதை ஒரு விவாதப் பொருளாக ஆக்க வேண்டாம், உட்காருங்கள்.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(ஆ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

பிற்பகல் 1-00

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.164,83,78,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு)

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

(இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.76,34,19,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகின்றது.

(இ) கோரிக்கை எண் 1–மாநில சட்டமன்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 1-மாநில சட்டமன்றம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.32,81,87,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகின்றது.

(ஈ) கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 2-ஆளுநர் மற்றும் அமைச்சரவை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.26,04,91,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகின்றது.

(உ) கோரிக்கை எண் 16–நிதித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 16-நிதித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.451,86,86,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.38,22,55,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

(ஊ) கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.58,12,12,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.20,65,92,000/-

ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

(ஏ) கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.10,000,01,58,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகின்றது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்திருக்கிறார்கள்.

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்திருக்கிறார்கள்.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் 1-05

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2010), 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2010), 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2010), 2010 ஆம் ஆண்டு மதுரை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2010), 2010 ஆம் ஆண்டு சென்னை, அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2010), 2010 ஆம் ஆண்டு சென்னை அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2010), மற்றும் 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2010) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் 1-05

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2010), 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2010), 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2010), 2010 ஆம் ஆண்டு மதுரை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2010), 2010 ஆம் ஆண்டு சென்னை, அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2010), 2010 ஆம் ஆண்டு சென்னை அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2010), மற்றும் 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2010) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

2010 மே 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2010), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2010)[@]ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

[@] 14—5—2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2010), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2010)[@]*ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

[@] 14—5—2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவினைப் (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2010) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2010), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடு)

@ 13–5–2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(இ) தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவினைப் (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2010) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—*தொடர்ச்சி*

(ஆ) தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2010), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. *(குறுக்கீடு)*

@ *13–5–2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். பேசுகிறீர்களா? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய துணை முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு, இன்று சட்டமன்றத்திலே நிறைவேற்றுதலுக்காகக் காத்துக்கொண்டிருக்கின்ற சிறுபான்மையினருக்கான மாநில ஆணையம் ஒன்றை அமைத்து உருவாக்குவதற்கும், அதன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கு வகை செய்வதற்குமான இந்தச் சட்டமுன்வடிவு சமூக நீதியினுடைய சரித்திரத்திலே ஒரு முக்கியமான மைல் கல். ஜனநாயகம் என்பது எங்களுடைய விளையாட்டு. பெரும்பான்மை ஆளவேண்டும், சிறுபான்மை வாழ வேண்டும். ஜனநாயகத்தினுடைய அளவு என்பது எவ்வளவு பேர் வாக்களிக்கிறார்கள் என்பதைப் பொறுத்தது. ஆனால் ஜனநாயகத்தினுடைய தரம் என்பது,—அதிகாரம் எவ்வளவு தூரம் பரவலாக்கப்பட்டிருக்கிறது, மக்கள் தந்த அதிகாரத்திலே எந்தப் பிரிவினர்கள் எல்லாம் அதிகாரத்திலே பங்கேற்க இந்த அரசு அனுமதிக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் ஜனநாயகத்தினுடைய தரம் என்பது நிர்ணயிக்கப்படுகிறது. That is what we call the quality of democracy. ஆகவே, ஜனநாயகம் என்பது பெரும்பான்மையினர் எடுக்கின்ற முடிவாக இருந்தாலும்கூட, பெரும்பான்மையினர் நினைக்கின்றவற்றை, பெரும்பான்மையினர் விரும்புகின்றவற்றைச் செய்துகொள்வதற்குப் பாராளுமன்ற ஜனநாயகம் வழிவகுக்கிறது என்பது ஒரு வகையிலே உண்மையாக இருந்தாலுங்கூட, அந்த ஜனநாயகத்தில் சிறுபான்மையினருடைய உரிமைகள் எப்படிப் பாதுகாக்கப்படுகின்றன, சிறுபான்மையினருடைய நலன்கள் எப்படி சிறப்பான முறையிலே செயல்படுவதற்கு வழி வாய்க்கால்கள் அமைத்துத் தரப்படுகின்றன என்பதுதான் ஜனநாயகத்தினுடைய தரத்தினை—quality of democracy—நிர்ணயிக்கிற அளவுகோலாக இருக்கிறது. இந்த அவையிலே நான் என்னுடைய வணக்கமான நன்றிகளை, தமிழகத்திலே இருக்கின்ற சிறுபான்மை இஸ்லாமியர்கள், சிறுபான்மை கிறிஸ்தவர்கள், இன்னும் மொழியியல் சிறுபான்மையைச் சேர்ந்த மக்கள், இப்படி சிறுபான்மை என்கிற அடைப்புக்குள் யார் யாரெல்லாம் வருகிறார்களோ, அவர்களெல்லாம் காலங்காலமாக நம்முடைய முதலமைச்சர் அவர்களை நன்றியோடு நினைத்துக்

2010 மே 14] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

கொண்டிருப்பார்கள் என்கிற அந்த நன்றியறிதலை நான் இங்கே பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் *1-10*

பேரவைத் தலைவர் அவர்களே, வாக்கு வங்கிகளை உருவாக்க நினைக்கின்றவர்கள் யார் பெரும்பான்மை என்று பார்க்கிறார்கள்; சமூக நீதிக்குச் சான்றுபகர நினைக்கின்றவர்கள் சிறுபான்மையினரை அரவணைத்துக்கொள்ள நினைக்கிறார்கள். அங்குதான் ஒரு அரசியல் தலைவர், எதிர்காலத் தொலைநோக்குப் பார்வையோடு, ஜனநாயகத்தைச் செழுமைப்படுத்த வேண்டும் என்கிற ஆத்மார்த்தமான உணர்வோடு செயல்படுகின்ற ஒரு மகத்தான தலைவருடைய உணர்வுகளை எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. சிறுபான்மைக்கு உதவுவது என்பது பெரும்பான்மையை சில நேரத்திலே உசுப்பிவிடக்கூடிய செயலாகக்கூட அரசியலில் அமையலாம். அதற்குக்கூட சிலர் பயப்படுவார்கள். நாம், அவர்கள் என்று வகை பிரித்து, நாம் என்கிற தத்துவத்தைப் பெரும்பான்மையாக்குவதற்காக சில அரசியல்வாதிகள் முயற்சிகள் எடுக்கிறார்கள். அதற்காக வெறுப்பு விதைகளை விதைக்கிறார்கள். தேவையில்லாமல் ஒரு சமூகத்தின் மேலே வெறுப்பை உருவாக்கி, அந்த வெறுப்பைத் தங்களுடைய அரசியலுக்கு முதலீடாகக் கொள்ளுகின்ற அந்த மலிவான அரசியல் மலிந்துவிட்ட இந்த நாட்களில், வாக்கு வங்கிகளைப் பற்றிக் கவலைப்படாமல், எண்ணிக்கைகளைப் பற்றிக் கவலைப்படாமல், இந்த நாட்டில் ஜனநாயகத்தின் விளிம்பில் இருக்கின்ற சிறுபான்மை மக்களுக்காகத் தொடர்ந்து நேற்றல்ல, இன்றல்ல, கடந்த, அவர்கள் அரசியலில் அடியெடுத்து வைத்த நாட்களிலிருந்து அந்தச் சரித்திரத்தையெல்லாம் இந்த அவையிலே பதிவு செய்வதற்கு நேரம் போதாது.

இந்த நான்கு ஆண்டுகளுக்குள் நடந்த அந்த நிகழ்ச்சிகளை நாங்கள் தொகுத்தளித்தால்கூட இன்னும் இரண்டு தலைமுறை நன்றியோடு நினைவில் நிற்கக்கூடிய அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்புகளைத் தந்திருக்கிறார்கள். இட ஒதுக்கீட்டைத் தந்திருக்கிறார்கள். அதிலும், இன்னும் குறிப்பாக, ஆதி திராவிட கிறிஸ்தவர்களுக்காக அவர்கள் சட்ட ரீதியான, அந்த முழுமையான அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவதற்கான அதிகார வரம்பு இங்கே இல்லாத காரணத்தினால், தன்னுடைய

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2010 மே 14

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1-45

(ஓ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2010), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு சென்னை அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1-45

(ஓ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2010), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு மற்றும் திரு. எல். ரவிச்சந்திரன் ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

General

"That the Bill be referred to the Select Committee of the House"

என்னும் திருத்தத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ்.

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவை அ.தி.மு.க.-வின் சார்பாகக் கடுமையாக எதிர்க்கிறேன். ஏனென்றால், வாகன வரி 8 சதவீதம் என்றுள்ளதை, ரூ.10 இலட்சம் மதிப்புள்ள வாகனங்களுக்கு 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதம் என அறிவிக்க சட்டத்தைக் கொண்டு வரவிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தை எதிர்க்கிறேன்.

சாதாரண, நடுத்தர மக்கள் உபயோகப்படுத்தக்கூடிய வாகனங்கள் ஏறத்தாழ ரூ.10 இலட்சம் ரூபாய்க்கு மேல்தான் இருக்கிறது. ரூ.10 இலட்சத்திற்குக் குறைவாக இருக்கிற வாகனங்கள் அவ்வளவு சரியாக இருப்பதில்லை. எனவே, ரூ.10 இலட்சத்திற்கு மேலுள்ள அந்த வாகனங்களுக்கு 15 சதவீதம் என்று உயர்த்தவிருப்பதாகக் கூறுகிறீர்கள். அப்படி 15 சதவீதம் என ஆக்கப்பட்டால், கண்டிப்பாக நடுத்தர மக்கள் பாதிக்கக்கூடிய

@ 10–5–2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2010 மே 14] [திரு. ஏ.கே. போஸ்]

சூழ்நிலை ஏற்படும். ஆகவே, இதை Select Committee-க்கு அனுப்பி, அங்கே பரிசீலனை செய்து ஆலோசனை பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் வாகனப் பெருக்கம் என்பது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் வாகனங்கள் பதிவாகின்றன. இப்பொழுது தமிழ்நாட்டினுடைய மொத்த வாகனங்களுடைய எண்ணிக்கை ஒரு கோடியே 20 இலட்சம். ஒரு வாகனம் வைத்திருப்பவர்கள், இரண்டு வாகனங்கள்; இரண்டு வாகனங்கள் வைத்திருப்பவர்கள், மூன்று வாகனங்கள் என்று வாகனங்கள் பெருகிக்கொண்டே இருக்கின்றன. அதை ஏதாவது ஒரு வகையிலே கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயம் அரசுக்கு இருக்கிறது. காரணம், இருக்கிற சாலைகள் அப்படியே இருக்கின்றன. ஆனால், வாகனங்கள் மட்டும் மிகுதியாக வருகின்றபோது நாம் அதைச் சரிசெய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

குறிப்பாக, இதை எடுத்துக்கொண்டால், ஏதோ நாம்தான் அதிகமான வரி விதித்திருக்கிறோம் என்று நீங்கள் கருதாதீர்கள். வாகனத்தினுடைய மொத்த மதிப்பில் 5 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் உள்ள வாகனங்களுக்கு 12 சதவீதமும், வாகனத்தின் மொத்த மதிப்பில் ரூ.5 இலட்சத்திற்கு மேலும் ரூ.10 இலட்சத்திற்கு மிகாமலும் உள்ள வாகனங்களுக்கு 13 சதவீதமும், வாகனத்தின் மொத்த மதிப்பில் ரூ.10 இலட்சத்திற்கு மேல் இருக்கின்ற வாகனங்களுக்கு 16 சதவீதமும் கர்நாடக மாநிலத்தில் வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். நாம் இன்னும் அவர்கள் அளவுக்குக்கூட இல்லாமல், 15 சதவீதத்தில்தான் நின்று கொண்டிருக்கிறோம்.

ஆந்திராவை எடுத்துக்கொண்டால், தனி நபர் வாகனத்தின் மொத்த மதிப்பில் 9 சதவீதமும், நிறுவனங்கள் சார்பாக வருகின்ற வாகனங்களுக்கு 12 சதவீதமும், அதற்கு மேல் தனி நபர் வாகனங்களின் மதிப்பில் 12 சதவீதமும் என்று, ஒவ்வொரு கட்டம் கட்டமாக வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, மற்ற மாநிலங்களைக் காட்டிலும் இது குறைவாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன் முன்மொழிந்த திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2010 மே 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1-50

(ஔ) தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2010), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2010 மே 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1-50

(ஔ) தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2010), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 15 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 15 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 12–5–2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2010 மே 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஅ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2010), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2010 மே 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஅ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2010), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. சி.நா.மீ. உபயதுல்லா] [2010 மே 14

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 14–5–2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2010 மே 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு, 2008 மீதான ஆய்வுக் குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானங்கள். சட்டப் பேரவை விதி 156-(i)-காப்புரையின்படி ஆய்வுக்குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2010 மே 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு, 2008 மீதான ஆய்வுக் குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானங்கள். சட்டப் பேரவை விதி 156-(i)-காப்புரையின்படி ஆய்வுக்குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 156(1)-காப்புரையின்படி ஆய்வுக்குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல். 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2008) மீதான ஆய்வுக் குழு தனது அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பதற்கான காலவரையறையினை மேலும் ஆறு மாதங்களுக்கு இப்பேரவை நீட்டிக்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(இ) பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 மற்றும் தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 மீதான ஆய்வுக் குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவை விதி 156(1)-காப்புரையின்படி ஆய்வுக்குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 156 (1)-காப்புரையின்படி ஆய்வுக்குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல் 2008 ஆம் ஆண்டு பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2008) மற்றும் 2008 ஆம் ஆண்டு தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2008) ஆகியவை மீதான ஆய்வுக் குழு

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 156(1)-காப்புரையின்படி ஆய்வுக்குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல். 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2008) மீதான ஆய்வுக் குழு தனது அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பதற்கான காலவரையறையினை மேலும் ஆறு மாதங்களுக்கு இப்பேரவை நீட்டிக்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(இ) பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 மற்றும் தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 மீதான ஆய்வுக் குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவை விதி 156(1)-காப்புரையின்படி ஆய்வுக்குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 156 (1)-காப்புரையின்படி ஆய்வுக்குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல் 2008 ஆம் ஆண்டு பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2008) மற்றும் 2008 ஆம் ஆண்டு தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2008) ஆகியவை மீதான ஆய்வுக் குழு

2010 மே 14] [டாக்டர் க. பொன்முடி]

தனது அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பதற்கான காலவரையறையினை மேலும் ஆறு மாதங்களுக்கு இப்பேரவை நீட்டிக்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வுக் குழுவினுடைய அறிக்கை அளிப்பதற்கு ஆறு மாத காலப் பணி இப்போது நடைபெற்று முடிந்திருக்கிறது. இன்னும் ஒரு ஆறு மாதம் காலம் நீட்டிப்பதாலே, அந்தக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகமாக மாற்ற முடியுமா, மாற்ற முடியாதா என்ற பிரச்சினை ஆசிரியர்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதனால், இந்த ஆறு மாத காலம் என்பதை ஒரு மூன்று மாத காலம் என்ற அளவில் குறைத்து, உடனடியாக நீங்கள் இதற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று நான் இந்த அவையிலே கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-55

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முதல் நாள்தான் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் வேண்டுமா என்ற கேள்விக்கு, முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் குழந்தைசாமி, திரு. அனந்தகிருஷ்ணன், திரு. நாகநாதன், திரு. ஜெகதீசன், டாக்டர் பாஸ்கரன் ஆகியோர் அடங்கிய ஐந்து கல்வியாளர்கள் குழு தங்களுடைய அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சமர்ப்பித்திருக்கிறார்கள். அவர்கள் தமிழகத்திலேயுள்ள, பொதுவாக இந்தியாவிலேயுள்ள கல்வி நிலைமைகளை அலசிப் பார்த்து, தமிழகத்திலே குறைந்தபட்சம் 100 பல்கலைக்கழகங்களையாவது உருவாக்க வேண்டும். அதுவும் குறிப்பாக, இந்தியாவிலே Deemed University-க்கும் Unitary University-க்கும் இடையேயுள்ள வேறுபாடு தெரியாமல் பல பேர் இருக்கிற காரணத்தினால், அவற்றுக்கான விளக்கங்களையெல்லாம் கொடுக்க வேண்டும். இதுபோன்ற

[டாக்டர் க. பொன்முடி] [2010 மே 14

Unitary—ஒருமைப் பல்கலைக்கழகங்களை உருவாக்குகிறபொழுது, எந்த அடிப்படையிலே உருவாக்கப்பட வேண்டுமென்று கொள்கைகளையும் அவர்கள் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அதன் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வெகு விரைவில் இந்தக் குழுவினுடைய கூட்டத்தைக் கூட்டி, அறிக்கை பற்றியும் ஆலோசித்து, அடுத்த கூட்டத் தொடரிலேயே அதைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர்க் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) தமிழக சட்டப் பேரவை மற்றும் மேலவை நடவடிக்கைகள் உள்ளிட்ட ஆவணங்களை கணினி மூலம் பதிவு செய்து இணையதளத்தில் வெளியிடுதல் மற்றும் சட்டமன்ற ஒலி, ஒளிப் பதிவுகளை இலக்க முறை ஆவணங்களாக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழக சட்டப் பேரவை வரலாற்றுச் சிறப்பும், பாரம்பரியமும் கொண்டதாகும். தமிழக சட்டப் பேரவையின் வரலாற்றை ஆவணப்படுத்துவது, எதிர்காலத்தில் இப்பேரவையின் வரலாற்றை நிலைநிறுத்தப் பெரிதும் அவசியமான, தேவையான ஒன்றாகும். மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள், தீர்மானங்கள், மானியக் கோரிக்கைகள், நடைபெற்ற விவாதங்கள், ஆற்றப்பட்ட உரைகள், சமர்ப்பிக்கப்பட்ட பல்வகை அறிக்கைகள் போன்ற வரலாற்றுக் குறிப்புகள் தற்போது புத்தக வடிவில் உள்ளன. புதிய சட்டப் பேரவை செயல்படத் தொடங்கியுள்ள இந்தச் சூழ்நிலையில் பல ஆண்டு கால வரலாறு கொண்ட இந்தப் பேரவையின்

[டாக்டர் க. பொன்முடி] [2010 மே 14

Unitary—ஒருமைப் பல்கலைக்கழகங்களை உருவாக்குகிறபொழுது, எந்த அடிப்படையிலே உருவாக்கப்பட வேண்டுமென்று கொள்கைகளையும் அவர்கள் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அதன் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வெகு விரைவில் இந்தக் குழுவினுடைய கூட்டத்தைக் கூட்டி, அறிக்கை பற்றியும் ஆலோசித்து, அடுத்த கூட்டத் தொடரிலேயே அதைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர்க் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) தமிழக சட்டப் பேரவை மற்றும் மேலவை நடவடிக்கைகள் உள்ளிட்ட ஆவணங்களை கணினி மூலம் பதிவு செய்து இணையதளத்தில் வெளியிடுதல் மற்றும் சட்டமன்ற ஒலி, ஒளிப் பதிவுகளை இலக்க முறை ஆவணங்களாக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழக சட்டப் பேரவை வரலாற்றுச் சிறப்பும், பாரம்பரியமும் கொண்டதாகும். தமிழக சட்டப் பேரவையின் வரலாற்றை ஆவணப்படுத்துவது, எதிர்காலத்தில் இப்பேரவையின் வரலாற்றை நிலைநிறுத்தப் பெரிதும் அவசியமான, தேவையான ஒன்றாகும். மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள், தீர்மானங்கள், மானியக் கோரிக்கைகள், நடைபெற்ற விவாதங்கள், ஆற்றப்பட்ட உரைகள், சமர்ப்பிக்கப்பட்ட பல்வகை அறிக்கைகள் போன்ற வரலாற்றுக் குறிப்புகள் தற்போது புத்தக வடிவில் உள்ளன. புதிய சட்டப் பேரவை செயல்படத் தொடங்கியுள்ள இந்தச் சூழ்நிலையில் பல ஆண்டு கால வரலாறு கொண்ட இந்தப் பேரவையின்

2010 மே 14] [பேரவைத் தலைவர்]

ஆவணங்களை வருடவாரியாக வரிசைப்படுத்தி, வகைப்படுத்தி, அவற்றைக் கணினிகள்மூலம் அச்சேற்றி, பதிவு செய்து இணையதளமாக உருவாக்கி, அவை வலைதளத்தில் நிலையாக இடம்பெறத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும், இதற்கான நிதியொதுக்கீடு செய்யப்படும். இதனால் இந்தப் பேரவை நிகழ்ச்சிகளில் நடைபெற்ற விவாதங்கள், ஆற்றப்பட்ட உரைகள் ஆகியவற்றை யாவரும் எளிதில் கணினிமூலம் காண இயலும். மேலும், எளிதில் படியெடுக்கவும் இயலும். இதேபோல், மேலவை ஆவணங்களும் கணினியில் பதிவு செய்யப்படும். இதன்மூலம், நாட்டிலேயே சட்டப் பேரவை, மேலவை ஆவணங்களை அறிவியல் ரீதியாக ஆவணப்படுத்திய முதல் மாநிலம் என்ற பெருமையைத் தமிழகம் பெறும். (மேசையைத் தட்டும் ஒலி)

இவற்றோடு, ஒலி, ஒளிப் பதிவுச் சுருள்கள், குறுந்தகடுகள் ஆகியவையும் 'digitalise செய்தல்' என்ற முறையில் ஆவணமாக்கப்படும் என்பதைப் பெருமையுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் இசைவுப்படி இம்மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஏ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஐந்தாவது முறையாக தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்று, முதலமைச்சராக 18 ஆண்டுகள் அயராது மக்கள் பணியாற்றி, 19-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள, இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டியாக விளங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே, அனைவருக்கும் வணக்கம்.

நாம் அமர்ந்துள்ள பிரமாண்டமான இப்புதிய சட்டப் பேரவைக் கட்டடம் உருவாவதற்கு முழு முதற்காரணமாக விளங்கும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு நாளும் (மேசையைத் தட்டும் ஒலி) தவறாமல் இங்கே வந்து, பல முறை கட்டடப் பணிகளைப் பார்வையிட்டதோடு, அரும்பெரும் ஆலோசனைகள் பலவற்றை வழங்கி, உலகத்திலேயே பசுமைச்

ஆவணங்களை வருடவாரியாக வரிசைப்படுத்தி, வகைப்படுத்தி, அவற்றைக் கணினிகள்மூலம் அச்சேற்றி, பதிவு செய்து இணையதளமாக உருவாக்கி, அவை வலைதளத்தில் நிலையாக இடம்பெறத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும், இதற்கான நிதியொதுக்கீடு செய்யப்படும். இதனால் இந்தப் பேரவை நிகழ்ச்சிகளில் நடைபெற்ற விவாதங்கள், ஆற்றப்பட்ட உரைகள் ஆகியவற்றை யாவரும் எளிதில் கணினிமூலம் காண இயலும். மேலும், எளிதில் படியெடுக்கவும் இயலும். இதேபோல், மேலவை ஆவணங்களும் கணினியில் பதிவு செய்யப்படும். இதன்மூலம், நாட்டிலேயே சட்டப் பேரவை, மேலவை ஆவணங்களை அறிவியல் ரீதியாக ஆவணப்படுத்திய முதல் மாநிலம் என்ற பெருமையைத் தமிழகம் பெறும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இவற்றோடு, ஒலி, ஒளிப் பதிவுச் சுருள்கள், குறுந்தகடுகள் ஆகியவையும் 'digitalise செய்தல்' என்ற முறையில் ஆவணமாக்கப்படும் என்பதைப் பெருமையுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் இசைவுப்படி இம்மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(எ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஐந்தாவது முறையாக தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்று, முதலமைச்சராக 18 ஆண்டுகள் அயராது மக்கள் பணியாற்றி, 19-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள, இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டியாக விளங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே, அனைவருக்கும் வணக்கம்.

நாம் அமர்ந்துள்ள பிரமாண்டமான இப்புதிய சட்டப் பேரவைக் கட்டடம் உருவாவதற்கு முழு முதற்காரணமாக விளங்கும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு நாளும் *(மேசையைத் தட்டும் ஒலி)* தவறாமல் இங்கே வந்து, பல முறை கட்டடப் பணிகளைப் பார்வையிட்டதோடு, அரும்பெரும் ஆலோசனைகள் பலவற்றை வழங்கி, உலகத்திலேயே பசுமைச்

சான்றிதழ் பெற்ற முதல் சட்டமன்றக் கட்டடம் என்ற புகழுடன் (மேசையைத் தட்டும் ஒலி) இக்கட்டடம் மிகச் சிறந்த முறையில் திகழக் காரணமாக இருந்துள்ளார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரவையின் தலைவராக நான் பொறுப்பேற்றுள்ள இக்காலத்தில் இந்த வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டதை என் வாழ்நாளின் பெரும்பேறாக எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையில் வடிவமைக்கப்பட்டு, அனைவரும் வியந்து போற்றும்வண்ணம் உருவாக்கப்பட்ட இம்மகத்தான கட்டடம், 13-3-2010 அன்று இந்தியப் பிரதமர் மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்களால், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மாண்புமிகு திருமதி சோனியா காந்தி அவர்கள் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது.

அவ்வமயம் சட்டப் பேரவைச் செயலாளரின் அயராத உழைப்பால் தயாரிக்கப்பெற்ற சிறப்பு விழா மலர் மாண்புமிகு திருமதி சோனியா காந்தி அவர்களால் வெளியிடப்பெற்றது. இக்கட்டடத்தின் வடிவமைப்பு மற்றும் சிறப்புகள் பற்றி பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் பதிலுரையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவாக எடுத்துரைத்துள்ளார்கள்.

பிற்பகல் 2-00

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் மிகக் குறுகிய காலத்தில் கட்டி முடிக்கப்பட்ட எழிலார்ந்த இந்தப் புதிய சட்டப் பேரவை மண்டபத்தில் நடைபெறும் முதல் கூட்டத் தொடரின் நிறைவு நாளான இன்று, பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் குறித்து அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பதின்மூன்றாவது சட்டப் பேரவையின் பன்னிரண்டாவது கூட்டத் தொடர் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையிலே உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் 2010 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 6 ஆம் நாள் முதல் 11 ஆம் நாள் வரையிலும் நடைபெற்றது.

இப்புதிய சட்டப் பேரவைக் கட்டடத்தில் பதின்மூன்றாவது கூட்டத் தொடர் மார்ச் திங்கள் 19 ஆம் நாள் தொடங்கி இன்று

(14-5-2010) வரையிலும் நடைபெற்றது. பேரவையின் பன்னிரண்டு மற்றும் பதின்மூன்றாவது கூட்டத் தொடர்களில் பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரம் வருமாறு:

பேரவை கூடிய மொத்த நாட்கள் - 36
(ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட)

அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம் - 147 மணி 38 நிமிடங்கள் (பிற்பகல் 1-30 மணி வரை)

மேதகு ஆளுநர் அவர்கள் 6-1-2010 அன்று பேரவையிலே உரையாற்றினார்கள்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் நடைபெற்ற மொத்த நாட்கள் - 3

பங்கேற்ற உறுப்பினர்கள் - 22

உரையாற்றிய நேரம் - 8 மணி 1 நிமிடம்

அதில் ஆளுங்கட்சியினர் 4 பேர், பேசிய நேரம் 1 மணி 22 நிமிடங்கள்

இதர கட்சியினர் 18 பேர், பேசிய நேரம் 6 மணி 39 நிமிடங்கள்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 11-1-2010 அன்று பதிலுரை வழங்கினார்கள்.

பதிலுரை ஆற்றிய நேரம் - 50 நிமிடங்கள்

புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள பேரவை மண்டபத்தில் நடைபெற்ற நிறைவுக் கூட்டத்தையொட்டி 11-1-2010 அன்று சட்டமன்றத்தின் நெடிய வரலாற்றை நினைவு கூர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றினார்கள்.

உரையாற்றிய நேரம் - 23 நிமிடங்கள்

நிதி அலுவல்கள்—

புதிய சட்டப் பேரவை மண்டபத்தில் அளிக்கப்படும் முதல் நிதிநிலை அறிக்கையாக, 2010-2011 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை 19-3-2010 அன்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அளித்தார்கள்.

வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள் - 5

பங்கேற்ற உறுப்பினர்கள் - 33

உரையாற்றிய நேரம் - 11 மணி 20 நிமிடங்கள்

அதில் ஆளுங்கட்சியினர் 6 பேர், பேசிய நேரம் 2 மணி 2 நிமிடங்கள்

இதர கட்சியினர் 27 பேர், பேசிய நேரம் 9 மணி 18 நிமிடங்கள்

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலளித்த நேரம் - 1 மணி 28 நிமிடங்கள்

மானியக் கோரிக்கைகள்—

மொத்தம் 51 மானியக் கோரிக்கைகள் விவாதித்து நிறைவேற்றப்பெற்றன.

விவாதம் நடைபெற்ற நாட்கள் - 24

பங்கேற்ற உறுப்பினர்கள் - 210

உரையாற்றிய நேரம் - 48 மணி 25 நிமிடங்கள்

அதில் ஆளுங்கட்சியினர் 41 பேர், பேசிய நேரம் 9 மணி 06 நிமிடங்கள்

இதர கட்சியினர் 158 பேர், பேசிய நேரம் 39 மணி 19 நிமிடங்கள்

இதர கட்சியினருக்குக் கூடுதலாக 30 மணி 13 நிமிடங்கள் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

2010 மே 14] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு அமைச்சர்கள்
பதிலுரையாற்றிய மொத்த
நேரம் - *24* மணி *41* நிமிடங்கள்

43 ஆண்டுகளுக்குப் பிறகு, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை அளித்தார்கள் என்பது இந்த அவையின் சிறப்புக்குரிய அம்சமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

பதிலுரை ஆற்றிய நேரம் - *55* நிமிடங்கள்

இது தவிர, மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவ்வப்போது விளக்கங்களை அளித்தார்கள்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், ஆளுநர் உரை விவாதம் மற்றும் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் ஆகியவற்றுக்கு மொத்தமாக *4* மணி *47* நிமிடங்கள் விரிவாக பதிலுரை வழங்கியுள்ளதோடு, விவாதத்தினிடையே மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய கோரிக்கைகளுக்கும் அவ்வப்போது விளக்கம் அளித்துள்ளார்கள்.

அமைச்சர்களில், சட்டப் பேரவையில் அதிக நேரம் உரையாற்றியவர் மாண்புமிகு துணை முதலமைச்சர் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தனது பொறுப்பிலுள்ள துறைகள் தொடர்பாக இந்த நான்கு ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், நிறைவேற்றப்பட்ட அறிவிப்புகளின் விவரம் ஆகியவற்றை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் புத்தகமாக அச்சிட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பிற்பகல் *2-05*

ஒவ்வொரு உறுப்பினரும் எழுப்பிய கோரிக்கைகளைத் தனித்தனியே குறிப்பிட்டு, அவற்றுக்கு தனது பதிலுரையில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் விளக்கமளித்த பாங்கு அனைவராலும் பாராட்டப்பெற்றுள்ளது.

வெட்டுத் தீர்மானங்கள் (துணை மானியக் கோரிக்கை உட்பட)—

வரப்பெற்றவை	-	13,469
அனுமதிக்கப்பெற்றவை	-	12,705
அவையில் முன்மொழியப் பெற்றவை	-	2,717

வினாக்கள்—விடைகள்—

கடந்த ஆண்டு 21-7-2009 அன்று அவையில் அறிவிக்கப்பெற்ற பின்னர், 13-5-2010 வரை உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட மொத்த வினாக்கள்	-	22,973
அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை	-	100
உடுக்குறியிட்டவை	-	1,081
உடுக்குறியிடாதவை	-	1,932
குறுகிய கால வினா	-	17
அனுமதி மறுக்கப்பெற்றவை	-	7,248
மேல்நடவடிக்கை தேவையில்லை என முன் வினாவுடன் இணைக்கப்பட்டவை	-	8,480
பரிசீலனையில் உள்ளவை	-	4,215

வினாக்களைக் கொடுத்தவர்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்—

1. திரு. கோவை தங்கம் (இ.தே.கா.)	-	5,335 வினாக்கள்
2. திரு. ம. குணசேகரன் (அ.இ.அ.தி.மு.க.)	-	3,122 வினாக்கள்
3. டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி (இ.தே.கா.)	-	2,578 வினாக்கள்

4. திரு. டி. ஜெயக்குமார் (அ.இ.அ.தி.மு.க.) - 2,107 வினாக்கள்

5. திரு. கி. ஆறுமுகம் (பா.ம.க.) - 1,651 வினாக்கள்

அவையில் விடையளிக்கப்பட்ட உடுக்குறியிடப்பட்ட வினாக்கள் - 197

அதிக வினாக்களுக்கு விடையளித்து முதல் ஐந்து நிலைகளில் உள்ள அமைச்சர்கள்—

1. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
 மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் - தலா 19

2. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்
 மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் - தலா 14

3. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்
 மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் - தலா 11

4. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்
 மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்
 மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்
 மாண்புமிகு வனத் துறை அமைச்சர் - தலா 10

5. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் - 9

வினாக்கள்-விடைகள் எடுத்துக் கொள்ளப்பெற்ற மொத்த நாட்கள் - 20

வினா-விடை நேரம் நீட்டிக்கப் பெற்ற நாட்கள் - 12

நீட்டிக்கப்பட்ட நேரம் - 2 மணி

உடுக்குறியிடாத வினாக்கள்—

அவைமுன் வைக்கப்பெற்றவை - 1,500

கவன ஈர்ப்புகள்—

உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை - 1,550

கவன ஈர்ப்பாக அனுமதிக்கப் பெற்றவை - 147

அவையில் விளக்கம் அளிக்கப் பெற்றவை - 3

தகவல் கோரல்—

அவையில் எழுப்ப அனுமதிக்கப் பட்டவை - 51

எடுத்துக்கொண்ட நேரம் - 3 மணி 37 நிமிடங்கள்

உரையாற்றிய உறுப்பினர்கள் - 92

அவற்றில் மாண்புமிகு முதலமைச்சர் விளக்கமளித்தவை - 4

மாண்புமிகு துணை முதலமைச்சர் விளக்கமளித்தவை - 7

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சிறப்புக் கவன ஈர்ப்பு—

அவையில் எழுப்ப அனுமதிக்கப் பட்டவை	- 18
எடுத்துக்கொண்ட நேரம்	- 8 மணி 36 நிமிடங்கள்
உரையாற்றிய உறுப்பினர்கள்	- 96
அவற்றில் மாண்புமிகு முதலமைச்சர் விளக்கமளித்தவை	- 9
மாண்புமிகு துணை முதலமைச்சர் விளக்கமளித்தவை	- 3

விதி 110–ன்கீழ் மாண்புமிகு அமைச்சர்களின் அறிக்கைகள்—

மொத்தம் அளிக்கப்பெற்றவை	- 5
மாண்புமிகு முதலமைச்சர் அளித்தவை	- 2
மாண்புமிகு துணை முதலமைச்சர் அளித்தவை	- 2

குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க வறட்சி மாவட்டங்களுக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்வது குறித்தும், முல்லைப் பெரியாறு வழக்கில் உச்ச நீதிமன்றம் அமைத்த குழுவில் தமிழக அரசின் சார்பாக உறுப்பினரை நியமிப்பது குறித்தும், நிஷா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவது குறித்தும், விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாள் அவர்களுக்குத் தமிழ்நாட்டில் மருத்துவ சிகிச்சை அளிப்பது குறித்தும் அறிக்கைகள் அவைக்கு அளிக்கப்பட்டன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள்—

மதிப்பீட்டுக் குழு	- 6
பொதுக் கணக்குக் குழு	- 38
பொது நிறுவனங்கள் குழு	- 23
சட்ட விதிகள் ஆய்வுக் குழு	- 1
அரசு உறுதிமொழிக் குழு	- 3
மனுக்கள் குழு	- 29
பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு	- 1

உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்—

அவையில் எழுப்பப்பெற்றவை	- 2
உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெற்றவை	- 1

அரசினர் சட்டமுன்வடிவுகள்—

வரப்பெற்றவை	- 28
நிறைவேற்றப்பெற்றவை	- 28

அரசினர் தனித் தீர்மானம்—

வரப்பெற்றவை	- 2
நிறைவேற்றப்பெற்றவை	- 2

நாடாளுமன்ற மக்களவையிலும், சட்டமன்றப் பேரவைகளிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆங்கிலோ இந்தியருக்கு உள்ள இட ஒதுக்கீட்டை மேலும் 10 ஆண்டுகள் நீட்டிக்கும் அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கு ஏற்பளிக்கும் தீர்மானம் 11-1-2010 அன்று பேரவையால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

2010 மே 14] [பேரவைத் தலைவர்]

பிற்பகல் 2-10

7-4-2010 அன்று வரவு-செலவுத் திட்டப் பொது விவாதத்தின்போது, தமிழ்நாட்டில் சட்டமன்ற மேலவையை மீண்டும் தோற்றுவிக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தபோது, மேலவையை மீண்டும் தோற்றுவிப்பதற்கான தீர்மானம் விரைவில் இந்த மன்றத்திலே மொழியப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

"சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்ற கொள்கைக்கு இலக்கணமாக, தமிழ்நாட்டில் மீண்டும் மேலவை அமைக்கப்பட வேண்டுமெனக் கோரும் தீர்மானம் 12-4-2010 அன்று பேரவையில் விவாதித்து, நிறைவேற்றப்பட்டு, இக்கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாகவே அதற்கு மத்திய அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டு, தொடர்ந்து நாடாளுமன்ற இரு அவைகளிலும் வைக்கப்பட்டு, *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* அதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பது உள்ளபடியே வரலாற்றுச் சாதனையாகும். மாண்புமிகு முதலமைச்சரின் இந்த வெற்றி முயற்சிக்கு 7-5-2010 அன்று அவையில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்."

என்ற அய்யன் வள்ளுவரின் கூற்றுக்கு இலக்கணமாக விளங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கொண்ட கொள்கையை நிறைவேற்றுவதில் உறுதிப்பாட்டுடன் செயல்படக்கூடியவர்கள் என்பதற்கு இது மேலும் ஓர் எடுத்துக்காட்டாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—

(அ)	சட்டமுறை விதிகளும் ஆணைகளும்	- 159
(ஆ)	அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்	- 301

உறுப்பினர்கள் வருகை—

6-1-2010 முதல் 11-1-2010 வரை நடைபெற்ற பன்னிரண்டாவது கூட்டத் தொடரிலும், 19-3-2010 முதல் இன்று (14-5-2010) வரை நடைபெற்ற பதின்மூன்றாவது கூட்டத் தொடரிலும் அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்கள் பட்டியல்—

1. செல்வி ஆ. அங்கையற்கண்ணி
2. திரு. மு. அப்பாவு
3. திரு. அருள் அன்பரசு
4. திரு. குத்தாலம் க. அன்பழகன்
5. திரு. எம். அன்பழகன்
6. திரு. அன்பில் பெரியசாமி
7. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
8. திரு. சபா. இராஜேந்திரன்
9. திரு. தா. உதயசூரியன்
10. திரு. உதயம் சண்முகம்
11. திரு. கோ. ஐயப்பன்
12. திரு. வே. கண்ணன்
13. திரு. பெ. காமராஜ்
14. டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி
15. திரு. எஸ்.எஸ். குருசாமி
16. திருமதி சங்கரவல்லி (எ) சங்கரிநாராயணன்
17. திரு. அ. சின்னசாமி
18. திரு. கு. சின்னதுரை
19. திரு. க. சுந்தர்
20. திரு. எம்.ஆர். சுந்தரம்

21. திரு. ஓ. சுப்பிரமணியன்
22. திரு. கூ.ந. சேகரன்
23. திரு. அ. சௌந்தரபாண்டியன் (லால்குடி)
24. திரு. சி. ஞானசேகரன்
25. திரு. எல்.பி. தர்மலிங்கம்
26. திரு. கே. திருநாவுக்கரசு
27. திரு. துரை. சந்திரசேகரன்
28. திரு. எம். பன்னீர்செல்வம்
29. திரு. வி.எஸ். பாபு
30. திரு. கு. பிச்சாண்டி
31. திரு. போளூர் ம. வரதன்
32. திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி
33. திரு. எஸ். மணி
34. திரு. இரா. மாணிக்கம்
35. திரு. ப. ரங்கநாதன்
36. திருமதி இரா. இராணி
37. திரு. அ. ராஜன்
38. திரு. எஸ்.ஆர். இராஜா
39. திரு. ம. இராஜ்குமார்
40. திருமதி லதா அதியமான்
41. திரு. விடியல் எஸ். சேகர்
42. திரு. எஸ்.கே. வேதரத்தினம்
43. திரு. எஸ். ஜாண் ஜேக்கப்
44. டாக்டர் ஆஸ்கார் சி. நிக்லி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பார்வையாளர்கள்—

பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள்

மொத்தம்	- 12,452
ஆண்கள்	- 11,408
பெண்கள்	- 1,044
பேரவைத் தலைவர் அலுவலகத்திற்கென ஒதுக்கப்பட்ட மாடத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள்	- 2,028

30-4-2010 அன்று ஜார்கண்ட் சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. சந்திரேஸ்வர் பிரசாத் சிங் அவர்களும், 4-5-2010 அன்று மணிப்பூர் சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் சுபம் புதிசந்த்ர சிங் தலைமையிலான குழுவும், 6-5-2010 அன்று சிங்கப்பூர் நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஜார்ஜ் இயோ அவர்களது தலைமையில் வந்த தூதுக் குழுவினரும் முக்கியப் பிரமுகர்கள் இருக்கையிலிருந்து பேரவை நடவடிக்கைகளைப் பார்வையிட்டனர்.

சட்டமன்ற நூலகம்—

வருகை தந்தோர்	- 226
வழங்கப்பெற்ற நூல்கள்	- 562
இவ்வாண்டு புதியதாக வாங்கப்பெற்ற நூல்கள்	- 182

நடவடிக்கைக் குறிப்புகள்—

இவ்விரண்டு கூட்டத் தொடர்களில் உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் தவிர)	- 712
தட்டச்சு செய்யப்பெற்ற மொத்தப் பக்கங்கள்	- 6,753

2010 மே 14] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை - 1,580

தலைமைச் செயலகத் துறைகளுக்கு அனுப்பப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை - 424

13-5-2006 அன்று இந்த அரசு பொறுப்பேற்று நான்காண்டுகள் முடிவுற்று, ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைத்ததையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 18 ஆண்டுகள் முதலமைச்சராகப் பணியாற்றி, 19-வது ஆண்டில் அடியெடுத்து வைத்ததையும் (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டி கட்சித் தலைவர்களின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு 13-5-2010 அன்று வாழ்த்தும், பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

சட்டப் பேரவை நடவடிக்கைகள்மீது மிகுந்த ஈடுபாடு காட்டுவதிலும், சட்டப் பேரவை உறுப்பினர்கள், குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதிலும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நிகர் எவரும் இல்லை என்பதை நாடறியும். (மேசையைத் தட்டும் ஒலி)

உதாரணமாக, இக்கூட்டத் தொடரிலே நடைபெற்ற சில சம்பவங்களைக் கூறலாம். பேரவையின் அலுவல்களை நடைபெறவிடாமல் இடையூறு செய்தமைக்காக 7-4-2010 அன்று அவைக்கு வந்திருந்த பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நாட்கள் பேரவைப் பணிகளினின்று நீக்கி வைக்கப்பட்டனர். மறுநாள், 8-4-2010 அன்று, பேரவையில் யாரும் எந்தவிதக் கோரிக்கையும் வைக்காமலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மிக்க பெருந்தன்மையுடன், பேரவைத் தலைவர் தமது தீர்ப்பினை மறுபரிசீலனை செய்து, முடிவைத் தளர்த்தி, அவ்வுறுப்பினர்கள் நீக்கி வைக்கப்பட்ட காலத்தை ஒரு நாளாகக் குறைக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள். அதனடிப்படையில், அவ்வுறுப்பினர்கள் நீக்கி வைக்கப்பட்ட காலத்தை ஒரு நாளாகக் குறைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முதலமைச்சரின் இப்பெருந்தன்மையான செய்கையை எதிர்க்கட்சித் தலைவர்கள் எழுந்து அவையிலேயே அன்று பாராட்டினர். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-15

19-4-2010 அன்று காலை வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பதற்குப் பிரதான எதிர்க்கட்சியின் சார்பில் அக்கட்சியின் கொறடா எதிர்ப்புத் தெரிவித்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடன் முன்வந்து, அன்று கேள்வி நேரம் ஒத்திவைக்கப்படத் தேவையில்லையென்று வேண்டுகோள் வைத்ததையடுத்து, அன்று வினாக்கள்-விடைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளிக்கும் முக்கியத்துவத்திற்கு இது மற்றுமோர் எடுத்துக்காட்டாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

மற்றுமொரு நிகழ்வில், 28-4-2010 அன்று சேலம் உருக்காலைக்கு நிலம் கொடுத்தோர் குடும்பத்திற்கு வேலைவாய்ப்பு வழங்குவது குறித்த பிரச்சினையில் தாமதமாக முன்னறிவிப்புக் கொடுத்திருந்த பிரதான எதிர்க்கட்சியினர், தங்களுக்கும் பேச வாய்ப்பு வழங்குமாறு கோரியபோது, விதிமுறைகளின்படி வாய்ப்பு வழங்க இயலாத நிலையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "பெருந்தன்மை என்பது திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குச் சொந்தம் என்பதால் விட்டுத் தரலாம்" எனத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அக்கட்சியினருக்கும் பேச வாய்ப்பு வழங்கவேண்டுமென்று என்னிடம் பரிந்துரை செய்து, அவர்களுக்கு வாய்ப்பைப் பெற்றுத் தந்தார்கள்.

12-5-2010 அன்று மாண்புமிகு முதலமைச்சர்மீது ஓர் உரிமைப் பிரச்சினை அறிவிப்பை காலை 9-58-க்குக் கொடுத்துவிட்டு, கேள்வி நேரம் முடிந்ததும் அப்பிரச்சினை பற்றிக் கிளப்பி, அவை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேணடும் என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கோரியபோது, விதிமுறைகளின்படி உரிய நேரத்தில் அறிவிப்பு வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, பதிலளிக்க முதலமைச்சருக்கு அவகாசம் தரப்படவேண்டும் என்று நான் அறிவித்தேன். எனினும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "விதிமுறைகளை ஆழமாகக் கவனிக்காமல் அப்பிரச்சினையை உடனே எடுத்துக்கொள்ளுங்கள், உரிமைக் குழுவில் அதனை விவாதிக்க நான் தயார்" என்று தாமாகவே முன்வந்து தம் மீதான உரிமைப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்புமாறு கோரினார். இப்பிரச்சினை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தம்மீதான உரிமைப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்டவரே கோருவது

2010 மே 14] [பேரவைத் தலைவர்]

என்பது சட்டப் பேரவை வரலாற்றில் இதுவே முதல் முறையாகக் கருதுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த அளவுக்குப் பெருந்தன்மையுள்ள தலைவரை, முதலமைச்சரைத் தமிழகம் இதுவரை கண்டதுமில்லை, இனிமேல் காணப் போவதுமில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

13-5-2010 அன்றுடன் இந்த ஆட்சி பொறுப்பேற்று நான்காண்டுகள் வெற்றிகரமாக நிறைவுற்றதற்காகவும், மாண்புமிகு முதல்வர் அவர்கள், முதல்வராகப் பதினெட்டு ஆண்டுகளை முடித்து, பத்தொன்பதாவது ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அவையில் வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் தனது ஏற்புரையில், "என்னை இந்த அவையிலே வாழ்த்த இயலாத சூழ்நிலையில் இருப்பவர்களுக்கும் கனிவான எனது அன்பை வழங்கக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று அவருக்கே உரித்தான மனித நேயத்துடன் குறிப்பிட்டார்கள். முந்தைய காலத்தில் அரசியல் ரீதியாகத் தலைவர்கள் ஒருவரையொருவர் விமர்சித்தபோதும், தனிப்பட்ட முறையில் எவ்வளவு பாசத்தோடு பழகினார்கள் என்பதை எடுத்துக்காட்டி, ஆயிரம் மாச்சரியங்களைக் கடந்து தமிழ்ப் பண்பாடு பேணப்பட வேண்டுமென்று உணர்ச்சிகரமான வேண்டுகோளை வைத்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதே கூட்டத் தொடரின்போது அவையில் தெரிவித்தபடி, இனியாவது தாராளம், பெருந்தன்மை, இவையெல்லாம் ஒரு வழிப் பாதையாக இல்லாமல், இரு வழிப் பாதையாக அமையவேண்டும் என்ற என்னுடைய விழைவையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கூட்டத் தொடரின்போது பல்வேறு நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.2,000/- கொள்முதல் விலையளித்தல், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பில் பயிலும் 10 இலட்சம் மாணவர்களுக்கு இலவச அகராதிகள் வழங்குதல், அரசு கலை-அறிவியல் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் இரத்துச் செய்தல், கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கான்கிரீட் வீடுகள் கட்டும் பணி துவக்கம், சென்னையில் ஆட்டோ ஓட்டுவதற்கு உரிமம் கோரும் தகுதியுள்ள

அனைவருக்கும் பெர்மிட் வழங்குதல், சென்னையில் மினி பஸ் திட்டம், கூவம் நதி சீரமைப்பு, புதிய மேம்பாலப் பணிகள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித் தொகையை ரூ.25,000/- ஆக உயர்த்தி வழங்குதல், மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென மாண்புமிகு முதலமைச்சரின் நேரடிக் கண்காணிப்பில் தனித் துறையை அமைத்தல், மாநில சிறுபான்மையினர் ஆணையத்திற்கு சட்டப்படியான அந்தஸ்து வழங்குதல் உள்ளிட்டவை குறித்து பல்வேறு அறிவிப்புகள் இக்கூட்டத் தொடரில் இடம்பெற்றன.

பிற்பகல் 2-20

நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தபடி, மாற்றுத் திறனாளிகள் நலத் துறையினைத் தனது நேரடிப் பொறுப்பில் வைத்துக்கொண்டதோடு, இந்தக் கூட்டத் தொடரிலேயே அத்துறைக்கென 88 பக்கங்கள் கொண்ட கொள்கை விளக்கக் குறிப்பினையும் வைத்து, பல்வேறு சலுகைகளை உள்ளடக்கி 24 அறிவிப்புகள் கொண்ட புத்தகத்தையும் அவையில் அளித்திருப்பது, மாற்றுத் திறனாளிகளின் எதிர்கால வளமான வாழ்வின்மீது மாண்புமிகு முதலமைச்சர் கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையில் உறுப்பினர்கள் தெரிவிக்கும் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து, கட்சி மாச்சரியமின்றி உடனுக்குடன் அவற்றை நிறைவேற்றி வைப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வழக்கமாகவே கொண்டுள்ளார்கள்.

பேரவையில் வைக்கப்பட்ட கோரிக்கையினை ஏற்று, மாநில சிறுபான்மையினர் ஆணையத்திற்கு சட்டப்படியான அந்தஸ்து வழங்குவதற்கான சட்டமுன்வடிவு இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டுள்ளது.

மற்றொரு உதாரணமாக, வால்பாறை, தோனிமுடி எஸ்டேட்டில் இரு சிறுவர்கள் சிறுத்தைப் புலியால் கொல்லப்பட்டது குறித்து 30-4-2010 அன்று அவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன், இறந்த இரு சிறுவர்களின் குடும்பங்களுக்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் உடனடி நிவாரணம் வழங்கியதோடு, மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை பெற்று,

இரு குடும்பங்களுக்கும் முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனே அவையில் அறிவித்தார்கள்.

அதேபோல, வாணியம்பாடியில் உள்ள தனியார் தோல் பதனிடும் தொழிற்சாலையில் விஷ வாயு தாக்கி ஐந்து பேர்கள் இறந்தது பற்றிய பிரச்சினை 6-5-2010 அன்று எழுப்பப்பட்டபோது, தனியார் தொழிற்சாலையின் சார்பாக, இறந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா 3 இலட்சம் ரூபாய் தரப்படுவதற்கு மேல், உறுப்பினர்களின் வேண்டுகோளை ஏற்று, ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாநில அரசின் சார்பாக மேலும் 2 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் அறிவித்தார்கள்.

பாபநாசம் பாரத ஸ்டேட் வங்கியின் ஏ.டி.எம். அருகே ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. பன்னீர்செல்வம் குடும்பத்திற்கு ரூ. 7 இலட்சம் வரையிலான உதவியும், இறுதியாக அவர் பெற்ற ஊதியத்திற்கு ஈடான குடும்ப ஓய்வூதியமும், அவரது வாரிசுக்கு அரசு வேலைவாய்ப்பும் வழங்கப்படும் என்று 12-5-2010 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

இதேபோல, கோயில் திருவிழாப் பணியின்போது கொல்லப்பட்ட நாகரத்தினம் என்ற காவலர் குடும்பத்திற்கு இத்தகைய உதவிகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 3-5-2010 அன்று அறிவித்தார்கள்.

மே தினத்தன்று டாஸ்மாக் ஊழியர்களுக்கு விடுமுறை அளிக்க சட்டத்தில் வகையில்லை என்பதால், அன்று பணிபுரிந்த ஊழியர்களுக்கு இரட்டிப்புச் சம்பளம் வழங்கப்படும் என்றும், இதற்கு ரூ.30 இலட்சம் செலவாகும் என்றும் 7-5-2010 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் அறிவித்தார்கள். தொழிலாளர்கள்மீது அவர்கள் கொண்டுள்ள தனிப்பட்ட அக்கறையை இது வெளிப்படுத்துகிறது.

மக்கள் சேவையில், சட்டப் பேரவை நடவடிக்கைகளில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுள்ள தணியாத ஆர்வத்தினைத் தானும் பின்பற்றும் விதமாக மாண்புமிகு துணை

முதலமைச்சர் அவர்கள், திருவொற்றியூரைச் சேர்ந்த 12 வயது சிறுமி கண் நோயால் பாதிக்கப்பட்டதைப் பத்திரிகைச் செய்தி மூலமாக அறிந்து, அவரது மருத்துவச் சிகிச்சைக்கான முழுச் செலவையும் தானே ஏற்க முன்வந்த நிகழ்ச்சியை திரு. தி. வேல்முருகன் அவர்கள் 28-4-2010 அன்று அவையில் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டு, நன்றி தெரிவித்ததும் பதிவாகியிருக்கிறது.

உத்தமபாளையத்தில் குடிநீரில் சாக்கடை நீர் கலந்து வந்ததால், வயிற்றுப் போக்கு ஏற்பட்டு, பவித்ரா என்ற பத்து வயது சிறுமி மரணமடைந்ததாக 13-5-2010 அன்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். அச்சிறுமியின் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அன்றே அவையில் தெரிவித்தார்கள்.

புதிய சட்டப் பேரவைக் கட்டடத்தைக் குறுகிய காலத்தில் அழகுற அமைத்து சாதனை படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், வரும் ஜூன் 23 முதல் ஜூன் 27 வரை கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்தவுள்ளார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டினைப் போற்றும் வகையில் சென்னையில் உலகத் தரத்திலான மாநில நூலகம் அமைக்கும் பணியும் நிறைவுபெறவுள்ளது. இவையனைத்தும் மாண்புமிகு முதலமைச்சரின் சாதனைப் பயணத்தில் அடுத்து வரும் மைல் கற்கள் என்பதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை.

இதுமட்டுமல்லாமல், நாட்டுக்கே முன்னோடியாக விளங்கும் வகையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தான் வாழும் இல்லத்தையே மருத்துவ சேவைப் பணிக்காக வழங்குவதாகத் தெரிவித்ததையடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) வருகிற ஜூன் மாதம் 3 ஆம் தேதி தனது இல்லத்தை ஒப்படைக்கவிருக்கிறார் என்ற செய்தியை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் 11-5-2010 அன்று அவையில் அறிவித்தார்கள்.

2010 மே 14] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு துணை முதலமைச்சரும், அவரது துணைவியாரும் தங்களது உடல்களை மருத்துவ ஆராய்ச்சிக்குத் தானமாகக் கொடுக்க சம்மதித்துள்ளார்கள் என்ற விவரத்தையும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் அவையில் அன்று வெளியிட்டார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோரின் இத்தகைய அரிய தியாகச் செயல்கள் நாட்டுக்கே எடுத்துக்காட்டாக அமையும் என்பதில் ஐயமில்லை. பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் அவர்களுக்குப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-25

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் அனைத்து நாட்களும், பேரவைக் கூட்டம் தொடங்குவதற்கு முன்பாகவே எனது அறைக்கு வருகை தந்து, அவையில் எழுப்பப்படக்கூடிய பொருள்கள் குறித்தும், அரசு வழங்கவுள்ள விளக்கங்கள் பற்றியும் விவாதிக்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளதால், என்னுடைய பணிப் பளு குறைக்கப்பட்டுள்ளது. அதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் உணர்வுகளுக்கு மிகுந்த முக்கியவத்துவம் அளித்து அதற்கேற்ப அரசின் திட்டங்களையும், அறிவிப்புகளையும் முடிவு செய்கின்ற ஜனநாயக நடைமுறையைப் பின்பற்றி, அனைவருக்கும் தலைசிறந்த எடுத்துக்காட்டாகத் திகழும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் அவையின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய திட்டக் குழுவைச் சந்தித்து இந்த ஆண்டுக்கு இதுவரையில்லாத அளவுக்கு 20,068 கோடி ரூபாயைத் திட்ட ஒதுக்கீடாகப் பெற்றதுடன், மாண்புமிகு பாரதப் பிரதமர் மாண்புமிகு திரு. மன்மோகன் சிங் அவர்களிடமும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மாண்புமிகு திருமதி சோனியா காந்தி அவர்களிடமும் மாநிலத்தின்

உணவு தானியத் தேவையை எடுத்துக் கூறி, 2 இலட்சத்து 50 ஆயிரம் டன் அரிசியும், 65 ஆயிரம் டன் கோதுமையும் கூடுதல் ஒதுக்கீடாக நமது மாநிலத்திற்குப் பெற்றுத் தந்துள்ளமைக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அவையில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

மத்திய-மாநில அரசுகளிடையே உள்ள நல்லுறவை மாநில மக்களின் நலனுக்காக முழுமையாகப் பயன்படுத்தி வெற்றி கண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பேரவையின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தனது நீண்ட, நெடிய சட்டமன்ற அனுபவத்தின்மூலம் கிடைத்த அனுபவங்களை நமக்கு வழங்கி, சட்டமன்ற விதிகள், நடைமுறைகள் மற்றும் மரபுகளை அவ்வப்போது எடுத்துரைத்து, எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு வழிகாட்டுதல் அளித்து, பேரவை நடவடிக்கைகளை நல்ல முறையில் நடத்துவதற்கு எனக்குப் பெரிதும் உதவியாக விளங்கிய மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் இருக்கையில் அமர்ந்து அவை நடவடிக்கைகளைச் செம்மையாக நடத்தி, எனக்கு உதவிபுரிந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கும், பேரவை மாற்றுத் தலைவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பேரவை நிகழ்ச்சிகள் சிறப்புற நிறைவேற உறுதுணையாக இருந்த அரசுத் தலைமை கொறடா, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எதிர்க்கட்சி கொறடா, இதர கட்சித் தலைவர்கள், இதர கட்சி கொறடாக்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புதிய சட்டப் பேரவையில் இக்கூட்டத் தொடர் நல்ல முறையில் நடந்தேற உதவிய பொதுப் பணித் துறையினருக்கும்,

2010 மே 14] [பேரவைத் தலைவர்]

பேரவையின் நிகழ்ச்சிகளை அன்றாடம் சிறப்புற ஒளிபரப்புச் செய்ய உதவிய தமிழ்நாடு திரைப்படப் பிரிவினருக்கும், ஒலிவாங்கிகளை இயக்கும் ரேடியோ பிரிவினருக்கும், பேரவை நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளை மக்களுக்கு எடுத்துச் செல்ல உதவிய அகில இந்திய வானொலி, தூர்தர்ஷன், தனியார் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், ஊடகங்கள், செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்கள் மற்றும் நிருபர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரவையினுடைய அலுவல்களைச் செம்மையான முறையில் நிறைவேற்ற, அனைத்து வகைகளிலும் எனக்கு உதவிய பேரவைச் செயலாளர் திரு. மா. செல்வராஜ் அவர்களுக்கும், பேரவையின் அனைத்து அலுவலர்களுக்கும், இதர பணியாளர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஏற்கெனவே தெரிவித்தவாறு, மாண்புமிகு முதல்வரின் தனிப் பெரும் முயற்சியால் நமது மாநிலத்தில் மிக விரைவில் சட்டமன்ற மேலவை அமையவிருப்பதை எண்ணி நாம் அனைவரும் மிகுந்த பூரிப்படைவதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) மேலவை அமைக்கப்படும் நாளை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளோம் என்பதைத் தெரிவித்து, பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுதல்களையும், நன்றியையும் மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நிறைவாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற கூட்டத் தொடரின் நிறைவு நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருக்கமாகத் தெரிவித்த விழைவினை இப்போது நினைவுபடுத்தி, இந்தப் புதிய சட்டப் பேரவை மண்டபத்தில் நாட்டைப் பற்றிய நினைவு, மக்களைப் பற்றிய நினைவு, இவற்றோடு நம்முடைய பணியை இங்கே நிறைவேற்ற வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஈ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-29 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

95. சென்னை, உரிமையியல் நீதிபதி (முதுநிலைக் கோட்டம்) சிறு வழக்குகள் நீதிமன்றத்தின் இரண்டாம் நீதிபதி அவர்களை சென்னை, தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத்

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஈ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-29 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

95. சென்னை, உரிமையியல் நீதிபதி (முதுநிலைக் கோட்டம்) சிறு வழக்குகள் நீதிமன்றத்தின் இரண்டாம் நீதிபதி அவர்களை சென்னை, தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத்

தீர்ப்பாயத்தின் (கூடுதல் நடுவர் ஆயம்) கூடுதல் உறுப்பினராக (நீதிமுறை) நியமித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (இ2) துறையின் 3-12-2009 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண். 242-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

96. 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (சிவில்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

97. 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வணிகம்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

98. 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (மாநில நிதி நிலை). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

99. 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

100. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதிக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

101. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதி ஒதுக்க கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

102. கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் நகர் அருள்மிகு விஸ்வேஸ்வரசாமி மற்றும் வீரராகவப் பெருமாள் திருக்கோயிலைச் சுற்றியிருந்த கட்டடங்களை 6-5-2000, 7-5-2000 மற்றும் 14-5-2000

[2010 மே 14

அன்று வருவாய்த் துறை, நெடுஞ்சாலைத் துறை, திருப்பூர் நகராட்சி அதிகாரிகள் மற்றும் திருக்கோயில் நிர்வாக அலுவலர் ஆகியோரால் இடித்து அகற்றப்பட்டதற்கான காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. எம்.ஏ. முருகேசன் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. *[1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்)*

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

243. மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

244. மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் (தேர்தல்கள்) துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

245. மானியக் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

246. மானியக் கோரிக்கை எண் 16-நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

247. மானியக் கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

248. மானியக் கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

249. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் "கணக்குகள் குறித்த ஒரு மேலோட்டப் பார்வை" என்கிற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

அன்று வருவாய்த் துறை, நெடுஞ்சாலைத் துறை, திருப்பூர் நகராட்சி அதிகாரிகள் மற்றும் திருக்கோயில் நிர்வாக அலுவலர் ஆகியோரால் இடித்து அகற்றப்பட்டதற்கான காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. எம்.ஏ. முருகேசன் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. *[1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்)*

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

243. மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

244. மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் (தேர்தல்கள்) துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

245. மானியக் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

246. மானியக் கோரிக்கை எண் 16-நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

247. மானியக் கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

248. மானியக் கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

249. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் "கணக்குகள் குறித்த ஒரு மேலோட்டப் பார்வை" என்கிற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

2010 மே 14]

250. 26-4-2010 அன்று சட்டமன்றத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை என்கிற சிறு நூல். *(தமிழ்)*

251. வனத் துறையின் நான்கு ஆண்டு கால சாதனைகள் *(2006-2007* முதல் *2009-2010* வரை) என்கிற சிறு நூல். *(தமிழ்)*

252. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை குறித்த விவாதத்தின்போது மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2010-2011. (தமிழ்)*

253. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியக் கோரிக்கை குறித்த விவாதத்தின்போது மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், *2010-2011. (தமிழ்)*

254. இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கை குறித்த விவாதத்தின்போது மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2010-2011. (தமிழ்)*

255. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது வனத் துறை குறித்து மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2010-2011. (தமிழ்)*

256. சுற்றுச்சூழல் குறித்து மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2010-2011. (தமிழ்)*

257. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்கள் மற்றும் புதிய அறிவிப்புகள், *2010-2011. (தமிழ்)*

[2010 மே 14

258. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை. (2009-2010)

259. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்திரண்டாவது அறிக்கை. (2009-2010)

260. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை. (2009-2010)

261. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கை. (2009-2010)

262. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

263. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

(255ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 38—பொதுத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011

பொதுத் துறை இம்மாநிலத்தின் பொது நிர்வாகம் தொடர்பான முக்கியமான பணிகளைக் கையாளுகிறது. இத்துறை தலைமைச் செயலரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இத்துறையில் கையாளப்படும் சில முக்கிய பணிகளாவன:

- மேதகு ஆளுநர் பதவியேற்பு மற்றும் ஆளுநர் இல்லப் பராமரிப்பு தொடர்பான பணிகள்.
- அமைச்சர்களின் பணி நியமனம் தொடர்பான பணிகள்.
- மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களின் அலுவலகப் பணியமைப்பு தொடர்பான பணிகளைக் கவனித்தல்.
- அமைச்சரவைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தல்.
- தகைசால் பெருமக்களின் வருகையின்போது மரபு சீர்முறையிலான ஏற்பாடுகளைச் செய்தல்.
- சென்னையிலுள்ள அயல் நாட்டுத் தூதரகங்கள்.
- தேசிய ஒருமைப்பாட்டுக் குழு, பன்மாநிலக் குழு மற்றும் தென் மண்டலக் குழு உட்பட, நடுவண் மற்றும் மாநில அரசுகளுக்குப் பொதுவான விவரங்கள் குறித்து கவனித்தல்.
- நடுவண் அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் அயல்நாட்டுத் தூதரகங்களுடன் தொடர்பு கொள்ளல்.

[2010 மே 14

- தமிழகத்தில் முறையான நுழைவிசைவுடன் (Visa) தங்கியிருக்கும் பிற அயல்நாட்டவரின் (பாகிஸ்தான் மற்றும் வங்காள தேசம் நீங்கலாக) தங்கும் காலத்தை நீட்டித்து (Extension of VISA) வழங்குதல் மற்றும் வெளியேற அனுமதித்தல் (Exit permits).

- இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோருக்கு பணி நியமனம் வழங்குதல் மற்றும் அவர்களின் பணியமைப்பு.

- சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான பிரச்சினை மற்றும் அது தொடர்பான விசாரணை ஆணையங்களை அமைத்தல்.

- மாநில மனித உரிமைகள் ஆணையம்.

- சென்னையிலுள்ள அரசு விருந்தினர் இல்லம் மற்றும் அரசு ஓய்வு இல்லம், உதகமண்டலத்தில் உள்ள தமிழகம் விருந்தினர் இல்லம் மற்றும் புது டெல்லியிலுள்ள தமிழ்நாடு இல்லம் மற்றும் கூடுதல் இல்லம் ஆகியவற்றை நிர்வகித்தல்.

- முன்னாள் படைவீரர்கள் நலன், அவர்களது குடும்ப நலன் மற்றும் முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் நிர்வாகம்.

- முகாமில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருதல்.

- உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ள பாதிக்கப்பட்ட இலங்கை வாழ் தமிழர்கள் சம்பந்தமான பொருண்மைகளை நடுவண் அரசு வழியாகக் கையாளுதல்.

- சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்களுக்கான ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் நலப் பணிகளைச் செயல்படுத்துதல்.

- பொது விடுமுறை மற்றும் உள்ளூர் விடுமுறை அறிவித்தல்.

- மக்கள் தொகை கணக்கெடுப்பு.

2010 மே 14]

- *மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோரிடம் வழங்கப்படும் மனுக்களை முதலமைச்சரின் தனிப் பிரிவுமூலம் தீர்வு செய்தல்.*

மேற்கண்ட பணிகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:—

I. அரசு விருந்தினர் இல்லங்கள்

அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம்

2. அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம் மற்றும் அரசு ஓய்வு இல்லம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை ஆகிய இரண்டும் பொதுத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள வரவேற்பு அலுவலர் மற்றும் இணை மாநில மரபு அலுவலர் இவற்றின் நிர்வாகத்தை பொறுப்பேற்று நடத்துகின்றார்.

3. தமிழகத்திற்கு வருகை தரும் முக்கிய, மிக மிக முக்கிய பிரமுகர்களான மேதகு குடியரசுத் தலைவர், மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர், மாண்புமிகு பாரதப் பிரதமர், மத்திய அமைச்சர்கள், அயல்நாட்டுப் பிரமுகர்கள், மாண்புமிகு உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள், மற்ற மாநில அமைச்சர்கள், மத்திய அரசின் செயலாளர்கள், மத்திய அரசால் நியமிக்கப்பட்ட குழுக்களின் தலைவர்கள் / உறுப்பினர்கள் அனைவரும் அரசு விருந்தினர்களாகக் கருதப்பட்டு அவர்களுக்கு வரவேற்பு, தங்கும் வசதி, உணவு மற்றும் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

4. அரசு விருந்தினர் இல்லத்தில் உள்ள அனைத்து அறைகளும் குளிர்சாதன வசதி கொண்டவை. இதைத் தவிர மிக முக்கிய விருந்தினர்களின் ஓய்வறை மற்றும் உணவு அருந்தும் அறையும் குளிர்சாதன வசதியுடன் கூடியது.

தமிழ்நாட்டிற்கு முக்கிய விருந்தினர்கள் வருகை

5. 2009-2010 ஆம் ஆண்டு, மாண்புமிகு இந்திய குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் ஸ்ரீஹரிகோட்டாவுக்கு சென்னை வழியாக 22-9-2009 மற்றும் 23-9-2009 அன்றும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் சென்னைக்கு 9-5-2009 மற்றும் 13-3-2010 அன்றும்,

[2010 மே 14

மேதகு முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் பதின்மூன்று முறையும், அயல்நாட்டுத் தலைவர்கள் எட்டு முறையும் மற்றும் அயல்நாட்டுப் பிரதிநிதிகள் நூற்று இருபத்திரண்டு முறையும் தமிழகத்திற்கு வருகை புரிந்துள்ளனர்.

இந்த ஆண்டில் தமிழகத்திற்கு வருகை தந்த முக்கிய தகைசால் பெருமக்களின் விவரம் பின்வருமாறு:—

பிற மாநில முதலமைச்சர்கள், ஆளுநர்கள் மற்றும் முன்னாள் தமிழக ஆளுநர்கள்	136 வருகைகள்
மத்திய அமைச்சர்கள்	695 வருகைகள்
பிற மாநில அமைச்சர்கள்	117 வருகைகள்
மத்திய அரசால் நியமிக்கப்பட்ட குழு தலைவர்/உறுப்பினர்கள்	356 வருகைகள்
உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் மற்றும் பிற மாநில உயர் நீதிமன்ற நீதியரசர்கள்	92 வருகைகள்
மத்திய அரசின் செயலாளர்கள் மற்றும் ஏனைய மத்திய அரசின் அதிகாரிகள்	123 வருகைகள்

அரசு ஓய்வு இல்லம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை

6. அரசு ஓய்வு இல்லம், இரண்டு மாடிக் கட்டடத்தில், இரண்டு படுக்கைகள் கொண்ட 24 அறைகளைக் கொண்டு இயங்கி வருகிறது. வருவாய்த் துறை வட்டாட்சியர் நிலையிலுள்ள அலுவலர் உதவி வரவேற்பு அலுவலராக அரசு ஓய்வு இல்லத்தை நிர்வகித்து வருகிறார்.

இதில், 16 அறைகளில் 'Z' பிரிவு பாதுகாப்பில் வரும் முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் தேசிய பாதுகாப்புப் படை வீரர்கள் தங்கியுள்ளார்கள், 7 அறைகள் அலுவலகப் பணியாக சென்னைக்கு வருகை தரும் அரசு அலுவலர்களுக்கும், மீதமுள்ள ஒரு அறை அலுவலகப் பணிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

2010 மே 14]

பணியாளர்கள் விவரம்

7. அரசு விருந்தினர் இல்லம் மற்றும் அரசு ஓய்வு இல்லம் ஆகியவற்றில் மொத்தம் 130 அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். இப்பணியாளர்கள், 24 மணி நேரமும் சுழற்சி முறையில், சீரான செயல்பாடு மற்றும் விருந்தோம்பல் ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் பணியாற்றி வருகின்றனர்.

தமிழ்நாடு இல்லம், புது டெல்லி

8. மாநில விருந்தினர்கள், உயர் பெருமக்கள், அமைச்சர்கள், தமிழ்நாடு அரசு அலுவலர்கள், மத்திய அரசு அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலரல்லாதோர் மற்றும் பிற விருந்தினர்களுக்கு உணவு மற்றும் உறையுள் வசதி செய்து கொடுப்பதற்கென்று தமிழ்நாடு இல்லம் தலைநகர், புது டெல்லியில் தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

9. தமிழ்நாடு இல்லத்தின் பழைய கட்டடம் 1962 ஆம் ஆண்டு ரூ.9 இலட்சம் செலவில் 1.757 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து, 1976 ஆம் ஆண்டு ரூ.61 இலட்சம் செலவில் மூன்றடுக்கு மாடிக் கட்டடம் கட்டப்பட்டது. 1992 ஆம் ஆண்டு புது டெல்லி, நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தால் 7956.62 சதுர மீட்டர் நிலம் தமிழக அரசுக்கு ஒதுக்கப்பட்டது. இந்நிலத்தில் தமிழ்நாடு இல்லத்தின் கூடுதல் விருந்தினர் இல்லம் ரூ.27.20 கோடி செலவில் கட்டப்பட்டு விருந்தினர்களின் பயன்பாட்டில் உள்ளது. இக் கூடுதல் விருந்தினர் இல்லத்தில் உணவு வசதி, இல்லக் காப்பு, பாதுகாப்புப் பொறுப்புகள், பராமரிப்பு ஆகிய பணிகள் வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

10. இடவசதி ஒதுக்கீடு உள்ளிட்ட தமிழ்நாடு இல்லத்தின் முழு நிர்வாகப் பொறுப்பும் பொதுத் துறையைச் சார்ந்தது. இவ்வில்லத்தின் கட்டடங்களைப் பராமரிப்பது பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளரின் பணியாகும். இவ்வில்லத்தின் நிர்வாகக் கட்டுப்பாடு மற்றும் அனைத்துப் பணிகளும் அரசின் முதன்மை உள்ளுறை ஆணையரால் கவனிக்கப்படுகிறது. பழைய தமிழ்நாடு இல்லத்தில் 45 அறைகளும், 10 அறைத் தொகுதிகளும், கூடுதல் விருந்தினர் இல்லத்தில் 46 அறைகளும், 28 அறைத் தொகுதிகளும் உள்ளன.

[2010 மே 14

11. தமிழ்நாடு இல்லத்தின் பணிகள் (1) வரவேற்பு (2) உணவு வசதி (3) இல்லக்காப்பு (4) பொறியியல் (5) கணக்கு (6) பணியமைப்பு (7) தொடர்பு அலுவல் என பிரிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு இல்ல வளாகத்தில் பின்வரும் தமிழக அரசின் அலுவலகங்களும் இயங்கி வருகின்றன:

(அ) காவிரி தொழில்நுட்பப் பிரிவு

(ஆ) சம்பளக் கணக்கு அலுவலகம் - கருவூலக் கணக்குத் துறை

(இ) பொதுப் பணித் துறைப் பிரிவு

(ஈ) சட்டப் பிரிவு (உச்ச நீதிமன்ற வழக்குகள் ஒருங்கிணைப்பு)

'தமிழகம்' விருந்தினர் இல்லம், உதகமண்டலம்

12. 'தமிழகம்' விருந்தினர் இல்லம், உதகமண்டலம் இரயில் நிலையம் மற்றும் மத்தியப் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில், பனி படர்ந்த மரச் செறிவான இயற்கைச் சூழலில் அழகுற அமைந்துள்ளது. 36 ஏக்கர் நிலப்பரப்பில் 33 அறைகளைக் கொண்ட இவ்வில்லம் மாளிகை போன்ற தோற்றம் கொண்ட அழகான மற்றும் விசாலமான கட்டடங்கள், தோட்டங்கள் மற்றும் நெடிதுயர்ந்த மரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இங்குள்ள தோட்டம், தோட்டக் கலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

13. உதகமண்டலத்திற்கு வருகை தரும் மிக முக்கிய விருந்தினர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு உணவு மற்றும் உறையுள் வசதி செய்து கொடுக்கும் முக்கிய நோக்குடன் இவ்வில்லம் இயங்கி வருகிறது.

14. ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான கோடைப்பருவம் மற்றும் செப்டம்பர் முதல் அக்டோபர் வரையிலான இரண்டாம் பருவம் ஆகிய காலங்களில் இவ்வில்லத்தில் தங்குவதற்கான அறைகள் ஒதுக்கீடு பொதுத் துறையால் வழங்கப்படுகிறது. எஞ்சியுள்ள காலங்களில் நீலகிரி மாவட்ட ஆட்சியரால் அறைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

பிற வசதிகள்

15. இவ்வில்லத்தில், 200 பார்வையாளர்கள் வசதியாக அமரக் கூடிய அழகிய அவைக்கூடம் ஒன்றும் உள்ளது. இங்கு சட்டமன்றப் பேரவையைச் சேர்ந்த பல்வேறு குழுக்களின் ஆய்வுக் கூட்டம் மற்றும் கருத்தரங்கம் போன்றவை நடைபெறுகின்றன. அனைத்து அறைகளும் உள்ளிடைட்பேசி (Intercom) வசதியுடன் அமைந்துள்ளன.

II. தேசிய விழாக்கள், சிறப்பு நாட்கள் மற்றும் விருதுகள்

16. இந்திய தேசிய விழாக்களான சுதந்திரத் திருநாள் மற்றும் குடியரசு நாள் விழாக் கொண்டாட்டங்கள் ஆகியவற்றையும், மத்திய அரசால் சிறப்பு நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ள தியாகிகள் நாள், கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள், தேசிய ஒருமைப்பாட்டு நாள் போன்ற நாட்களில் தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உறுதிமொழி ஏற்பு செய்து வைக்கும் நிகழ்ச்சிகளும், இத்துறையால் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

17. இத்துறை ஒவ்வொரு ஆண்டும் சுதந்திரத் திருநாள் விழாவின் போது, சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள கோட்டைக் கொத்தளத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றிவைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றிடும் நிகழ்ச்சிக்கான பணிகளையும், குடியரசு நாள் விழா அன்று, சென்னை கடற்கரையில், முப்படைகளும் உள்ளடக்கிய சீருடைப் படையினரின் மிடுக்கான அணிவகுப்போடு பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகளின் ஆடல், பாடல் மற்றும் பல்வேறு மாநிலங்களின் கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கும் கலை நிகழ்ச்சிகளுடன் மேதகு ஆளுநர் அவர்கள் கொடியேற்றி வைக்கும் நிகழ்ச்சியையும் இத்துறை ஏற்பாடு செய்கிறது.

18. சட்டம், ஒழுங்கு மற்றும் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத் திட்டங்களை ஆய்வு செய்யும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளின் மாநாட்டினைத் தலைமைச் செயலாளரின் நேரடி மேற்பார்வையில் இத்துறை ஏற்பாடு செய்கிறது. வீர தீரச் செயல்களுக்கான மத்திய

[2010 மே 14

அரசின் விருதுகளான ஜீவன்ரக்ஷா பதக்கம், அசோக சக்ரா, கீர்த்தி சக்ரா, சௌர்ய சக்ரா போன்ற விருதுகளுக்கும், பொது நிருவாகத்தில் சிறப்பாகப் பணிபுரிந்தவர்களுக்காக அளிக்கப்படும் பிரதமர் விருது, பத்மஸ்ரீ, பத்மபூஷண், பத்மவிபூஷண், மத நல்லிணக்கத்திற்கான கபீர் புரஷ்கர் விருது, சமாதான விருதான காந்தியடிகள் அமைதி விருது போன்ற மத்திய அரசால் பொது மக்களுக்கு வழங்கப்படும் விருதுகளுக்கும் இத்துறையின்மூலம் பரிந்துரைகள் அனுப்பப்படுகின்றன. மேலும், மாநில அரசின் விருதுகளான அண்ணா பதக்கம், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம், கல்பனா சாவ்லா விருது ஆகியவற்றுக்கான விருதாளர்கள் தேர்வு தொடர்புடைய பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது. பெருந்தலைவர் காமராசர், அண்ணல் அம்பேத்கர், பேரறிஞர் அண்ணா, மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், தமிழ்த் தென்றல் திரு.வி.க. மற்றும் தந்தை பெரியார் விருது முதலிய மாநில அரசு விருதுகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறைச் செயலாளர்களிடமிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டு, விருதாளர்களைத் தேர்வு செய்யும் பணியினையும் இத்துறை மேற்கொள்கிறது. விருதாளர்களுக்கு விருது வழங்கும் விழா தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறையால் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

III. அயல்நாட்டினர் பிரிவு

19. தமிழகத்திற்கு உரிய நுழைவிசைவுடன் வேலை பார்ப்பதற்காகவும், வியாபார நிமித்தமாகவும், கல்வி கற்பதற்காகவும் மற்றும் இந்தியாவிலுள்ள அவர்களுடைய குடும்பத்தினர்களுடன் தங்குவதற்காகவும் வருகின்ற அயல்நாட்டினர்களுக்கு (பாகிஸ்தான் மற்றும் வங்கதேச நாட்டினர் தவிர) இந்தியாவில் தங்கும் காலத்தை நீட்டித்து, அனுமதியும், மேலும் அவர்களின் சொந்த நாட்டிற்குச் சென்று வர விழைபவர்களுக்கு (90 நாட்களுக்கு உட்பட்டு) மீள நுழைவிசைவும் (Return Visa) இத்துறையால் வழங்கப்படுகிறது. மேலும், இந்தியாவை விட்டு வெளிச்செல்ல விரும்பும் அயல்நாட்டினருக்கு வெளிச்செல்ல அனுமதியும் (Exit Permit) இத்துறையால் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கை நாட்டினரைப் பொறுத்தவரை, மைய அரசின் ஆணை பெற்ற பின்னரே நுழைவிசைவு நீட்டித்து வழங்கப்படுகிறது. ஐந்து

2010 மே 14]

ஆண்டுகளுக்குட்பட்டு அனுமதியின்றி தங்கியுள்ள இலங்கை நாட்டினர்களுக்கு இந்தியாவை விட்டு வெளிச்செல்ல இத்துறையால் அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்டு அனுமதியின்றி தங்கியுள்ள இலங்கை நாட்டினர்களுக்கு, மைய அரசின் ஆணை பெற்ற பின்னரே இந்தியாவை விட்டு வெளிச்செல்ல அனுமதி வழங்கப்படுகிறது. அயல்நாட்டினர் யாரேனும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டாலோ அல்லது நுழைவிசைவு விதிகளை மீறினாலோ அல்லது அவர்கள்மீது எதிர்மறையான குறிப்புகள் ஏதேனும் பெறப்பட்டாலோ அவர்களை இந்தியாவை விட்டு வெளியேற்றவும் / வெளியேறக் கோரியும் மைய அரசின் இசைவு பெற்று இத்துறையால் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

20. மேலே கூறிய பணிகளுடன், மேல்படிப்பிற்காகவோ / வேலை தேடியோ வெளிநாடுகளுக்குச் செல்ல விழைபவர்களுக்கு, தமிழகத்திலுள்ள பல்வேறு நிறுவனங்களால் (முறையே பல்கலைக்கழகங்கள், அரசுத் துறைகளான மருத்துவக் கல்வி இயக்ககம், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்ககம், அரசுத் தேர்வுகள் இயக்ககம், உள்ளாட்சி நிறுவனங்கள் முதலியன) வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்களின்மீது அதனை வழங்கிய நிறுவனங்களில் அவற்றின் உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்ட பின் இத்துறையால் 19 சான்றுறுதி (Authentication) செய்யப்படுகிறது. மேலும் அரசுத் துறைகளால் வழங்கப்பட்ட திருமண சான்றிதழ், பிறப்பு சான்றிதழ், வாரிசுச் சான்றிதழ், ஒருங்கிணைந்தமைந்த சான்றிதழ் (Certificate of Incorporation) போன்ற சான்றிதழ்களின்மீது, அவற்றின் உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்ட பின் இத்துறையால் சான்றுறுதி செய்யப்படுகிறது.

IV. மறுவாழ்வுத் துறை

முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் நிவாரணம் மற்றும் தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு

21. இலங்கையில் 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரம் காரணமாக, பெருவாரியான இலங்கைத் தமிழர்கள் இந்தியாவிற்கு வரத் துவங்கினர். அவர்கள் நான்கு வெவ்வேறு காலக் கட்டங்களில் தமிழ்நாட்டுக்கு வந்தனர்.

கட்டங்கள்	காலம்	மொத்த எண்ணிக்கை
முதல்	24-7-1983 முதல் 31-12-1987 வரை	1,34,053
இரண்டாவது	25-8-1989 முதல் 30-4-1991 வரை	1,22,078
மூன்றாவது	31-7-1996 முதல் 31-8-2003 வரை	22,418

நான்காவது கட்டமாக, 12-1-2006 முதல் 31-3-2010 வரையிலான காலத்தில் 24,733 இலங்கைத் தமிழர்கள் தமிழகத்திற்கு வந்தனர். அவர்கள் பல்வேறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

(1) முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள்:

22. இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வந்துள்ள இலங்கைத் தமிழர்கள் தமிழக அரசால் பராமரிக்கப்படும் இரண்டு சிறப்பு முகாம்களை உள்ளடக்கிய 115 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அண்மையில், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒரு முகாமில் குறைந்த எண்ணிக்கையிலுள்ளவர்களே இருந்ததால், அந்த முகாம் அதே மாவட்டத்திலுள்ள வேறு ஒரு முகாமுடன் இணைக்கப்பட்டது. முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு அரசு பலவகையான நிவாரண உதவிகளை வழங்கி வருகிறது. நிவாரண உதவிகளின் பொருட்டு செய்யப்படும் செலவினங்கள் மாநில அரசால் முதலில் மேற்கொள்ளப்பட்டு பின்னர் மத்திய அரசால் ஈடு செய்யப்படுகிறது.

(2) பணக் கொடை:

23. முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு அன்றாடச் செலவிற்காக மாதந்தோறும் பணக் கொடை வழங்கப்படுகிறது. 1-8-2006 முதல் திருத்திய வீதங்களில் வழங்கப்படும் பணக் கொடை விவரம் பின்வறுமாறு:—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

1.	குடும்பத் தலைவருக்கு	ரூ. *400/-*
2.	*12* வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கும்	ரூ. *288/-*
3.	முதல் குழந்தை (*12* வயதிற்குட்பட்டவர் மட்டும்)	ரூ. *180/-*
4.	ஒவ்வொரு கூடுதல் குழந்தைக்கும்	ரூ. *90/-*

24. தகுந்த முன் அனுமதி பெற்று வெளியில் செல்லும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள், பணக் கொடை வழங்கும் நாளில் முகாமிற்கு வருகை தந்து பணக் கொடை பெற்றுக்கொள்ள சிறப்பு அனுமதி இந்த அரசால் தற்போது வழங்கப்படுகிறது. மேலும், வெளியே சென்ற முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் ஒரு மாத காலத்திற்குள் திரும்ப வர இயலாத நிலை ஏற்பட்டால் அவரவர் தங்கியிருக்கும் மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சியரிடம் இதற்கான அனுமதி பெற்று, பின்னர் அவர்களது முகாமில் பணக் கொடையைப் பெற்றுக்கொள்ளும் வசதியும் தற்போது செய்யப்பட்டுள்ளது.

25. 2008–2009 ஆம் ஆண்டில் முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு ரூ.*24.96* கோடி பணக் கொடையாக வழங்கப்பட்டது. *2009-2010* ஆம் ஆண்டில் ரூ.*28.60* கோடி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(3) மானிய விலையில் அரிசி வழங்குதல்:

26. முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு கிலோவுக்கு *57* பைசா என்ற மானிய விலையில் அரிசி தமிழக அரசால் வழங்கப்படுகிறது. இரண்டு பெரியவர்கள் மற்றும் இரண்டு சிறியவர்கள் கொண்ட ஒரு சராசரி குடும்பத்திற்கு மாதத்திற்கு *36* கிலோ அரிசி வழங்கப்படுகிறது. பொது விநியோகத் திட்டத்தின் மூலம் முகாம் வாழ் தமிழர்களுக்கு அரிசி வழங்கப்படுகிறது. மாநில

அரசு மானிய விலை மற்றும் சந்தை விலைக்கான வித்தியாசத் தொகையினை தமிழ்நாடு வாணிபக் கழகத்திற்கு ஈடு செய்கிறது. இத்திட்டத்தின்கீழ் 2008-2009 நிதியாண்டில் ரூ.8.27 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. 2009-2010 நிதியாண்டில் ரூ.8.58 கோடி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(4) துணிகள், பாய்கள் மற்றும் போர்வைகள்:

27. முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு இலவசமாக துணிகள், போர்வைகள் மற்றும் பாய்கள் அரசு நிர்ணயித்த அளவில் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் (கோ-ஆப்டெக்ஸ்) மூலமாக துணி வகைகள் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாளச் சீட்டை (Coupon) மாற்றி தங்களுக்கு விருப்பமான துணிகளை கோ—ஆப்டெக்ஸின் விற்பனை நிலையங்கள் மூலமாக பெற்றுக் கொள்ள தற்போது வழிவகை செய்யப்பட்டுள்ளது. துணிகள், பாய்வகைகள் மற்றும் போர்வைகள் வழங்குவதற்காக 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.3.47 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.3.82 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(5) சமையல் பாத்திரங்கள்:

28. முகாமில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு இரண்டாண்டிற்கு ஒரு முறை அரசு வரையறுக்கப்பட்ட நிர்ணயங்களின்படி சமையல் பாத்திரங்கள் வழங்கப்படுகின்றன. 2008-2009 ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்பட்ட தொகையான ரூ.250/-ல் சமையல் பாத்திரங்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டு வருகின்றன. சமையல் பாத்திரங்கள் வழங்க 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.48.46 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

(6) நலவாழ்வு மற்றும் மருத்துவ உதவிகள்:

29. மாநிலம் முழுவதும் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு அவர்களது முகாம்களுக்கு அருகில் உள்ள

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார மையங்கள்மூலம் இலவச மருத்துவ சேவை வழங்கப்படுகிறது. பெரிய அளவிலான மருத்துவ சிகிச்சைக்களுக்கு தேவைப்படும் நிதியுதவி மாவட்ட ஆட்சியாளர்களின் பரிந்துரைகளின்படி இலங்கைத் தமிழர் சிறப்பு நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இந்த அரசு 2006ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த பின் பெண்களுக்கான ஊட்டச்சத்தின் நிலையை உயர்த்துவதற்காகவும், குழந்தைகளுக்கான கல்வி மற்றும் ஊட்டச்சத்தின் நிலையை உயர்த்துவதற்காகவும், முகாமில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளது.

30. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம் 1-4-2007 முதல் முகாமில் வசிக்கும் கருவுற்ற தாய்மார்களுக்கும் அரசால் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இவர்களுக்கு மகப்பேறுக்கு முன்னர் மூன்று மாதங்களுக்கும், மகப்பேறுக்கு பின்னர் மூன்று மாதங்களுக்கும், மாதம் தலா ரூ.1,000/- என்ற விகிதத்தில் பண உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 2009-2010 ஆம் நிதியாண்டில் 650 கருவுற்ற தாய்மார்கள் பயனடைந்துள்ளனர்.

(7) இலவசக் கல்வி:

31. முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு மேல் நிலை வகுப்பு வரை (+2) இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. மேலும், அவர்களுக்கு சீருடைகள், மதிய உணவு, பேருந்து சலுகை, புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மிதியுந்துகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், 20,821 குழந்தைகள் பயன் பெறுகின்றனர். அரசு கலை அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் வழக்கமான மாணவர் சேர்க்கைக்குப் பின் பட்டப்படிப்பு வகுப்புகளில் உள்ள காலியிடங்களில் முகாம் வாழ் இலங்கைத் தமிழ் மாணவர்கள் சேர்ந்து உயர் கல்வி தொடர்ந்திட, மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளது. முகாம்களுக்கு

வெளியில் தங்கி கல்வி பயிலும் மாணவர்கள் தங்களுக்குரிய பணக் கொடை மற்றும் இதர சலுகைகளைப் பெற்றுக்கொண்டு படிப்பைத் தொடர அனுமதிக்கப்படுகின்றனர்.

(8) இலவச மின்சார வசதி:

32. இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, 12 மணி நேரம் மட்டுமே அளிக்கப்பட்டு வந்த மின்சார வசதியை விரிவுபடுத்தி முகாம்களில் உள்ள அனைத்து இலங்கைத் தமிழர் வீடுகளுக்கும் நாள் முழுவதும் இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

(9) இலங்கைத் தமிழர் முகாம்களின் அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு நலத் திட்டங்களை விரிவுபடுத்தவும் மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு நடவடிக்கைகள்:

33. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2-11-2009-ல் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முகாம்களையும் ஆய்வு செய்யுமாறு அறிவுறுத்தினார்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் ஆய்வு அறிக்கை மற்றும் பரிந்துரைகளின்படி, முகாம்களிலுள்ள அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கைத் தரம் உயர வழிவகுக்கும் நலத் திட்டங்களை விரிவுபடுத்துவதற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார்கள். முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் முக்கியத் தேவைகளை அடையாளங் கண்டும் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் அளித்த மதிப்பீட்டின் அடிப்படையிலும், முதற்கட்டமாக 26 மாவட்டங்களில் போர்க்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தக்க கட்டட வடிவமைப்பை முடிவு செய்த பின்னர், புதிய வீடுகள் கட்டுவதற்கு இரண்டாவது கட்டமாக பணிகள் மேற்கொள்ளப்படும்.

2010 மே 14]

அ. முகாம்களில் அடிப்படை வசதி மேம்படுத்துதல்:

34. மாண்புமிகு முதலமைச்சரின் வழிகாட்டலைத் தொடர்ந்து இந்த நிதியாண்டில் மாநிலத்திலுள்ள அனைத்து முகாம்களிலும் பின்வரும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன:

வ. எண்	பணிகள் விவரம்
1.	வீடுகள் – பழுது நீக்கம் மற்றும் புதுப்பித்தல்
2.	புதிய ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் கைப்பம்புகள்
3.	ஆழ் குழாய் கிணறுகள் - பழுது நீக்கம்
4.	கைப்பம்புகள் - பழுது நீக்கம்
5.	புதிய மேல்நிலைத் தொட்டிகள்
6.	மேல்நிலைத் தொட்டிகள் – பழுது நீக்கம்
7.	புதிய குழாய்கள் பதித்தல் மற்றும் விரிவுபடுத்தல்
8.	புதிய கழிவறைகள் கட்டுதல்
9.	கழிவறைகள் - பழுது நீக்கம்
10.	புதிய கழிவு நீர் கால்வாய்கள் அமைத்தல்
11.	கழிவு நீர் கால்வாய்கள் - பழுது நீக்கம்
12.	சாலைகள் – செப்பனிடுதல்
13.	தெரு விளக்குகள்
14.	மின் உபகரணங்கள் — பழுது நீக்கம்

ஆ. உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்:

35. இத்திட்டம் தமிழகத்திலுள்ள முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் ஒவ்வொரு குடும்பத்தினரும் ரூ.1 இலட்சம் வரை தனியார் மருத்துவமனையிலும் அரசு மருத்துவமனையிலுள்ள கட்டணப் பிரிவிலும் உயிர் காக்கும் உயர் சிகிச்சைப் பெறலாம். இதுவரை இத்திட்டத்தில் 20,904 குடும்பத்தினர் பயனாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இ. இலவச வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்:

36. இத்திட்டமும் தமிழகத்தில் உள்ள முகாம் வாழ் இலங்கை தமிழர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படுகிறது. இதுவரை, இத்திட்டத்தின் கீழ் 20,039 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஈ. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்:

37. இத்திட்டத்தின்கீழ், ஏழைப் பெண்களின் திருமணம் நடத்துவதற்காக அவர்களின் பெற்றோர் / பாதுகாவலருக்கு ரூ.20,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டமும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 31-3-2010 வரை, இத்திட்டத்தின்கீழ், 42 ஏழைப் பெண்கள் பயனடைந்துள்ளனர்.

உ. விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்:

38. தமிழகத்தில் உள்ள முகாம் வாழ் இலங்கை தமிழர்களுக்கும் விளையாட்டு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஊ. மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்:

39. சமுதாயத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளை பேணும் பொருட்டும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், உதவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும் திட்டம் முகாமிலுள்ள மாற்றுத்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

திறனாளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை, 209 முகாம் வாழ் மாற்றுத் திறனாளிகள் பயனடைந்துள்ளார்கள்.

எ. கலை, அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை வழங்குதல்:

40. கல்லூரியில் பயிலும் முகாம் வாழ் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கும் இலவச பேருந்து பயண அட்டை வழங்கும் திட்டம் அரசால் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதுவரை, 404 கல்லூரி மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

ஏ. ஓட்டுநர் உரிமம் வழங்குதல்:

41. முகாம் வாழ் தமிழர்கள் ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு ஏதுவாக அரசு தேவையான விதிமுறைகளைத் தளர்த்தி உள்ளது. இதனால் அவர்களின் வேலைவாய்ப்பு மேலும் அதிகரிக்கும். இதுவரை இத்திட்டத்தின்மூலம் 1,439 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.

ஐ. ஈமக்கிரியைக்கான தொகையை உயர்த்தி வழங்குதல்:

42. இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு நிதி உதவியை பெரியவர்களுக்கு ரூ.500/- சிறியவர்களாயின் ரூ.300/- என்று இருந்ததை இவ்வரசு ரூ.2,500/- ஆக உயர்த்தியுள்ளது. இதுவரை இத்திட்டத்தின்மூலம் 65 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

(10) இலங்கைத் தமிழர் நிவாரண நிதி:

43. முகாம் வாழ் இலங்கைத் தமிழர் விபத்தின் காரணமாக மரணமடைந்தால் அவரது குடும்ப வாரிசுகளுக்கு முதலமைச்சரின் இலங்கைத் தமிழர்களுக்கான நிவாரண நிதியிலிருந்து ரூ.15,000/- வழங்கப்படுகிறது.

(11) நிதி பயன்பாடு:

44. 2008–2009 ஆம் ஆண்டில் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கிய வகையில், ரூ.44.40 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் நிதியாண்டில் திருத்திய மதிப்பீட்டில் இப்பணிகளுக்கென ரூ.91.63 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

[2010 மே 14

(12) பாதிக்கப்பட்ட இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு நிவாரணப் பொருட்கள்:

45. தமிழக அரசு நான்கு கப்பல்களில் ரூ.40.35 கோடி மதிப்புள்ள உணவுப் பொருட்கள், துணிகள், சமையல் பாத்திரங்கள், பாய்கள், காலணிகள், குடிநீர் சுத்திகரிக்கும் மாத்திரைகள், முதலுதவிப் பொருட்கள், மகளிருக்கான சுகாதாரப் பொருட்கள், குழந்தைகளுக்கான ஆயத்த ஆடைகள் ஆகிய நிவாரணப் பொருட்களை உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்து இலங்கை அரசால் அமைக்கப்பட்ட முகாம்களில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு அனுப்பிவைத்தது. இப்பொருட்கள் இந்தியத் தூதரகத்தின் மூலமாக பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கம் / இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திடம், ஒப்படைக்கப்பட்டன.

46. ஐரோப்பிய தமிழர்களால் அனுப்பப்பட்ட நிவாரணப் பொருள்கள் அடங்கிய 'கேப்டன் அலி' என்கின்ற 'வணங்காமண்' கப்பலை இலங்கை அரசு, இலங்கைத் துறைமுகத்திற்குள் அனுமதிக்காததால் அக்கப்பல் சென்னை துறைமுகத்துக்கு திரும்பி வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடியான முயற்சியின் காரணமாகவும், மற்றும் முனைப்பான வலியுறுத்தலின் காரணமாகவும், அந்த நிவாரணப் பொருட்கள் உரிய அனுமதி பெறப்பட்ட பின்னர் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மேலும், மத்திய அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க அக்கப்பலை கொழும்பு துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டதற்கான கட்டணம், சுணக்கக் கட்டணம், மேலும் செலுத்தத்தக்க பல்வகைக் கட்டணங்களையும் அக்கப்பலின் சார்பாக தமிழக அரசு செலுத்தியது. அந்த நிவாரணப் பொருட்களை வேறு கப்பலுக்கு மாற்றி கொழும்பு துறைமுகத்திற்கு மீண்டும் அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்த இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திற்கு மேற்கண்ட செலவினங்களுக்காக ரூ.19.81 இலட்சம் ஈடுசெய்யப்பட்டது.

(13) தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு:

47. 1963 முதல் 1989 முடிய உள்ள காலத்தில் இந்தியக் குடியுரிமை பெற்ற தமிழ் வம்சாவளியினர் சுமார் 1,44,445 நபர்கள் பர்மாவிலிருந்து தாயகம் திரும்பினர். இதே போல் 1975 முதல் 1980 முடிய உள்ள காலத்தில், 2055 வியட்நாம் வாழ் தமிழரும் தாயகம் திரும்பினர். இலங்கையிலிருந்து 1965 முதல் 4,61,639 இலங்கை வாழ் தமிழர்கள் தாயகம் திரும்பியுள்ளனர்.

2010 மே 14]

48. தாயகம் திரும்பியவர்களுக்கு மறுவாழ்வு உதவி அளிக்கப்பட்டு, தேயிலை, ரப்பர், சின்கோனா தோட்டங்களிலும், கூட்டுறவு நூற்பாலைகள், ரெப்கோ வங்கியின் தொழில் மற்றும் விவசாயம் சார்ந்த மறுவாழ்வுத் திட்டங்களிலும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. மேலும் அவர்களுக்கு வணிக மற்றும் வீட்டுக் கடன் வழங்கப்பட்டது. இது தவிர, பால் பண்ணை, மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா மற்றும் தீப்பெட்டி தொழில் போன்ற சுயவேலை வாய்ப்புத் திட்டங்களாலும் இவர்கள் பயன்பெற்றனர். இந்த நிவாரண உதவித் திட்டங்கள் 31-3-1999 உடன் நிறைவுற்றன.

V. முன்னாள் படைவீரர் நலத் துறை

49. நமது நாடு, போர்கள் நிகழும் போதும் மற்றும் அமைதியான காலங்களிலும், ஒருமைப்பாடு குலையாமல் கட்டுக்கோப்பான நிலையில் இருப்பதற்கு அடித்தளமாக விளங்கும் இராணுவ வீரர்களின் ஈடு இணையற்ற தியாகங்களுக்குக் கடமைப்பட்டுள்ளது. எல்லைப்புறத்தில் பகைவர்கள் ஊடுருவலைத் தடுப்பது மட்டுமன்றி, நாட்டின் பல்வேறு பகுதிகளில் தீவிரவாதிகளை எதிர்கொள்வதிலும் நமது இராணுவ வீரர்கள் தங்கள் வீரத்தையும், துணிவையும் வெளிப்படுத்தி வருகிறார்கள். முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களது மறுவாழ்வு மற்றும் சீரமைப்பிற்காக முன்னாள் படைவீரர் நலத் துறை செயல்படுகின்றது. அதுமட்டுமன்றி, போரில் உயிரிழந்த வீரர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்களின் கைம்பெண்களுக்கு உதவியளித்தல் மற்றும் அவர்களுக்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் இந்தத் துறை அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. 25 மாவட்ட அலுவலகங்கள் இவ்வியக்ககத்தின்கீழ் செயல்படுகின்றன.

31-3-2010 அன்றைய நிலவரப்படி 2,11,850 முன்னாள் படைவீரர்கள் மற்றும் கைம்பெண்கள் மாவட்ட அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர். இவர்களின் நலன்பொருட்டு, இத்துறை பின்வரும் செயல்பாடுகளை கவனிக்கிறது:—

துறையின் செயல்பாடுகள்:

1. மறுவேலைவாய்ப்பு அளித்தல்
2. சுயவேலைவாய்ப்புத் திட்டங்கள்
3. மறுவாழ்வு பயிற்சித் திட்டங்கள்
4. தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி மற்றும் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் நிதி உதவிகள்

[2010 மே 14

5. மாநில நிர்வாகத்திற்கு உதவுதல் — மாநில அரசின் கருணைத் தொகை.

6. வீரதீரச் செயல்கள் / சிறப்பாக பணிபுரிந்தமை ஆகியவற்றிற்காக விருது மற்றும் பதக்கம் பெறுவோருக்கு பணமுடிப்பு மற்றும் பெற்றோருக்கு வழங்கப்படும் போர் பணி ஊக்க மானியம்.

7. கொடி நாள் நிதி திரட்டுதல்

8. போரில் உயிர்நீத்த படைவீரர்களுக்கு அரசு மரியாதை செலுத்துதல்

9. கார்கில் படைவீரர் நிவாரண நிதியுதவி

10. இராணுவ ஆட்சேர்ப்புத் தேர்வுக்கான முன்பயிற்சி

11. கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு

12. படைவீரர் மாளிகை

13. முன்னாள் படைவீரர் குறை தீர்த்தல்

14. கோயில் பாதுகாப்புப் படை

1. மறு வேலைவாய்ப்பு அளித்தல்:

50. முன்னாள் படைவீரர்களின் மறு வேலைவாய்ப்பிற்கு வழிவகை செய்யும் பணியினை முன்னாள் படைவீரர் நலத் துறை செய்து வருகிறது.

மாநில அரசுப் பணிகளில் பின்வருமாறு இட ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன:

1.	பிரிவு ‘சி’ காலியிடங்கள்	5%
2.	அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் அடிப்படைப் பணியாளர்கள் காலியிடங்கள்	10%
3.	வனக் காவலர் பணியிடங்கள்	10%
4.	வனப் பாதுகாவலர் பணியிடங்கள்	5%
5.	தேசிய மாணவர் படை அலுவலகங்களில் லஸ்கர், ஓட்டுநர் மற்றும் இரவுக் காவலர்கள் பணியிடங்கள்	25%

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

51. மேலும், காவல் துறையில் தொழில்நுட்பப் பிரிவில் இரண்டாம் நிலைக் காவலர் பணிகளில் சேருவதற்கு, உடல் தகுதி மற்றும் மருத்துவப் பரிசோதனைத் தேர்விலிருந்து முன்னாள் படைவீரர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் நியமனம் செய்யப்படும் பணிகளுக்கு முன்னாள் படைவீரர் அல்லது அவர் தம் குடும்பத்தைச் சார்ந்த ஒருவருக்கு முன்னுரிமைச் சான்று வழங்கப்படுகிறது. *2010* மார்ச் மாதம் இறுதி வரையிலான காலத்தில், *2,423* முன்னாள் படைவீரர்களைச் சார்ந்தோர் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

2. சுயவேலைவாய்ப்புத் திட்டங்கள்:

52. முன்னாள் படைவீரர்கள் சுயமாக வேலைவாய்ப்பு துவங்குவதை ஊக்கப்படுத்தும் வகையில் அரசு பல்வேறு திட்டங்களை உருவாக்கியுள்ளது. அதுமட்டுமின்றி, தற்போது *15* மாவட்டங்களில் *89* சுய உதவிக் குழுக்கள் செயல்படுகின்றன. வங்கியிலிருந்து அதிகபட்சம் ரூ.*2.5* இலட்சம் வரை கடன் பெறும் முன்னாள் படைவீரர்களுக்கு ஊக்கத் தொகை என்ற வகையில் *50%* வட்டி மானியமாக தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. முன்னாள் படைவீரர் / போரில் உயிர்நீத்த வீரர்களின் கைம்பெண்களால் நடத்தப்படும் சுய உதவிக் குழுக்கள் பெறும் அதிகபட்சம் ரூ*7.5* இலட்சம் வரையிலான வங்கிக் கடனுக்கு தொகுப்பு நிதியிலிருந்து *100%* வட்டி மானியமாக வழங்கப்படுகிறது. *31-3-2010* அன்றைய நிலவரப்படி, இத்திட்டத்தின்கீழ் *113* முன்னாள் படைவீரர்கள் / போரில் உயிர்நீத்த வீரர்களின் கைம்பெண்களுக்கு ரூ.*1.82* கோடி வரை வங்கிக் கடன் பரிந்துரைக்கப்பட்டு, வழங்கப்பட்டுள்ளது. மேலும், *391* முன்னாள் படைவீரர்கள் / போரில் உயிர்நீத்த வீரர்களின் கைம்பெண்கள் ரூ.*10.85* இலட்சம் வட்டி மானியம் பெற்று பயனடைந்துள்ளனர்.

53. முன்னாள் படைவீரரின் குடும்பத்தைச் சார்ந்த மகளிருக்கு இத்துறையால் நடத்தப்படும் தையல் அலகுகளில் தையல் பயிற்சி அளிக்கப்படுகிறது. *2009-2010* நிதியாண்டில், *80* முன்னாள் படைவீரரைச் சார்ந்தோர்களுக்கு தையல் பயிற்சிக்கான மூலப்பொருள்கள் மற்றும் உதவித் தொகை வழங்கியது, இலவச தையல் இயந்திரங்கள் மற்றும் மானிய விலையில் தையல் இயந்திரங்கள் வழங்கியது போன்றவற்றிற்கு ரூ.*5.78* இலட்சம் செலவிடப்பட்டது.

[2010 மே 14

54. மேலும் முன்னாள் படைவீரர்கள் சுயவேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள 'ஊக்குவிக்கும் கருத்தரங்குகள்' நடத்தப்பட்டுள்ளன. 2010 மார்ச் மாதம் இறுதி வரையில் 13 மாவட்டங்களைச் சேர்ந்த 1,070 முன்னாள் படைவீரர்கள் மேற்கண்ட கருத்தரங்குகளில் கலந்து கொண்டுள்ளனர்.

3. மறுவாழ்வு பயிற்சித் திட்டங்கள்:

55. தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையில் கால்நடை ஆய்வாளர் பணிக்கு 10 முன்னாள் படைவீரர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர், அவர்களின் 11 மாதப் பயிற்சி 29-3-2010 அன்று துவங்கியுள்ளது.

31-3-2010 அன்றைய நிலவரப்படி, 4,182 முன்னாள் படைவீரர்கள் மறு வேலைவாய்ப்பு பெற அரசு மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். 219 முன்னாள் படைவீரர்கள் அரசுத் துறை உள்ளிட்ட நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

56. முன்னாள் படைவீரர்களுக்கு செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் மற்றும் கிடைக்கும் பயன்கள் போன்றவை குறித்த தகவல்கள், வட்டார அளவில் நடைபெறும் முன்னாள் படைவீரர்கள் திரளணியின் போதும், ஒவ்வொரு சனிக்கிழமை மாலை 6-40 மணிக்கு அகில இந்திய வானொலி, சென்னை—மூலமும் பரவலாக அறிவிக்கப்படுகிறது.

4. தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி மற்றும் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் நிதியுதவிகள்:

(அ) தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி:

57. இந்நல நிதி தமிழ்நாடு முப்படை வீரர் வாரியத்திற்குத் தலைவராக இருக்கும் மாண்புமிகு முன்னாள் படைவீரர் நல அமைச்சர் அவர்களால், அமைக்கப்பட்ட முப்படை வாரியக் குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது. முன்னாள் படைவீரர் நலத் துறையின் அலுவல் வழி இயக்குநர் இக்குழுவின் தலைவராவார்; இணை இயக்குநர் இக்குழுவின் செயலாளர் ஆவார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

இந்நிதியின் அடிப்படை ஆதாரங்கள் பின்வருமாறு:—

(அ) கொடி நாள் நிதி வசூல் மற்றும்

(ஆ) படைவீரர் மாளிகைகள் மூலமாக பெறப்படும் வாடகை வரவு.

26-11-2009 அன்று நடைபெற்ற முன்னாள் படைவீரர் நல நிதியின் நிர்வாக குழுக் கூட்டத்தில், நல நிதியிலிருந்து நிதியுதவி பெற, வருமான உச்ச வரம்பு ரூ.50,000/—லிருந்து ரூ.1,00,000/—ஆக உயர்த்திடவும், நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வரும் பல்வேறு ஆயுட்கால மாதாந்திர நிதியுதவிகளை 1-12-2009 முதல் உயர்த்தி வழங்கிடவும், தீர்மானிக்கப்பட்டது.

58. தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து, 1-4-2009 முதல் 31-3-2010 வரையிலான காலத்தில், 12,415 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தைச் சார்ந்தோர்களுக்கு ரூ.7.88 கோடி நிதியுதவி, பல்வேறு திட்டங்கள் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) போரில் காயமடைந்து முழுமையாகச் செயல்திறன் இழந்த வீரர்களின் மறுவாழ்வு மையத்திற்கான நிதியுதவி:

59. போரில் காயமடைந்து முழுமையாகச் செயல்திறன் இழந்த வீரர்களின் மறுவாழ்வு மையம், கிர்கீ, புனேவில் அனுமதிக்கப்பட்டுள்ள தமிழகத்தைச் சார்ந்த 7 வீரர்களின் நலனைக் காக்கும் பொருட்டு 2009-2010ஆம் நிதியாண்டில் சிறப்பு நேர்வாக தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.7 இலட்சம் வழங்க ஆணையிடப்பட்டது.

(இ) தொகுப்பு நிதி:

60. தொகுப்பு நிதி (i) போருக்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் சீரமைப்புப் பணிகளுக்காக முன்பு ஏற்படுத்தப்பட்ட நிதியின் எஞ்சியுள்ள தொகையையும் (ii) முன்னாள் படைவீரர்களுக்கான மறு கட்டமைப்பு மற்றும் மறுவாழ்வுக்கான சிறப்பு நிதியும் மற்றும் (iii) மத்திய அரசு தேசிய பாதுகாப்பு நிதியிலிருந்து மாநில அரசிற்கு வழங்கப்பட்ட பங்குத் தொகையையும், அதற்கு ஈடாக மாநில அரசால் வழங்கப்பட்ட பங்குத் தொகையையும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

[2010 மே 14

61. இந்நிதி, மேதகு ஆளுநரைத் தலைவராகக் கொண்ட மாநில மேலாண்மைக் குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது.

1-4-2009 முதல் 31-3-2010 வரையான காலத்திற்கு, தொகுப்பு நிதியிலிருந்து பல்வேறு நிதியுதவிகள் வழங்கியதன் மூலம்ரூ.27.10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், 1,036 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தைச் சார்ந்தோர்கள் இந்நிதியின்மூலம் பயனடைந்துள்ளனர்.

4. மாநில நிருவாகத்திற்கு உதவுதல்—மாநில அரசின் கருணைத் தொகை:

62. மாநில நிருவாகத்திற்கு உதவிடும் நடவடிக்கைகளின் போது உயிரிழந்த படைவீரர் / எல்லை பாதுகாப்புப் படைவீரர்களின் குடும்பத்திற்கு ரூ.1 இலட்சமும், ஊனமுற்ற படைவீரருக்கு ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.10,000/- முதல் ரூ.40,000/- வரையும், தமிழக அரசால் கருணைத் தொகையாக வழங்கப்பட்டு வந்தது. 1-4-2008 முதல் இத்தொகை உயிரிழந்த படைவீரரின் குடும்பத்தினருக்கு ரூ.5 இலட்சமாகவும், ஊனமுற்ற படைவீரருக்கு ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.50,000/- முதல் ரூ.2 இலட்சம் வரையும் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

5. வீர தீரச் செயல்கள் / சிறப்பாகப் பணிபுரிந்தமை ஆகியவற்றிற்காக விருது மற்றும் பதக்கம் பெறுவோருக்கு பணமுடிப்பு மற்றும் பெற்றோருக்கு வழங்கப்படும் போர் பணி ஊக்க மானியம்:

63. 2009-2010 ஆம் ஆண்டில், வீர தீர செயல்புரிந்தமைக்கு விருது பெற்ற / போற்றத்தக்க சேவைக்கான விருதுபெற்ற 12 படைவீரர்களுக்கு ரூ.53,000/- பணமுடிப்பு வழங்கப்பட்டுள்ளது. வீர தீர செயல்புரிந்தமைக்கு விருது பெற்ற இரு படைவீரர்களுக்கு நிலத்திற்குப் பதிலாக ரூ.80,000/- பணமுடிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் வீர விருதுப் பெற்ற 15 படைவீரர்களுக்கு ஆண்டு உதவித் தொகையாக ரூ.5,650/- வழங்கப்பட்டுள்ளது.

64. தமது ஒரே மகன் / மகள் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட மகன்கள் / மகள்களை படைப் பணிக்கு அனுப்பும் பெற்றோர்களை, அரசு ஆண்டுதோறும் மானியம் வழங்கி கௌரவிக்கிறது. இந்த வகையில், 2009-2010 ஆம் ஆண்டில் 566 பெற்றோர்களுக்கு ரூ.4.95 இலட்சம் போர்ப் பணி ஊக்க மானியமாக தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

2010 மே 14]

7. கொடி நாள் நிதி திரட்டுதல்:

65. படைவீரர் கொடி நாள் நிதியை அடிப்படை ஆதாரமாகக் கொண்டு பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு, கொடி நாள் நிதி வசூலில் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது. மாவட்ட ஆட்சியர்களின் சீரிய முயற்சியினால், கொடி நாள் நிதியானது *2008* ஆம் ஆண்டின் *(7-12-2008* முதல் *6-12-2009* வரை) இலக்கான ரூ.*7.64* கோடியினையும் மிஞ்சி, சிறந்த முறையில் இத்துறையால் ரூ.*11.54* கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. கொடி நாள் *2009*ஆம் ஆண்டிற்கான இலக்கு ரூ.*8.40* கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

8. போரில் உயிர்நீத்த படைவீரர்களுக்கு அரசு மரியாதை செலுத்துதல்:

66. தாய்நாட்டினைப் பாதுகாத்திட தமது இன்னுயிரை ஈந்த படைவீரர்களின் உன்னத தியாகத்தைப் போற்றும் வகையில், வீர மரணம் அடைந்த முப்படை வீரர்களுக்கு அரசு மரியாதையுடன் இறுதி சடங்குகள் நடைபெறுகின்றன. இவற்றில் அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்கள் / காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலத் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

9. கார்கில் படைவீரர் நிவாரண நிதியுதவி:

67. கார்கில் நிவாரண நிதி, அரசின் பொதுத் (இராணுவம்) துறையால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. பகைவர்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு உயிர்த் தியாகம் செய்த தமிழ்நாட்டைச் சார்ந்த படைவீரரின் குடும்பத்தினருக்கும் மற்றும் ஊனமுற்ற படைவீரருக்கும் பின்வருமாறு நிவாரண நிதியுதவி வழங்கப்படுகிறது.

1.	வீர மரணம் அடைந்த வீரரின் குடும்பத்திற்கு		ரூபாய் ஐந்து இலட்சம்
2.	ஊனமடைந்தவர்கள்:—		
	(i)	முழுவதுமாக ஊனமடைந்தவர்கள்/ இரு கால்களோ, கைகளோ அல்லது இரு கண்களையும் இழந்தவர்கள்	ரூபாய் மூன்று இலட்சம்
	(ii)	ஒரு கால், கை அல்லது ஒரு கண்ணை இழந்தவர்கள்	ரூபாய் ஒரு இலட்சம்

[2010 மே 14

2009—2010 ஆம் நிதியாண்டில், ஜம்மு—காஷ்மீர் பகுதியில் தீவிரவாதிகளின் ஊடுருவலுக்கு எதிரான நடவடிக்கையில் தன் உயிரைத் தியாகம் செய்த தமிழ்நாட்டைச் சார்ந்த லான்ஸ் நாயக் மருசுநாத் என்ற படைவீரரின் வாரிசுதாரருக்கு ரூபாய் ஐந்து இலட்சம், கார்கில் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

68. மத்திய ரிசர்வ் காவல் படையைச் சார்ந்த திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், புதுப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த இராஜேந்திரன் என்பவரின் மகன் இராஜசேகர் ஜம்மு—காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் பணிபுரிந்து கொண்டிருந்த போது தீவிரவாதிகளால் கொல்லப்பட்டார். உயிரிழந்த இராஜசேகரின் மனைவி திருமதி அமுதா என்பவருக்கு கார்கில் இராணுவ வீரர்கள் நிவாரண நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் நிவாரண நிதியுதவியும் மற்றும் ஜவ்வாது மலை கும்லாமரத்தூர் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் சத்துணவு அமைப்பாளர் பணி நியமனமும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வழங்கப்பட்டது.

10. இராணுவ ஆட்சேர்ப்பு தேர்வுக்கான முன்பயிற்சி:

69. இராணுவ சேவை நமது இளைஞர்களுக்கு நல்லதொரு வாழ்வாதாரமாக அமைந்துள்ளது. எனவே, தமிழ்நாட்டைச் சார்ந்த இளைஞர்கள் இராணுவத்தில் அதிக அளவில் சேருவதை ஊக்கப்படுத்துவதற்கும், எழுத்துத் தேர்வை சிறந்த முறையில் எதிர்கொள்ளவும் ஆயத்தப்பயிற்சி இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது. 2009–2010 ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டைச் சார்ந்த 551 இளைஞர்களுக்கு ரூ.2.22 இலட்சம் அரசு செலவில் ஆயத்தப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

11. கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு:

70. தமிழ்நாட்டிலுள்ள கல்வி நிறுவனங்களில் முன்னாள் இராணுவத்தினரின் சிறார்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முன்னாள் படைவீரர் குழந்தைகளுக்கு பொறியியல் கல்வி நிலையங்களில் உள்ள சிறப்பு இடஒதுக்கீட்டினை 81-லிருந்து 150 இடங்களாகவும், இரண்டாம் ஆண்டுக்கான நேரடி சேர்க்கையில் (Lateral Entry) சிறப்பு இடஒதுக்கீட்டினை 8—லிருந்து 15 இடங்களாக உயர்த்தப்பட்டுள்ளது. மருத்துவப் பட்டப் படிப்புக்கு இரண்டு இடங்களும், பல் மருத்துவ பட்டப் படிப்புக்கு ஒரு

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

இடமும், செவிலியர் பயிற்சி படிப்புக்கு அறுபது இடங்களும், பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் பட்டயப் படிப்பிற்கு எண்பது இடங்களும், ஒவ்வொரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பட்டப் படிப்புக்கு ஆறு இடங்களும், ஆசிரியர் பயிற்சிப் படிப்பில் நூற்று முப்பத்து இரண்டு இடங்களும், சட்டப் படிப்பு பிரிவில் ஒரு விழுக்காடு இடமும் ஒதுக்கீடு செய்ததும் இவற்றில் அடங்கும். இதுமட்டுமின்றி, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரியில் தமிழாசிரியர் பயிற்சி படிப்பில் ஒரு இடமும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப் படிப்பில் இரண்டு பாடப் பிரிவுகள் வரையுள்ள கல்லூரிகளில் ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு இடங்களும், இரண்டுக்கும் மிகையாக பாடப் பிரிவுகள் உள்ள கல்லூரிகளில் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் மூன்று இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் முன்னாள் படைவீரர் குழந்தைகளுக்கு மருத்துவம் சார்ந்த மருந்தியல், செவிலியர் மற்றும் இயன்முறை ஆகிய பட்டப் படிப்புக்களில் தலா ஓர் இடம் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், உணவு பதப்படுத்தலுக்கான பொறியியல் பட்டப் படிப்பில் (B. Tech.) ஒரு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12. படைவீரர் மாளிகைகள்:

71. முன்னாள் படைவீரர்களின் நலனுக்காக நிதி ஆதாரத்தை அதிகரிக்க தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிமூலம் வணிக வளாகம் / அலுவலக வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

72. தூத்துக்குடி மாவட்டத்தில் முன்னாள் படைவீரர் மையம் கட்டுவதற்கு, ரூ.47.81 இலட்சம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து செலவிட அரசு அனுமதி வழங்கப்பட்டது. கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு 19-11-2009 அன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

73. கோயம்புத்தூர் மாவட்ட முன்னாள் படைவீரர் வளாகத்தில், தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து ரூ.1.98 கோடி செலவில் அடுக்குமாடி அலுவலக வளாகம் கட்டுவதற்கு அரசின் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பொதுப் பணித் துறையிடம் கட்டுமானப் பணி ஒப்படைக்கப்பட்டது. கட்டுமானப் பணிக்கென ரூ.1.25 கோடி வழங்கப்பட்டு, தரைத்தளம் முடிக்கப்பட்டு கட்டுமானப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

[2010 மே 14

74. முன்னாள் படைவீரர் மையம் / படைவீரர் மாளிகைகளில் வாடகைக்கு இயங்கும் அலுவலகங்கள் மற்றும் வர்த்தக வளாகங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்திட விதிக்கப்படும் நூற்றுவீதக் கட்டணம் (Centage charges) செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

75. திருச்சிராப்பள்ளி மாவட்ட முன்னாள் படைவீரர் மைய கட்டடம் இடிக்கப்பட்டு, அவ்விடத்தில், புதிய கட்டடம் ரூ.32.63 இலட்சத்தில் கட்ட அரசின் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, கட்டுமானப் பணி பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

76. சிவகாசி, மதுரை மற்றும் கடலூரில் உள்ள இராணுவத்தினர் மாளிகைகள்; கொடைக்கானலிலுள்ள ஓய்வு இல்லம்; தூத்துக்குடி மற்றும் உதகையிலுள்ள முன்னாள் படைவீரர் மையங்கள் ஆகியவற்றில் சிறப்பு பழுதுபார்த்தல்/கூடுதல் பணிகள் மேற்கொள்ள மொத்தம் ரூ.17.06 இலட்சத்திற்கு அரசினால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பொதுப் பணித் துறையிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

13. முன்னாள் படைவீரர் குறை தீர்த்தல்:

(அ) மாவட்ட அலுவலகங்கள்:

77. முன்னாள் படைவீரர்கள், போரில் உயிர்நீத்த வீரர்களின் கைம்பெண்கள் மற்றும் முப்படையில் பணிபுரியும் படைவீரர்களின் குறைகள் இத்துறைமூலம் தீர்வு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு திங்கட்கிழமையும், மாவட்ட ஆட்சித் தலைவரால் நடத்தப்படும் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட முன்னாள் படைவீரர் நல துணை / உதவி இயக்குநர்கள் கலந்துக்கொள்கிறார்கள். மேலும், ஒவ்வொரு காலாண்டிலும், மாவட்ட ஆட்சித் தலைவரால் முன்னாள் படைவீரர்கள் / போரில் உயிர்நீத்த வீரர்களின் கைம்பெண்களுக்கென சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரால் கிராமங்களில் நடத்தப்படும் மனு நீதி நாள் கூட்டங்களிலும், மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலர்கள்

கலந்து கொள்கிறார்கள். படைவீரர்கள் / அவர்தம் குடும்பத்தினரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிலுவை இருப்பின், அவற்றை விரைவாக தீர்வு செய்ய, மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது.

78. 1-4-2009 முதல் 31-3-2010 வரையிலான காலத்தில் காலாண்டு சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டங்களில் முன்னாள் படைவீரர்கள் / போரில் உயிர்நீத்த வீரர்களின் கைம்பெண்களிடமிருந்து 2,759 மனுக்களும், முப்படையில் பணிபுரியும் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரிடமிருந்து 651 மனுக்களும் பெறப்பட்டு தீர்வு செய்யப்பட்டன.

ஆ. முன்னாள் படைவீரர் திரளணி மற்றும் ஒய்வூதிய அதாலத்:

79. முன்னாள் படைவீரர்களுக்கான திரளணி வட்டார அளவில் நடத்தப்பட்டு, முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு வழங்கப்படும் நல உதவிகள், சலுகைகள் மற்றும் வேலைவாய்ப்பு குறித்த தகவல்கள் பரவலாக்கப்படுகின்றன. 19-07-2009 அன்று மதுரையில் நடைபெற்ற முன்னாள் படைவீரர் திரளணியில் பெறப்பட்ட 34 மனுக்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலகங்களுக்கு தக்க நடவடிக்கை எடுக்கும்பொருட்டு அனுப்பப்பட்டுள்ளது.

80. 12-11-2009 மற்றும் 13-11-2009 தேதிகளில் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற ஒய்வூதிய அதாலத் கூட்டத்தில், 1439 மனுக்கள் பெறப்பட்டு அதில் 459 மனுக்கள் உடனடியாகத் தீர்வு செய்யப்பட்டன. ஏனைய மனுக்கள் உரிய நடவடிக்கைக்காக இராணுவ ஒய்வூதியக் கணக்கு கட்டுப்பாட்டு அலுவலருக்குப் பரிந்துரைக்கப்பட்டது.

14. கோயில் பாதுகாப்புப் படை:

81. தமிழக கோயில்களிலுள்ள சிலைகள் மற்றும் விலைமதிப்பற்ற பொருட்களை பாதுகாக்கும் வகையில், கோயில் பாதுகாப்புப் படையில் 2,103 முன்னாள் படைவீரர்கள் பணியமர்த்தப்பட்டு, அவர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூ.1,880/- வழங்கப்பட்டு வருகிறது.

[2010 மே 14

VI. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ)

82. இந்தியாவிலேயே முன்னாள் படைவீரர்களுக்கென பல்வேறு திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்குகிறது. முன்னாள் படைவீரர்களின் வருவாயை அதிகரிக்கவும், அவர்களது தொழில் மற்றும் பொருளாதார நிலையினை மேம்படுத்தவும், தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ), 1956ஆம் ஆண்டின் நிறுவன (கம்பெனிகள்) சட்டத்தின்படி, 28-1-1986 அன்று பதிவு செய்யப்பட்டு நிறுவப்பட்டது. இது தற்சார்பு பெற்ற இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனமாகும். இதன் உரிமை பெற்ற மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ஆகியவை, முறையே, ரூ.50 இலட்சம் மற்றும் ரூ.22.91 இலட்சம் ஆகும்.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் முக்கிய பணிகள்

(அ) பாதுகாப்புப் பணி, சென்னை மாநகராட்சியின் சார்பாக வாகனங்கள் நிறுத்துவதற்கான கட்டணம் வசூலித்தல், இந்திய எண்ணெய் மற்றும் எரிவாயு கழகத்தில் தொலைத் தகவல் தொடர்புப் பிரிவில் பணியாளர்களை அமர்த்துதல் ஆகிய பல்வேறு வகையான வணிக நடவடிக்கைகளை இக்கழகம் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

(ஆ) தகுதிவாய்ந்த முன்னாள் படைவீரர்கள், மாவட்ட அலுவலகங்களில் பதிவு செய்த பின், இக்கழகத்தால் மத்திய மற்றும் மாநில அரசாங்கம் மற்றும் அதன் நிறுவனங்களில், ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்பாளர்கள், எழுத்தர்கள், ஓட்டுநர்கள், செவிலியர்கள், தீயணைக்கும் பணியாளர்கள் மற்றும் தொலைசெய்தி இயக்குபவர்கள் ஆகிய பணிகளில் பணியமர்த்தப்படுகின்றனர்.

(இ) சென்னை மாநகரில் அறிவிப்பு செய்யப்பட்ட இடங்களில், வாகனங்களை நிறுத்துவதற்கு கட்டணம் வசூலிக்கும் பொறுப்பினை இக்கழகத்திற்கு, சென்னை மாநகராட்சி அளித்துள்ளது. இப்பணியின்மூலம் ஈட்டப்படும் நிகர இலாபத்தை சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் முறையே 70 : 30 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன.

(ஈ) 31-3-2010ஆம் தேதிய நிலவரப்படி, தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் மூலம் மாநில, மத்திய அரசாங்கம் மற்றும்

2010 மே 14]

அதன் நிறுவனங்களில் 7,730 முன்னாள் படைவீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

VII. மாநில மனித உரிமைகள் ஆணையம்

83. 1993ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், பிரிவு 21-ன்படி மாநில மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டு 17-4-1997 முதல் சென்னையில் இயங்கி வருகிறது.

84. இவ்வாணையம் எண் 143, பி. எஸ். குமாரசாமி ராஜா சாலை(கிரீன் வேஸ் சாலை), சென்னை—28—ல் உள்ள திருவரங்கம் மாளிகையில் இயங்கிவருகிறது. மனித உரிமை பாதுகாப்பு சட்டத்தில் நிர்ணயித்தவாறு ஆணையத்தின் நிருவாகச் செலவினங்களுக்கான நிதி, சட்டப் பேரவையின் ஒப்புதலுடன் மானியமாக தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

85. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் நிரப்பப்படாமல் இருந்த தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர் பதவிகளுக்கு உடனடியாக நியமனம் செய்ததால் 5-8-2006 முதல் முழு எண்ணிக்கையுடன் இவ்வாணையம் இயங்கி வருகிறது. ஆணைய வளாகத்தில் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.3.48 கோடி வழங்கப்பட்டு 30-1-2010 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

VIII. முதலமைச்சரின் தனிப் பிரிவு

86. முதலமைச்சரின் தனிப் பிரிவு, பொது மக்களின் குறைகளுக்கு பயனுள்ள உரிய தீர்வு காண்பதிலும், அவர்களின் இடர்பாடுகளைக் களைவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இப்பிரிவு, தனி அலுவலரின் தலைமையில் இயங்கி வருகிறது. அவர் பொது மக்களிடமிருந்து வரப்பெறும் குறைகளை விரைவில் தீர்வு செய்வதை உறுதி செய்யும் பொருட்டு அரசின் அனைத்து நிலையில் உள்ள அலுவலர்களை நேரடியாகத் தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்.

87. மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோர் தலைமைச் செயலகத்திலும், இல்லத்திலும், சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போதும், மற்றும் மின்னஞ்சல் நிகரி, தனியார் அஞ்சல் மற்றும் அஞ்சல் வழியாகவும் பொதுமக்களிடமிருந்து பெறும் மனுக்கள் மாவட்ட வாரியாகவும், துறை வாரியாகவும் பிரிக்கப்பட்டு உரிய நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு

[2010 மே 14

அனுப்பப்படுகின்றன. மனுக்களில் கண்டுள்ள அனைத்து விவரங்களும் கணினியில் தொடர் நடவடிக்கைக்காக பதிவு செய்யப்படுகிறது. தொடர் ஆய்வு கூட்டங்களின்மூலம், சம்பந்தப்பட்ட தலைமைச் செயலக துறைகள், துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களிடம் மனுக்கள் குறித்த தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிருவாக அமைப்பு

88. முதலமைச்சரின் தனிப் பிரிவின் தனி அலுவலர், தனிப் பிரிவின் அனைத்து அலுவல்களையும் கவனித்து வருவதுடன், அனைத்து வேலை நாட்களிலும் பொது மக்களிடமிருந்து மனுக்களை நேரடியாகப் பெறுகிறார். மேலும், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் முதலமைச்சரின் செயலகத் தனி அலுவலர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இல்லத்தில் வரப்பெறும் கோரிக்கை மனுக்களை கவனிப்பதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சுற்றுப்பயணங்களிலும் கலந்து கொண்டு பொதுமக்களின் மனுக்களைப் பெற்று அவற்றின் மீதான தீர்வுகளை கவனித்து வருகிறார்.

89. முதலமைச்சரின் தனிப் பிரிவின் தனி அலுவலர், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தனித் துணை ஆட்சியர்கள் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்), காவல் துறை ஆணையர்கள் மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள் அலுவலகத்தைச் சேர்ந்த ஒருங்கிணைப்பு அலுவலர்களுடன் மாதாந்திர ஆய்வினை நடத்தி வருகிறார். இதுமட்டுமின்றி, தலைமைச் செயலகத் துறைகளின் சார்புச் செயலாளர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer) மற்றும் துறைத் தலைமை அலுவலர்களுடன் முதலமைச்சரின் தனிப் பிரிவு மனுக்களுக்கான மாதாந்திர ஆய்வு நடத்தி, அந்த மனுக்களின் மீது உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பயனுள்ள தீர்வுகளை துரிதப்படுத்துவதுடன், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் கவனமாக ஆய்வு மேற்கொள்கிறார்.

90. இவ்வலுவலகத்தில், 1-4-2009 முதல் 31-3-2010 வரை 3,05,833 மனுக்கள் பெறப்பட்டு இவற்றில் 1,76,494 மனுக்கள் ஆய்வு செய்து தீர்வு செய்யப்பட்டுள்ளன. மேலும் அதே கால்கட்டத்தில் மாண்புமிகு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் வழியாக 1,144 மனுக்கள் பெறப்பட்டு அதில் 683 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

2010 மே 14]

மாண்புமிகு முதலமைச்சரின் தனிப் பிரிவு மூலமாக அளிக்கப்படும் உதவிகள்

கல்வி நிதியுதவி:

91. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து வறிய நிலையில் வாழும் குடும்பங்களைச் சார்ந்த 200 ஏழை மாணவர்களுக்கு (190 பொறியியல் கல்லூரி மாணவர்கள், 10 மருத்துவக் கல்லூரி மாணவர்கள்) தலா ரூ.25,000/— வீதம், மாண்புமிகு முதலமைச்சர் நிதி வழங்கியுள்ளார்.

உயிர் காக்கும் அறுவை சிகிச்சைக்காக வழங்கப்படும் மருத்துவ நிதியுதவி

92. 31-3-2010 உடன் முடிவுற்ற ஆண்டில், மாண்புமிகு முதல்வர், வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழும் மக்களுக்கு உயிர்காக்கும் சிகிச்சைக்கென ரூ.2,48,85,000/— தமிழ்நாடு மாநில நோயாளர் நிதியுதவி அமைப்பின் சுழல் நிதியிலிருந்து 997 நபர்களுக்கு, ஒரு நபருக்கு ரூ.25,000/—க்கு மிகாமல் நிதியுதவி வழங்கியுள்ளார்கள்.

நிதியுதவி பெற்று நடைபெற்ற அறுவை சிகிச்சைகளின் விவரம் பின்வருமாறு:

சிகிச்சை பற்றிய விவரங்கள்	பயன்பெற்றோர்
இருதய அறுவை சிகிச்சைகள்	871
சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள்	59
புற்றுநோய் அறுவை சிகிச்சைகள்	41
தண்டுவட அறுவை சிகிச்சைகள்	07
மூளை மற்றும் நரம்பு மண்டல அறுவை சிகிச்சைகள்	12
சிறுநீர் உபாதை/சிறுநீரக கல் நோய்களுக்கான அறுவை சிகிச்சை	02
கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகள்	01
இடுப்பு மூட்டு மாற்று (Hip Joint replacement) அறுவை சிகிச்சைகள்	04

[2010 மே 14

2010–2011 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் – (பகுதி–II)

வரிசை எண்	திட்டப் பணிகளின் விவரம்	செலவு (ரூபாய் இலட்சத்தில்)
	அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம்.	
1.	3 சீருந்துகள் வாங்குதல்	28.00
2.	அறைகலன் மற்றும் பொருட்கள் வாங்குதல்	2.88
3.	சமையலறைப் பொருட்கள் மற்றும் மூன்று குளிர்சாதனப் பெட்டிகள் வாங்குதல்	1.13
4.	29 அங்குல தொலைக்காட்சிப் பெட்டிகள் ஆறு வாங்குதல்.	0.87
5.	25 ஒற்றைக் கட்டில் மெத்தை வாங்குதல்	0.93
	தமிழ்நாடு இல்லம், புது டெல்லி.	
6.	புது டில்லியிலுள்ள பழைய தமிழ்நாடு இல்லத்திற்கு சத்தமில்லா டீசல் மின் உற்பத்தி சாதனம் ஒன்று வாங்குதல்.	26.00
7.	கூடுதல் விருந்தினர் இல்லத்தின் சமையலறைக்கு கூடுதல் சாதனங்கள் வாங்குதல்	10.00
8.	கேட்டரிங் மற்றும் பொறியியல் கோட்டங்களின் பயன்பாட்டிற்காக ஆம்னி கார்கோ வேன் ஒன்று வாங்குதல்.	3.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS — வாய்மையே வெல்லும்

2010 மே 14]

வரிசை எண்.	திட்டப் பணிகளின் விவரம்	செலவு (ரூபாய் இலட்சத்தில்)
9.	புதுடெல்லியிலுள்ள கூடுதல் விருந்தினர் இல்லத்தின் மூன்றாவது மற்றும் நான்காவது தளத்தில், இணையதள இணைப்புக்கு வசதி செய்து கொடுத்தல்	1.00
10.	புதுடெல்லியில் தமிழ்நாடு இல்லத்திலுள்ள வரவேற்புப் பிரிவு மற்றும் நிருவாக பிரிவிற்கு நகலெடுக்கும் இயந்திரம் ஒன்றும் வரவேற்புப் பிரிவுக்கு நிகரி இயந்திரம் ஒன்றும் வாங்குதல்.	1.40
	தமிழகம் விருந்தினர் இல்லம் – உதகமண்டலம்.	
11.	உதகமண்டலத்திலுள்ள தமிழக விருந்தினர் இல்லத்திற்கு சமையலறை உபகரணங்கள் வாங்குதல்.	1.10
12.	உதகமண்டலத்திலுள்ள தமிழக விருந்தினர் இல்லத்திறகு "லினன்" மற்றும் கோட்டு ஹாங்கர்கள் வாங்குதல்.	0.40
13.	உதகமண்டலத்திலுள்ள தமிழக விருந்தினர் இல்லத்தின் சமையலறையிலுள்ள நீராவி கொதிகலனை பழுதுபார்த்தல்.	3.00
14.	உதகமண்டலத்திலுள்ள தமிழக விருந்தினர் இல்லத்தின் கட்டட பராமரிப்பு அலுவலகத்திற்கு கணினி மற்றும் அச்சுப் பொறி வாங்குதல்.	1.00

வரிசை எண்.	திட்டப் பணிகளின் விவரம்	செலவு (ரூபாய் இலட்சத்தில்)
15.	உதகமண்டலம் தமிழக விருந்தினர் இல்லத்தை மேம்படுத்துவதற்காக தெருவிளக்குகளிலும் வெளிப்புற பொருத்திகளுக்கான எல்.டி.யு.ஜி. கேபிள் ஏற்பாட்டு முறைகளைச் செய்தல்.	2.50
16.	கூடுதல் எமர்ஜென்ஸி லைட்டுகள் அறையை சூடாக்கும் சாதனங்கள் மற்றும் கெய்சர்களுடன் உதகமண்டலத்திலுள்ள தமிழக விருந்தினர் இல்லத்தை மேம்படுத்துதல்.	2.00
	முன்னாள் படைவீரர் நலம்	
17.	பணியாளர் சீருந்து வாங்குதல்	5.16
	மறுவாழ்வுத் துறை இயக்ககம்	
18.	இயக்ககத்திற்கும் மாவட்ட அலுவலகங்களுக்கும் 15 கணினிகள் வாங்குதல்.	6.71
19.	இயக்ககத்திற்கு 3 நகலெடுக்கும் இயந்திரங்கள் வாங்குதல்	1.87
20.	4 சீர்வளி சாதனங்கள் வாங்குதல்	1.17
	மொத்தம்	100.12

X. நிதி ஒதுக்கீட்டின் விவரங்கள்

மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் துறையின்கீழ் 2010-2011-ம் நிதியாண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

2010 மே 14]

இணைப்பு

கோரிக்கை எண் 38–ன்கீழ் 2010–2011 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு விவரங்கள்

(ரூபாய் ஆயிரத்தில்)

	2008-2009	2009-2010	2009-2010	2010-2011
கணக்குத் தலைப்புகள்	கணக்குகள்	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு	திருத்த மதிப்பீடு	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு
2014 நீதி நிருவாகம்	3,89	5,00	5,00	5,00
2015 தேர்தல்கள்	37,19,76	113,76,38	126,30,18	40,89,64
2052 தலைமைச் செயலகம் பொதுவான பணிகள்	21,72,53	31,20,18	26,70,83	27,85,00
2059 பொதுப் பணிகள்	4,01,78	3,42,29	3,42,29	3,42,69
2070 ஏனைய நிருவாகப் பணிகள்	17,11,99	20,79,93	23,44,85	24,44,18

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 14

2075 பல்வகைப் பொதுவான பணிகள்	4,49,48	3,73,02	4,52,96	3,88,13
2216 வீட்டு வசதி	2,74	17,78	7,78	17,78
2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்	51,58,25	59,95,35	101,43,76	63,24,57
2251 தலைமைச் செயலகம் - சமூகப் பணிகள்	58,39	87,10	85,76	93,99
4216 வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு	-	-	1	1
4235 சமூகப் பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு	-	5,00,00	-	-
4425 கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு	-	-	2,73,00	-

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

இணைப்பு II

(255ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 38—தேர்தல்கள்

கொள்கை விளக்கக் குறிப்பு 2010–2011

தேர்தல் செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடு "2015.00 தேர்தல்கள்" என்ற பெருந்தலைப்பின்கீழ் மானியக் கோரிக்கை எண் 38-இல் இடம் பெற்றுள்ளது. 1-1-2010 ஆம் நாளை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரித்தல் / திருத்தம் மேற்கொள்ளுதல், புகைப்பட வாக்காளர் பட்டியல் அச்சிடுதல், ஏற்கெனவே வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்படாத வாக்காளர்கள் மற்றும் புதிய வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்கும், நிரந்தர தேர்தல் பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதர படிகள், பயணச் செலவுகள் போன்ற செலவினங்களை மேற்கொள்வதற்காகவும் இம்மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.40,89,64,000/- நிதி தேவைப்படுகிறது. தற்சமயம் தமிழ்நாட்டிலிருந்து மக்களவைக்கோ, மாநில சட்டப் பேரவைக்கோ காலியிடம் ஏதுமில்லை.

மானியக் கோரிக்கை எண் 38ன்கீழ் தேர்தலுக்காக 2010-2011 ஆம் ஆண்டிற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கு செலவிட தேவைப்படும் தொகை ரூ.40,89,64,000/- (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

2015. தேர்தல்கள் (ஐ. திட்டத்தில் சேராதது)

102. தேர்தல் அதிகாரிகள்		ரூபாய்
எஎ. சட்டப் பேரவை, நாடாளுமன்றத் தொகுதிகள்	-	*7,58,74,000/-*
103. புகைப்பட வாக்காளர் பட்டியல்களை தயாரித்து அச்சிடுதல்		
எஎ. சட்டப் பேரவைத் தொகுதிகள்	-	*27,52,28,000/-*

[2010 மே 14

104. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநிலச் சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எஎ. நாடாளுமன்ற மக்களவைக்கும் சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் நடைபெறும் தேர்தல்கள் - 41,85,000/-

105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எஎ. இடைத் தேர்தல்கள் - 16,000/-

எபி. மக்களவைக்குத் தேர்தல்கள் - 25,26,000/-

106. மாநிலச் சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எஎ. மாநில சட்டப் பேரவை - 34,20,000/-

108. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்

எஎ. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம் - 4,77,15,000/-

மொத்தம் - 40,89,64,000/-

மேற்சொன்ன செலவினங்களுக்கான மதிப்பீடுகள் கீழே விவரமாக விவரிக்கப்பட்டுள்ளன.

102. தேர்தல் அதிகாரிகள்

எஎ. சட்டப் பேரவை, நாடாளுமன்றத் தொகுதிகள்

மதிப்பீடு: ரூ.7,58,74,000/–

1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், பிரிவு 13 எ-ன்கீழ் தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்பட்ட தலைமைத் தேர்தல் அதிகாரி ஒவ்வொரு மாநிலத்திலும் அம்மாநிலத்தின் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும்

2010 மே 14]

வாக்காளர் பட்டியல் தயாரித்தல்/திருத்தம் மேற்கொள்ளும் பணிகள் மற்றும் 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், பிரிவு 20-ன்படி நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்ற தேர்தல் நடத்தும் பணிகளையும் மேற்கொள்வார். தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அலுவல் பணியில் உதவி புரிய ஒரு இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி (கணினிமயமாக்குதல்) துணைச் செயலாளர் நிலையிலும், ஒரு இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி கூடுதல் செயலாளர் நிலையிலும் உள்ளனர். சார்புச் செயலாளர் நிலையில் இரண்டு உதவி தலைமைத் தேர்தல் அதிகாரிகளும் உள்ளனர். பொது (தேர்தல்) துறையில் ஆறு நிரந்தரப் பிரிவுகள் உள்ளன.

தேர்தல் நிருவாகப் பணிகளில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு உதவி புரிய 1950 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், பிரிவு 13எஎ-ன்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் (சென்னையைத் தவிர) மாவட்டத் தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாவட்டத்திற்கு சென்னை மாநகராட்சி ஆணையர் மாவட்டத் தேர்தல் அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார். ஊரகத் தொகுதிகளுக்கு வருவாய் கோட்ட அதிகாரிகள் தரத்தில் வாக்குப்பதிவு அதிகாரிகள் உள்ளனர். கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, ஈரோடு, திருப்பூர் மற்றும் சேலம் ஆகிய மாநகராட்சி தொகுதிகளுக்கு மாநகராட்சி ஆணையர்கள்/துணை ஆணையர்கள் வாக்குப்பதிவு அலுவலர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். வட்டாட்சியர்கள் மற்றும் நகராட்சி ஆணையாளர்கள் உதவி வாக்குப் பதிவு அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாநகரைப் பொறுத்தவரை, சென்னை மாநகராட்சியில் உள்ள பத்து மண்டல அதிகாரிகளும் அந்தந்த மண்டலங்களுக்கு வாக்குப் பதிவு அதிகாரிகளாகவும், உதவி வருவாய் அதிகாரிகள் உதவி வாக்குப் பதிவு அதிகாரிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் பணிகளை கவனிக்க, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய் கோட்ட அலுவலர், மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதேபோல், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் ஆகிய மாநகராட்சி ஆணையர்களின் அலுவலகங்களிலும் ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகரைப்

[2010 மே 14

பொறுத்தமட்டில், சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிக்கு உதவும்பொருட்டு ஒரு மாவட்ட வருவாய் அதிகாரி (தேர்தல்கள்) பதவி தற்காலிகப் பணியிடமாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு வட்டாட்சியர், மூன்று உதவியாளர்கள், ஒரு தட்டச்சர், ஒரு பதிவேடு எழுத்தர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகிய நிரந்தரப் பணியிடங்கள் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளை கவனிக்க சென்னை மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

தேர்தல் பணிக்காக தோற்றுவிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் ஊதியச் செலவுகள், பயணச் செலவுகள், அலுவலகச் செலவினம், சில்லரை செலவினம், தொலைபேசிக் கட்டணங்கள் முதலான செலவினங்கள் இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.

103. புகைப்பட வாக்காளர் பட்டியல்களை தயாரித்து அச்சிடுதல்

எஎ சட்டப் பேரவைத் தொகுதிகள்:

மதிப்பீடு: ரூ.27,52,28,000/-

இம்மாநிலத்திலுள்ள அனைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் புகைப்பட வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல் (திருத்தங்கள் உட்பட) மற்றும் அச்சிடுவதற்கான எல்லாவிதமான செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இப்பணிக்காக நியமிக்கப்படும் தற்காலிகப் பணியாளர்களின் சம்பளம் மற்றும் படித்தொகைகள், வாக்குச் சாவடி நிலை அலுவலர்களுக்கு வழங்கப்படும் ஊதியம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்துணைத் தலைப்பின்கீழ் அடங்கும். சென்னை ஆவணக் காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களை பராமரிப்பதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பணியிடங்களான ஒரு உதவியாளர் மற்றும் ஒரு பதிவேடு எழுத்தர் ஆகியோருக்கு சம்பளம் மற்றும் படித்தொகைகள் வழங்க இத்துணைத் தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், பிரிவு 21-ன்படி, மக்களவை அல்லது மாநில சட்டமன்றத்திற்கு நடைபெறும் ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்னரும் மற்றும் காலியான இடத்தை நிரப்புவதற்காக நடத்தப்படும் இடைத் தேர்தலுக்கு

2010 மே 14]

முன்னரும் வாக்காளர் பட்டியல்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும். இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பிக்கும் பட்சத்தில் எந்த ஒரு ஆண்டிலும் ஒரு குறிப்பிட்ட நாளை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் மேற்கொள்ளப்படும். இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி எந்த ஒரு தொகுதிக்கும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் செய்யும் பணி மேற்கொள்ளப்படலாம்.

வாக்காளர் பட்டியல்கள் வாக்காளர் பதிவு அதிகாரிகளால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளின் உதவியுடன் தயாரித்து, தேவைப்படும் திருத்தங்களுடன் வெளியிடப்படுகின்றன. தலைமைத் தேர்தல் அதிகாரியின் மேற்பார்வை, அறிவுரைகள் மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சி ஆணையரும் மாவட்ட தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் திருத்துதல் பணிகளை ஒருங்கிணைத்து கண்காணித்து வருகின்றனர்.

வாக்காளர் பட்டியல்கள் தொடர் திருத்தத்தின் ஒரு பகுதியாக, வீடுவீடாகச் சென்று 100 விழுக்காடு வாக்காளர் பட்டியல் கள சரிபார்ப்புப் பணி டிசம்பர், 2009 முதல் பிப்ரவரி 2010 வரை மேற்கொள்ளப்பட்டு வாக்காளர் பட்டியல்கள் செம்மையாக தயார் செய்யப்பட்டு வருகின்றன. கணினியில் தகவல் பதிவு செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. தொடர் திருத்தப்பணி நிறைவுற்ற பின்னர், 1-1-2010 ஆம் நாளை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தத்தினை இந்திய தேர்தல் ஆணையம் விரைவில் அறிவிக்கும்.

தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு

இந்திய தேர்தல் ஆணையம், வாக்காளர் பட்டியல் தயாரிப்புப் பணியை செம்மையாகவும், பயனுள்ளவகையிலும் நிர்வகிக்க தகவல் தொழில்நுட்ப கணினியில் உள் மற்றும் வெளி கட்டமைப்பு வசதிகள், பயன்பாடு மற்றும் இவை தொடர்பான தொழில்நுட்ப நுணுக்கங்களை பயன்படுத்தி வருகிறது. இந்திய தேர்தல் ஆணையம் பணித்துள்ளபடி தேவையான கட்டமைப்பு வசதிகளும் தொழில்நுட்ப பணியாளர்களும் ஒவ்வொரு மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மாநிலம்

[2010 மே 14

முழுவதற்குமான வாக்காளர் பட்டியல்களை கணினிமயமாக்கல் பணிகளை கையாளவும், கண்காணிக்கவும் தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்திய தேர்தல் ஆணையம் பணித்துள்ளபடி தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம் / மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகங்களிலுள்ள பழைய கணினிகள் திறனுயர்த்தப்பட்டு / மாற்றப்பட்டு உயர்திறனுடன் கூடிய புதிய கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது மாவட்டங்களில் உள்ள கணினிகளின் திறனை 256MB—யிலிருந்து 1GB RAM ஆக - மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தரவுத் தளத்தை ஒருமுகப்படுத்துதல்

(Centralisation of Database)

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் கணினிமயமாக்கப்பட்டதிலிருந்து கட்டுப்பாட்டு அட்டவணை மற்றும் வாக்காளர் பட்டியல் தரவுத் தளம் (Electoral database) ஆகியவை (MS-ACCESS) மென்பொருளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட தேர்தல் அதிகாரிகளின் அலுவலகங்களில் வாக்காளர் பட்டியல் தரவுத் தளம் (Electoral database) பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் பேரில் பிப்ரவரி 2008-ல் ஒருமுகப்படுத்தும் தரவுத் தளம் மேற்கொள்ளப்பட்டு முதற்படியாக, வாக்காளர் பட்டியல் தரவுத் தளத்தை (Electoral database) ஒருமுகப்படுத்துதல் மற்றும் அதன் மேலாண்மைக்காக வாக்காளர் பட்டியல் தரவுத் தளத்தை (MS-ACCESS மென்பொருளிலிருந்து SQL Server என்ற தரவுத் தொடர்பு மேலாண்மை முறைமை (RDBMS)—க்கு புலம்பெயர தேவை ஏற்பட்டது. SQL Server என்ற மென்பொருளுக்கு புலம்பெயரவும் அதனை சோதிக்கவும் மென்பொருளை மேம்படுத்திய பின்னர் உருவப்படங்களை வாக்காளர் பட்டியல் தரவுத்தளத்துடன் திருத்திய கட்டுப்பாட்டு அட்டவணையும் ஒன்றிணைத்தல் உள்ளிட்ட புலம்பெயர்தல் நடவடிக்கைகளும், ISCII என்ற எழுத்துருவிலிருந்து UNICODE என்ற எழுத்துருவிற்கு மாற்றம் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஆகஸ்டு 2009-இல் நிறைவு பெற்றன. பல்வேறு கூறுகளை (Module) மேம்படுத்த இணையம் சார்ந்த செயல்முறைகள் உருவாக்கப்பட்டு

2010 மே 14]

வருகின்றன. சேவையகம் (Servers) மற்றும் அதற்கு தேவையான மென்பொருள்கள் வாங்கப்பட உள்ளன.

வாக்காளர் பட்டியல் பாகங்கள், பிரிவுகள் மற்றும் வாக்குச் சாவடிகளை சீரமைப்பதற்காக புவியியல் குறியீட்டுமுறை (GIS) திட்டம்

வாக்காளர் பட்டியல்களின் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் பொருட்டும், பல வாக்குச் சாவடிகளை ஒரே இடத்தில் அமைக்காமல் அவற்றின் வாக்குப் பதிவுப்பரப்பை தெளிவாக வரையறை செய்து அறிவியல் முறையில் வாக்குச் சாவடிகளின் அமைவிடங்களை அமைக்கவும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் தேர்தல் உபகரணங்களை வாக்குச் சாவடிக்கு கொண்டு செல்ல சீரான வழித்தடங்களைத் திட்டமிடுதல் முதலியவற்றுக்காகவும் புவியியல் குறியீட்டுமுறை (GIS) செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்திய தேர்தல் ஆணையம் பணித்துள்ளது. இதற்காக, வாக்குச் சாவடி அமைவிடங்களையும், வாக்காளர் பட்டியல் பாகங்கள் / பிரிவுகளின் எல்லைகள் முதலியவற்றையும் புவியியல் குறியீட்டு முறையில் வரைபடங்களாக்க ELECGIS 1 என்று பெயரிடப்பட்ட முதல்கட்ட திட்டப் பணி திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு நிறைவுபெற்றது. ELECGIS 2 என்று பெயரிடப்பட்டுள்ள இதன் இரண்டாம் கட்ட திட்டப் பணியில், விரிந்த நகர்ப்புறப் பகுதிகளை உள்ளடக்கிய திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள வாக்குச் சாவடிகளின் பாகங்கள்/பிரிவுகள் ஆகியவற்றைச் சீரமைக்கும் பணி ரூ.1.09 கோடி திட்டச் செலவில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் வாக்காளர் பட்டியல் அச்சிடுதல், கணினியில் விவரங்களைப் பதிவு செய்தல், பணியாளர் ஊதியம், வாக்குச் சாவடி நிலை அலுவலர்களுக்கான ஊதியம், ELECGIS 2 திட்டத்திற்காக பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கான செலவினம், பயணப் படிகள் முதலியவற்றிற்கான செலவினங்களை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு தேவைப்படுகின்றது. இதற்கென 2010-2011 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ரூ.27,52,28,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த செலவினத்தின் 50 விழுக்காட்டினை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.

[*2010 மே 14*

104. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநிலச் சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எஎ. நாடாளுமன்ற மக்களவைக்கும் சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் நடைபெறும் தேர்தல்கள்

மதிப்பீடு: ரூ.41,85,000/–

நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவைக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது, நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றப் பேரவைக்கு தேர்தல்கள் நடைபெறும்போது பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், வேலூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலுள்ள தனியார் கிடங்குகளிலும் விருத்தாச்சலம், விழுப்புரம், மதுராந்தகம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கழக கிடங்குகளிலும் வைக்கப்பட்டுள்ளன. தனியார் கிடங்குகள் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கழக நிறுவனத்திற்கு வாடகைக் கட்டணம் வழங்குதல் மற்றும் தேர்தல் பொருட்கள் வாங்குதல் குறித்த செலவினங்கள் ஆகியவை இத்துணைத் தலைப்பின்கீழ் செலவிடப்படும். தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலக வாகன பராமரிப்புச் செலவுகள் ஆகியவைகளும் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.

105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எஎ இடைத் தேர்தல்கள்

மதிப்பீடு: ரூ.16,000/– (அடையாள ஒதுக்கீடு)

மக்களவைத் தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடைபெற்றால் அதற்காகும் அனைத்துச் செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல்

2010 மே 14]

கடந்த 13-5-2009 அன்று நடைபெற்றுள்ளது. மேலும் தற்பொழுது தமிழ்நாட்டில் நாடாளுமன்றத் தொகுதிகளில் காலியிடம் ஏதுமில்லை. எனவே இத்துணைத் தலைப்பின்கீழ் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இதற்காகும் அனைத்துச் செலவினங்களையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்ளும்.

105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எபி நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல்

மதிப்பீடு: ரூ.25,26,000/–

மக்களவைக்கு மட்டும் பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் அனைத்தும் முதலில் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டு பின்னர் மைய அரசிடமிருந்து முழுமையாக பெறப்படும். 15-வது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் கடந்த 13-5-2009 அன்று நடைபெற்றது. தற்பொழுது தமிழ்நாட்டில் நாடாளுமன்றத் தொகுதிகளில் காலியிடம் ஏதுமில்லை. மக்களவைக்கான பொதுத் தேர்தல்கள் நடைபெற்றால் அதற்காகும் அனைத்துச் செலவினங்களையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்ளும்.

106. மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எஎ மாநிலச் சட்டப் பேரவை

மதிப்பீடு: ரூ.34,20,000/–

மாநில சட்டமன்றப் பேரவைக்குப் பொதுத் தேர்தல் / இடைத் தேர்தல் நடைபெற்றால் அவை தொடர்பான செலவினங்கள் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2009-2010 ஆம் ஆண்டில் பர்கூர், தொண்டாமுத்தூர், கம்பம், இளையான்குடி, ஸ்ரீவைகுண்டம், வந்தவாசி (தனி), திருச்செந்தூர் மற்றும் பெண்ணாகரம் ஆகிய 8 சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் நடைபெற்றது. தற்பொழுது சட்டமன்றப் பேரவையில் காலியிடம் ஏதுமில்லை. மேலும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 1

அதாவது மே, 2011-க்குள் நடத்தப்படவேண்டும். நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் பணிகளை மேற்கொள்ள தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகம் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிகளின் அலுவலகங்களில் உரிய காலத்தில் கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தலுக்கான அனைத்துச் செலவினங்களையும் மாநில அரசே ஏற்றுக்கொள்ளும்.

108. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்

எஎ. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்

மதிப்பீடு: ரூ.4,77,15,000/–

தமிழ்நாட்டில் வாக்காளர் அடையாள அட்டை வழங்கும் பணி 1996 ஆம் ஆண்டிலிருந்து மூன்று கட்டங்களாக நடைபெற்றுள்ளன. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்களுக்கு முன்னதாக நான்காம் கட்டப் பணிகள் பிப்ரவரி 2006 முதல் ஏப்ரல் 2006 வரை நடைபெற்றன. தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்கள், 2006 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற்றபோது 75 விழுக்காடு வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. மேற்சொன்ன விழுக்காடு, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிகளிலும் வேறுபடும். தற்போது 99.34% வாக்காளர்களுக்கு புகைப்படங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது மற்றும் 99.54% வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் மையங்கள் அமைக்கப்பட்டு வாக்காளர்களுக்கு மாற்று அட்டை / புதிய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இச்செலவினத்தில் 50 விழுக்காட்டினை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.

2010 மே 14]

இணைப்பு III

(255ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 46—தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை

தமிழ் வளர்ச்சி

கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011

தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு!

தமிழே ஞாலத்தின் தாய்மொழி பண்டு!

-பாவேந்தர் பாரதிதாசன்

உலகச் செம்மொழிகள் பற்றிச் சிந்தித்த பரிதிமாற் கலைஞர் 'தான் வழங்கிய நாட்டின்கண் உள்ள பல மொழிகட்கும் தலைமையும் அவற்றிலும் மிக்க மேதகவு உடைமையும் உள்ள மொழியே உயர்மொழி. இவ்விலக்கணத்தான் ஆராயுமிடத்துத் தமிழ்மொழி, தெலுங்கு முதலியவற்றிற்கெல்லாம் தலைமையும் அவற்றிலும் மிக்க மேதகவும் உடையதாலும் உயர்மொழி என்க. தான் வழங்கும் நாட்டில் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல தமிழே தனிமொழி எனப்படும். திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய மொழி புகல் செம்மொழியாம் என்பது இலக்கணம்' எனக் குறிப்பிட்டார். இத்தகைய தகுதிகள் அனைத்தையும் பெற்றுள்ள தமிழ் உயர் தனிச் செம்மொழியெனச் சுட்டிக்காட்டினார். இடைவிடாத பெரும் முயற்சிகளின் விளைவாக நம் தமிழ்மொழியை மத்திய அரசு செம்மொழியென ஏற்கும் நிலையை உருவாக்கி அதில் நாம் வெற்றியும் பெற்றுள்ளோம்.

தமிழ் மொழியின் செவ்வியல் இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் காலத்தால் பழையன என்பது மட்டுமின்றித் தமிழ்ச் சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான பண்பாட்டு வெளியீடாகவும், தமிழர்களின் சமுதாய அனுபவங்களின் இலட்சியப்படுத்தப்பட்ட கலை வடிவங்களாகவும் அமைகின்றன.

[2010 மே 14

'சங்கத் தொகுதியில் இடம்பெறும் 26,350 வரிகள் உலகின் ஒப்புயர்வற்ற செவ்வியல் மொழி தமிழ் என்பதை நிலைநிறுத்தப் போதுமான சான்று' என்கிறார் கமில்சுவலபில்'.

பண்டைத் தமிழர்கள் தமிழைத் திட்டமிட்டு ஒரு செவ்வியல் மொழியாகவே வளர்த்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழியைச் செம்மொழியாகப் பேணிவளர்க்கும் மேற்கூறிய திட்டமிட்ட செயல் சங்க காலத்திற்கு முன்னரே தொடங்கிவிட்டது எனலாம். செவ்வியல் நிலையில் முழுமையாக வளர்ந்ததும் தமிழைப் பண்டைச் சான்றோர் செந்தமிழ் என்றும் அழைக்கத் தொடங்கினர். தமிழர்களின் மேற்கூறிய முயற்சியின் தனிப்பெரும் சான்றாகச் சங்க இலக்கியமும், தொல்காப்பியமும் அமைகின்றன. இத்தகைய செவ்வியல் மொழியாக்க முயற்சி தமிழிலிருந்து கன்னட மொழி பிரிந்துசென்ற காலத்தையொட்டித் தொடங்கப் பட்டிருக்கலாம் என்றும் கருதுகின்றார் டாக்டர் கமில்சுவலபில்.

தமிழ் மொழியின் சீரிய ஒலியமைப்பு, சொல்லமைப்பு, தொடரமைப்பு ஆகியன செவ்வியல் தன்மைக்குத் தக்க எடுத்துக்காட்டாக அமைகின்றன. அறிவியல் பூர்வமாக அமைக்கப்பட்டுள்ள இத்தகைய இலக்கண வரைமுறைகள் இன்றைய மொழியியல் வல்லுநர்களை மிகவும் வியப்பில் ஆழ்த்தியுள்ளன. மிகப்பழங்காலத்தில் இது செவ்வியல் நிலையினை எய்தித் திராவிட நாகரிகத்தின் உயர்தனிச் சிறப்பை உலகிற்குக் காட்டும் சான்றாக நிலைபெற்றுவிட்டதாகக் கில்பர்ட் சிலேட்டர் (Guilbert Slater) என்னும் அறிஞர் குறிப்பிடுகின்றார்.

1966-இல் பாவாணரால் வெளியிடப்பெற்ற 'The Primary Classical Language of the World' என்னும் நூல் உலக மொழிகள் அனைத்திற்கும் செம்மொழியான தமிழே தாய் என்று வாதிடுகின்றது.

இவையனைத்திற்கும் மேலாக கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் தமிழியற்புலத் தலைவராக விளங்கும் பேராசிரியர் முனைவர் ஜார்ஜ் எல். ஹார்ட்டு "தமிழ் இலக்கியங்களின் சொற்செறிவும் பொருளாழமும், அவற்றின் நுட்பமும் திண்மையும் (Subtlety) அகலமும் விரிவும் (Profundity) அவை நுவலும் பல்வேறு பாடுபொருள்களும் களமும் (Varied scope) கொண்டது. நவீன

2010 மே 14]
காலத்திற்கு முந்தைய இந்திய இலக்கியங்களில், கால அளவில் முற்பட்ட பழந்தமிழ் இலக்கியங்கள் மட்டுமே, சமூகத்தில், தாழ்வுற்ற, பிற்பட்ட, கடைப்பட்ட மக்களையும் கருப்பொருளாகக் கொண்டுள்ளன. அவற்றில் மனிதகுலம் அனைத்தையும் "வயப்படுத்தும் உலகளாவிய கோட்பாடு (Universality) தமிழ் மொழியை உலகம் தழுவிய மிகப்பெரிய செவ்வியல் மொழி மரபுகள், இலக்கியங்களுடன் ஒருங்கே வைத்து, ஒன்றெனப் போற்றும் தகுதி நிலையை அளிக்கின்றன" எனத் தமிழின் செம்மொழித் தகுதியை விரிவாக எடுத்தியம்பியுள்ளார்.

இவ்வகையில் உலக அரங்கில் உயர்ந்தோங்கியுள்ள தமிழை நாம் ஆட்சிமொழியாகப் பெற்றுள்ளோம். அரசின் தமிழ்சார் பணிகள், தமிழ் வளர்ச்சி இயக்ககம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்ப் பல்கலைக்கழகம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், அறிவியல் தமிழ் மன்றம், தலைமைச் செயலக மொழிபெயர்ப்புப் பிரிவு எனப் பல்வேறு அமைப்புகள் வாயிலாகத் தொய்வின்றி நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தமிழ் வளர்ச்சி இயக்ககம்

தமிழ் உயர்தனிச் செம்மொழி. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனச் சமத்துவக் கொள்கையை உலகிற்குத் தந்த தொன்மைமிகு மொழி. தமிழ், உலகத் தமிழினத்தின் அடையாளமாய், பண்பாட்டின் பிறப்பிடமாய் உயர்ந்தோங்கி நிற்பதுடன் இன்றைய வளர்ச்சிக்கெல்லாம் ஈடுகொடுத்துத் தன்னையும் வளர்த்துக் கொள்ளும் தனித்திறன் பெற்றதாகவும், பழமைக்குப் பழமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் திகழ்கிறது. இந்த அரசு தமிழ் மொழியின் வளர்ச்சியில் தனி ஈடுபாடு காட்டிப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. ஆட்சிமொழிச் செயலாக்கம், தமிழ் வளர்ச்சி என இருவகைகளில் இவ்வியக்ககத்தின் பணிகள் அமைந்துள்ளன.

ஆட்சிமொழிச் செயலாக்கப் பணி

தமிழக அரசின் ஆட்சிமொழிச் சட்டத்தையும், அதைச் செயற்படுத்துவதற்குரிய அரசாணைகளையும் அடிப்படையாகக் கொண்டு தலைமைச் செயலகத் துறைகள் முதல் சார்நிலை அலுவலகங்கள் வரை தமிழ் வளர்ச்சித் துறையால் ஆட்சிமொழிச்

செயலாக்கம் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு அலுவலகங்கள், கழகங்கள், வாரியங்கள் உட்பட அனைத்து அலுவலகங்களும் தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு ஆட்சிமொழிச் செயலாக்கத்தில் காணப்படும் குறைகள் களையப்பட்டு நெறிப்படுத்தப்படுகின்றன. தமிழில் நிருவாகம் முழுமையாக அமைவதற்குரிய நடவடிக்கைகள் ஆய்வுப் பணி வாயிலாகத் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இயக்ககத்தில் மொழிபெயர்ப்புப் பணி

அரசு அலுவலகங்களில் படிவங்கள், விதிகள், விதித் தொகுப்புகள், அலுவலக நடைமுறை நூல்கள் முதலியன ஆங்கிலத்தில் இருப்பதால் தமிழை நிருவாக மொழியாகப் பயன்படுத்துவதில் இடர்ப்பாடு மிகுதியாவதைக் கண்டறிந்து இந்த இடர்ப்பாட்டினை நீக்கும் வகையிலும் தமிழில் எழுதுவதற்குத் துணை புரியும் வகையிலும் பல்வேறு துறைகளின் விதிகள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள், படிவங்கள் ஆகியவை தேவைப்படும்போதெல்லாம் தமிழ் வளர்ச்சித் துறையால் தொடர்ந்து தமிழில் மொழிபெயர்ப்பு செய்தளிக்கப்படுகின்றன.

ஆட்சிச் சொல்லகராதி

தமிழை முழுமையாக அலுவல் நடைமுறைகளில் பயன்படுத்துவதற்குத் துணைபுரியும் வகையில் ஆங்கிலத்தில் உள்ள ஆட்சிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை ஒருங்கு திரட்டித் தமிழ் வளர்ச்சித் துறையால் தயாரித்து அச்சிடப்பட்ட 'ஆட்சிச் சொல்லகராதி' நூல்கள் அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. குறிப்புகளையும் வரைவுகளையும் தமிழில் எழுதுவதற்கு அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிச் சொல்லகராதி பெரிதும் பயன்படுகிறது. அறிவியல் வளர்ச்சிக்கேற்ப புதிய சொற்களைச் சேர்த்தும், ஒவ்வொரு துறையிலும் அலுவல் நடைமுறையில் பயன்படுத்தும் சொற்களைச் சேகரித்தும் ஆட்சிச் சொல்லகராதியின் திருத்திய பதிப்பை (ஏழாம் பதிப்பு) வெளியிடக் கருதப்பட்டுள்ளது. இதற்காகப் பல துறைகளிலிருந்தும் சொற்கள் திரட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பணி முடிந்ததும் ஆட்சிச் சொல்லகராதியின் புதிய திருத்திய பதிப்பை அச்சிட்டு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2010 மே 14]

சிறப்புச் சொல் துணை அகராதி

ஆட்சிச் சொல்லகராதியில் இடம் பெற்ற சொற்கள் நீங்கலாக அரசின் துறைகளில் பயன்படுத்தப்பெறும் சிறப்புச் சொற்களுக்குரிய தமிழாக்கங்கள் அளிக்கப்பட வேண்டியது இன்றியமையாததெனக் கண்டறியப்பட்டு, ஒவ்வொரு துறைக்கும் ஒரு சிறப்புச் சொல் துணையகராதி தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது. சிறப்புச் சொல் துணை அகராதிக்கான சொற்களை அந்தந்தத் துறைகளிடமிருந்து பெற்று, துறை அலுவலர்களுடன் கலந்துரையாடி இயக்கக அலுவலர்களால் ஆய்ந்து அறுதியிடப்பட்டு துறையின் ஏற்புக்குப் பின்னர் துணை அகராதிகளாக அச்சிடப்பெற்றுத் துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு வெளியிடப்பட்டு 75 துறைகளில் பயன்படுத்தப்பட்டு வரும் சிறப்புச் சொற்களைத் தொகுத்து 'ஆட்சிச் சொல்லகராதி (சிறப்பு)' என ஒரே தொகுப்பாக வெளியிடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வகராதியின் அச்சுப்பணி நடைபெற்று வருகிறது.

ஆட்சிமொழிப் பயிற்சி வகுப்புகள், பயிலரங்குகள் மற்றும் கருத்தரங்குகள்

அரசு அலுவலர்களும், பணியாளர்களும் ஆட்சிமொழித் திட்டம், அரசாணைகள், ஆட்சிமொழிச் சட்டம், மொழியாக்கம் ஆகியவை தொடர்பாக முழுமையாகத் தெரிந்து கொள்ளவும் அதன் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வை அவர்கள் மத்தியில் ஏற்படுத்தவும் அவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னையில் தமிழ் வளர்ச்சித் துறையின் பயிற்சி மையத்தில் துறைவாரியாக அலுவலர்கள், பணியாளர்கள் அழைக்கப்பட்டுப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. 2009-2010 ஆம் ஆண்டில் 5 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 164 பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 26 பயிற்சி வகுப்புகள் நடத்தப் பெற்றுள்ளன. இவற்றில் 693 பணியாளர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றுள்ளனர். இதுமட்டுமன்றி, பயிற்சி அளிக்கக் கோரும் அலுவலகங்களுக்கும் தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்கள் சென்று பயிற்சி அளித்து வருகின்றனர். இதுவரை ஆண்டிற்குச் சில மாவட்டங்களில் மட்டுமே ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வந்த நிலையை மாற்றி ஆட்சி மொழிச் செயலாக்கத்தினை முழுமையாகச் செயற்படுத்திட வேண்டுமென்பதற்காக, ஆண்டுதோறும் அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் மற்றும்

[2010 மே 14

பயிலரங்குகள் நடத்திட அரசு ஆணையிட்டது. இவ்வகையில் 2009-2010 ஆம் ஆண்டில் 31 மாவட்டங்களிலும் ஆட்சிமொழிப் பயிலரங்குகளும் கருத்தரங்குகளும் நடத்தப்பெற்றன.

பரிசு, கேடயம்

அரசு அலுவலகங்கள், கழகங்கள், வாரியங்கள் ஆகியவற்றில் குறிப்புகளையும் வரைவுகளையும் தமிழில் எழுதும் பணியாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதியவர்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிவு செய்து அவர்களுக்கு முதலாம் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசாக பணப் பரிசுகள் முறையே ரூ.3,000, ரூ.2,000, ரூ.1,000 என வழங்கப்படுகின்றன. மேலும், ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்கும் மாவட்ட நிலை அலுவலகங்களை ஆண்டுதோறும் தெரிந்தெடுத்து கேடயங்களும் பாராட்டிதழ்களும் வழங்கப்படுகின்றன.

சொல்வங்கி

தமிழ் மொழியில் புதிது புதிதாகப் புழக்கத்திற்கு வந்து சேரும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிய வேண்டியது இன்றியமையாக் கடமையாகும். அதனைக் கருத்தில் கொண்டு 'சொல்வங்கித் திட்டம்' தமிழ் வளர்ச்சித் துறையால் தொடங்கப்பட்டு புதிய சொற்களை உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. தமிழறிஞர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், அலுவலர்கள், ஊடகத்தார் முதலியோர் திங்கள்தோறும் தமிழ் வளர்ச்சித் துறையில் கூடி, புழக்கத்திற்கு வந்துள்ள புதிய பிற மொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை உருவாக்கி வருகிறார்கள். இச்சொற்கள் அனைவராலும் பயன்படுத்தப்படும் வகையில் அரசு அலுவலகங்களுக்கும், ஊடகங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.

தமிழ் வளர்ச்சிப் பணிகள்

மொழி கால மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் வளர்ந்திடல் வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு தமிழ் மொழியின் வளர்ச்சியில் இவ்வரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. இதற்குரிய பணிகளைப் பன்முகப் பாங்கில் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டுள்ளது.

2010 மே 14]

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி ஆய்வு நிறுவனம் ஆகும். உலகளவில் செம்மொழித் தமிழுக்கென்று நிறுவப்பெற்றுள்ள உயராய்வு நிறுவனமாகும். மாண்புமிகு தமிழக முதல்வரைத் தலைவராகக் கொண்ட உயர் நிலைக் குழு (ஐம்பெருங்குழு மற்றும் எண்பேராயம்) இந்நிறுவனத்தின் திட்டங்களையும், செயற்பாடுகளையும் நெறிப்படுத்துகிறது. தமிழின் தொன்மையையும், தனித்தன்மையையும் உலகுணரச் செய்யும் வகையில் பல்வேறு பணிகளை இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் நாள் அன்று நடுவண் அரசு 'செம்மொழிகள்' என்ற ஒரு சிறப்புப் பிரிவைத் தோற்றுவித்து தமிழைச் 'செம்மொழி' என அறிவித்தது. விருதுகள், தமிழ் மொழி மேம்பாட்டு வாரியம், ஆய்வு உதவித் தொகைகள், செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் ஆகிய நான்கு உட்பிரிவுகளைக் கொண்ட நடுவண் அரசின் செம்மொழித் தமிழ்த் திட்டத்தினைச் செயற்படுத்தும் பொறுப்பு இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்திடம் 2005 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் சீரிய தலைமையில் மாண்புமிகு மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்கள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தை 2007 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18-இல் தொடங்கி வைத்தார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் செம்மையுறச் செயல்படத் தமிழக அரசு சென்னை, பெரும்பாக்கத்தில் 17 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்துள்ளது. நிலத்தைச் சமன்செய்து சீர்படுத்த ரூ.145.65 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2008 ஆம் ஆண்டு மே 19 முதல் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சென்னை, பாலாறு இல்லத்தில் செயல்பட்டு வருகிறது. 2009 ஆம் ஆண்டு சனவரி 21 அன்று தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின்கீழ் இந்நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தால் கி.பி. 6 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 41 செவ்வியல் நூல்களின் செம்பதிப்புப் பணி தொடர்ந்து நடைபெற்று

[2010 மே 14

வருகிறது. 447 ஓலைச் சுவடிகளும், 203 தாட்சுவடிகளும், 953 அரிய நூல்களும் மின்னாக்கம் செய்யப்பட்டுள்ளன.

மணிப்புரி, நேப்பாளி ஆகிய இரு மொழிகளிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறள் அறத்துப்பால்-18 ஆங்கில மொழிபெயர்ப்புகள் அடங்கிய தொகுப்பு நூலும், நற்றிணை, முத்தொள்ளாயிரம், முல்லைப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, நானாற்பது ஆகியவற்றின் மூன்று ஆங்கில மொழிபெயர்ப்புகள் அடங்கிய தொகுப்பு நூல்களும் முடிக்கப்பெற்றுள்ளன.

இதுவரை அகராதிகளில் இடம்பெறாத பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வழக்காற்றுச் சொற்கள் தொகுக்கப்பட்டு ஆவணப் படுத்தப்பட்டுள்ளன. தமிழகம், புதுவை, ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் உள்ள பல்வேறு உயர் கல்வி மற்றும் ஆய்வு நிறுவனங்களிலிருந்து பழந்தமிழ் ஆய்வில் ஈடுபட்டுள்ள தகுதிவாய்ந்த ஆய்வாளர்கள் தெரிவு செய்யப்பட்டு 55 ஆய்வாளர்களுக்கு முனைவர் பட்ட ஆய்விற்கும், 18 ஆய்வாளர்களுக்கு முதுமுனைவர் ஆய்விற்கும் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

2005-06, 2006-07, 2007-08 ஆகிய மூன்று ஆண்டுகளுக்குரிய குடியரசுத் தலைவர் செம்மொழித் தமிழ் விருதுகளுக்கான பொற்கிழிகள் 28-3-2010 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு தம்முடைய சொந்த நிதியிலிருந்து ரூ.1.00 கோடி வழங்கி, 'கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை' என தனது பெயரில் அறக்கட்டளை ஒன்றை நிறுவி உள்ளார்கள். இந்த அறக்கட்டளை சார்பில், பண்டைய தமிழ்ப் பண்பாடு, நாகரிகம் பற்றிய புதிய கருத்துகளை ஆராய்ந்து செம்மொழித் தமிழாய்வுக்குச் சீரிய முறையில் பங்காற்றியுள்ள அறிஞர் அல்லது நிறுவனத்திற்கு 'கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' ஆண்டுதோறும் வழங்க முடிவு செய்யப்பட்டது. பேராசிரியர் அஸ்கோ பர்ப்போலா என்னும் பின்லாந்து அறிஞர், சிந்துவெளி எழுத்துச் சிக்கலுக்குத் திராவிடத் தீர்வை அளித்துச் செம்மொழித் தமிழுக்குச் செய்த பங்களிப்பு மிகச் சிறப்புடையதாகவும் உலக அளவில் பாராட்டப்படுவதாகவும்

2010 மே 14]

அமைந்துள்ளதால், அவர் 2009 ஆம் ஆண்டிற்கான கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவ்விருது கோவையில் நடைபெறும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின்போது அவருக்கு வழங்கப்படும்.

இதுவரை நடத்தப்பட்டுள்ள 52 பயிலரங்குகளில் பங்கேற்ற மாணவர்கள், ஆய்வாளர்கள், தமிழாசிரியர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கை 3,000 ஆகும். இவர்கள் அனைவருக்கும் சங்க இலக்கியத் தொகுப்பும் தொல்காப்பியமும் இலவசமாக வழங்கப்பட்டுப் பயணப் படி முதலியவை அளிக்கப்பட்டுள்ளன. ஆற்றல் மிக்க பல்துறைப் பேராசிரியர்களைக் கொண்டு பாடங்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளன. மேலும், இதுவரை நடத்தப்பட்டுள்ள 70 கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளில் பல்துறை சார்ந்த அறிஞர்கள் 2,500 பேர்கள் ஆய்வுக் கட்டுரைகள் வாசித்துள்ளனர்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு

அறிஞர் பெருமக்களும், மொழிவல்லுநர்களும் பல்லாண்டு காலமாக தமிழ் மொழியைச் செம்மொழியாக்கிட வேண்டும் என்ற கருத்தினைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட பெருமுயற்சியின் விளைவாக மைய அரசு தமிழைச் செம்மொழியாக ஏற்றுக் கொண்டு 12-10-2004—இல் அறிவிக்கை வெளியிட்டது. தமிழின் தொன்மையையும், சிறப்பையும் போற்றும் வகையில் தமிழ் மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்டதைப் போற்றும் வகையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்துவதென அரசு கருதியது. அதனடிப்படையில் கோயம்புத்தூரில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை 2010 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23 முதல் 27 ஆம் நாள் வரை நடத்துவதென முடிவு செய்து அரசு ஆணை வெளியிட்டது. இம்மாநாட்டுப் பணிகளைத் திட்டமிட்டு செயல்படுத்தவும் பல்வேறு துறைகளை ஒருங்கிணைக்கவும் தலைமைச் செயலகத்தில் தனி அலுவலர் பணியிடமும், கோவையில் சிறப்புப் பணி அலுவலர் பணியிடமும், தோற்றுவிக்கப்பட்டு உதவிக்கு அலுவலர்களும் நியமிக்கப்பட்டனர்.

குழுக்கள் அமைத்தது

பின்னர் இம்மாநாடு தொடர்பான பணிகளை மேற்கொள்ளவும், கண்காணிக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தலைமைக் குழு, பல்வேறு அரசியல் தலைவர்கள்

[2010 மே 14

அடங்கிய ஆலோசனைக் குழு, இலங்கையைச் சேர்ந்த தமிழ் அறிஞர், பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் தலைமையில் ஆய்வரங்க அமைப்புக் குழு உள்ளிட்ட 21 குழுக்கள் அமைக்கப்பட்டு மாநாட்டுப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இம்மாநாட்டினை முன்னிட்டு கோவை மாநகராட்சி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் சாலை மேம்பாட்டுப் பணிகள், விமான நிலையம் மற்றும் இரயில் நிலைய மேம்பாடு, மின் விநியோக மேம்பாடு, மின்விளக்கு அமைத்தல், குடிநீர் வசதி செய்தல் போன்ற பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நினைவாக கோவை மத்திய சிறைச்சாலைப் பகுதியில் முதற்கட்டமாக ரூ.20 கோடி மதிப்பில் "செம்மொழிப் பூங்கா" அமைப்பதற்கான பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் துவக்கி வைக்கவும், அதனையொட்டி நடைபெறும் அலங்கார ஊர்திகளின் ஊர்வலத்தை பார்வையிடவும் இசைவு தெரிவித்துள்ளார்கள். உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நினைவாக மாநாட்டு நினைவு அஞ்சல் தலையும் வெளியிடப்பட உள்ளது. மாநாட்டில் 47 வெளிநாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்களும், கட்டுரையாளர்களும் கலந்து கொள்வதற்கு பதிவு செய்துள்ளனர். மேலும், மலேசியா, சிங்கப்பூர், மாலத்தீவு, மொரிசியஸ் நாடுகளின் அதிபர்கள், பிரதமர்கள், அமைச்சர்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளுமாறும் அழைக்கப்பட்டுள்ளனர். மாநாட்டின் போது நாட்டிய நாடகம், நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள் போன்றவையும் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மாநாடு சிறப்புடன் நடைபெறுவதற்கு அரசின் பல்வேறு துறைகள்மூலம் அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பிற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆய்வரங்கம்

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு ஆய்வரங்கத்தில் 55 பொருண்மைகளின்கீழ் கட்டுரைகள் பெறப்பட்டு இதற்கென அமைக்கப்பட்ட வல்லுநர் குழுக்களின்மூலம் மாநாட்டில் படிப்பதற்காக உரிய கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டன.

2010 மே 14]

இதனடிப்படையில் 47 நாடுகளைச் சேர்ந்த கட்டுரையாளர்கள் மாநாட்டின்போது தங்கள் கட்டுரைகளை வாசிக்க இருக்கிறார்கள். வெளிநாடுகள் மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து சுமார் 6,000 கட்டுரையாளர்களும், நோக்கர்களும் மாநாட்டில் பங்கு கொள்வதற்காகப் பதிவு செய்து இருக்கிறார்கள். மாநாட்டில் பங்கு கொள்ளும் கட்டுரையாளர்களுக்கு பயணக் கட்டணம், உணவுக் கட்டணம், போக்குவரத்து போன்ற வசதிகளை அரசு செலவிலேயே செய்து கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கண்காட்சி

இம்மாநாட்டினை முன்னிட்டு கொடிசியா அரங்கத்தின் அருகில் மாபெரும் கண்காட்சி நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. கலையழகுடன் கூடிய பிரம்மாண்டமான கண்காட்சி அரங்கம் அமைக்கவும், அதில் தமிழர் நாகரிகம், பண்பாடு, இலக்கியம் உள்ளிட்ட ஆறு பெருந்தலைப்புகளில் 30 துணைப் பிரிவுகளாக அரிய கலைப்பொருட்கள், அவற்றின் படிகள் மற்றும் புகைப்படங்கள் போன்றவற்றை விளக்கக் குறிப்புகளுடன் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கவும் ஒளி-ஒலி அமைப்புமூலம் விளக்கக் காட்சி நடத்திடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அலங்கார ஊர்திகளின் ஊர்வலம்

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு தொடக்க நாளன்று மாலையில் அலங்கார ஊர்திகள் அடங்கிய மாபெரும் ஊர்வலம் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஊர்வலமானது வ.உ.சி. பூங்காவில் தொடங்கி மாநாட்டுத் திடலை வந்தடையும். ஊர்வலத்தை மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சீர் பெருமக்களும் மற்றும் பொதுமக்களும் கண்டுகளிக்க இருக்கிறார்கள். தமிழ்நாட்டின் கலை, கலாச்சாரம், பண்பாடு, இலக்கியம் ஆகிய பெருமைகளை விளக்கும் வகையில் அலங்கார ஊர்திகள் உருவாக்கப்படும். இதில் கலைக் குழுவினரும் கலந்து கொண்டு நடனம் மற்றும் இசை நிகழ்ச்சிகளை வழங்க இருக்கிறார்கள்.

பொது அரங்கம்

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு நாட்களில் அறிஞர்கள் கலந்து கொள்ளும் ஆய்வரங்கம் தவிர, பொதுமக்கள் பயன்பெறும்

[2010 மே 14

வகையில் பொது அரங்க நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. இவ்வரங்கில் கவியரங்கங்கள், கருத்தரங்கங்கள் மற்றும் பட்டிமன்றங்கள் ஆகியவையும் நடைபெற உள்ளன. மாநாட்டினையொட்டி பள்ளி-கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு தமிழ் இலக்கியம் சார்ந்த கவிதைப் போட்டி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு மாநாட்டின்போது பரிசுகள் வழங்கப்படவுள்ளன. வெளிநாடுவாழ் தமிழர்களுக்கும் கவிதைப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

தமிழ் இணைய (கணினி) மாநாடு

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஒரு அங்கமாக தற்கால அறிவியல் உலகில் தமிழின் வளர்ச்சியை வெளிக்காட்டும் வகையில் தமிழ் இணைய (கணினி) மாநாடும் நடைபெறவுள்ளது. இதனை உத்தமம் (உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றம்) என்ற அமைப்புடன் இணைந்து நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் இணையத் தமிழ் வளர்ச்சிக்கான வருங்கால வாய்ப்புகள் தேவையான செயல் திட்டங்கள் பற்றி விவாதிக்கவும், செம்மொழித் தமிழ் அறிஞர்கள் மற்றும் தமிழ் இணைய வல்லுநர்களிடையே பிணைப்பு ஏற்படவும், பொது மக்களிடையே தமிழ் இணைய வளர்ச்சியையும் பயன்பாடுகளையும் விளக்கவும் இம்மாநாடு பெரிதும் பயனுள்ளதாக அமையும். இதில் கட்டுரையாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டு கட்டுரைகளை வாசிக்க இருக்கிறார்கள். இதன்மூலம் கணினி பயன்பாட்டில் தமிழ் மொழியின் நிலை பற்றியும் அதனை விரிவுபடுத்துவது பற்றியும் விரிவாக விவாதித்து செயல்திட்டம் தயாரிக்கப்படும். இம்மாநாட்டினையொட்டியும் தமிழ் இணைய மாநாட்டுக் கண்காட்சி அமைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ் இணைய மாநாடு தொடர்பாகவும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு மாநாட்டின்போது பரிசுகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

உலக வழக்கில் என்றும் உன்னதமாய் நிலைத்து நிற்கும் செம்மொழியாம் தமிழ் மொழியின் பன்முக உயர்தனிப் பாங்கினையும், தமிழர்தம் நாகரிகம் மற்றும் பண்பாட்டுக் கூறுகளையும், பாரெங்குமுள்ளோர் அறிந்து உணர்ந்து கொள்ளவும், இருபத்தோராம் நூற்றாண்டில் அகிலமெங்கிலும் ஏற்பட்டுவரும்

2010 மே 14]

மாறுதல்களுக்கும் மொழியியலில் ஏற்பட்டுவரும் புதிய பரிமாணங்களுக்கும் ஈடுகொடுத்திடும் வகையில், நமது தமிழ் மொழியை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆராய்ச்சி முயற்சிகளை வலுப்படுத்திடவும், தமிழ்நாடு அரசே முன்னின்று நடத்தும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு பயன்படும் என்பது உறுதி. இம்மாநாட்டில் அறிஞர் பெருமக்களும், பொதுமக்களும், பல்லாயிரக்கணக்கில் கலந்து கொண்டு சிறப்பிக்கவிருக்கிறார்கள்.

தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் சங்கம்

1982 ஆம் ஆண்டில், மதுரை தல்லாகுளம் பகுதியில் உலகத் தமிழ்ச் சங்கத்திற்கென வழங்கி ஆணையிடப்பட்டு சமநிலைப் படுத்தப்பட்டுள்ள 14.15 ஏக்கர் நிலத்தில், 'தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் சங்கம்' அமைத்து, தமிழகத்தின் கலை, இலக்கியம், பண்பாட்டு உயர்நிலை விளக்கும் காட்சியகம் அமைப்பதெனவும், உலகளாவிய நிலையில் தமிழார்க்கும், தமிழ் ஆய்வுக்கும் துணை செய்திடும் வகையில் அரங்கம் அமைப்பதெனவும், அரங்கத்தில் சங்கப் புலவர்கள் மற்றும் தமிழ்ச் சான்றோர்களின் திருவுருவச் சிலைகளைக் கால வரிசைப்படி உரிய வகையில் வடிவமைப்ப தெனவும் அரசு முடிவு செய்துள்ளது.

நூல் வெளியிட நிதியுதவி

மொழி வளர்ச்சிக்குரிய அடிப்படைத் தேவைகளில் சிறந்த நூல்கள் வெளியிடப்படுவதும் ஒன்றாகும். தமிழ் வளர்ச்சித் துறையால் சிறந்த நூல் வெளியிட நிதியுதவி வழங்கப்படுகிறது. இவ்வகையில் ஒவ்வொரு நூலிற்கும் அச்சுச் செலவினடிப்படையில் ரூ.25,000/-வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது. 2009-2010 ஆம் ஆண்டில் வல்லுநர் குழுவால் தெரிவு செய்யப்பட்ட 10 நூல்களுக்கு ரூ.1,68,786/- நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

நட்சத்திர உணவு விடுதிகளில் திருக்குறள் நூல்

உலக எல்லைகளையும், சமூக எல்லைகளையும் கடந்து மனித இனம் முழுமையாகப் பின்பற்றத்தக்க சிறந்த சிந்தனைகளைக் கொண்டது திருக்குறள். உலகப் பொதுமறையாம் திருக்குறளைப் பிற மாநிலத்தவரும் பிற நாட்டவரும் நன்குணர்ந்து பயன்பெற ஏதுவாக அரசு விருந்தினர் இல்லங்களிலும், தனியார் நட்சத்திர விடுதிகளின் அறைகளிலும் ஆங்கில மொழியாக்கத்துடன் கூடிய திருக்குறள் நூல் வைத்தல் திட்டத்தின்படி ஆண்டுதோறும் ஒரு

LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 14

இலட்சம் ரூபாய்க்கான திருக்குறள் நூல்கள் வாங்கப்பட்டு விடுதிகளின் அறைகளில் வைக்கப்பட்டு வருகின்றன. 2009-2010 ஆம் ஆண்டில் திருக்குறள் நூலின் 850 படிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கும், 50 படிகள் சென்னை மாநில அரசினர் விருந்தினர் இல்லத்திற்கும், 100 படிகள் புது டெல்லி தமிழ்நாடு அரசினர் விருந்தினர் இல்லத்திற்கும் அளிக்கப்பட்டுள்ளன.

திருவள்ளுவர் / திருக்குறள் குறிப்புக் கையேடு

தமிழகம் வரும் சுற்றுலாப் பயணிகள் வியந்து பாராட்டும் வகையில் அய்யன் திருவள்ளுவர் சிலை 133 அடி உயரத்துடன் குமரி முனையில் ஓங்கி நிற்கின்றது. கன்னியாகுமரிக்கு சுற்றுலா வரும் பயணிகள் வள்ளுவரைப் பற்றியும் வான்புகழ் திருக்குறள் பற்றியும் அறிந்து கொள்ள ஏதுவாக திருக்குறள், திருவள்ளுவர் பற்றிய விவரங்கள் அடங்கிய கையேடு மற்றும் இந்தி, வங்காளம், ஆங்கில மொழிகளில் அமைந்த திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல்களையும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குவதற்காக ரூ.20.00 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறந்த நூல்களுக்குப் பரிசு

'மூலையிலோர் சிறுநூலும் புதுநூலாயின் முடிதனிலே சுமந்துவந்து தருதல் வேண்டும்' என்பார் பாவேந்தர் பாரதிதாசன். இதற்கேற்பத் துறைதோறும் புது நூல்கள் வெளிவருவதற்கு அரசு ஊக்கம் அளித்து வருகிறது. இதற்காகத் தமிழில் வெளிவரும் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. ஆண்டுதோறும் இத்திட்டத்தின்படி 31 வகைப்பாடுகளில் போட்டி நடத்தப் பெற்று, போட்டிக்கு வரும் நூல்களில் 31 வகைப்பாடுகள் ஒவ்வொன்றிலும் மிகச் சிறந்த நூலினைப் படைத்த நூலாசிரியருக்கும் அதனைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கும் பரிசுகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன. 2005 ஆம் ஆண்டுக்குரிய போட்டி வரை, நூலாசிரியர்களுக்கு ரூ.10,000/-வீதமும், பதிப்பகத்தாருக்கு ரூ.2,000/- வீதமும் பரிசுகள் வழங்கப்பட்டு வந்தன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 16-1-2008 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் பரிசுத் தொகையை உயர்த்தி அறிவித்தார்கள். அதன்படி 2006-க்குரிய போட்டி முதலாக ஒவ்வொரு நூலாசிரியருக்கும் ரூ.20,000/-வீதமும், பதிப்பகத்தாருக்கு ரூ.5,000/-வீதமும் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2008 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ள நூல்களில்,

2010 மே 14]

போட்டிக்கு 30 வகைப்பாடுகளில் நூல்கள் வரப்பெற்றன. அவற்றுள் 29 வகைப்பாடுகளில் நூல்கள் தெரிவு செய்யப்பட்டு 29 நூலாசிரியர்களுக்கும், பரிசுக்குரிய நூல்களைப் பதிப்பித்த 29 பதிப்பகத்தாருக்கும் பரிசுகள் என மொத்தப் பரிசுத் தொகை ரூ.7.05 இலட்சம், 15-1-2010 ஆம் நாளன்று நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழக அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை

வாழும் காலத்தில் பெரும்பகுதியைத் தமிழுக்காகச் செலவிட்டுத் தமிழ்ப் பணியாற்றிய தமிழறிஞர்கள் வயதான காலத்தில் வறுமையால் வாடக்கூடாது என்பதைக் கருத்திற்கொண்டு அரசு அவர்களுக்கு உதவித்தொகை வழங்கி வருகிறது. 58 வயது நிறைந்தும், ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மேற்படாமலும் உள்ள தமிழறிஞர்களுக்கு வாழ்நாள் முழுவதும் 1-9-2006 முதல் திங்கள் தோறும் ரூ.1,000/- வீதம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. அவர்களின் மறைவுக்குப் பின்னர் அவர்களின் மரபுரிமையருக்கும் இதே அளவு தொகையை திங்கள்தோறும் 1,000/- ரூபாயைக் குறும அளவாக வழங்க அரசால் ஒப்பளிப்புச் செய்யப்பட்டு வருகிறது. 2009-2010 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட 23 தமிழறிஞர்களுக்கு, 15-1-2010 அன்று நடைபெற்ற அய்யன் திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழக அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் நிதியுதவி ஆணைகள் வழங்கப்பட்டன. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 583 தமிழறிஞர்களுக்கு நிதியுதவி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

தமிழறிஞர் / எல்லைக் காவலர் / மரபுரிமையர் உதவித்தொகை

தமிழ் மொழியின்பால் மாறாத பற்றுக் கொண்டு, மொழி-பண்பாட்டு வளர்ச்சிக்குத் தொண்டும், தியாகமும் புரிந்தவர்களைப் போற்றும் வகையில் அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் அரசால் உதவித்தொகை வழங்கப்படுகிறது. அவர்களின் மறைவுக்குப்பின் அவர்தம் மரபுரிமையருக்கும் நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வகையில் தமிழிறிஞர்கள் எனில் திங்கள்தோறும் ரூ.3,000/-, மருத்துவப் படி ரூ.15/-, எனவும், இவர்களின் மரபுரிமையர் எனில் திங்கள்தோறும் ரூ.1,500/-, மருத்துவப் படி ரூ.15/-, எனவும் வழங்கப்பட்டு வருகிறது. 2008-2009 ஆம் ஆண்டு வரை 933 தமிழறிஞர்களுக்கும் 449 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கும்

நிதியுதவிஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 2009-10 ஆம் ஆண்டில் 66 தமிழறிஞர்களுக்கும் 79 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கும் நிதியுதவி ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

தமிழக எல்லையைக் காத்திட்ட எல்லைக் காவலர்களின் தொண்டைப் போற்றும் வகையில் அவர்களுக்கு வாழ்நாள் முழுதும் திங்கள்தோறும் நிதியுதவியாக 4,000/- ரூபாயும், அவர்களின் மறைவிற்குப்பின் மரபுரிமையர்களுக்குத் திங்கள் தோறும் 2,000/- ரூபாயும் வழங்கப்படுகிறது. நிதியுதவியுடன் மருத்துவப் படி ரூ.15/- வழங்கப்பட்டு வருகிறது. 2008-2009ஆம் ஆண்டு வரை 324 எல்லைக் காவலர்களுக்கும் 127 எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்களுக்கும் நிதியுதவி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் 10 எல்லைக் காவலர்களுக்கும் 39 எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்களுக்கும் நிதியுதவி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 334 எல்லைக் காவலர்களுக்கும் 166 எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்களுக்கும் 999 தமிழறிஞர்களுக்கும் 528 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கும் நிதியுதவி ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

விருதுகள்

அன்னைத் தமிழுக்குப் பெருமை சேர்க்கத் தம் வாழ்நாளெல்லாம் பணியாற்றும் பெருமக்களை அரசு போற்றிப் பாராட்டி வருகிறது. அரசால் ஆண்டுதோறும் இத்தகைய பெருமக்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு அய்யன் திருவள்ளுவர், தமிழ்த் தென்றல் திரு.வி.க., மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியோர் பெயர்களால் விருதுகள் வழங்கப்படுகின்றன. விருது ஒவ்வொன்றிற்கும் விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும் ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கப்படுகின்றன.

2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது திரு. வெ.அண்ணாமலை (எ) இமையம் அவர்களுக்கும், மகாகவி பாரதியார் விருது டாக்டர் சேக்கிழார் அடிப்பொடி தி.ந. இராமச்சந்திரன் அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது கவிஞர் தமிழ்தாசன் அவர்களுக்கும், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது முனைவர் திருமதி தாயம்மாள் அறவாணன் அவர்களுக்கும், 2010 ஆம் ஆண்டிற்கான அய்யன்

2010 மே 14]

திருவள்ளுவர் விருது முனைவர் ஐராவதம் மகாதேவன் அவர்களுக்கும் 15-1-2010ஆம் நாளன்று நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழக அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

தமிழ்ப் பணி நிறுவனங்களுக்கு நிதியுதவி

தமிழக அரசு தமிழ்ப் பணிகளுக்காக பிற நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கி தமிழ் வளர்ச்சிப் பணியை மேலும் ஊக்கப்படுத்தி வருகிறது. இவ்வகையில் ஆசியவியல் ஆய்வு நிறுவனத்திற்கு 2008-2009ஆம் ஆண்டிற்கு நல்கையாக ரூ.22.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அறிவியல் தொழில்நுட்ப நூல் வரிசை வெளியிட தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ.15.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. திருவனந்தபுரம், பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளிக்கு 2007-2008 ஆம் ஆண்டிற்குரிய நல்கை ரூ.10.00 இலட்சம் 2009-2010 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

பிற மாநிலங்களில் தமிழ்க் கல்விக்கு நிதியுதவி

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்யும் முறையில் பிற மாநிலங்களில் தமிழ்க் கல்வி பரவிடும் நோக்கில் குப்பம் திராவிடப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழி, இலக்கியம் கற்கும் மாணவர்களுக்கும் ஆய்வு செய்யும் மாணவர்களுக்கும் கல்வி மற்றும் விடுதிக் கட்டண உதவித் தொகையாக 2008-2009ஆம் ஆண்டில் ரூ.1.83 இலட்சம் வழங்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை ஏற்படுத்திட 4 பணியிடங்களுக்கு ஆண்டுதோறும் நல்கைத் தொகை ரூ.12.15 இலட்சம் வழங்கிட அரசு ஆணையிட்டு நிறைவு செய்யப்பட்ட பணியிடங்களுக்காக 2009-2010 ஆம் ஆண்டில் நல்கைத் தொகையாக ரூ.15.15 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழில் முனைவர் பட்ட ஆய்வு மற்றும் முதுநிலை ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கிடவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்ச் சங்கங்களுக்கு நிதியுதவி

பிற மாநிலத் தமிழ்ச் சங்கங்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப இவ்வரசு அவ்வப்போது நிதியுதவி வழங்கி வருகிறது. பெங்களூரு தமிழ்ச் சங்கத்தால் நிறுவப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலை

[2010 மே 14

திறப்பு விழாச் செலவினங்களுக்காக அச்சங்கத்திற்குத் தமிழக அரசால் ரூ.10.00 இலட்சம் வழங்கப்பட்டது.

விழாக்கள்

ஞாலமே வியந்து போற்றும் திருக்குறளைத் தந்த அய்யன் திருவள்ளுவரைக் கொண்டாடும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் தைத்திங்கள் இரண்டாம் நாளன்று திருவள்ளுவர் விழா கொண்டாடப்படுகிறது. நேர்வுக்கேற்பத் தமிழறிஞர்களின் நூற்றாண்டு விழாக்களும் அவ்வப்போது கொண்டாடப்படுகின்றன. தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களின் திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் பிப்ரவரித் திங்கள் 19 ஆம் நாளன்றும், ஔவைப் பெருமாட்டியின் திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் உலக மகளிர் தினமான மார்ச்சுத் திங்கள் 8 ஆம் நாளன்றும் மலர் தூவிப் போற்றிச் சிறப்பிக்கும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

நூல்கள் நாட்டுடைமை

செம்மொழித் தமிழ் மேன்மேலும் வளம் பெற்று தமிழர் வாழ்வு சிறக்கத் தொண்டாற்றிய அறிஞர் பெருமக்கள் பலர். அவர்களின் செம்மை மிகு அறிவுக் களஞ்சியத்தை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். எனவே, சிறந்த தமிழறிஞர்களின் படைப்புகள் நாட்டுடைமையாக்கப் படுவதோடு அவர்களின் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கிச் சிறப்பு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் 17 தமிழறிஞர்கள், 2007-2008 ஆம் ஆண்டில் 20 தமிழறிஞர்கள், 2008-2009ஆம் ஆண்டில் 28 தமிழறிஞர்கள், 2009-2010 ஆம் ஆண்டில் 23 தமிழறிஞர்கள் என மொத்தம் 88 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர்களின் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்குவதற்காக ரூ.5.80 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, மரபுரிமையர்கள் குறித்த சான்றாவணங்கள் அளித்த தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகையாக ரூ.5.43 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் 28 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. அவர்களில் 21 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகையாக ரூ.81.00 இலட்சம் வழங்க அரசாணைகள் வழி அறிவிக்கப்பட்டது.

2010 மே 14]

இவர்களில் மரபுரிமையர்கள் குறித்த சான்றாவணங்கள் அளித்த 18 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகையாக ரூ.70.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

எழுத்தாளர் திருமதி ராஜம்கிருஷ்ணன் அவர்களின் கோரிக்கையை ஏற்றுச் சிறப்பு நேர்வாக அவரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவருக்குப் பரிவுத் தொகையாக ரூ.3.00 இலட்சம் வழங்கப்பட்டது. அதேபோன்று சிறப்பு நேர்வாக முனைவர் மணவை முஸ்தபா அவர்களின் நூல்களும் நாட்டுடைமையாக்கப் பட்டு அவருக்குப் பரிவுத் தொகையாக ரூ.10.00 இலட்சம் 31-3-2010ல் வழங்கப்பட்டது. இவ்வகையில் 2009-2010 ஆம் நிதியாண்டில் சான்றாவணம் அளித்த 18 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கும், திருமதி ராஜம் கிருஷ்ணன், முனைவர் மணவை முஸ்தபா ஆகியோர்களுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.83.00 இலட்சம் பரிவுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

2010-2011 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம், பேராசிரியர் அ. கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் எஸ். எம். கமால், ப. இராமசாமி, பேராசிரியர் ர. சீனிவாசன், வ.சு. செங்கல்வராய பிள்ளை, கவிஞர் வெள்ளியங்காட்டான், நெ.து. சுந்தரவடிவேலு, டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், மயிலை சிவமுத்து, காழி சிவ. கண்ணுசாமி பிள்ளை, கே.பி.நீலமணி, கவிராஜ பண்டிதர் ஜெகவீரபாண்டியன், அ. திருமலைமுத்துசுவாமி, நவ்ராஜ் செல்லையா, திருகூடசுந்தரம், பேராசிரியர் சுந்தர சண்முகனார், தஞ்சை ராமையாதாஸ், கவிஞர் தாராபாரதி, அருதனக்குட்டி அடிகளார், சரோஜா இராமமூர்த்தி, அ. சீனிவாசன் ஆகியோரின் படைப்புகள் என மொத்தம் 22 தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, இச்சான்றோர்கள் படைத்துள்ள நூல்களின் எண்ணிக்கை, அவை சமுதாயத்தில் ஏற்படுத்தியுள்ள பயன்கள், அவற்றின் சிறப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களுடைய மரபுரிமையர்க்குப் பரிவுத் தொகை நிர்ணயம் செய்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க 22 தமிழ்ச் சான்றோர்களின் இலக்கியப் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகையாக ரூபாய் 1,47,00,000/- நிதி ஒப்பளிப்புச் செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

[2010 மே 14

நூலாக்கம்

தமிழ் நூல் விவர அட்டவணைத் தொகுதிகள், தமிழ் நாட்டு வரலாற்று நூற்றொகுதிகள், தமிழ் மொழி வரலாறு, குறளமுதம், ஆட்சித் தமிழ், திருக்குறள் நூல்கள், வணிக நிறுவனப் பெயர்ப்பலகையில் தமிழ், தமிழ்ச் சுருக்கெழுத்து நடைமுறை நூல் முதலியன தமிழ் வளர்ச்சிக்குத் துணைபுரியும் வகையிலும் தமிழ் மொழியின் திறனை மேம்படுத்தும் வகையிலும் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ளன.

நாட்டுடைமை நூல்களை அச்சிலும் இணையதளத்திலும் வெளியிடுதல்

நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழறிஞர்களின் நூல்களில் உள்ள உயர்ந்த சிந்தனைகளையும் செறிவான கருத்துக்களையும் அனைவரும் அறிந்து பயன்பெற ஏதுவாக ஆண்டுதோறும் ஒவ்வொருவரின் படைப்புகளிலிருந்தும் ஒரு நூலைத் தெரிவு செய்து அச்சிட்டு வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள நூல்களை இணையதளத்தில் சேர்க்கும் நோக்கில் 519 நூல்கள் உருப்படம் (ஸ்கேன்) செய்யப்பட்டு இணையதளத்தில் சேர்ப்பதற்காகத் தேசியத் தகவல் மையத்தில் அளிக்கப்பட்டுள்ளன. மேலும் 1,018 நூல்களை உருப்படம் (ஸ்கேன்) செய்யும் பணி சென்னை கன்னிமாரா நூலகத்தில் நடைபெற்று வருகிறது.

பள்ளி–கல்லூரி மாணவர்களுக்குப் பரிசுப் போட்டிகள்

பள்ளியிலும், கல்லூரியிலும் பயிலும் காலத்திலேயே மாணவர்களின் உள்ளங்களில் தமிழ் உணர்வும் மொழிப்பற்றும் தமிழின்பால் ஈடுபாடும் ஏற்படுவது தமிழ் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். இது அவர்களின் தமிழ் வழி வாழ்விற்கும், தமிழர் பண்பாட்டைக் காக்கவும் தூண்டுகோலாக அமையும். எனவே, தமிழ்ப் பற்றையும் படைப்பாற்றலையும் வளர்க்கும் நோக்கில் ஆண்டுதோறும் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் பள்ளி/கல்லூரி மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. 2009-2010 ஆம் நிதியாண்டில் பள்ளி மாணவர்கள் போட்டிக்காக ரூ.3.35 இலட்சமும், கல்லூரி மாணவர்கள் போட்டிக்காக ரூ.2.30 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டன.

2010 மே 14]

கணியன் பூங்குன்றனார் பரிசு

அன்னைத் தமிழ்மொழி அறிவியல் மொழியாகத் திகழவும், பிற துறைகளிலும் முழுமையாகக் கோலோச்சவும் வேண்டும் என அரசு விரும்புகிறது. ஆகையால் அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கம் நல்கும் வகையில் ஆண்டுதோறும் வெளிவரும் தமிழ் மென்பொருள்களுள் சிறந்த மென்பொருள் ஒன்றைத் தெரிவு செய்து அதனை உருவாக்கியவருக்கு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று உலக மக்களையெல்லாம் ஒரு குடையின் கீழ்க் கொண்டுவரப் பாடிய சங்கப் புலவர் 'கணியன் பூங்குன்றனார்' பெயரில் பரிசுத் தொகை ரூ.1,00,000/- வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டிற்கான பரிசுக்கு, "பனேசிய டீரீம் வீவர்ஸ் சாப்ட்வேர் (பி) லிமிடெட்" என்ற நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில் 2010, ஜூன் திங்களில் நடைபெற உள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இந்நிறுவனத்திற்குப் பரிசும் பாராட்டிதழும் வழங்கப்பட உள்ளன.

சங்க இலக்கிய மொழி பெயர்ப்பு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட சங்க இலக்கியங்கள் கூறும் வாழ்வியல் சிந்தனைகளும், வரலாற்றுச் செய்திகளும் உலக மொழிகளில் தமிழின் தொன்மையைப் பறைசாற்றுவதாக உள்ளன. இத்தகைய சங்க இலக்கியப் பெருமைகளைப் பிற மாநிலத்தவர்களும் அறிந்து கொள்ள வகைசெய்வது நமது கடமையாகும். இந்நோக்கில் சங்க இலக்கியங்களான எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

'தமிழ் நிகண்டு சொற்களஞ்சியம்' வெளியிட நிதியுதவி

தமிழ் ஆய்வுப் பணி மேற்கொள்பவர்களுக்கும், மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படும் வகையில் நிகண்டுகளை அகராதி வடிவில் உருவாக்கித் 'தமிழ் நிகண்டு சொற்களஞ்சியம்' தயாரித்து வெளியிடச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு 2009-2010 ஆம் ஆண்டிற்கு ரூ.7.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

[2010 மே 14

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

நோக்கம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்டது. உலகளாவிய நிலையில் அனைத்து நிலைகளிலும் தமிழ் உயராய்வினை அத்துறைகளில் ஆர்வமுடைய உலகெங்கணும் உள்ள தமிழ் அறிஞர்களை ஒருங்கிணைத்து வல்லும் வகையெல்லாம் தமிழ் ஆய்வினைத் தொடரும் நோக்கில் இந்நிறுவனம் தொடங்கப்பட்டது. நூலகம், மொழிப்பயிற்சிக் கூடம் உள்ளிட்ட வசதிகளுடன் உயர் தமிழாய்வினை ஊக்குவிக்கும் கல்விச் சூழலை உருவாக்குவது; தேவைகருதி ஆராய்ச்சியாளர்களுக்குப் பயிற்சியளிப்பது; தமிழாய்வில் தோய்ந்த பிறநாட்டு அறிஞர்களுள் ஆர்வமுடையவர்களுடன் நெருங்கிய தொடர்பினை மேற்கொண்டு இத்துறைகளில் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல்; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கல்விச் சூழல் பாதிக்காத வகையில் இதன் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் பிற கல்வி நிறுவனங்கள், அரசு அமைப்புகள், பிறநாட்டு அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனியர் ஆகியோருடன் இணைந்து செயற்படுவது ஆகியனவும் இதன் முதன்மை நோக்கங்களாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் தன்னாட்சி அமைப்புடன் இந்நிறுவனம் பொலிவுடன் திகழ்கிறது.

அரசு நல்கைகள்: வாலாயம் மற்றும் ஓய்வூதிய நல்கைகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் நிகரப் பற்றாக்குறைச் செலவினங்கள் அனைத்தும் தமிழ்நாடு அரசால் நல்கையாக வழங்கப்பட்டு வருகின்றன. 2009-2010 ஆம் நிதியாண்டிற்கு வாலாய நல்கை ஒதுக்கீடாக ரூ.1,30,47,703/-, பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் ரூ.9,85,000/-, ஓய்வூதிய நல்கையாக ரூ.22,84,000/- என இந்நிறுவனத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

புலங்கள்

1. தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப் புலம் 2. தமிழ்மொழி மற்றும் மொழியியல் புலம் 3. சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம் 4. அயல்நாட்டுத் தமிழர் புலம் என நான்கு புலங்கள் இந்நிறுவனத்தில் தமிழாய்வில் ஈடுபட்டுள்ளன.

2010 மே 14]

செயற்பாடுகள்

தமிழ் உயராய்வு நிறுவனமாகத் திகழும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழியல் தொடர்பான பல துறைகளிலும் கல்விசார் அலுவலர்கள் திட்டப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். இலக்கியவியல், இலக்கணவியல், மொழியியல், சமூகவியல், பண்பாட்டியல், நாட்டுப்புறவியல், மொழிபெயர்ப்பியல் என அவை அமைகின்றன.

அயல் நாட்டவர்க்கு, தமிழ் மொழி கற்பித்தல், சென்னைப் பல்கலைக்கழக இணைவுடன் முனைவர் பட்ட ஆய்வாளர்களை நெறிப்படுத்துதல்; தமிழ்ப் பல்கலைக் கழக இணைவுடன் ஆய்வில் நிறைஞர் பட்ட மாணாக்கர்களை உருவாக்குதல் எனக் கற்பித்தல் வழித் தமிழ் பரப்பும் பணி இடையறாது நடைபெறுகின்றன.

பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதியுதவியுடன் ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ளுதல், வாரக் கருத்தரங்குகள், தேசியக் கருத்தரங்குகள், சிறப்புக் கருத்தரங்குகள், பயிலரங்குகள் முதலான ஆய்வு அரங்குகள் வழி தமிழாய்வு வளர்த்தல், நிறைவடைந்த திட்டப் பணிகள் மற்றும் ஆய்வுகளை நூல்களாக வெளியிடல், இன்றியமையாத மறுபதிப்புகளை வெளிக்கொணர்தல், உலகளாவிய தமிழாய்வாளர்களிடையே இணைப்புப் பாலமாக அமையும் இருமொழியிலான தமிழாய்விதழைத் தொய்வின்றி வெளியிடல் என இதன் தமிழ்ப் பணிகள் பரந்து விரிந்தமைகின்றன.

தமிழியல் – பருவ இதழ்

உலகெங்கிலும் பரந்திருக்கும் தமிழர்களின் ஊக்கச் செயன்மைகளுக்கு மையப் பொருளாக அமைந்துள்ள ‘தமிழியல் இதழ்’ எனும் ஆண்டுக்கு இருமுறை வெளிவரும் காலமுறை இதழ் இந்நிறுவனத்தால் வெளியிடப்பெறுகின்றது. இதுவரை 75 இதழ்கள் வெளிவந்துள்ளன.

அறக்கட்டளைகள்

தமிழ் வளர்த்த சான்றோர், அரசியலார், புரவலர்தம் பெயர்களில் தமிழன்பர்கள் அளித்த நன்கொடை கொண்டு

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 14

முப்பத்து மூன்று அறக்கட்டளைகள் நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களின் பெயரில் அறக்கட்டளை ஒன்றும், முனைவர் வ.அய். சுப்பிரமணியன் அவர்களின் பெயரில் அறக்கட்டளை ஒன்றும் இந்நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ளன. இந்நிறுவனத்தின் புறத்தே தமிழாய்வில் தலைநிற்கும் தமிழார்வலர்களின் தமிழ்ப் பணிக்குத் தகுந்த வாய்ப்பாக இவ்வறக்கட்டளை வழி நிகழும் பொழிவுகள் அமைகின்றன. பொழிவு நாளிலேயே அப்பொழிவு நூலாக்கம் பெறுவது நிறுவனத்தின் தனிச்சிறப்பாகும். 2009-2010 ஆம் ஆண்டில் 22 அறக்கட்டளைப் பொழிவுகள் நிகழ்ந்துள்ளன.

வெளியீடுகள்

இந்நிறுவனம் இதுவரையிலும் 650 நூல்களை வெளியிட்டுள்ளது. இவை இங்குள்ள கல்விசார் அலுவலர்களின் திட்டப் பணிகள், நிறுவனக் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்புகள், அறக்கட்டளைப் பொழிவுகள், சுவடிப் பதிப்புகள், மொழிபெயர்ப்புகள், அரிய நூல் மறுபதிப்புகள், பிற தமிழறிஞர்களின் படைப்புகள் ஆகியனவாக அமைகின்றன. 2009-2010 ஆம் ஆண்டில் மட்டும் 47 நூல்களை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. நூல் விற்பனை வரவாக ரூ.25,00,000/- ஈட்டியுள்ளது.

நூலகம்

நிறுவனக் கல்விப் பணியாளர், ஆய்வாளர், முதுகலை மாணாக்கர் மட்டுமின்றித் தமிழாய்வாளர் அனைவரும் பயன்படுத்தும் வகையில் நிறுவன நூலகம் செயற்பட்டு வருகிறது. அரிய நூல்கள், அண்மை வெளியீடுகள் என அனைத்தும் இணைந்த நிலையில் தற்போது 91,350 நூல்கள் உள்ளன. 1,767 புதிய நூல்கள் சேர்ந்துள்ளன. ஆய்வு வளர்ச்சிக்குத் தடை நிகழா வண்ணம், ஆய்வாளருக்குத் துணைநிற்கும் வகையில் இயன்ற அளவு தேவையான நூல்கள் உடனுக்குடன் வாங்கப்படுகின்றன. தினமலர் நாளிதழ், தனியர் எனப் பிறர் அளிக்கும் நூல்களும் நன்கொடைகளாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

வகுப்புகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 2004 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு அனுமதியுடன் ஆய்வியல் நிறைஞர் (தமிழ்) வகுப்புகள் தொடங்கி நடத்தி வருகின்றது. இதுவரை 157 ஆய்வியல் நிறைஞர் மாணவர்களும், 50 முதுகலை மாணவர்களும் இந்நிறுவனத்தின் வழிப் பட்டம் பெற்றுள்ளனர். நடப்பு ஆண்டில் 28 ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். முனைவர் பட்டத்திற்காக 26 ஆய்வாளர் முழு நேர மற்றும் பகுதி நேர ஆய்வில் முனைந்துள்ளனர். இவ்வாண்டு இருவர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். அண்மையில் இரண்டு செருமானியர்களும், ஒரு சப்பான் நாட்டைச் சேர்ந்தவரும் தமிழ் வகுப்பில் சேர்ந்துள்ளனர்.

அண்ணா நூற்றாண்டுத் தொடர் சொற்பொழிவுகள்

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவினை முதன்மைப்படுத்தி அண்ணா அவர்களின் பன்முக ஆய்வு நோக்கில் நூற்றாண்டு விழாத் தொடர் கருத்தரங்குகள் ஆறு நடத்தப்பெற்றுள்ளன.

தமிழ்நாடு அரசு சிறப்பு நல்கைகள்

தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் "தமிழரின் மரபுச் செல்வங்கள்-நிகழ்கலைகள்" எனும் தலைப்பில் மூன்று நாள் தேசியக் கருத்தரங்கு நடத்தப்பெற்றது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் உட்கட்டமைப்பினை மேம்படுத்த 20 கிலோவாட் மின்திறன் கொண்ட தானியங்கி மின்மாற்றுப்பொறி ஒன்று ரூ.3,80,000/- செலவில் வாங்கப் பெற்றுள்ளது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கருத்தரங்க அறையின் தண்வளி வசதிக்காக ரூ.4,50,000/- வழங்கப்பட்டு, தண்வளி வசதி செய்யப்பட்டது.

[2010 மே 14

பல்கலைக்கழக நல்கைக் குழு – புத்தாக்கப் பயிற்சி

தமிழ் இலக்கிய வகைமையியல் என்ற தலைப்பில் இருபத்தோர் நாள் புத்தாக்கப் பயிற்சி, பல்கலைக்கழக நல்கைக் குழு நிதியுதவியுடன் 16-9-2009 முதல் 9-10-2009 முடிய நிகழ்ந்தது.

பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதியுதவியுடன் பெருந்திட்டப் பணிகள்

சித்த மருத்துவச் சுவடிகள் ஆய்வடங்கல் எனும் பெருந்திட்டப் பணியும், தமிழக நாட்டுப்புறக் கலைகள் கலைக் களஞ்சியம் எனும் பெருந்திட்டப் பணியும் பல்கலைக்கழக நல்கைக் குழு நிதியுதவியுடன் 2009—2010 ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ் வகுப்புகளை பிற நாடுகளில் நடத்துவதற்கு வசதியாக சிங்கப்பூர் மற்றும் பிரான்சு ஆகிய நாட்டுக் கல்வி நிறுவனங்களுடன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.

மேம்பாட்டு நல்கைகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் நூலகத்திற்குத் தண்வளி வசதியுடன் இரும்பு அடுக்குகள் வாங்கிடத் தமிழ்நாடு அரசு ரூ. 20 இலட்சம் ஒப்பளித்துள்ளது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கூட்ட அறை மற்றும் கருத்தரங்க அறைகளுக்கு அறைகலன்கள் வாங்கிட தமிழ்நாடு அரசு ரூ.2 இலட்சம் ஒப்பளித்துள்ளது. தமிழ் எழுத்தாளர் பயிலரங்கு நடத்திட ரூ. 1.50 இலட்சமும், சுவடிப் பயிலரங்கு நடத்திட ரூ. 3.25 இலட்சமும் ஒப்பளித்துள்ளது.

நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தினை நோக்கி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நிகர்நிலைப் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தும் முயற்சிகள் தொடர்கின்றன. தமிழ்நாடு அரசு தடையின்மைச் சான்று வழங்கியுள்ளது.

2010 மே 14]

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

நோக்கம்

கலை, அறிவியல், இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றில் தமிழ்மொழி, இலக்கியங்களின் அடிப்படையில் பல்துறை ஆய்வினை முறைப்படுத்தல்; வளர்த்தெடுத்தல்; ஓலைச்சுவடிகளையும் அரிய / பழமையான அச்சு நூல்களையும் பாதுகாத்தல்; பதிப்பித்தல்; தமிழ்மொழி, பண்பாடு தொடர்புடைய கல்வெட்டுகள், தொழில்சார் வழக்குச் சொற்கள், இலக்கியச் சொல்லடைவுகள் ஆகியவற்றைத் தொகுத்து வெளியிடுதல்; இந்தியப் பண்பாட்டோடு தமிழுக்குரிய தொடர்புகளை ஆய்வு செய்திட மையங்களை ஏற்படுத்துதல்; பிற நிறுவனங்களோடு கூட்டுறவை ஏற்படுத்திக் கொள்ளுதல்; இன்றைய அறிவியல் தேவைக்கேற்பத் தொன்மை மரபின் தொடர்ச்சியாகத் தமிழ் மொழியை வளர்த்தெடுத்தல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்ட தமிழ்ப் பல்கலைக்கழகம் 1981 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தமிழுக்கென உருவாக்கப்பெற்ற இப்பல்கலைக்கழகம் 28 ஆண்டுகளைக் கடந்து 29-ஆவது ஆண்டில் தமிழ் வளர்ச்சியில் பல்வேறு நிலைகளில் தனது பங்களிப்பை நிறைவேற்றி வருகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகம் 1. கலைப் புலம் 2. சுவடிப் புலம் 3. வளர் தமிழ்ப்புலம் 4. மொழிப் புலம் 5. அறிவியல் புலம் என 5 புலங்களையும், அச்சகம், பதிப்புத்துறை, நூலகம், தூய தமிழ்ச் சொல்லாக்க அகர முதலிகள் திட்டம், அருங்காட்சியகம், கலைக் களஞ்சியத் திட்டம், பெருஞ்சொல்லகராதித் திட்டம் போன்றவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

கல்விப் பணி

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம், ஆய்வியல் நிறைஞர் பட்டம், முதுகலை மற்றும் முது அறிவியல், இளங்கல்வியியல் பட்டம், யோகா மற்றும் இசை தொடர்பான பெருஞ்சான்றிதழ் மற்றும் சான்றிதழ் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் 2009-2010 ஆம் கல்வியாண்டில் 645 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். 2006-2007 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்ட தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் தமிழ், வரலாறு, வணிகவியல், புவியியல் போன்ற பாடப் பிரிவுகளுக்கு

இளங்கலை, முதுகலை பட்டப் படிப்புகள் நடைபெற்று வருகின்றன. 101 மையங்கள் செயற்பட்டு வருகின்றன. 2009-2010 ஆம் கல்வியாண்டில் தொழில்முறை, முதுகலை, இளநிலை, பட்டயம், சான்றிதழ் ஆகிய பாடப் பிரிவுகளில் 2,191 மாணவர்கள் பயின்று வருகின்றனர். 2009 ஆம் நாட்காட்டி ஆண்டில் இளங்கல்வியியல் பட்டப்படிப்பில் 500 மாணவர்கள் பயின்று வருகின்றனர். 2010 ஆம் ஆண்டில் 500 மாணவர்களின் சேர்க்கைக்குரிய செயன்மைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2009-2010 இல் இப்பல்கலைக்கழகத்தில் பயின்றுவரும் மாணவர்களுக்குப் பின்வருமாறு கல்வி உதவித் தொகைகள் இதுவரை பெற்று வழங்கப்பட்டுள்ளன:-

வ. எண்	துறை	மாணவர்களின் எண்ணிக்கை	ரூபாய் இலட்சத்தில்
1	ஆதி திராவிடர் நலத் துறை	252	16.41
2	பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை	237	4.14
3	ஏ.டி. பன்னீர்செல்வம் மற்றும் பாரதியார் அறக்கட்டளை	328	2.28
4	இராஜீவ் காந்தி கல்வி உதவித் தொகை (மைய அரசு)	54	99.90
5	சிறப்பு கல்வி உதவித் தொகை ஆதி திராவிடர் நலத் துறை	133	9.31
	கூடுதல்	1004	132.04

2010 மே 14]

ஆய்வுப் பணிகள்

பல்கலைக்கழக ஆசிரியர்கள், கற்பித்தல் பணிகளோடு ஆய்வுப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். பல்கலைக்கழக நல்கைக் குழு, செம்மொழி ஆய்வு மையம் மற்றும் பிற நல்கை நிறுவனங்களின் உதவியுடன் கல்வியாளர்கள் பெருந்திட்டங்களையும் குறுந்திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்கலைக்கழக மானியக் குழு இறுதி நல்கையாக ரூ.562.50 இலட்சம் ஒதுக்கீடு செய்து, இதில் 50 விழுக்காடு ரூ.281.25 இலட்சம் நல்கை பெறப்பட்டுள்ளது. 2010-2011-இல் ரூ. 140 இலட்சம் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக அரசு பகுதி II திட்டத்தின் கீழ் 2009-2010 ஆம் ஆண்டில் ஏழு திட்டங்களுக்காக ரூ.77 இலட்சம் அனுமதித்து வழங்கியுள்ளது. தற்போது பகுதி II திட்டத்தின் கீழ் 2010-2011-ஆம் ஆண்டுக்கு 5 திட்டங்களுக்காக ரூ.1 கோடி அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழுவின் நல்கையின் கீழ் 13 ஆய்வுத் திட்டங்களும், பிற நல்கை நிறுவனத்தின் வழி 10 ஆய்வுத் திட்டங்களும், தமிழ்ப் பல்கலைக்கழக நிதியின்கீழ் 59 ஆய்வுத் திட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தம்

2009 ஆம் ஆண்டில் யுவான்டா பல்கலைக்கழகம், கேம்ரூன்; ரோமானியப் பல்கலைக்கழகம், ரோம்; கேஸினோ பல்கலைக்கழகம், இத்தாலி மற்றும் தமிழ் மரபு அறக்கட்டளை, இங்கிலாந்து ஆகிய நான்கு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் / நிறுவனங்களுடன் புரிதல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு தமிழ், இலக்கியம், மொழியியல் போன்ற பல்வேறு துறைகளில் ஆய்வுகள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. கேரளப் பல்கலைக்கழகமும் தமிழ்ப் பல்கலைக்கழகமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டு தொல்லியல் ஆய்வில் அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

[2010 மே 14

விரிவாக்கப் பணிகள்

தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டுத் துறையினர் பிற பல்கலைக்கழகப் பேராசிரியர்களுடன் இணைந்து பெரியாற்றின் தென்கரையில் அமைந்துள்ள பட்டணம், பழனி அருகிலுள்ள பொருந்தில், கேரளாவிலுள்ள ஆனைக்கரை, தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் தொல்லியல் அகழாய்வுகளை மேற்கொண்டுள்ளனர். அகழாய்வுகளில் ஏராளமான பழங்காலப் பொருட்கள் மற்றும் கற்காலத் தடயங்கள் கிடைத்துள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழக இசைத் துறை, தென்னகப் பண்பாட்டு மையத்தின் நிதியுதவியின்கீழ், சிறந்த தமிழிசைவாணர்களின் தமிழிசைக் குறுந்தகடுகளை 25 எண்ணிக்கையில் தமிழக ஆளுநர் அவர்கள் முன்னிலையில் வெளியிட்டுள்ளது. 18-4-2009 அன்று நடைபெற்ற வளாக நேர்காணலில் தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள் 147 பேர் நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சிங்கப்பூர் முஸ்தபா அறக்கட்டளையால் நிறுவப்பட்டுள்ள தமிழவேள் கோ. சாரங்கபாணி ஆய்விருக்கை அறக்கட்டளை சார்பில் சிங்கப்பூர் மலேசியத் தமிழிலக்கியக் கருத்தரங்கம் 5-6-2009 மற்றும் 6-6-2009 ஆகிய நாட்களில் நடைபெற்றது. ‘சங்கமம்’ எனும் காப்பியம் படைத்துள்ள சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் திரு. முருகடியான் அவர்களுக்கும், ‘200 ஆண்டுகளில் மலேசிய இந்தியர்கள்’ எனும் நூலை எழுதியுள்ள மலேசியத் தமிழ் எழுத்தாளர் திரு. ப. சந்திரகாந்தம் அவர்களுக்கும் கரிகாலன் விருதுகள் வழங்கப்பட்டன. ஒவ்வொருவருக்கும் ரூ.25,000/- மதிப்புடைய தங்கப்பதக்கமும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவினையொட்டி தமிழக அரசு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாச் சிறப்பு மலர் வெளியிட்டது. 2009 ஆம் ஆண்டில் 23 அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், 30 கருத்தரங்குகள், 2 பணிப் பட்டறைகள் நடைபெற்றன.

2010 மே 14]

21-12-2009 அன்று தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 5-வது பொது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. தமிழக ஆளுநர் மற்றும் உயர் கல்வித் துறை அமைச்சர் ஆகியோர் பங்கேற்றனர். பட்டமளிப்பு விழாவில் முதுமுனைவர், முனைவர், ஆய்வியல் நிறைஞர், முதுகலை, இளங்கல்வியியல் பாடப் பிரிவுகளில் பட்டம் பெற்றோர் மற்றும் தொலைநிலைக் கல்வி வழியில் பயின்றவர்கள் என்ற வகையில் 1,723 பேர் (1535+188=1,723) பட்டம் பெற்றுள்ளனர்.

பல்வேறு துறைகளில் தமிழ்மொழி, இலக்கிய மேம்பாட்டிற்கு வகைசெய்ய வேண்டுமென்ற தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில் நாடகம், ஓவியம், இசை, நாட்டுப்புறவியல், மொழி, இலக்கியம் ஆகிய துறைகளில் உள்ளார்ந்த நிகழ்த்துத் தளங்களை அடையாளம் கண்டு அத்தகைய தளங்களிலான நிகழ்த்துகலைக் கோட்பாடுகளை மாணவர்களுக்குக் கற்பிக்கவும், அதேநேரம் மறைந்து கொண்டிருக்கும் வீரியம் நிறைந்த நிகழ்த்துகலைகளைப் பாதுகாக்கும் வகையிலும், பயிற்றுவிக்கவும் நிதியை எதிர்நோக்கி வரும் கல்வியாண்டில் நாட்டார் நிகழ்த்துகலையில் வகுப்புகள் தொடங்கப்படவுள்ளன.

நிகழ்த்துகலை வகுப்புகளுக்கான கட்டுமானப் பணி, தொழில்நுட்பக் கருவிகளுக்கு 2.75 கோடி தேவையெனத் தொழில்நுட்பப் பொறியாளரால் மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தமது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1 கோடி நிதியுதவி அளித்துள்ளார்கள்.

நூல் வெளியீடுகள் மற்றும் விற்பனை

2009 ஆம் ஆண்டில் மட்டும் 16 புதிய நூல்களும், 3 மறு அச்சு நூல்களும், வாழ்வியற் களஞ்சியம் 1-13 தொகுதி வரையான மறுமதிப்பு நூல்களும் அச்சிடப்பெற்றுள்ளன. இவை மட்டுமின்றி, பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் தொடர்பான அச்சுப் பணிகளும் செய்தளிக்கப்பெற்றுள்ளன. அரசின் பொது நூலகத் துறை, அனைவருக்கும் கல்வித் திட்ட இயக்ககம், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தமிழ் அமைப்புகள்

[2010 மே 14

முதலியவற்றோடு தொடர்பு கொண்டு நூற்கண்காட்சிகளில் கலந்துகொண்டும் பல்கலைக்கழக வெளியீடுகள் விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வகையில் 2009 ஆம் ஆண்டில் 65,88,932 ரூபாய் விலை மதிப்புள்ள நூல்கள் விற்பனை செய்யப்பெற்றுள்ளன.

2010 ஆம் ஆண்டு சூன் 23-27ஆம் நாட்களில் கோவையில் நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி மாநாட்டிற்குப் பெருமை சேர்க்கும் வகையிலும் தமிழ்மொழி-பண்பாடு-வரலாற்றுச் சிறப்பு வெளிப்படும் வகையிலும் பல்வேறு துறைகளைச் சார்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களைச் சிறப்பு நேர்வாக மறுமதிப்பு செய்து/அச்சிட்டு வெளியிடுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நிதி

தமிழ்நாடு அரசு தொகுப்பு நல்கையாக 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.381.19 இலட்சம் வழங்கியது. இதர நல்கைத் தலைப்பில் ரூ.152.00 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. 2009-2010 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக நல்கைக் குழு பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் வளர்ச்சி நல்கையாக ரூ.101.00 இலட்சம் வழங்கியுள்ளது.

கட்டடப் பணிகள்

இந்திய நடுவண் அரசின் சமூக நீதித் துறை, தமிழக அரசின் ஆதி திராவிடர் நலத் துறை மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் 45:45:10 என்ற விழுக்காட்டுப் பங்குத் தொகையில் 2007-2008 ஆம் ஆண்டில் தொடங்கி, கட்டப்பெற்று வரும் ஆதி திராவிடர்/மலைவாழ் மாணவ, மாணவியர்களுக்கான விடுதிகள் வருகின்ற கல்வியாண்டில் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படவுள்ளது.

மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி கருணாநிதி அவர்கள் அளித்த நிதி உதவியின் கீழ் நிகழ்த்துகலைக் கட்டடங்களுக்கான அறிவுரையாளர், தமிழ்ப் பல்கலைக்கழகக்

2010 மே 14]

கட்டடக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பெற்று வரைபடங்கள் இறுதி செய்யப்பெற்றன. ரூ.1.00 கோடி மதிப்பீட்டிலான கட்டடப் பணிகள் தொழில்நுட்பக் கல்விக்கோட்டம் வழித் தொடங்கப்பட உள்ளன.

"த" வடிவில் தொலைநிலைக் கல்வி இயக்ககம், பதிப்புத் துறை / அச்சகக் கட்டடம் கட்டும் பணிகள் தொழில்நுட்பக் கல்விகோட்டம் வழித் தொடங்கப்பட உள்ளன. இதன் தோராய மதிப்பீடு ரூ.2.80 கோடி ஆகும். தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்கக நிதியிலிருந்தும், சாலைப் பணிகளுக்காகப் பெறப்பெற்றுள்ள ஈட்டுத் தொகை ரூ.1.30 கோடியில் ஒரு பகுதியினைப் பயன்படுத்தியும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

"மி" வடிவில் கல்வி நிலைக் கட்டடம் கட்டும் பணிகள் தொழில்நுட்பக் கல்விக் கோட்டம் வழித் தொடங்கப்பட உள்ளன. (சித்த மருத்துவத் துறை, சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை, கட்டடக் கலைத் துறை ஆகிய துறைகள் மற்றும் தூயதமிழ் அகரமுதலி திட்டம், களஞ்சிய மையம், பெருஞ்சொல்லகராதித் திட்டம் அலுவலகங்கள்) இதன் தோராய மதிப்பீடு ரூ.3.00 கோடியாகும். பல்கலைக்கழக நல்கை ஆணையம் 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் வழங்க முன்வந்துள்ள கட்டட நல்கை ரூ.211.50 இலட்சம் மற்றும் சாலைப் பணிகளுக்காகப் பெறப் பெற்றுள்ள ஈட்டுத்தொகை ரூ.1.30 கோடியில் ஒரு பகுதி ஆகியவற்றைக் கொண்டு இக்கட்டடம் கட்டத் திட்டமிடப் பட்டுள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் பல்கலைக்கழக நல்கை ஆணைய 11-வது ஐந்தாண்டுத் திட்ட நிதியின்கீழ் விளையாட்டுத் திடல் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. புலவிருந்தகச் சீர்காப்புக்கு 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ரூ.11.00 இலட்சம் ஒதுக்கப்பெற்றது. முதல் தள அறைகள் அனைத்திற்கும் தண்வளி அமைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழில்நுட்பக் கல்விக் கோட்டம் வழி ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்புச் சீர்காப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

[2010 மே 14

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மொழியின் வளர்ச்சி மற்றும் வளமையின் அளவுகோலாக அகரமுதலி திகழ்கிறது. அதனால்தான் "மக்களை ஒருங்கிணைத்துத் தாய்மொழியைத் திருத்தமாகப் பேச வைக்கும் கருவி அகரமுதலி" எனக் கூறப்படுகிறது. சொற்பிறப்பு தெரிந்தால்தான் மக்கள் மொழியைத் திருத்தமாகப் பேச முடியும். ஆய்வாளர்களுக்கும் தமிழ் மொழியின் நெடிய வரலாறு தெற்றெனப் புலப்படும். உலக மொழிகள் பலவற்றில் சொற்பிறப்பு அகரமுதலிகள் வெளிவந்துள்ளன. தமிழிலும் சொற்பிறப்பு அகரமுதலி வெளிவரவேண்டும் எனும் நோக்கில் 1974 ஆம் ஆண்டு இவ்வியக்ககம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள் தலைமையில் உருவாக்கப்பட்டது.

தமிழ்ச் சொற்கள் தோன்றி வளர்ந்த வரலாற்றை இலக்கியம், இலக்கணம், கல்வெட்டு, மக்களின் வட்டார வழக்குகள் ஆகியவற்றின் வாயிலாகப் பல்வேறு வண்ணப்பட விளக்கங்களுடன் அரைக்கலைக்களஞ்சிய அமைப்பில், வேரும் வரலாறும் காட்டி, திராவிட மொழிகளிலும் உலக மொழிகளிலும் தமிழ்ச் சொற்கள் ஊடாடிய பாங்கினைப் புலப்படுத்தி, 12,000 பக்கங்களில் 31 தொகுதிகள் உள்ளடங்கிய பன்னிரு மடலங்களாக வெளியிடும் திட்டத்தின் வண்ணம், இதுவரை 28 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. வெளிவந்த தொகுதிகள் அறிஞர்களின் பாராட்டைப் பெற்றுள்ளன. எஞ்சிய 3 தொகுதிகளை 2010-2011 நடப்பாண்டுக்குள் வெளியிடும் பணி விரைந்து நடைபெற்று வருகிறது.

2010 மே 14]

அறிவியல் தமிழ் மன்றம்

அறிவியல் தமிழை வளர்த்திடும் நோக்கில் அறிவியல் தமிழ் மன்றம் 2006 ஆம் ஆண்டு தமிழக அரசால் உருவாக்கப்பட்டது. இம்மன்றம் கருத்தரங்கம், பயிலரங்கம், அறிவியல் கண்காட்சி முதலானவற்றை நடத்தி அறிவியல் தமிழ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. மன்றத்தின் சார்பாக 'அறிவியல் தமிழ்' என்ற மாத இதழ் வெளியிடப் படுகிறது. மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும், பொது மக்களிடையேயும் இது சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. புகழ்பெற்ற அறிவியலாளர்களின் கட்டுரைகள், அறிவியல் துணுக்குகள் முதலானவை இதில் இடம் பெற்றுள்ளன. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் தனிப் பகுதி ஒதுக்கப் பெற்றுள்ளது. அறிவியல் தமிழ் மணம் மாநிலமெங்கும் பரவும் வகையில் அறிவியல் தமிழ் மாத இதழினைப் பொது நூலகங்கள் வாயிலாகப் படித்துப் பயன்பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது.

மன்றம் சார்பாக, ஆசிரியப் பெருமக்கள் பயன்பெறும் பொருட்டு, வல்லுநர்களைக் கொண்டு சென்னை கோடம்பாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளி அரங்கில் அறிவியல் தமிழ் விழிப்புணர்வுப் பயிலரங்கம் கடந்த 2009 ஆம் ஆண்டு அக்டோபர் 9 மற்றும் 10 ஆகிய இரு நாட்கள் சிறப்பாக நடத்தப் பெற்றது. இதில் சென்னையிலுள்ள நான்கு கல்வி மாவட்டங்களைச் சார்ந்த 125 அறிவியல் ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். அவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பெற்றன.

மேலும், தமிழ் மொழியில் அறிவியல் ஆர்வத்தை மாணவர்களிடையே ஏற்படுத்திடவும், அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் கடந்த 2009 ஆம் ஆண்டு அக்டோபர் 26, 27 ஆகிய இரு நாட்கள் மாநில அளவிலான அறிவியல் தமிழ்க் கண்காட்சி சேலம் மாநகரில் பெரியார் பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடத்தப் பெற்றது. இக்கண்காட்சியில் பல்வேறு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த 250க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் மிகுந்த ஆர்வமுடன் கலந்து கொண்டு 272 அறிவியல் கண்டுபிடிப்புகளின் செயல்மாதிரிகளைக் காட்சிக்கு வைத்துத் தமிழில் விளக்கமளித்ததைப் பொதுமக்கள் கண்டு களித்துப் பாராட்டியுள்ளனர். சிறந்த செயல் மாதிரிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

அறிவியல் பயிலரங்கம், அறிவியல் தமிழ்க் கண்காட்சி மற்றும் தேசிய அளவிலான அறிவியல் தமிழ்க் கருத்தரங்கம் முதலான அறிவியல் தமிழ் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப் பெறவுள்ளன.

[2010 மே 14

மொழிபெயர்ப்புப் பிரிவு

சென்னை மாநிலத்தில் ஆங்கில அரசு ஆட்சி தொடங்கிய காலந்தொட்டே பொதுத் துறையின் அங்கமாகத் தொடங்கி, இப்போது தமிழ் வளர்ச்சித் துறையின் பல பிரிவுகளில் ஒன்றாக மொழிபெயர்ப்புப் பிரிவு செயற்பட்டு வருகிறது. அந்நாளில் நாடறிந்த நல்லறிஞர் பலர் ஆங்கில அரசுக்குத் துணையாகத் தமிழில் அறிவிப்புகள், அறிக்கைகள், கொள்கைக் குறிப்புகள், திட்ட வரைவுகள் முதலிய மக்கள் சார்ந்த அனைத்துத் தொடர்புகளுக்கும் மொழிபெயர்ப்புப் பிரிவையே முதன்மையாகக் கொண்டு நிருவாகத்தை நடத்தினர்.

அவ்வப்போது நீதியரசர்கள் தலைமையில் அரசு அமைக்கும் விசாரணைக் குழு அறிக்கைகள், சட்ட வரைவுகள், அரசிதழ்கள், சுற்றோட்டக் குறிப்புகள், பொதுக் கணக்கு, மதிப்பீட்டுக் குழுக்களின் அறிக்கைகள், ஊடகச் செய்திக் குறிப்புகள், ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்படுகின்றன. தமிழில் மொழிபெயர்ப்பு செய்வது போலவே மைய அரசிலிருந்து இந்தி மொழியில் வரும் அரசுக் கடிதங்களும், மைய அரசுக்குத் தமிழில் அனுப்பும் அரசுக் கடிதங்களும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படுகின்றன. ஆண்டுதோறும், ஆளுநரின் உரைக்கும், நிதிநிலை அறிக்கையின்மீது நிதியமைச்சர் ஆற்றும் உரைக்கும், வரவு செலவுத் திட்டம் தயாரிப்புக்கென நிதித் துறைக்கும், அவ்வாறே, சட்டப் பேரவைத் தொடர் நிகழ்வில் மொழிபெயர்ப்புப் பணிக்காக சட்டப் பேரவைச் செயலகத்திற்கும் இத்துறை அலுவலர்கள் அனுப்பப் பெறுகின்றனர். பொதுத் துறையின் (மரபு) பிரிவிற்கு வேண்டிய மந்தணக் குறிப்புகளும் மாவட்ட காவல் துறை அலுவலர்கள் மாநாடு தொடர்பான குறிப்புகளும் மொழி பெயர்க்கப்படுகின்றன.

காலமாற்றத்துக்கு ஏற்ற நிலையில் துறைகளின் கோப்புக்களை அனைத்துத் துறையினருமே தமிழில் ஆர்வத்தோடு எழுத முன்வந்திருப்பதோடு செம்மை செய்யக் கருதி அவ்வப்போது வேண்டிய திருத்தங்களையும் மொழிபெயர்ப்புத் துறையின் வழியாகப் பெறுகின்றனர். நெடுங்காலமாகவே மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல் என்ற தொல்காப்பியத் தொடரின் நெறியாக மொழிபெயர்ப்பாளர்களை இருமொழித் திறனாளர்களாக இப்பிரிவு கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

2010 மே 14]

இணைப்பு I

2010–2011 ஆம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு

தமிழ் வளர்ச்சி

(நிகர செலவு – ரூபாய் ஆயிரத்தில்)

	2009–2010 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு	2009–2010 திருத்த மதிப்பீடு	2010–2011 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு
2059 பொதுப்பணிகள்	9,00	9,00	9,50
2202 பொதுக்கல்வி	20,17,21	23,11,46	71,10,66
2251 தலைமைச் செயலகம் சமூகப் பணிகள்	6,02,69	4,50,88	5,14,06
மொத்தம்	--	--	76,34,22

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II

2010–2011 ஆம் ஆண்டுப் பணிகளுக்கான விவரப் பட்டியல்

தமிழ் வளர்ச்சி

ரூபாய் இலட்சத்தில்

வ. எண்.	திட்டப் பணிகளின் விவரம்	இறுதி நிலைச் செலவு			2010–2011 இல் செலவு			
		தொடரும் செலவினம்	தொடராச் செலவினம்	மொத்தம்	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
	தலைமைச் செயலகம்							
1	30 கணினிகள் மற்றும் துணைப்பாகங்கள் வாங்குதல்		15.10	15.10	15.10			15.10
2	3 புதிய வழங்கன் (Server) வாங்குதல்		4.50	4.50	4.50			4.50
3	நிகரி வசதியுடன் கூடிய நகல் எடுக்கும் கருவி 4 வாங்குதல்		0.55	0.55	0.55			0.55
	தமிழ் வளர்ச்சி இயக்ககம்							
4	தமிழ் நிகண்டுச் சொற்களஞ்சியம் உருவாக்கிடச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு நிதியுதவி அளித்தல்		12.50	12.50	12.50			12.50
5	சொல்வங்கித் திட்டம்		0.60	0.60	0.60			0.60
6	தமிழ் வளர்ச்சி இயக்கக உதவி இயக்குநர்களுக்கு கணினி வழங்குதல்		1.11	1.11	1.11			1.11
7	தமிழ் வளர்ச்சி இயக்கக கணினி பிரிவிற்கு இரண்டு தண்வளிக் கருவிகள் வாங்குதல்		0.65	0.65	0.65			0.65
	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்							
8	உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம் தண்வளி வசதியுடன் மேம்படுத்துதல், உட்கூரை, தரைக் கம்பளத்துடன் நவீன மின் விளக்குகள் அமைத்தல் மற்றும் இரும்பு அடுக்குகள் வாங்குதல்		20.00	20.00	20.00			20.00
9.	தமிழ் எழுத்தாளர் – தேசிய கருத்தரங்கு		1.50	1.50	1.50			1.50

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
10	கவடிப் பயிலரங்கு	--	3.25	3.25	3.25	--	--	3.25
11	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கூட்ட அறை மற்றும் கருத்தரங்க அறைக்கு சிறப்பு மேசைகள் மற்றும் நாற்காலிகள் வாங்கும் செலவினம்	--	2.00	2.00	2.00	--	--	2.00
	தமிழ்ப் பல்கலைக்கழகம்							
12	படிக்கணினி, இணையதள வசதியுடன் (Lap- top) அளித்தல்	--	15.00	15.00	15.00	--	--	15.00
13	மின் நூல்கள் ஆக்குதல் – 5 இலட்சம் பக்கங்களை மின்னாக்கம் செய்வதற்கு	--	5.00	5.00	5.00	--	--	5.00
14	சிற்றிதழ்களுக்கான பரிசு திட்டத்தின் கீழ் சிற்றிதழ்களை ஊக்குவிக்க பரிசு அளித்தல்	--	5.00	5.00	5.00	--	--	5.00
15	சிறப்பு சீர்காப்புப் பணிகள் குடிநீர், கழிவறை, தீயணைப்பு, சிற்றுண்டி விடுதி, நூலகம், இயங்கேணி, பயணியர் நிழற்குடை அமைத்தல்	--	55.00	55.00	55.00	--	--	55.00
16	ஒளிப்படத் தொகுப்பரங்கு அமைத்தல்	--	20.00	20.00	20.00	--	--	20.00
	செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கம்							
17	அலுவலகப் பயன்பாட்டிற்கு ஒரு புதிய வாகனம் வாங்குதல்	--	5.00	5.00	5.00	--	--	5.00
18	அலுவலகப் பயன்பாட்டிற்கு இரண்டு கணிப்பொறி அமைப்புகள் மற்றும் மென்பொருள் வாங்குதல்	--	1.00	1.00	1.00	--	--	1.00
	அறிவியல் தமிழ் மன்றம்							
19	அறிவியல் தமிழ் கண்காட்சி நடத்துதல்	--	5.00	5.00	5.00	--	--	5.00
20	பள்ளி ஆசிரியர்களுக்கு அறிவியல் தமிழ்ப் பயிலரங்கம் நடத்துதல்	--	1.00	1.00	1.00	--	--	1.00
21	அறிவியல் தமிழ் தேசியக் கருத்தரங்கம் நடத்துதல்	--	5.00	5.00	5.00	--	--	5.00
22	அறிவியல் தமிழ் மன்றத்திற்கு இன்றியமையா அறைகலன்கள் வாங்குதல்	--	0.50	0.50	0.50	--	--	0.50
23	அறிவியல் தமிழ் மன்றத் துணைத் தலைவர், உறுப்பினர்–செயலாளர் அறைகளுக்குத் தண்வளி வசதி செய்தல்	--	0.50	0.50	0.50	--	--	0.50
	மொத்தம்	--	179.76	179.76	179.76	--	--	179.76

[2010 மே 14

இணைப்பு IV

(255ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 16—நிதித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011

தமிழக அரசின் பொது நிதி நிருவாகப் பொறுப்பு நிதித் துறையைச் சார்ந்ததாகும். ஒவ்வொரு ஆண்டும் வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்து சட்டப் பேரவையில் தாக்கல் செய்வதில் இத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. மாநிலக் கருவூலத்தை நிருவகித்து வரும் நிதித் துறை, வரவுகளையும் செலவுகளையும் சீராகப் பராமரிக்கும் ஒட்டுமொத்த பொறுப்பு வகிப்பதோடு, கடன் பொறுப்புகளைத் திருப்பிக் கொடுக்கும் பொறுப்பினையும் வகிக்கிறது. ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அரசின் நிதி இலக்குகளை எய்தும் பொருட்டும், வரவுக்கேற்றபடி செலவினங்களைச் சீர் செய்து, தேவை, செலவுக்கேற்ற பயன், வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கம், நிதிநடைமுறை, முதலியவற்றிற்கேற்ப துறைகளின் செயற்குறிப்புகளை நிதித் துறை கூர்ந்து ஆய்வு செய்கிறது.

2. நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் ஏழு துறைகள் இயங்கி வருகின்றன:-

(i) *கருவூலக் கணக்குத் துறை*

(ii) *உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை*

(iii) *சிறு சேமிப்புத் துறை*

(iv) *அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்*

(v) *கூட்டுறவு தணிக்கைத் துறை*

(vi) *அரசுத் துறை—நிறுவனத் தணிக்கைத் துறை*

(vii) *ஓய்வூதிய இயக்ககம்*

2010 மே 14]

3. வரிசை எண்(i) முதல்(vi) வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரம் பின்வரும் பத்திகளில் அளிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதிய இயக்ககத்தின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம் கோரிக்கை எண் *50* ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால பயன்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

கருவூலக் கணக்குத் துறை

4. அரசுப் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குவதும் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதும், பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக அரசு ஒப்புதலளித்த தொகையினை அரசுத் துறைகளுக்கு வழங்குவதும் கருவூலக் கணக்குத் துறையின் முதன்மையான பணியாகும். அரசுக்குச் சேரவேண்டிய தொகைகளைப் பெறுவதும் அவற்றுக்கான விரிவான கணக்குகளை மாநிலக் கணக்காயருக்கு அளிப்பதும் இத்துறையின் பொறுப்பாகும். அரசுத் துறைகளால் கருவூலங்களில் வைப்பீடு செய்யப்பட்ட விலைமதிப்பு வாய்ந்த பொருள்களை கருவூலங்கள் பாதுகாக்கின்றன. மின்னாளுமை திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல், மின்னணு தீர்வை மூலம் அரசு அலுவலர்களுக்கு சம்பளம் மற்றும் ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல், கருவூலங்களில் தானியங்கி பட்டியல் ஒப்பளிக்கும் முறை, ஒளி-ஒலி கலந்தாய்வு மூலம் ஓய்வூதியர்களைக்கண்டு உறுதி செய்துகொள்ளுதல் முதலியவை கருவூலக் கணக்குத் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு மின்னாளுமைத் திட்டங்களில் அடங்கும்.

5. புதிய மருத்துவ காப்பீடு திட்டம் *11-6-2008* அன்று துவக்கப்பட்டு, அத்திட்டத்தின்கீழ் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு பொதுத் துறை நிறுவனங்கள், அரசு பல்கலைக்கழகங்கள் மற்றும் வாரியங்களில் பணிபுரியும் பணியாளர்களும் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரும் பயன்பெற்று வருகின்றனர். இதுவரை சுமார் *10.86* இலட்சம்

[2010 மே 14

பணியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 5-5-2010 வரை 88,025 பயனாளிகள் பல்வேறு மருத்துவ சிகிச்சைகளுக்கான காப்பீட்டுத் தொகை ரூபாய் 249.10 கோடி அளவிற்கு பயன்பெற்றுள்ளனர்.

6. கருவூலக் கணக்கு துறையால் வடிவமைக்கப்பட்டு தேசிய தகவல் மையத்தால் கணினி கட்டமைப்பு செய்யப்பட்ட இணைய தளம் பல தகவல்களை எளிதில் பெறும் வண்ணம், அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்திய அரசு, மாநில கணக்காயர், இந்திய ரிசர்வ் வங்கி போன்ற பல முக்கிய இணைய தளங்களுக்கு இணைப்பு வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

7. இம்மாநிலத்தில் மொத்தமுள்ள 204 சார் கருவூலங்களில், 202 சார் கருவூலங்கள் வங்கி சார்ந்தவையாக இயங்கி வருகின்றன. மீதமுள்ள திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், ஒட்டபிடாரம் ஆகிய வங்கிசாரா சார் கருவூலங்களை, முறையே திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், எட்டயபோதும் வென்றான் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக் கிளைகளுடன் வங்கி சார்ந்த கருவூலங்களாக மாற்றியமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

8. தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலை இணைப்பு (Tamil Nadu State Wide Area Network-TNSWAN) மூலம் மாநிலத்தின் 247 இடங்களில் உள்ள கருவூல அலுவலகங்களும் இணைக்கப்படும். இப்பணிக்கு ரூ.3,01,38,158/-தொடரா செலவினமாகவும், ரூ.20,84,966/- முதல் மூன்றாண்டுகளுக்கு தொடர் செலவினமாகவும், ரூ.24,25,242/- நான்காவது ஆண்டு முதல் தொடர் செலவினமாகவும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

9. மாநிலத்திலுள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், வேளாண்மை விற்பனைக் குழுக்கள், மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் மற்றும் இதர நிறுவனங்களின் கணக்குகளை, அவற்றுக்குரிய சட்ட விதிகளின்கீழ் சட்டப்படி தணிக்கை செய்யும் பணி உள்ளாட்சி நிதித் தணிக்கைத்

2010 மே 14]

துறையின் பொறுப்பாகும். இத்தணிக்கைத் துறையில் தணிக்கை மேற்கொள்ளப்படும் நிறுவனங்களின் விவரம் கீழ்வருமாறு:

தொடர் எண்	நிறுவனங்கள்	மொத்த எண்ணிக்கை
1.	மாநகராட்சிகள்	10
2.	நகராட்சிகள்	148
3.	பேரூராட்சிகள்	561
4.	மாவட்ட ஊராட்சிகள்	29
5.	ஊராட்சி ஒன்றியங்கள்	385
6.	பல்கலைக்கழகங்கள்	23
7.	உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள்	30
8.	வேளாண்மை விற்பனைக் குழுக்கள்	21
9.	தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம்	1
10.	வேளாண் பொறியியல் பிரிவு	2
11.	கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி	1
12.	தேசிய சமூக நலத் திட்டங்கள்	29
13.	உள்ளூர் திட்டக் குழுமங்கள்	26
14.	கிராம ஊராட்சிகள் (சோதனைத் தணிக்கை மட்டும்)	2523
15.	பல்வகை நிறுவனங்கள்	9

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 14

10. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் நோக்கம்

(i) உள்ளாட்சி நிறுவனங்களின் தணிக்கை

உள்ளாட்சி நிறுவனங்களின் கணக்குகளைச் சரிபார்த்தல், வரவு செலவுகள் முறையாக உள்ளனவா எனச் சரிபார்த்தல், மேற்படி வரவு செலவுகள் சட்டத்திற்குட்பட்டும் விதிகளின்படியும் அரசாணைகளின்படியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதனை உறுதி செய்தல், உள்ளாட்சி நிறுவனங்களின் கணக்குகள் அந்நிறுவனங்களின் செயல்பாட்டின் உண்மை நிலையை பிரதிபலிக்கின்றனவா எனவும் சரிபார்த்தல் ஆகிய நோக்கங்களோடு உள்ளாட்சி நிறுவனங்களின் தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வரி செலுத்துவோரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதனை உறுதி செய்வதோடு உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அரசு மற்றும் பிற நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் நிதி முழுவதும் வழங்கப்பட்ட காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறதா என்பதையும், அவை சமுதாய நலனுக்குப் பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் தணிக்கைகள் உறுதி செய்கின்றன.

(ii) கிராம ஊராட்சி நிறுவனங்களின் சோதனைத் தணிக்கை

கிராம ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில் மொத்த ஊராட்சிகளின் எண்ணிக்கையில் 20 சதவிகிதம் சோதனைத் தணிக்கையாக இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறு தணிக்கை செய்யப்படும் ஊராட்சிகளின் எண்ணிக்கை 2,523 ஆகும். இத்துடன் கிராம ஊராட்சிகளின் வரவினங்கள், மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மதிப்பு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரால் அனுப்பப்படும் குறிப்பான புகார்கள் ஆகியவற்றின் அடிப்படையில் 2 விழுக்காடு கிராம ஊராட்சிகளின் தணிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது.

(iii) நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள், பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உடனிகழ் தணிக்கை

தற்போது 10 மாநகராட்சிகளிலும், 15 நகராட்சிகளிலும் மற்றும் 14 பல்கலைக்கழகங்களிலும் உடனிகழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தணிக்கைக் குழுக்கள்

2010 மே 14]

இந்நிறுவனங்களிலேயே செயல்படுகின்றன. 2000-2001ஆம் ஆண்டு முதல், 385 ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் உடனிகழ் தணிக்கை முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

(iv) மாநகராட்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளில் நடப்புக்குப்பின் தணிக்கைமுறை செயலாக்கம்

உடனிகழ் தணிக்கை செயல்படுத்தப்படும் 10 மாநகராட்சிகளிலும் 15 நகராட்சிகளிலும் உடனடிப் பின் தணிக்கை (Immediate Post Audit) செய்யப்படுகிறது. இம்முறையின்படி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு, தொகை வழங்கப்பட்டவுடன் செலவுச் சீட்டுக்கள் உடனுக்குடன் தணிக்கை செய்யப்பட்டு, குறைபாடுகள் நிருவாகத்திற்குத் தெரிவிக்கப்படுகின்றது. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை உடனுக்குடன் களைய இச்செயல்முறை வழிகோலுகிறது.

(v) உடனிகழ் தணிக்கைக்குட்படாத பிற நிறுவனங்களின் ஆண்டுத் தணிக்கை

உடனிகழ் தணிக்கைக்குட்படாத எஞ்சியுள்ள 133 நகராட்சிகள், 9 பல்கலைக்கழகங்கள், இதர உள்ளாட்சி நிறுவனங்களான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், விற்பனைக் குழுக்கள் நூலக ஆணைக் குழுக்கள், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும் மேற்படி நிறுவனங்களிலிருந்து ஆண்டுக் கணக்குகள் பெறப்பட்ட பின்னர், மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

11. நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் இயல்பாகச் சேர்தல் அடிப்படையிலான கணக்கு முறையை (Accrual Based Accounting System) செயற்படுத்துதல்

(i) நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இயல்பாகச் சேர்தல் கணக்கு அடிப்படையிலான கணக்குமுறை (Accrual Based Accounting System) 1999-2000, 2000-2001 ஆகிய கணக்கு ஆண்டுகளிலிருந்து இரு கட்டங்களாக செயற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து பேரூராட்சிகளிலும் 2002-2003 ஆம் ஆண்டு முதல் இந்த கணக்கு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(ii) இந்த நடைமுறையினால் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள் அவற்றின் சொத்துக்களை உரிய மதிப்பீட்டு முறைகளோடும், சொத்து பதிவேட்டின் மூலமும் கணக்குகளில் சேர்த்து அறிந்து கொள்ள முடியும். நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள் மேம்படுத்தப் பட்ட கணக்கு முறைகளைச் செயல்படுத்தியிருப்பதால், மூலதனத் திட்டங்கள் மற்றும் நலத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க நிதி நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இதன்மூலம் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

(iii) அனைத்து மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் பேணப்பட்டு வரும் கணக்குகளின் சீர்திருத்தங்களை இரண்டு கட்டங்களாக 1999-2000 மற்றும் 2000-2001 ஆண்டுகள் முதலாகவும், பேரூராட்சிகளில் 2002-2003 ஆண்டு முதலாகவும் இந்தியாவில் வெற்றிகரமாக செயல்படுத்திய முதல் மாநிலம் என்ற பெருமையை தமிழ்நாடு பெற்றுள்ளது.

12. தணிக்கைப் படிவங்களை தரப்படுத்தல் மற்றும் கையேட்டினை திருத்தி அமைத்தல்

தணிக்கையின் தரத்தினை மேம்படுத்தவும், தணிக்கை மறுப்புரைகளை நிருவாகத்திற்குத் தெரிவிப்பதில் ஒரு சீரான முறையை உறுதிப்படுத்திடவும் ஏதுவாக நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் தணிக்கைப் படிவங்களை தரப்படுத்தி, இத்துறையின் தணிக்கைப் பணியாளர்களுக்கு 2007 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிதித் தணிக்கை கையேட்டில், 2008 ஆம் ஆண்டுவரையிலான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, திருத்தப்பட்ட பதிப்பு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

13. தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யும் நடைமுறை

தணிக்கை அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும்.

(i) ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், 2009 ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான 95 உயர்நிலைக் குழுக்

2010 மே 14]

கூட்டங்கள் நடத்தப்பட்டு 2,663 தணிக்கை மறுப்புரைகள்மீது முடிவெடுக்கப்பட்டது.

(ii) பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில், 2009 ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான 11 உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 588 தணிக்கை மறுப்புரைகளின்மீது முடிவெடுக்கப்பட்டது.

(iii) அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளைப் பொறுத்தமட்டில், 2009 ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான் 11 உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 968 தணிக்கை மறுப்புரைகளின்மீது முடிவெடுக்கப்பட்டது.

14. மானியங்கள் பயன்படுத்தப்பட்டதற்கான பயனீட்டுச் சான்றிதழ் அளித்தல்

பல்கலைக்கழக மானியக் குழு மாநில/மத்திய அரசு மற்றும் இதர நிதி அளிக்கும் நிறுவனங்களால் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவிகள் மற்றும் இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட இதர உள்ளாட்சி நிறுவனங்களுக்கு, மாநில/மத்திய அரசுகளினால் வழங்கப்படும் மானியங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தியதற்கு இத்துறையினால் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

15. சிறப்புப் பணிகள்

வழக்கமான தணிக்கைப் பணிகள் நீங்கலாக கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன:—

(i) உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல்

உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களின் ஓய்வூதிய/குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்கு சான்று/ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 31-3-2010 நாள் நிலவரப்படி 33,177 ஓய்வூதியர்கள், நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர்.

[2010 மே 14

(ii) உள்ளாட்சி நிறுவனங்களின் ஓய்வூதியதாரர்களுக்கு நிலுவைத் தொகை வழங்குதல்

ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் உள்ளாட்சி நிறுவனங்களின் ஓய்வூதியதாரர்களுக்கு திருத்திய ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதிய நிலுவைத் தொகை 1-1-2006 முதல் (பணப்பயன் 1-1-2007 முதல்) கணக்கிடப்பட்டு இரண்டாம் தவணை நிலுவைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

(iii) நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சி ஓய்வூதியர்களின் ஓய்வூதிய நிதிகள் பராமரிப்பு

நகராட்சி நிர்வாக இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரால் தொடர்புடைய ஓய்வூதிய நிதிக்கான தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதுவரை திருத்திய ஓய்வூதிய நிலுவைத் தொகையாக நகராட்சி ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ரூபாய் 61.76 இலட்சமும், பேரூராட்சி ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ரூபாய் 1.15 கோடியும், ஊராட்சி ஒன்றிய ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ரூபாய் 1.90 கோடியும், தொடர்புடைய ஓய்வூதிய நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

(iv) உள்ளாட்சி நிறுவனங்களின் ஓய்வூதியதாரர்கள் குறைகள் தீர்த்தல்

உள்ளாட்சி நிறுவனங்களின் ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் தங்கள் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் தொடர்பான குறைகளைக் களைவதற்கும் தேவைப்படும் விவரங்களைக் காலதாமதம் இன்றி உடனே பெற்றுக் கொள்வதற்காக உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

(v) நகராட்சி ஓய்வூதியர்கள் நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் நிருவகித்தல்

அரசு ஓய்வூதியதாரர்களுக்குப் பொருந்தக்கூடிய ஓய்வூதியர் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம், அரசாணை (நிலை) எண் 120, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25-5-1999-ன்படி, 1-8-1999 முதல் நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு நலத் திட்டங்களும்

2010 மே 14]

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின்கீழ் 2009-2010 ஆம்ஆண்டில் கோரிக்கைகள் ஏற்கப்பட்டு தொகை அனுமதிக்கப்பட்ட இனங்களின் விவரங்கள் பின்வருமாறு:

நலத் திட்டம்		குடும்ப பாதுகாப்புத் திட்டம்	
கோரிக்கைகளின் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)	கோரிக்கைகளின் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
170	38.02	363	87.85

(vi) உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்

உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றின் முதலீடுகளும் அரசால் 1967 ஆம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. அப்பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளின் இருப்புகளுக்கு வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் ரூபாய் 9 கோடி தொகை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட வட்டி கோரிக்கைகளின் அடிப்படையில் அத்தொகை முழுவதும் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

(vii) அறக்கட்டளைகளின் பொருளாளர்

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், 1-4-1952 முதல் அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அறக்கட்டளைகளை அரசு ஏற்று அறக்கட்டளைகளின் நிருவாகத் திட்டங்களை அரசிதழில் வெளியிடுகிறது.

தற்போது அறக்கட்டளை நிதிப் பொருளாளர் கட்டுப்பாட்டில் ரூபாய் 7.62 இலட்சம் மதிப்புள்ள நான்கு மத்திய அரசு அறக்கட்டளைகளும், ரூபாய் 12.66 கோடி மதிப்புள்ள 862 மாநில அரசு அறக்கட்டளைகளும் உள்ளன. 2009-2010 ஆம் ஆண்டில் அறக்கட்டளைகளிலிருந்து கிடைக்கப்பெற்ற வரவுகளிலிருந்து 213

பயனாளிகளுக்கு உதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் முதலியவற்றை வழங்குவதற்காக ரூபாய் 4.84 இலட்சம் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

16. துறையை நவீனமயமாக்கல்

நிகரி, இணையதள வசதி, ஒளிவருடி (Scanner), அறைகலன் ஆகியவற்றை வழங்குவதன்மூலம் இத்துறை அலுவலகங்களை நவீனமயமாக்கிட 2009-2010 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் அரசு ரூபாய் 32.90 இலட்சம் அனுமதித்துள்ளது.

17. துறைப் பணியாளர்களின் தணிக்கைத் திறன் மேம்பாடு

தணிக்கைப் பணியாளர்களின் செயல் திறனை உயர்த்தி தணிக்கையின் தரத்தினை மேம்படுத்திட இத்துறையின் பணியாளர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 2009-2010 ஆம் ஆண்டில் 19 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 396 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

18. பணியாளர் நியமனம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 151 உதவி ஆய்வர்கள் பணியமர்த்தப்பட்டு அவர்களுக்கு 6-1-2010 முதல் 3 மாத கால பயிற்சி அளிக்கப்பட்டது.

19. தணிக்கைக் கட்டணம்

பல்கலைக்கழகத் தணிக்கைக்கு 100% தணிக்கை செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், மாநகராட்சிகள், நகராட்சிகள் தணிக்கைக்கு 50% தணிக்கை செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும் இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. 2009-2010 ஆம் ஆண்டில் ரூபாய் 3.79 கோடி தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

சிறு சேமிப்புத் துறை

20. சிறு சேமிப்பு, பொது மக்களிடம் உபரியாக உள்ள பணத்தினை சிறு சேமிப்பு திட்டங்களில் முதலீடு செய்வதற்கு ஒரு முக்கியமான கருவியாக விளங்குகிறது. இத்திட்டங்கள் அதிக பாதுகாப்பானதாகவும், கணிசமான வட்டியுடன் திரும்ப கிடைக்கக் கூடியதாகவும் உள்ளன. மக்களிடத்தில் சேமிக்கும் பழக்கத்தினை வளர்ப்பதுடன், மாநிலத்

2010 மே 14]

திட்டங்களுக்கும், அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்கும் தேவைப்படும் முக்கியமான மற்றும் பெரிய நிதி ஆதாரமாக சிறு சேமிப்பு விளங்குகிறது. ஏனென்றால், மாதந்தோறும் வசூலாகும் நிகர சிறு சேமிப்பு வசூலுக்கு சமமான தொகையை மத்திய அரசு, மாநில அரசுக்கு கடனாக வழங்கி வருகிறது. இக்கடன் தொகைக்கான வட்டி வீதம் 9.5 சதவீதமாகும்.

21. சிறு சேமிப்புத் திட்டங்கள்

சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரின் தேவைக்கேற்ற வகையில் சிறு சேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அவை பின்வருமாறு:

1. பல்வகை வருவாய்த் திட்டம்	கிசான் விகாஸ் பத்திரம்
2. வருமான வரிச் சலுகை அளிக்கும் திட்டம்	தேசிய சேமிப்புப் பத்திரம் VIII-வது வெளியீடு 15 ஆண்டு பொது வருங்கால வைப்பு நிதி 5 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம்
3. காலமுறை அடிப்படையிலான தொடர் வருவாய்த் திட்டம்	அஞ்சலக மாத வருவாய்த் திட்டம் மற்றும் மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம்
4. தொடர் சேமிப்புத் திட்டம்	அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம்
5. குறித்த கால வைப்புத் திட்டம்	1 ஆண்டுஅஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம்
	2 ஆண்டுஅஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம்
	3 ஆண்டுஅஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம்
	5 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம்
6. ஏனைய திட்டம்	அஞ்சலக சேமிப்புக் கணக்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 14

22. பல்வேறு திட்டங்களுக்கு அளிக்கப்படும் வட்டி விகிதங்கள் மத்திய அரசால் செய்யப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டவையாகும். சிறு சேமிப்புத் திட்டங்களுக்கு 1-3-2003 முதல் அளிக்கப்பட்டுவரும் வட்டி விகிதங்கள் பின்வருமாறு:

வ. எண்.	திட்டம்	வட்டி விகிதங்கள் 01-03-2003 முதல்
1.	அஞ்சலக மாத வருவாய்த் திட்டம்	8.00% + 5% ஊக்கத் தொகை (8.12.2007 முதல்)
2.	1 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு	6.25%
	2 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு	6.50%
	3 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு	7.25%
	5 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு	7.50%
3.	தேசிய சேமிப்புப் பத்திரம் VIII-வது வெளியீடு	8.00%
4.	பொது வருங்கால வைப்பு	8.00%
5.	மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம்	9.00%
6.	அஞ்சலக சேமிப்பு கணக்கு	3.50%
7.	அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம்	மாதம் ரூ.10/வீதம் 5 வருடம் செலுத்தினால் முடிவில் ரூ.728.90 முதிர்வுத் தொகை கிடைக்கும்
8.	கிசான் விகாஸ் பத்திரம்	முதலீடு 8 வருடம் 7 மாதங்களில் இரட்டிப்பாகும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

23. சிறு சேமிப்புத் திட்டங்களை மேம்படுத்துவதில், அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னையைப் பொறுத்தவரை மாநகராட்சி ஆணையாளரும் முக்கியப் பொறுப்பு வகிக்கின்றனர்.

24. சிறு சேமிப்புக்குரிய முகவர் அமைப்பு

சிறு சேமிப்புத் திட்டத்தை ஊக்குவித்து, முதலீட்டினை திரட்டுவதில் சிறு சேமிப்பு முகவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். பல்வேறு வகை சேமிப்புத் திட்டங்களில் முதலீடு திரட்டுவதற்கு கீழ்க்கண்ட 3 வகையான முகவரமைப்புகள் செயல்பட்டு வருகின்றன:

வ. எண்	முகவரமைப்பு வகை	நியமிக்கப்பட்ட திட்டங்கள்	முகவர்கள் எண்ணிக்கை (31-12-2009 அன்றுள்ளபடி)
1.	நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம்	கிசான் விகாஸ் பத்திரம், அஞ்சலக மாத வருவாய் திட்டம், தேசிய சேமிப்பு பத்திரம் VIII-வது வெளியீடு, அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம், மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம்.	12,734
2.	மகளிர் முகவரமைப்புத் திட்டம் (தொடர் வைப்புத் திட்டம்)	அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம்	26,417
3.	அதிகார பூர்வமான முகவர்கள் (பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்)	பொது வருங்கால வைப்புத் திட்டம்	1,359
	மொத்தம்		40,510

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 14

25. முகவர்களுக்கான ஊக்கத் தொகை

முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்காக, அவர்களுக்குக் கீழ்க்காணும் வீதத்தில் மாநில அரசால் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது:

வ. எண்	முகவரமைப்பு வகை	சேமிப்புத் திட்டம்	மைய அரசு வழங்கும் தரகுத் தொகை	மாநில அரசு வழங்கும் கூடுதல் ஊக்கத் தொகை	மொத்தம்
1.	நிலைப் படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம்	கிசான் விகாஸ் பத்திரம், அஞ்சலக மாத வருவாய் திட்டம், தேசிய சேமிப்புப் பத்திரம் VIII-வது வெளியீடு, 1, 2, 3, 5 அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம்	1%	0.5%	1.5%
		மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம்.	0.5%	இல்லை	0.5%
2.	மகளிர் முகவரமைப்புத் திட்டம்(தொடர் வைப்புத் திட்டம்)	அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம்	4%	2%	6%
3.	பொது வருங்கால வைப்புநிதி முகவர் திட்டம்	பொது வருங்கால வைப்புநிதி திட்டம்	1%	இல்லை	1%

2010 மே 14]

சிறு சேமிப்பு முகவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவதற்காக *2009-2010* ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்திலும், *2010-2011* ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்திலும் ரூபாய் 25 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

26. சிறு சேமிப்பு ஊக்குவிப்புத் திட்டங்கள்

(i) மாநில அரசு பல்வேறு விளம்பரங்கள், முகாம்கள் வாயிலாகவும், சிறு சேமிப்பு முகவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கியும், சிறு சேமிப்பு முகவர்கள், சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டக் குழு தலைவர்கள், அஞ்சலக அலுவலர்கள் ஆகியோருக்கு பரிசுகள் மற்றும் வெகுமதிகள் வழங்கியும் சிறு சேமிப்புத் திட்டத்தினை ஊக்குவிக்கிறது.

(ii) அனைத்து மாவட்டங்களுக்கும் சிறு சேமிப்பு விளம்பரத்திற்காக உயர் வரையறை நீர்ம படிக ஒளிக்காட்சி (High Definition LCD) தொலைக்காட்சிப் பெட்டிகளை அரசு வழங்கியுள்ளது. பொது மக்களிடையே சிறு சேமிப்புத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு பொழுதுபோக்கு குறும்படங்கள் தமிழில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இப்பொழுதுபோக்கு குறும்படங்கள், நீர்ம படிக ஒளிக்காட்சி (LCD) தொலைக்காட்சிமூலம் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் விளம்பரம் மற்றும் விழிப்புணர்வுக்காக காண்பித்திட அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

27. அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் *1972* ஆம் ஆண்டு நிறுவப்பட்டு பல்வேறு துறைகளின் பணிகளை கணினிமூலம் மேற்கொள்கிறது. இம்மையம் தற்போது கீழ்க்கண்ட பணிகளைக் கையாளுகிறது:

(1) அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் தேர்வுகளின் முடிவுகள்

(2) மாநிலத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களின் வைப்பு நிதி கணக்குகளின் பராமரிப்பு

[2010 மே 14

28. அரசுத் தேர்வுகள் துறையின் தேர்வு முடிவுகள் தொகுக்கும் பணி

இம்மாநிலத்தில் அரசு தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் தேர்வுகளின், தேர்வு முடிவுகள் மற்றும் மதிப்பெண் தாள்கள் தயாரிக்கும் பணிகளை இம்மையம் கையாள்கிறது. இம்மையத்தினால் கையாளப்படும் தேர்வுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(i) பத்தாம் வகுப்பு / மேல்நிலைப் பள்ளி தேர்வு

(ii) சிறப்புத் துணைத் தேர்வு

(iii) கிராமப்புற திறன் கண்டறிதல் தேர்வு

(iv) ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பு

(v) தேசிய திறனாய்வுத் தேர்வு

(vi) தேசிய வருவாய் மற்றும் திறன் அடிப்படையிலான படிப்பு உதவித் தொகை திட்டத் தேர்வு

(vii) தொழில்நுட்பத் தேர்வு

2009 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்களை கீழே அட்டவணையில் காணலாம்:—

தேர்வுகள்	தேர்வர்களின் எண்ணிக்கை			
	மார்ச் 2009	சிறப்புத் துணைத் தேர்வு	அக்டோபர் தேர்வு	மொத்தம்
மேல்நிலைப் பள்ளி	6,89,467	1,12,575	33,135	8,35,177
பத்தாம் வகுப்பு	9,41,853	1,23,047	78,575	11,43,475
மெட்ரிக்குலேஷன்	1,19,839	8,243	3,630	1,31,712
ஆங்கிலோ—இந்தியன்	4,758	211	94	5,063
ஓரியண்டல் 10 ஆம் வகுப்பு	1,414	92	32	1,538
மொத்தம்	17,57,331	2,44,168	1,15,466	21,16,965

2010 மே 14]

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் இதர தேர்வுகள்

தேர்வுகள்	தேர்வர்களின் எண்ணிக்கை
8 ஆம் வகுப்பு (தனித் தேர்வு)	*9,657*
கிராமப்புற திறன் கண்டறிதல் தேர்வு	*38,784*
ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பு	*1,03,311*
தேசிய திறனாய்வுத் தேர்வு	*18,115*
தேசிய வருவாய் மற்றும் திறன் அடிப்படையிலான படிப்பு உதவித் தொகை திட்டத் தேர்வு	*33,925*
தொழில்நுட்பத் தேர்வு	*10,987*
மொத்தம்	*2,14,779*

29. ஆசிரியர் வைப்பு நிதி மற்றும் பங்களிப்புடன்கூடிய ஓய்வூதியத் திட்டம்

இம்மையம் ஆசிரியர் வைப்பு நிதி மற்றும் பங்களிப்புடன்கூடிய ஓய்வூதியத் திட்ட கணக்குகளின் பராமரிப்புப் பணிகளை கீழே உள்ளவாறு கையாளுகிறது:—

(I) ஆசிரியர் வைப்பு நிதி

ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களின் ஆசிரியர் வைப்பு நிதி கணக்குத் தாள்களை தொகுக்கும் பணி இம்மையத்தால் மேற்கொள்ளப்படும் பணிகளில் ஒன்றாகும். ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் / நகராட்சிப் பள்ளிகள் / அரசு நிதி உதவி பெறும்

[2010 மே 14

பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு புதிய ஆசிரியர் வைப்புநிதி கணக்கு எண்கள் வழங்கும் பணியும் நடைபெற்று வருகின்றன. ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கு 2007-2008 ஆம் ஆண்டு முதல் ஆசிரியர் வைப்புநிதி கணக்குத் தாள்களை வழங்கிட, அரசுத் தகவல் தொகுப்பு விவர மைய ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணை (நிலை) எண் 509, நிதித் (கூ.த.) துறை, நாள் 15-10-2009-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(II) பங்களிப்புடன்கூடிய ஓய்வூதியத் திட்டம்

கீழ்க்கண்ட துறைகளின் பணியாளர்களுக்கு பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் புதிய குறியீட்டு எண்கள் வழங்கி, அதன் கணக்குகளை பராமரிக்கும் பணிகளையும் இம்மையத்திடம் ஒப்படைத்து அரசு ஆணை (நிலை) எண் 201, நிதித் துறை, நாள் 21-5-2009 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது:

1. ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள்.
2. அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள்.
3. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள்.
4. மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பணியாளர்கள்.
5. பேரூராட்சிகளில் பணிபுரியும் மாநிலப் பணியில் சேர்க்கப்படாத பணியாளர்கள்.
6. ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் மாநிலப் பணியில் சேர்க்கப்படாத பணியாளர்கள்.

பங்களிப்புடன்கூடிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், 23,375 ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கும், 489 சென்னை மாநகராட்சி பள்ளி ஆசிரியர்களுக்கும், புதிய குறியீட்டு எண்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணியாளர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்கு புதிய குறியீட்டு எண்கள் வழங்கும் பணி நடைபெற்று வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

கூட்டுறவு தணிக்கைத் துறை

30. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற முறையில் தணிக்கை செய்யும் நோக்கத்துடன், 17-6-1981 முதல் கூட்டுறவுத் தணிக்கைத் துறை அரசால் உருவாக்கப்பட்டது. கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் முக்கிய பணி தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-ன் பிரிவு 80-ன்படி பன்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்த்து மாநிலத்தில் 14 நிருவாக பதிவாளர்களின்கீழ் இயங்கும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை மேற்கொள்வதாகும்.

31. கீழ்க்கண்ட கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு தணிக்கைத் துறையின் அதிகார வரம்பிற்குட்பட்டவை:—

தொடர் எண்	பதிவாளரின் பெயர்	கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை
1.	கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்	10,671
2.	கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையர்	1,463
3.	தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர்	436
4.	தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்	1,485
5.	தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம்	
6.	கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி)	1,025
7.	மீன்வளத் துறை ஆணையர்	1,237

[2010 மே 14

தொடர் எண்.	பதிவாளரின் பெயர்	கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை
8.	கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறை ஆணையர்	466
9.	சர்க்கரைத் துறை ஆணையர்	17
10.	வேளாண்மைத் துறை ஆணையர் (எண்ணெய் வித்துக்கள்)	301
11.	வேளாண் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர்.	210
12.	பட்டுப் புழு வளர்ப்புத் துறை ஆணையர்	87
13.	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை ஆணையர்	138
14.	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர்	52
	மொத்தம்	*17,588

(*கலைக்கப்பட்ட சங்கங்கள் நீங்கலாக)

32. கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் நோக்கம்

சங்கங்களின் கணக்குகளைச் சரிபார்த்தலும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்படுவதை உறுதி செய்வதும் கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் அடிப்படை நோக்கமாகும். சங்கத்தின் நடவடிக்கைகள், கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், விதி, நடைமுறைகளுக்குட்பட்டு நடைபெறுவதை உறுதிப்படுத்திட

2010 மே 14]

சங்க உறுப்பினர்களுக்கு கூட்டுறவுத் தணிக்கை முக்கியக் கருவியாக உள்ளது. அரசின் உதவி எதற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகத்தான் அது செலவிடப்பட்டு உறுப்பினர்களும், ஒட்டுமொத்த சமுதாயமும் பயன் அடைந்துள்ளதும் உறுதிப்படுத்தப்படுகிறது.

33. இத்துறை கீழ்க்கண்ட வெவ்வேறு வகையான தணிக்கைகளை மேற்கொள்கிறது:

(i) உடனிகழ் தணிக்கை

45 நாட்களுக்குள் தணிக்கையை முடிக்க இயலும் வகையில் உள்ள சிறிய கூட்டுறவுச் சங்கங்களில் மேற்கொள்ளப்படும் தணிக்கை உடனிகழ் தணிக்கை எனப்படுகிறது. தணிக்கை மேற்கொள்ளும் தணிக்கையாளரின் நிலை மற்றும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை தணிக்கை செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் நேரம் ஆகியவற்றின் அடிப்படையில் தணிக்கைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. 2009-2010ஆம் ஆண்டில் தணிக்கைக் கட்டணமாக ரூபாய் 1.40 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

(ii) அடிப்படை விதி 127-இன்கீழ் தணிக்கை

பெரிய அளவிலான கூட்டுறவு நிறுவனங்களில் அடிப்படை விதி 127-இன்கீழ் தணிக்கை செய்யப்படுகிறது. தணிக்கைப் பணியிடங்கள் எதற்காக உருவாக்கப்பட்டதோ அப்பணியினை மேற்கொண்டு அதற்கான செலவினம் சங்கங்களிலிருந்து வசூலிக்கப்படுகிறது. சங்கங்களின் தணிக்கைக்கான செலவினை 60 சதவிகிதம் அடிப்படை விதிக் கட்டணமாக நிர்ணயம் செய்து சங்கங்களிடமிருந்து அரசு வசூலிக்கிறது. 2009-2010 ஆம் ஆண்டில் அடிப்படை விதி தணிக்கைக் கட்டணமாக ரூபாய் 8.39 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

(III) சிறப்புத் தணிக்கை

இந்தத் துறையின் தணிக்கையாளர்களால் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களில் சிறப்புத் தணிக்கை

மேற்கொண்டமைக்கு கட்டணமாக ரூபாய் 1,53,74,000/-ஐ தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) ஏப்ரல் 2009 திங்களில் அரசுக்குச் செலுத்தியுள்ளது.

34. சிறப்பு அறிக்கைகள்

தணிக்கையில் கடுங்குறைகள் காணப்படும்போது அவை, அனைத்து விவரங்களும் அடங்கிய சிறப்பு அறிக்கைகள்மூலம் சம்பந்தப்பட்ட நிருவாகப் பதிவாளருக்கு உடன் தெரிவிக்கப் படுகின்றன. 2009-2010 ஆம்ஆண்டில் ரூபாய் 34.62 கோடி அடங்கிய 489 சிறப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

35. தணிக்கையின் தரத்தை மேம்படுத்த வழங்கப்பட்ட திறன் மேம்பாட்டு பயிற்சிகள்

தணிக்கையாளர்களின் திறமை, தணிக்கையின் தரம் ஆகியவற்றை மேம்படுத்த பல்வேறு வகையான பயிற்சிகளும், கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் விதிகள், அடிப்படை கொள்கைகள், வழிகாட்டுதல்கள் ஆகியவை உள்ளடக்கிய புத்தாக்கப் பயிற்சிகளும் ஆண்டுதோறும் அளிக்கப்படுகின்றன. 2009-2010ஆம் ஆண்டில் 9 பல்வேறு பயிற்சிகளின் மூலமாக 219 அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டன.

36. புதிய வட்டார அலுவலகம் தோற்றுவித்தல்

திருநெல்வேலி, கோவில்பட்டி, தூத்துக்குடி, நாகர்கோவில் மற்றும் விருதுநகர் தணிக்கை சரகங்கள் அடங்கிய புதிய திருநெல்வேலி வட்டார அலுவலகம் திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்டு 2009-2010 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை

37. 1969 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட அரசு வணிகத் திட்டங்கள் தணிக்கைத் துறையை வலுப்படுத்துவதற்காக 1992 ஆம் ஆண்டு அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை உருவாக்கப்பட்டது.

2010 மே 14]

38. தணிக்கை வரம்பு

இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்டுள்ள நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:

1.	சட்டபூர்வ நிறுவனங்கள்	10
2.	புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்ட மையங்கள்	87,361
3.	வேளாண் விரிவாக்க மையங்கள்.	885
4.	அரசுத் துறைகள்	62
5.	பிற நிறுவனங்கள் (அரசு உதவி பெறும் விடுதிகள், இல்லங்கள், தொழில் பயிற்சி நிறுவனங்கள் போன்றவை)	1,934
6.	ஆண்டுதோறும் தொடர் மானியம் ரூ. 0.20 இலட்சம் மற்றும் அதற்கு மேல், மற்றும் தொடரா மானியமாக ரூ.1.20 இலட்சம் மற்றும் அதற்கு மேல் மானியம் பெறும் அரசல்லாத நிறுவனங்கள்	707
7	அனைவருக்கும் கல்வி திட்டம் (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) வட்டார வள மையங்கள் மற்றும் நகர்ப்புற மையங்கள் (385+16)	401
	மொத்தம்	91,360

[2010 மே 14

39. அரசுத் துறைகளின் உள்தணிக்கை

இத்துறை 19 அரசுத் துறைகளின் உள்தணிக்கையை மேற்கொள்கிறது. இந்த உள்தணிக்கை அலகுகள் தங்களுக்குள்ள தணிக்கைப் பணிகளை மேற்கொள்வதுடன் நிதி மற்றும் கணக்குகள் சம்பந்தமான செயல்பாட்டு முறையை மேம்படுத்துவதற்காக ஆலோசனைகளை துறைகளுக்கும் அரசுக்கும் அளிக்கின்றன. இந்த உள்தணிக்கை அலகுகள் நிருவாகத்தினருக்கு திறமையான நிதி நிருவாகத்திற்கு உதவிடும் பொருட்டு பல்வேறு வழிகளை சுட்டிக்காட்டுகின்றன.

40. புதியதாக ஒப்படைக்கப்பட்டுள்ள தணிக்கைகள்

அண்மைக்காலத்தில் கீழ்க்கண்ட துறைகளின் தணிக்கைகள் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன:-

(அ) தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் 2006-இன் தணிக்கையை 2006-2007 ஆம் ஆண்டு முதல் இத்துறையின்மூலம் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் 59, வருவாய்த் துறை, நாள் 12-2-2009-இல் ஆணையிடப்பட்டுள்ளது.

(ஆ) தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத் தணிக்கையை 2009-2010 ஆம் ஆண்டு முதல் இத்துறையின்மூலம் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் 493, நிதித் துறை, நாள் 9-10-2009-இல் ஆணையிடப்பட்டுள்ளது.

41. சிறப்புத் தணிக்கை

அரசின் குறிப்பாணைகளின்படி ஒப்படைக்கப்பட்ட அரசுத் துறைகளின் சிறப்புத் தணிக்கைகள் முடிக்கப்பட்டுஅரசிற்கு அறிக்கைகள் அனுப்பப்படுகின்றன. இந்த சிறப்புத் தணிக்கை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2010 மே 14]

அறிக்கைகளின் அடிப்படையில் கீழ்க்கண்ட தணிக்கைகளை தொடர்ந்திட அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன:

(i) மருத்துவக் கல்வி இயக்ககத்தின் தன்வைப்புக் கணக்குகள் தணிக்கை.

(ii) விருதுநகர், உதவி தொடக்கக் கல்வி அலுவலகம் கூடுதல் உதவி தொடக்கக் கல்வி அலுவலகத்தின் 1-6-2006 முதல் 31-7-2009 வரையிலான காலத்திற்கு சிறப்பாய்வு.

42. தணிக்கைத் தடை தீர்வு

தணிக்கையின் நோக்கம் நிறைவேறுவதை உறுதிப்படுத்திட தணிக்கைத் தடைகளை நீக்குவதில் தனிக்கவனம் செலுத்தப்படுகிறது. இது மாவட்ட அலுவலர்களால் நிருவாகத் துறை அலுவலர்களுடன் அவ்வப்போது நடத்தப்படும் கூட்டமர்வுகளில் மேற்கொள்ளப்படுகிறது. இது தணிக்கைத் தடைகளை விரைந்து முடிக்கவும் தவறுகளை திருத்திக் கொள்ளவும் வழிவகை செய்கிறது. 2009-2010 ஆம் ஆண்டில் 21,047 தணிக்கைத் தடைகள் எழுப்பப்பட்டு, முந்தைய ஆண்டுகளில் எழுப்பப்பட்ட தடைகள் உள்பட 18,705 தணிக்கைத் தடைகள் தீர்வு செய்யப்பட்டன.

43. துறையை கணினிமயமாக்குதல் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்

இத்துறையின் நடவடிக்கைகளை கணினிமயமாக்குவதற்காக, அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, அப்பணிகள் நடந்தேறி வருகின்றன. இத்துறையின் பணியாளர்களுக்கு "அடிப்படை கணினி இயக்கம்" பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு V

(255 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 36—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011

1.0 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முக்கியப் பணிகளாவன:

i. ஐந்தாண்டுத் திட்டங்கள் மற்றும் ஆண்டுத் திட்டங்கள் தயாரித்தல் மற்றும் மத்திய திட்டக் குழுவுடன் இணைந்து செயல்படுதல்;

ii. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டப் பணிகள், மத்திய, மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் மாநிலத் திட்டப் பணிகள் ஆகியவற்றைக் கண்காணித்தல்;

iii. இருபது அம்சத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்;

iv. பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தல்;

v. தொலை உணர்வு நுட்பம் பயன்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்தல்;

vi. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல்;

2010 மே 14]

vii. சிறப்பு முயற்சித் திட்டங்களைத் துவக்குதல் மற்றும் செயற்படுத்துதலை மேற்பார்வையிடுதல்;

viii. தொலைநோக்குத் திட்டம் தயாரித்தல், ஐந்தாண்டுத் திட்டத்தை இடைநிலை ஆய்வு செய்தல், வளர்ச்சி குறியீட்டினை அளவிடல், பெரிய அளவிலான திட்டங்களை மதிப்பீடு செய்தல், திட்டப் பணிகளை தயாரிப்பதற்கு உறுதுணையாக இருக்கும் பொருட்டு சிறப்பு ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

ix. புள்ளி விவரங்கள் சேகரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் வெளியிடுதல். இப்பணிகளில், மாநில வருவாய் மதிப்பீடு, பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண்மைக் கணக்கெடுப்பு நடத்துதல் மற்றும் சிறப்பு ஆய்வுகள் ஆகியவைகளுடன் மாநில பொருளாதார மாதாந்திர கண்காணிப்பு ஆகியவை அடங்கும்;

x. திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல்;

xi. மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களின் அறிக்கைகளின் மீது தொடர் நடவடிக்கை எடுத்தல்;

2.0 இந்தப் பணிகள் பற்றிய சுருக்கக் குறிப்பு பின்வருமாறு:

2.1 ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகள்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து திட்ட இலக்குகளை மாநில அரசு தொடர்ந்து எய்தி வந்துள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம்

[2010 மே 14 வரையில் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

(ரூபாய் கோடியில்)

திட்டம்	ஆண்டுகள்	ஏற்பளிக்கப் பட்ட ஒதுக்கீடு	செலவினம்
முதல் திட்டம்	1951–56	86	80
இரண்டாவது திட்டம்	1956–61	186	188
மூன்றாவது மற்றும் ஆண்டுத் திட்டங்கள்	1961–69	608	613
நான்காவது திட்டம்	1969–74	552	559
ஐந்தாவது திட்டம்	1974–79	1122	1165
ஆறாவது திட்டம்	1980–85	3150	3645
ஏழாவது திட்டம்	1985–90	5750	6317
ஆண்டுத் திட்டம்	1990–91	1450	1591
ஆண்டுத் திட்டம்	1991–92	1600	1726
எட்டாவது திட்டம்	1992–97	10200	14024
ஒன்பதாவது திட்டம்	1997–2002	25000	25036
பத்தாவது திட்டம்	2002–2007	40000	43568

2.2 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007–2012)

பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், மாநிலப் பொருளாதாரத்தைச் சராசரியாக 9 சதவிகித அளவிற்கு வளர்ச்சி அடையச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு, ரூபாய் 85,344 கோடி அளவில் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2010 மே 14]

2.3 2007–2008, 2008–2009 மற்றும் 2009–2010 ஆம் ஆண்டுத் திட்டங்கள்

மத்திய திட்டக் குழு 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 14,000 கோடி என்ற அளவிலும் மற்றும் 2008-2009 ஆம் ஆண்டிற்கு, ரூபாய் 16,000 கோடி என்ற அளவிலும் திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. 2008-2009 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடானது, 2007-2008 ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் 14.29 சதவீதம் அதிகமாகும். 2009-2010 ஆம் ஆண்டிற்கு, மத்திய திட்டக் குழு, ரூபாய் 17,500 கோடி என்ற அளவிற்கு ஒப்புதல் அளித்தது. இது 2008-2009 ஆம் ஆண்டின் திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் 9.38 சதவீதம் அதிகமாகும்.

2.4 2010–2011 ஆம் ஆண்டுத் திட்டம்

ஆண்டுத் திட்டம் 2010-2011, பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நான்காவது ஆண்டாகும். 2010-2011 ஆம் ஆண்டிற்கான வரைவு திட்ட ஆவணம் ரூபாய் 20,000 கோடி என்ற உயரளவில் தயாரிக்கப்பட்டு மத்திய திட்டக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. இது பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூபாய் 85,344 கோடியில் 23.43 சதவீதம் ஆகும். இந்த முன்மொழிவு ஒதுக்கீடு, 2009-2010 ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் 14.29 சதவீதம் அதிகமாகும்.

2010-2011 ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு தொடர்பாக, மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர், ஆகியோரிடையே புது டெல்லியில் நடந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு ரூ.20,068 கோடிக்கு மத்திய திட்டக் குழு ஏற்பு அளித்துள்ளது.

2.5 திட்ட ஆய்வு

ஒவ்வொரு மாதமும், அரசினால் செயல்படுத்தப்படும் ஆண்டுத் திட்டப் பணிகளின் மாதாந்திர திட்டச் செலவினங்கள், சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைகளிடமிருந்து பெறப்படுகிறது. இத்திட்டச் செலவினங்கள் அந்தந்தத் துறைகளுடன் காலமுறையில் ஆய்வு செய்யப்பட்டு, திட்ட ஒதுக்கீட்டின் செலவுகள் 100 விழுக்காடு சாதனைகள் எய்துவதற்கு ஏதுவாகிறது.

[2010 மே 14

2.6 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள்: கண்காணிப்பு மற்றும் ஆய்வு

பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100 விழுக்காடு மத்திய அரசின் நிதியுதவியுடன்) மற்றும் மத்திய, மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவை முறையாக கண்காணிக்கப்படுகின்றன. இத்திட்டங்களின் முன்னேற்றம், மாதாந்திர அடிப்படையில் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. மத்திய அரசால் மேற்காணும் திட்டங்களுக்கு நிதி வழங்கப்படுவதை காலாண்டு அடிப்படையில் கண்காணிக்கப்படுகிறது.

2.7 இருபது அம்சத் திட்டம் – 2006: கண்காணிப்பு, ஆய்வு மற்றும் அறிக்கையிடுதல்

இருபது அம்சத் திட்டம் 1975-இல் முதன்முதலாக தொடங்கப்பட்டது. 1982 மற்றும் 1986 ஆகிய ஆண்டுகளில் இத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. மேலும், இத்திட்டம் 2006 ஆம் ஆண்டு மாற்றி அமைக்கப்பட்டு, "இருபது அம்சத் திட்டம் 2006" எனப் பெயரிடப்பட்டுள்ளது. 2007 ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து இத்திட்டக் கண்காணிப்பு நடைமுறைக்கு வந்துள்ளது.

நாட்டில் வறுமையினைப் போக்கி, ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். இத்திட்டத்தில், வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பு, கல்வி, வீட்டு வசதி, சுகாதாரம், வேளாண்மை, நிலச் சீர்திருத்தங்கள், நீர்ப்பாசனம், குடிநீர், நலிந்த பிரிவினரின் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற சமூகப் பொருளாதார அம்சங்கள் உள்ளன.

இத்திட்டத்தின் மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகள் மத்திய அரசின் புள்ளி இயல் மற்றும் திட்டச் செயலாக்க அமைச்சகத்திற்கு அனுப்பப்படுகின்றன. மத்திய அரசு மாதந்தோறும் மாநிலங்களின் செயல்பாடுகளை தரவரிசைப்படுத்துகிறது. அதேமாதிரி மாவட்ட அளவில் இத்திட்டச் செயல்பாடுகள் மாநில அரசால் தரவரிசைப் படுத்தப்படுகிறது.

2010 மே 14]

2.8 பெரிய கட்டமைப்புத் திட்டங்களை ஆய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்

தலைமைச் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்ட அலுவலர்கள் குழு, மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் பெரிய கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றத்தை முறையாக ஆய்வு செய்து கண்காணிக்கிறது. இந்த உயர்மட்ட அலுவலர்கள் குழு ரூபாய் 100 கோடிக்கும் அதிக மதிப்பீட்டிலான, மாநில மற்றும் மத்திய அரசுகளின் திட்டங்களை ஆய்வு செய்வதில் பொதுவாக கவனம் செலுத்தும்.

2.9 ஒருங்கிணைத்தல்: தொலையுணர்வு செயலாக்கம் (Remote Sensing Applications)

அரசாணை (நிலை) எண் 19, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, நாள் 15-2-1984-இல் தொலையுணர்விற்கான மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவானது 2004-இல் அண்ணா பல்கலைக்கழக தொலையுணர்வு நிறுவனத்தின் இயக்குநரை உறுப்பினர்—செயலராக நியமித்தும், 2005-இல் தலைமைச் செயலாளரை தலைவராக நியமித்தும் இருமுறை திருத்தியமைக்கப்பட்டது. இந்தக் குழுவின் நோக்கமானது மாநிலத்தில் தொலையுணர்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், நெறிமுறைப்படுத்துதல் மற்றும் அரசின் பல்வேறு செயல்பாடுகளில் புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு செயலாக்கம் ஆகியவற்றின் முழுப் பயன்பாட்டினை பெறுவதற்காக நிதியினை திறமையாகப் பயன்படுத்துதலை உறுதி செய்தலும் ஆகும்.

பல்வேறு துறைகளில் புவியியல் தகவல் அமைப்பின் செயல்பாட்டினை ஒருங்கிணைப்பதற்காகவும், தமிழ்நாட்டிற்கான புவியியல் தகவல் அமைப்பு திட்டத்தினை உருவாக்குவதற்காகவும், மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்—செயலர் அவர்களைத் தலைவராகவும், மின் ஆளுமைத் துறையின் இயக்குநரை குழு நடத்துனராகவும் கொண்டு 2006 ஆம் ஆண்டில் அலுவல் படை (Task Force) அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டின் புவியியல் தகவல் அமைப்புத் திட்டத்தின் நோக்கமானது, இயற்கை வளங்கள், சமூகப் பொருளாதாரம், மக்கள் தொகை மற்றும் வேளாண் பொருளாதாரம் குறித்த பல்வேறு தரப்பு புள்ளி விவரங்களை பயன்படுத்தி, அனைத்து மாவட்டங்களிலும் திட்டம் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக, மாவட்ட மற்றும் மாநில

[2010 மே 14

அளவிலான முறைப்படுத்தப்பட்ட ஒரு புவியியல் தகவல் அமைப்பினை உருவாக்கி செயல்படுத்துவது ஆகும்.

அலுவல் படையின் அறிக்கை 21-11-2006 அன்று சமர்ப்பிக்கப்பட்டு அரசின் அறிவுரையின்படி, அறிக்கையின் பரிந்துரைகள் களஅளவில் செயல்படுத்தும் பொருட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வு, இயற்கை வள புள்ளிவிவர மேலாண்மை அமைப்பு திட்ட நிதியுதவியுடன் கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் தேசிய தகவல் மையத்தின்மூலம் செயல்படுத்தப்பட்ட புவியியல் தகவல் அமைப்புத் திட்டம் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இறுதிப் பரிந்துரைகள் அரசின் ஏற்பிற்காக வரைவு செய்யப்பட்டு வருகின்றன.

2.10 பெருந்திட்டங்களின் பணிகளை மதிப்பீடு செய்தல்

அரசு திட்டங்களின் பயன்கள் உரிய மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்காக மதிப்பீடு செய்தல் இத்துறையின் முக்கிய பணியாகும். திட்டங்களைச் செயல்படுத்தும்போதும், திட்டங்கள் முடிவுற்ற பின்னரும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மதிப்பீடுகளைச் செய்துவருகின்றது. அம்மதிப்பீட்டாய்வுகளின் முடிவுகள் பகுத்தாய்வு செய்யப்பட்டு தேவையான திருத்தங்கள் மற்றும் கொள்கையளவில் மாற்றங்கள் ஏதேனும் இருப்பின், அரசின் சம்பந்தப்பட்ட துறைகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

2.11 இணைந்து செயலாற்றுதல்: மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள்

பல்வேறு மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் பெரும் திட்டங்களை ஆய்வு/சோதனை நடத்துவதற்காக தலைமைச் செயலகத்திற்கு வெளியே, அரசுச் செயலாளர் நிலையில் உள்ள முதுநிலை அலுவலர்கள் கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். கண்காணிப்பு அலுவலர்கள் பல்வேறு திட்டங்களில் உள்ள முட்டுக்கட்டைகளை களைவதற்கும், மாவட்ட அலுவலர்களுக்கு அதனை விரைவாகச் செயல்படுத்தவும் வழிகாட்டுவார்கள். கண்காணிப்பு அலுவலர்கள் பெருந்திட்டங்கள் மற்றும் பணிகளின் ஆய்வறிக்கைகளை நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறைக்கு வழங்குவார்கள். இந்த ஆய்வறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு மற்றும் தொகுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளின் மேல் நடவடிக்கைக்காக தலைமைச் செயலாளர் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.

2010 மே 14]

2.12. திட்டப் பணிகளை செயல்படுத்தல்:

2.12.1 மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், நீலகிரி மாவட்டத்தில் 1975ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் திட்டக் குழுவின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் செயல்பாடுகள் மலைப் பகுதியின் உயிரின சூழல்களைப் பேணுதல், பாதுகாத்தல், அதனை மேலும் வளப்படுத்துதல் ஆகிய மாநில அரசின் முயற்சிகளுக்கு உறுதுணை அளிக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், இயற்கைச் சூழலைப் பேணுவதும், இயற்கைச் சூழலை நிலைப்படுத்துவதும் ஆகும். இதன் அடிப்படையில் பல்வகை உயிரின சூழலை பேணவும், மலைவாழ் உயிரினங்களைப் பாதுகாத்து புத்துயிர் ஊட்டும் வகையிலும் அனைத்து வளர்ச்சிப் பணிகளும் திட்டமிடப்படுகின்றன. மத்திய திட்டக் குழுவின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதற்கென நீலகிரி மாவட்டம் முழுவதும் 75 பெரிய நீர்வடிப் பகுதிகளாக பகுக்கப்பட்டு, இவற்றில் 37 முன்னுரிமை நீர்வடிப் பகுதிகள் கண்டறியப்பட்டு அதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் திட்டத்தில், வடிகால்களை சுத்திகரித்தல், மழை நீரைச் சேமித்தல், ஈரப்பதத்தை தக்கவைத்தல் போன்ற சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த வேளாண்மை உற்பத்தி நடவடிக்கைகள்மூலம், குறு நீர்வடிப் பகுதிகள் மேம்படுத்தப் படுகின்றன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 19 பெரிய நீர்வடிப் பகுதிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டங்களுக்காக மத்திய திட்டக் குழு, ஆண்டு சிறப்பு மத்திய நிதி ஒதுக்கீடாக 90 சதவிகிதம் மானியமாகவும் 10 சதவிகிதம் கடனாகவும் நிர்ணயித்தது. 2005-2006 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு சிறப்பு மத்திய நிதியுதவியின் மானியத்தை மட்டும் விடுவித்து வருகிறது. கடன் பகுதி நிதிக்காக வெளிச்சந்தை கடன் பெறுவதற்கு மாநில அரசுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டு முதல் 10 சதவிகிதம் கடன் பங்கு, மாநில அரசின் பங்காக கருதப்படும். 2010-2011 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு ரூ.42.93 கோடி நிதி ஒதுக்கம் செய்துள்ளது. இவற்றில் மாநில அரசின் பங்கு ரூ.4.29 கோடியாக உள்ளது.

2009–2010 ஆம் ஆண்டின் செயல்பாடு

2009-2010 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூபாய் 42.93 கோடியாகும். இந்த முழு ஒதுக்கீட்டிற்கும் ஒப்பளிப்புகள் வழங்கப்பட்டுவிட்டன. மேற்படி நிதி ஒதுக்கீட்டில், பெருமளவு தொகை மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, தோட்டக்கலை, உள்ளாட்சிப் பகுதிகள் மேம்பாடு, சாலைகள் இணைப்பு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் மற்றும் சுற்றுலா மேம்பாடு ஆகிய திட்டப் பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

2010–2011 ஆம் ஆண்டிற்கான திட்ட செயற்குறிப்பு

2010-2011 ஆம் ஆண்டிற்கான வரைவுத் திட்டத்தினை தலைமைச் செயலர் தலைமையிலான குழுவில் ஒப்புதல் பெறப்பட்டு, மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஆண்டுத் திட்டத்தில் மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, தோட்டக்கலை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், நகரக மற்றும் ஊரக உள்ளாட்சிப் பகுதிகள் மேம்பாடு, சிறுபாசனம், சாலைகள் மற்றும் சுற்றுலா துறைகளின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. வெள்ளத் தடுப்புப் பணிகள் மற்றும் நிலச்சரிவுத் தடுப்புப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

2.12.2 மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்

மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் 1975-76-இல் இருந்து மத்திய அரசின் திட்டக் குழு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்தது. (90 சதவிகிதம் மானியம் மற்றும் 10 சதவிகிதம் கடன்). ஆண்டுத் திட்டம் 2009-2010 ல் இருந்து 90 சதவிகிதம் மத்திய அரசின் மானியமாகவும் 10 சதவிகிதம் மாநில அரசின் பங்காகவும் மாற்றப்பட்டுள்ளது.

மேற்கு மலைத் தொடர் பகுதியானது, தமிழ்நாட்டில் 26,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ளது. இது தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவில் 20 சதவிகிதமாகும். இத்திட்டம் தற்பொழுது, தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 57 வட்டாரங்களைக் கொண்ட 33 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 8 மாவட்டங்களில் தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இத்திட்டம் முழுமையாகவும் மீதமுள்ள மாவட்டங்களில் பகுதியளவிலும்

2010 மே 14]

செயல்படுத்தப்படுகின்றன. நடப்பு ஆண்டுத் திட்டம் 2010-2011 முதல் தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை ஆகிய மூன்று மாவட்டங்களில் இத்திட்டம் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாடு முகமை மூலமாக செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:-

(i) இயற்கைச் சூழலின் சமநிலையைப் பேணுதல்;

(ii) இப்பகுதியில் அபரிமிதமாகக் காணப்படும் மாறுபட்ட மரபணு உயிரினங்களைப் பாதுகாத்தல்;

(iii) மனித இனத்தால் இயற்கைச் சூழலுக்கு ஏற்பட்ட சீரழிவுகளைச் சரி செய்தல்; மற்றும்

(iv) அங்குள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுச் சூழல் சீர்கேட்டினால் ஏற்படும் அபாயம் பற்றி புரியவைத்து சுற்றுச் சூழல் வளர்ச்சிக்கான திட்டங்களில் அவர்களை தீவிரமாக பங்கு கொள்ளச் செய்தல்.

இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் முக்கிய வளர்ச்சிப் பணிகளில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, தோட்டக்கலை, காடு வளர்ப்பு, சிறுபாசனம், ஊரகச் சாலைகள், மீன்வளம், பட்டுப் புழு வளர்ப்பு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், சுற்றுலா மற்றும் விடுபட்ட உள்கட்டமைப்பு வசதிகளை பூர்த்தி செய்தல் ஆகியவை உட்பட்டுள்ளது. இந்த திட்டத்தின்கீழ், திட்டமிடல் மற்றும் வளர்ச்சிக்கான பரந்த வளவாய்ப்புள்ள பகுதி நீர்வரத்துப் பகுதி ஆகும். ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக 187 நீர்வரத்துப் பகுதிகள் கண்டறியப்பட்டு இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

2009-2010 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ.20.61 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2009-2010 ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியது போன்றே 2010-2011 ஆம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்டத்திற்கும் ரூ.20.61 கோடி மத்திய திட்டக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டின் வரைவுத் திட்டம் மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

[2010 மே 14

2.13 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்

அரசாணை (நிலை) எண் 146, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 2-11-2006-இல் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருளை அலுவல் விதிகளில் முதல் அட்டவணையில் "ஒருங்கியல் பட்டியலில்" சேர்க்கப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட அறிவுரைகள் அரசு கடித எண் 8835/மதி/2003, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 2-11-2006-இல் வெளியிடப்பட்டுள்ளன:-

I. "சிறப்பு முயற்சிகள்" என்பது ஒரு பொதுவான பொருளாகும். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் உருவாகும் எந்தவொரு திட்டத்தைவிட இது மாறுபட்டது.

II. ஒரு பொருள், ஒரு காலகட்டத்தில் சிறப்பு முயற்சியாக இருக்கலாம். அதே பொருள் பின்னர் வழக்கமான திட்டமாகவும் மாறலாம்.

III. சிறப்பு முயற்சிகள், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையினால் தன்னிச்சையாகவோ அல்லது பிறிதொரு துறையின் வேண்டுகோளின் பேரிலோ துவக்கப்படலாம். இவ்வாறு துவக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையால் சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு கையாளப்படும்.

IV. சிறப்பு முயற்சிகள், அவற்றின் இயல்பின் காரணமாக சில வெற்றிகரமான திட்டங்களாக அமையாமலும், தொடர்ந்து பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இல்லாமலும் போய்விடும். இச்சூழ்நிலையில் அவை கைவிடப்படலாம்.

V. சிறப்பு முயற்சிகளை துவக்குவது மற்றும் (அல்லது) ஒருங்கிணைப்பது, மேலும் அவற்றை முதிர்வு நிலைக்குக் கொண்டு வருவது அல்லது தொடர்ந்து பரிசீலனை செய்வதில் பயனில்லை என்பது குறித்து முடிவு செய்து

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

அவற்றைக் கைவிடுவது, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் பணிகளாகும்.

VI. ஒரு குறிப்பிட்ட சிறப்பு முயற்சி சாத்தியமானது போன்ற காரணங்களால் முதிர்வு நிலை அடைந்துவிட்டது என்று முடிவெடுக்கப்பட்டாலோ (அல்லது) திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் தொடர் கண்காணிப்பு இனி தேவையில்லை என்று கருதப்பட்டாலோ, அது சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையிடம் ஒப்படைக்கப்படும்.

அரசாணை (நிலை) எண் 10, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 18-1-2007-ல், சென்னை மெட்ரோ-இரயில் திட்டம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின்கீழ் "சிறப்பு முயற்சி" திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2.13.1 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

சென்னையில் மெட்ரோ இரயில் திட்டம் விரைவான, நம்பத்தக்க, வசதியான, திறன்மிக்க, நவீன மற்றும் சிக்கனமான பொது போக்குவரத்து அமைப்பாகவும், பெருகிவரும் போக்குவரத்துத் தேவைகளுக்கு ஒரு நீண்ட காலத் தீர்வாகவும் அமையும். இத்திட்டம் குறித்து ஒரு விரிவான திட்ட அறிக்கையினைத் தயாரிக்க அரசு ஆணையிட்டதைத் தொடர்ந்து, இப்பணி டெல்லி மெட்ரோ இரயில் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை 1-11-2007 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் ஆரம்ப வழித்தடங்களை செயல்படுத்துவதற்கு மாநில அரசின் கொள்கையளவிலான ஒப்புதல் டிசம்பர் 2007-இல் வழங்கப்பட்டது. இத்திட்டம், வண்ணாரப்பேட்டையிலிருந்து சென்னை விமான நிலையம் வரையிலான (23 கி.மீ) வழித்தடம் I, சென்னை சென்ட்ரல் முதல் புனித தோமையார் மலை வரையிலான (22 கி.மீ) வழித்தடம் II யினையும் உள்ளடக்கியது. மேற்குறிப்பிட்ட இரண்டு வழித்தடங்களிலும் ஒரு பகுதி உயர்த்தப்பட்ட பாதையாகவும் மீதமுள்ள பகுதி பூமிக்கடியிலும் அமையவுள்ளது.

இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக "சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்" என்கிற சிறப்பு வகை பொதுத் துறை

[2010 மே 14

நிறுவனத்தை இந்த அரசு உருவாக்கி, இந்திய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 3-12-2007 அன்று பதிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தை மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து கூட்டு முயற்சி அடிப்படையில் செயல்படுத்துவதற்காக மத்திய அரசு நிர்வாக ஒப்புதலை வழங்கியுள்ளது. மத்திய அரசு மற்றும் மாநில அரசின் கூட்டு முயற்சி சிறப்பு வகை நிறுவனமாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மாற்றியமைக்கப்பட்டுவிட்டது. மத்திய அரசின் சார்பில் இயக்குநர் குழுமத்தில் தற்போது உள்ளவர்கள் - மத்திய அரசின் நகர்ப்புற வளர்ச்சிச் செயலாளரை தலைவராகக் கொண்டு, நகர்ப்புற வளர்ச்சி இணைச் செயலாளர், இரயில்வே குழுமத்தின் கூடுதல் உறுப்பினர், தேசிய தலைநகர்ப் பகுதி குழுமத்தின் (National Capital Region Board) உறுப்பினர்-செயலாளர் மற்றும் செலவினத் துறையின் கூடுதல் செயலாளர் ஆகியோர்; தமிழக அரசின் சார்பில் இயக்குநர் குழுமத்தில் நியமிக்கப்பட்டவர்கள்: நிர்வாக இயக்குநர், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் நான்கு முதன்மைச் செயலாளர்கள் ஆகியோர்.

இத்திட்டத்திற்கு மத்திய அரசின் பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு 28-1-2009 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய அரசின் ஒப்பளிப்பின்படி, இத்திட்டத்தின் செலவு ரூபாய் 14,600 கோடி ஆகும். இதில் விலைவாசி உயர்வு, மத்திய அரசின் வரிகள் மற்றும் கட்டுமான காலத்திற்கான வட்டி சேர்ந்தும், மாநில அரசின் வரிகள் மற்றும் மாநில அரசின் காலி நிலங்களுக்கான விலை நீங்கலாகவும் உள்ளது. இத்திட்டச் செலவில் 59 விழுக்காடு ஜப்பான் அரசின் சலுகையிலான அரசுசார் மேம்பாட்டு கடனுதவி (ODA) மூலம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கடன் தொகையின் முதல் தவணைக்கான ஒப்பந்தம் மத்திய அரசுக்கும், ஜப்பான் அரசுக்கும் இடையே 21-11-2008 அன்று டோக்கியோவில் கையெழுத்தானது. இரண்டாவது தவணைக்கான ஒப்பந்தம் 31-3-2010 அன்று கையெழுத்தானது.

மத்திய அரசு, திட்டச் செலவில் 15 விழுக்காட்டை பங்குத் தொகையாகவும், 5 விழுக்காட்டை சார்நிலைக் கடனாகவும் வழங்கும். மாநில அரசு இதுவரை ரூபாய் 210 கோடியினை பங்குத் தொகையாகவும், ரூபாய் 840 கோடியினை கடனாகவும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒப்பளிப்பு

2010 மே 14]

வழங்கியுள்ளது. மத்திய அரசு இதுவரை தனது பங்குத் தொகையாக ரூபாய் 51.79 கோடியும், சார்நிலைக் கடனாக ரூபாய் ஒரு கோடியும், வழங்கியுள்ளது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு அமைப்பின் நிதியில், ரூபாய் 100 கோடி மத்திய அரசு வழிக் கடனுதவியாகப் பெறப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த திருவாளர்கள் ஈஜிஸ் இரயில் (M/s. EGIS RAIL) என்கிற நிறுவனத்தின் தலைமையில் ஒரு கூட்டமைப்பு, பொது ஆலோசகர்களாக செயல்பட்டு வருகின்றது. முதன்மை ஆலோசகராக டெல்லி மெட்ரோ இரயில் கழகமும் நியமிக்கப்பட்டு ஆலோசனைகள் வழங்கி வருகின்றது. 21-1-2009 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில், "இந்தத் திட்டத்தில் திருவொற்றியூரும் இணைக்கப்பட வேண்டும் என்ற அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையின் அடிப்படையில், இதற்கான விரிவான ஆய்வு உடனடியாக மேற்கொள்ளப்படும்" என்று அறிவித்திருந்தார். இது குறித்த விரிவான ஆய்வுப் பணி டெல்லி மெட்ரோ இரயில் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, அவர்களது அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. கோயம்பேட்டிலிருந்து அசோக் நகர் வரையில் 4.5 கி.மீ. நீளத்திற்கு உயர்த்தப்பட்ட வழித்தடம் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. அசோக் நகரிலிருந்து புனித தோமையார் மலை வரையிலான 4.4 கி.மீ. நீளத்திற்கும், சைதாப்பேட்டையிலிருந்து இராணுவ அலுவலர் பயிற்சி மையம் வரையிலான 5.2 கி.மீ. நீளத்திற்கும் முறையே ரூ.141.13 கோடி மற்றும் ரூ.173.30 கோடி மதிப்பில் உயர்த்தப்பட்ட வழித்தடங்கள் அமைப்பதற்கான பணி ஒப்பந்தங்கள் அண்மையில் வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

3.0 துறைத் தலைமையிடங்கள்

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள துறைகள் பின்வருமாறு:

(i) மாநிலத் திட்டக் குழு

(ii) பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை

(iii) மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

மேற்கண்ட துறைகளின் பணிகள் சுருக்கமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

[*2010 மே 14*

3.1 மாநிலத் திட்டக் குழு

3.1.1 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 25-ஆம் நாள் தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையின்கீழ் மாநிலத் திட்டக் குழு ஒரு ஆலோசனை அமைப்பாக ஏற்படுத்தப்பட்டு, மாநிலத்தின் வளர்ச்சி குறித்த பல்வேறு செயல்பாடுகளில் தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித்து வருகிறது. பேராசிரியர் மு.நாகநாதன் அவர்களைத் துணைத் தலைவராகக் கொண்டு *19-5-2006* அன்று மாநிலத் திட்டக் குழு திருத்தியமைக்கப்பட்டது. மேலும், தற்பொழுது மாநிலத் திட்டக் குழு ஒரு முழு நேர உறுப்பினரையும், ஏழு பகுதி நேர உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் நிதித் துறைகளின் அரசுச் செயலர்கள், இக்குழுவின் அலுவல்சார் உறுப்பினர்களாவர். மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர்-செயலர் இக்குழுவின் நிருவாகப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

3.1.2 தற்போதைய மாநிலத் திட்டக் குழுவின் முதன்மையான பொறுப்புகள்:

i. அரசின் முன்னுரிமைகள், கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆண்டுத் திட்டங்களையும், ஐந்தாண்டுத் திட்டங்களையும் தயாரித்தல்.

ii. ஆதி திராவிடர் துணைத் திட்டம், பழங்குடியினர் துணைத் திட்டம் ஆகியவற்றை ஐந்தாண்டுத் திட்டங்கள் மற்றும் ஆண்டுத் திட்டங்களின் உள் பகுதியாகக் கருதி உருவாக்குமாறு அரசுக்கு அறிவுரை வழங்குதல்.

iii. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தை இடைக்கால மறு ஆய்வு செய்து, திட்டங்களில் தேவையான மாற்றங்கள், திட்டங்களை திருத்தியமைத்தல் குறித்து அரசுக்குத் தெரிவித்தல்.

iv. மதிப்பீடு, செயல்முறை ஆய்வுத் துறையின்வாயிலாக, முக்கிய திட்டங்களை மதிப்பிடுதல்.

v. மாநில மனித மேம்பாட்டுக் குறியீடு, பாலின மேம்பாட்டுக் குறியீடு ஆகியவை தொடர்பான வளர்ச்சிக் காரணிகளை பல்வேறு நிலைகளில் கண்காணித்தல்.

2010 மே 14]

vi. திட்டங்கள் வகுத்திடவும், செயல்படுத்தவும் தேவையான சிறப்பு ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

vii. தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தைக் கண்காணித்து, தேவையான அறிக்கைகளை அரசுக்கு அளித்தல் .

3.1.3 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007–2012)

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் ரூ.85,344 கோடி அளவில் தயாரிக்கப்பட்டது. இந்த ஆவணம் பொது மக்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தகுதிபடைத்தவர்கள் ஆகியோருடன் கலந்து பேசி, தயாரிக்கப்பட்டது. இத்திட்ட ஆவணம் இரு பிரிவுகளாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட ஆவணத்தின் பகுதி 1 மேலோட்ட உரையையும் மற்றும் பகுதி 2 துறைவாரியான விவரங்களுடன் மாநிலத்தின் பொருளாதார நிலையையும் உள்ளடக்கிய ஆவணமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட ஆவணமானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 3-7-2008 அன்று வெளியிடப்பட்டது.

3.1.4 இடைக்கால ஆய்வு

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயல்பாடுகளை மதிப்பிட்டு, இடைக்கால திருத்தங்களை தேவையான இடங்களில் மேற்கொள்ளும் பொருட்டு இவ்ஐந்தாண்டுத் திட்டத்தின் மீது இடைக்கால ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3.1.5 2010–2011 ஆம் ஆண்டுத் திட்டம்

மாநிலத்தின் ஆண்டுத் திட்டங்கள் மாநில, மத்திய அரசுகளின் ஐந்தாண்டுத் திட்ட முன்னுரிமைகளையும், குறிக்கோள்களையும் பெரிதும் பின்பற்றி உருவாக்கப்படுகின்றன. பதினோராவது ஐந்தாண்டு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை பின்பற்றி, 2010-2011 ஆம் ஆண்டுத் திட்ட முன்வரைவு ரூ.20,000 கோடி அளவில் தயாரிக்கப்பட்டு, மத்திய திட்டக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டில் 23.43 சதவீதம் ஆகும். முன்மொழியப்பட்டுள்ள இந்த ஒதுக்கீடு 2009-2010 ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டைவிட (ரூ.17,500 கோடி) 14.29 சதவீதம் அதிகமாகும்.

[2010 மே 14

2010-2011 ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துணைத் தலைவர், மத்திய திட்டக் குழு ஆகியோருக்கிடையே புது டெல்லியில் நடந்த கூட்டத்தில் திட்ட ஒதுக்கீடு ரூ.20,068 கோடிக்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

3.1.6 புதிய திட்டங்களை மதிப்பீடு செய்தல்

ஆண்டுத் திட்டங்களைத் தயாரித்தலின் ஒரு பகுதியாக, 2010-2011 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களை மாநிலத் திட்டக் குழு மதிப்பீடு செய்தது. அனைத்துத் துறைச் செயலகங்களிலிருந்து புதிய திட்டங்களுக்கான கருத்துருக்களை மாநிலத் திட்டக் குழு பெற்று, 2009 டிசம்பர் திங்களில், அரசுச் செயலர்களுடனும், துறைத் தலைமை அலுவலர்களுடனும், புதிய திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடி, ரூ.153.36 கோடிக்கான புதிய திட்டங்களைப் பரிந்துரைத்து, அவற்றை அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்தது.

3.1.7 தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு வாரியம்

மாநில நிலப் பயன்பாட்டு வாரியம், மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவரின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. நிலம், நீர் பயன்பாடு தொடர்பான துறைகளின் அரசுச் செயலர்களும் அத்துறைத் தலைவர்களும், இக்குழுவின் உறுப்பினர்களாவர். மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர்-செயலர் இதற்கு கூட்டுத் தலைவர் ஆவார்.

இவ்வாரியம், வளமான வேளாண்மை நிலங்களைப் பாதுகாக்கவும், நீர்வளப் பயன்பாட்டினை மேம்படுத்தவும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள உருவாக்கப்பட்டது. இது தொடர்பான, பல ஆய்வுகளை, தமிழ்நாடு நிலப் பயன்பாட்டு வாரியத்தின் நிதி உதவியுடன் தொடர்புடைய துறைகள்/பல்கலைக் கழகங்கள் மேற்கொண்டுள்ளன. மாநிலத்தில் நிலம் மற்றும் நீர் பயன்பாடு குறித்து விழிப்புணர்வு இயக்கங்கள், பயிலரங்குகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் நிலப்பயன்பாட்டு வாரியத்தின் மூலம் நடத்தப்பட்டன.

மாநில நிலப் பயன்பாட்டு வாரியத்திற்கு, மத்திய அரசின் நிதியுதவி 1-8-2009வுடன் நிறுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இத்திட்டத்தினை திட்டம் சாரா செலவினத்தின்கீழ் ஒப்பளிக்க முடிவு செய்ததுடன் வேளாண்மை மற்றும் வனத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் செயல்படுத்தப்படும்.

2010 மே 14]

3.1.8 மனித மேம்பாடு

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம்-மத்திய திட்டக் குழுவின் நிதியுதவியின்கீழ் "மனித மேம்பாட்டுக்கான மாநில திட்டங்களை வலிமைப்படுத்துதல்" எனும் திட்டத்திற்கு உறுப்பினர் செயலர், மாநிலத் திட்டக் குழு ஒருங்கிணைப்பு முகமை அலுவலர் ஆவார். இத்திட்டத்தில் திண்டுக்கல், சிவகங்கை, திருவண்ணாமலை, கடலூர், மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களுக்கான மனித மேம்பாட்டு அறிக்கைகளை முழுமையாகத் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கைகள் மனித மேம்பாடு குறித்த செயல்பாட்டையும், அதன் பொருட்டு தொடர்புடைய காரணிகளின் வட்டார அளவிலான ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையில் மாவட்டங்களுக்கிடையில் கண்டறிய உதவி புரிந்துள்ளன.

இத்திட்டக் காலத்தின் முடிவில் கூடுதலாக 3 மாவட்டங்களுக்கு மனித மேம்பாட்டு அறிக்கைகள் தயாரிக்கவும், 26 மாவட்டங்களில் மனித மேம்பாடு குறித்த உணர்வூட்டல் கருத்துப் பட்டறைகள் நடத்தவும் தமிழ் நாட்டிற்கென சிறப்பு நிதியாக கூடுதல் தொகை ரூ.39.50 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த தொகை கருத்துப் பட்டறைகளுக்கு முழுமையாகப் பயன்படுத்தியதுடன் நீலகிரி, தருமபுரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 3 மாவட்டங்களுக்கான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டும் வருகின்றன.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சி செயல்முறைத் திட்டம் நிறைவு செய்தமையால், 2010-2011 ஆம் ஆண்டிற்கு நிதி உதவி தொடராது.

2010–2011 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

3.1.9 மாநிலத் திட்டக் குழு பணியாளர்களின் திறனை மேம்படுத்த கருத்தரங்குகள்/பயிலரங்குகள் நடத்தவும், உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தவும், 2010-2011ஆம் ஆண்டுக்கான பகுதி-II திட்டத்தின் கீழ் ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.2 பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை

3.2.1 பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, மாநிலத்தின் தலைமை புள்ளியியல் முகமையாகும். மாநிலம் முழுமையிலும் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதிலும், தொகுப்பதிலும்,

ஆராய்வதிலும், வேளாண்மை, தொழில், வேலைவாய்ப்பு மற்றும் விலைவாசி ஆகிய பல்வேறு பிரிவுகளின்கீழ் அறிக்கைகள் வெளியிடுவதிலும் மற்றும் புள்ளி விவரங்களைக் குறித்த செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் அமைப்பாகவும் செயல்படுவதும் இத்துறையின் முக்கிய பணிகளாகும்.

திட்டப் பணிகள் :

3.2.2 பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையால் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளாவன:

(அ) மாநில திட்டங்கள்

மேலாண்மை முறை மற்றும் விவரங்களைச் சேகரித்தலை நவீனப்படுத்துதல்

நடைமுறை நிர்வாக வசதிக்காக, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் இயக்குநரகத்தின் அனைத்து அளவிலும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. அனைத்து அலுவலர்களுக்கும் புள்ளி விவரங்களை தொகுப்பதிலும் அவற்றை உடன்நிகழ் மூலம் பரிமாற்றம் செய்யவும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. புள்ளி விவர வங்கி அமைப்பு இத்துறையில் ஏற்படுத்தப்பட்டு முக்கியமான புள்ளி விவரங்கள் மற்றும் அறிக்கைகள் தனி கணினியில் சேமிக்கப்படுகின்றன. கணினி நூலகத்தில் முக்கிய அறிக்கைகள் பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், துறையிலுள்ள பிரிவுகளில் விவரங்களின் துரித உள் பரிமாற்றத்திற்காக மிகவும் சக்திவாய்ந்த உள் அலுவலக கணினி தொடர்பு அமைக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

1. வேளாண்மைக் கணக்கெடுப்பு

வேளாண்மைக் கணக்கெடுப்பு, வேளாண்மை சார்ந்த புள்ளியியலைச் சேகரிக்கும் முக்கியப் பணியாகும். நாட்டின் வேளாண்மை குறித்த தகவல்களை பெருமளவில் சேகரித்தலும், தொகுத்தலும் ஆகியவை பெருமளவிலான புள்ளியியல் செயல்பாடாகும். இது நுண்ணிய அளவிலான வேளாண் வளர்ச்சித் துறையின் கைப்பற்றின் அளவினை முக்கிய ஆய்வு அலகாகக் கொண்டு நடத்தப்படும் கணக்கெடுப்பாகும். இது சம்பந்தமான புள்ளிவிவரங்கள், நிலப் பதிவேடுகளிலிருந்து கைப்பற்று நில உரிமையாளர்களின் சமூகநிலை, நிலப் பயன்பாடு,

2010 மே 14]

நீர்ப்பாசனத் தன்மை, பயிர் சாகுபடி முறை, குத்தகைத் தன்மை, கால்நடைகள், வேளாண்மைப் பொறிகள் மற்றும் கருவிகளின் பயன், உரப் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் பெறப்படுகின்றன. 8-வது வேளாண்மைக் கணக்கெடுப்பின் முதற்கட்ட பணி முடிக்கப்பட்டு 2 மற்றும் 3 ஆம் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 9-வது வேளாண்மைக் கணக்கெடுப்பு 2010-2011-இல் விரைவில் நடத்தப்பட உள்ளது.

2 பழம், காய்கறி மற்றும் சிறுபான்மைப் பயிர்களில் பயிர் மதிப்பீட்டாய்வு நடத்துதல்

பழம், காய்கறி மற்றும் சிறுபான்மைப் பயிர்களுக்கான ஒரு ஹெக்டேருக்கான விளைச்சல் விவரத்தை பயிர் அறுவடை பரிசோதனைகள்மூலம் நம்பகமாகக் கண்டறிந்து அதன்மூலம் பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் கணக்கிட இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், தோட்டக்கலைப் பயிர்களான மா, பலா, வாழை, கொய்யா, ஆரஞ்சு, எலுமிச்சை மற்றும் அன்னாசி ஆகிய பழவகை பயிர்களுக்கும் மற்றும் தக்காளி, வெண்டை, கத்தரி மற்றும் முட்டைகோசு ஆகிய காய்கறி பயிர்களுக்கான விளைச்சல் விவரங்கள் 555 கிராமங்களில் 1,110 பயிர் அறுவடை பரிசோதனைகள் மூலம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சிறுபான்மைப் பயிர் திட்டத்தின்கீழ், மிளகாய், வெங்காயம், மஞ்சள், உருளைக்கிழங்கு, கொத்தமல்லி, மரவள்ளிக்கிழங்கு, முந்திரி மற்றும் இஞ்சி ஆகிய பயிர்களில் 545 கிராமங்களில் 1,090 பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

3. தேசிய தொழில் நுட்ப ஆள்திறன் தகவல் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தேர்ச்சி பெற்ற பொறியியல், மேலாண்மை, மருந்தகம், உணவக மேலாண்மை நிறுவனங்கள் மற்றும் உணவகத் தொழில்நுட்பப் பயிலகங்கள், தொழில்நுட்ப ஆள்திறன் உற்பத்தி விவரங்கள், பொறியியல் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்கள் குறித்த விவரங்கள் பல்வேறு துறைகளின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் சேகரிக்கப்பட்டு தொழில்நுட்ப ஆள்திறன் சம்பந்தமாக தேவை, அளிப்பு விவரங்கள் மதிப்பிடப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 14

4. இந்திய புள்ளியியல் அமைப்பினை வலுப்படுத்தும் திட்டம்

உலக வங்கி நிதி உதவியுடன் புள்ளியியல் சார்ந்த பணிகளை வலுப்படுத்துவதற்கான திட்டம் கீழ்க்கண்ட இனங்களில் முனைப்புடன் செயல்படுத்தப்படவுள்ளது:

- புள்ளியியல் பணிகளை ஒருங்கிணைத்து அதன் மேலாண்மையினை மேம்படுத்துதல்.
- மனித வளத்தினை மேம்படுத்துதல் மற்றும் புள்ளியியல் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
- தகவல் தொழில்நுட்பவியலை உள்ளடக்கிய செயல் இலக்குடன் உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துதல் மற்றும்
- புள்ளிவிவரங்களை பரவலாக்குவதுடன் புள்ளியியல் செயல்பாட்டினை மேம்படுத்துதல்.

மைய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகம் இந்திய புள்ளியியல் அமைப்பினை வலுப்படுத்தும் திட்டத்திற்கான முகமை அமைச்சகமாகும். மாநில அரசு இத்திட்டத்தில் பங்கேற்பதற்கான இசைவினை பங்கேற்பு கடிதத்தின் வாயிலாக மைய அரசுக்கு தெரிவித்துள்ளது. இத் திட்டத்தை செயல்படுத்த 'மாநில நெறிப்படுத்தும் குழு' அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான மாதிரி முன்மொழிவு திட்டம் மத்திய அரசிற்கு மாநில நெறிப்படுத்தும் குழுவின் ஒப்புதலுக்குப் பின் அனுப்பப்படவுள்ளது.

(இ) மத்திய மற்றும் மாநில அரசால் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டங்கள்

1. பயிர் பரப்பு உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம்

ஒவ்வொரு ஆண்டும் 20 விழுக்காடு கிராமங்களில் மாதிரி அடிப்படையில் நில உபயோகப் புள்ளிவிவரங்களைக் கணக்கெடுத்து, மூன்று பருவத்திலும் பயிர்வாரியாக உயர் ரகம் மற்றும் உள்ளூர் ரகம் வாரியாகவும், நீர் பாய்ச்சப்பட்ட பரப்பில் பயிர் பரப்பு மதிப்பீடு செய்யப்படுகிறது. புள்ளியியல், வேளாண்மை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களால் கூட்டாக (புல எண் வாரியாக) 20 விழுக்காடு கிராமங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஆய்வின்போது காணப்படும் குறைபாடுகள்

2010 மே 14]

மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய திருத்தங்களை கிராம நிர்வாக அலுவலர்களால் பராமரிக்கப்படும் கிராமப் பதிவேடுகளில் திருத்தம் மேற்கொள்ள ஆவனச் செய்யப்படுகிறது.

1419 பசலியில் 3,457 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, காரீப் பருவத்திற்கான பரப்பு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் கூடுதல் புள்ளியியல் ஆலோசகருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2. பயிர் புள்ளிவிவர மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் வேளாண்மைப் புள்ளியியல் சேகரித்தலில் உள்ள குறைபாடுகளைக் கண்டறியும் பொருட்டு முதன்மைக் கள அலுவலர்களான கிராம நிர்வாக அலுவலர்களின் பணிகளை மாநில அரசு அலுவலர்களாலும், மத்திய அரசு அலுவலர்களாலும் சிறப்பான மேற்பார்வைப் பணி மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டங்களை சிறப்புற மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் ஆலோசனை வழங்கப்படுகின்றன. மேலும், இத்திட்டம் குறிப்பிடத்தக்க அளவில் பயிர் அறுவடைப் பரிசோதனைகளை மேம்படுத்த உதவும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. நில அளவைப் பதிவேடுளை புள்ளியியல் ஆய்வாளர்களால் கூட்டு ஆய்வு மேற்கொள்ளும்போது அதில் காணப்படும் முரண்பாடுகள் வருவாய்த் துறை ஆணையருக்கும், அனைத்து மாவட்ட வருவாய் அலுவலருக்கும் அனுப்பப்படுகிறது.

(அ) பயிர் பரப்பில் மாதிரி ஆய்வு (ஏ.எஸ். 1.0 படிவம்)

2008-2009 ஆம் ஆண்டில் பயிர் பரப்பாய்வுப் பணிக்காகத் தேர்வு செய்யப்பட்ட மத்திய மற்றும் மாநில மாதிரிகள் ஒவ்வொன்றிற்கும் 260 கிராமங்களுக்கான முடிவுகள் மூன்று பருவங்களுக்கும் பெறப்பட்டு, இறுதி அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு பரிதாபாத்தில் உள்ள மத்திய தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டன.

(ஆ) அடங்கல் பதிவேட்டின் பக்கவாரியான கூட்டுத்தொகை (ஏ.எஸ்.1 . 1 படிவம்)

ஒவ்வொரு பக்கவாரியாக சாகுபடி செய்யப்பட்ட பயிர்களின் பரப்பு விவரங்களின் கூட்டுத் தொகை தேர்வு செய்யப்பட்ட 260

கிராமங்களில் சரிபார்க்கப்பட்டு, இறுதி அறிக்கை பரிதாபாத்தில் உள்ள மத்திய தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

(இ) பயிர் அறுவடை பரிசோதனை மேற்பார்வைப் பணி (ஏ.எஸ்.2 . 0)

1418 ஆம் பசலியில் மத்திய மற்றும் மாநில மாதிரிகளில் 780 அறுவடைப் பரிசோதனை முடிவுகள் பெறப்பட்டு, இறுதி அட்டவணை பரிதாபாத்திலுள்ள தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டன.

திட்டம் சாரா பணிகள்

3.2.3 இத்துறையால் மேற்கொள்ளப்படும் திட்டம் சாராத பணிகளாவன: மாநில வருவாய் மதிப்பீடு, மாநிலக் கணக்கு, மூலதன ஆக்கம், ஆண்டுத் தொழில் ஆய்வு, மாதாந்திர தொழில் உற்பத்திக் குறியீட்டெண், பருவமும் பயிரும் அறிக்கை, பயிர் முன் மதிப்பீட்டறிக்கை, உணவு மற்றும் உணவு அல்லாத பயிர்களின் பயிர் மதிப்பீட்டு ஆய்வு, தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம், தென்னை மற்றும் கமுகு ஆய்வு, மழைப் புள்ளியியல் சேகரித்தல், நீர்ப்பாசனப் புள்ளியியல், வேளாண்மைக் கூலி குறியீட்டெண், வீட்டு வசதி புள்ளியியல், கட்டுமானப் பொருட்களின் விலைக் குறியீட்டெண், நகராட்சி ஆண்டுக் கையேடு, மாவட்டப் புள்ளியியல் கையேடு, வெளியீடுகள்-தமிழ்நாடு புள்ளியியல் கையேடு, ஆண்டுப் புள்ளி இயல் சுருக்கக் கையேடு, கைத்தறி, ஆள்திறன் மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம், அயல்நாட்டு வாணிபம், அங்காடிப் புலனாய்வு மற்றும் விலைவாசி, தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டெண், மொத்த விலைக் குறியீட்டெண், சுற்றுச்சூழல் புள்ளியியல், விற்பனை மிகுதித் திட்டம், தோட்டத் தொழிலாளர் ஆய்வு, நுகர்பொருள் ஆய்வு மற்றும் தேசிய மாதிரி ஆய்வு.

3.2.4 அரசு மக்களுக்கு வழங்கும் அடிப்படை வசதிகள் குறித்த கணிப்பாய்வு

அரசு பொது மக்களுக்கு அளித்து வரும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் தரமான சேவையாக அமைவதைக் கணிக்கும் பொருட்டு, குடிநீர், சுகாதாரம், கல்வி, குடிமைப்பொருள் வழங்கல், சாலைகள், போக்குவரத்து வசதி மற்றும் அங்கன்வாடி

2010 மே 14]

மையங்கள் குறித்து அரசு அறிவுறுத்துதலின்பேரில் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஆய்வு, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மற்றும் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையால் கூட்டாக மேற்கொள்ளப்படுகின்றன.

3.2.5 இலாப நோக்கமற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் குறித்த ஆய்வு

இலாப நோக்கமற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் வருவாய் ஆதாரம், உறுப்பினர்கள் பங்கேற்பு மற்றும் அவர்களால் மேற்கொள்ளப்படும் நலத் திட்டங்கள் குறித்த ஆய்வு மேற்கொள்ள எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வாய்வு மத்திய அரசின் 100 விழுக்காடு நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படுகிறது. மாநிலம் முழுவதும் சுமார் 1,35,062 இலாப நோக்கமற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இவ்வாய்வில் உட்படுத்தப்படுகிறது.

3.2.6 மாநிலப் புள்ளி இயல் குழு

மாநிலப் புள்ளி இயல் குழுவானது, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் குறித்த வழிமுறைகள், சேகரிக்கப்படும் புள்ளிவிவரங்கள், அவற்றைப் பயன்படுத்தும் தன்மைகள் ஆகிய அனைத்தையும் குறித்து மேற்பார்வை செய்கிறது. மாநிலப் புள்ளியியல் குழுவானது அரசு ஆணை (நிலை) எண் 156, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 15-11-2006ல் மீள அமைக்கப்பட்டு குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

3.2.7 2010–2011 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

பகுதி-II திட்டத்தின்கீழ், 2010-2011 ஆம் ஆண்டிற்கு, பொருளியல் புள்ளியியல் துறையில் உள் கட்டமைப்பு வசதியை வலுப்படுத்த ரூபாய் 40.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.3. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

3.3.1 பெருமளவிலான வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் நிதியளித்து

நிறைவேற்றி வருகிறது. அந்தத் திட்டங்களின் தாக்கம் மற்றும் பயன்களை மதிநுட்பத்துடன் மதிப்பீடு செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அதன்படி மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை *1972* ஆம் ஆண்டு முதற்கொண்டு மதிப்பீட்டாய்வுகளை மேற்கொண்டு கொள்கைகள் வகுப்பது மற்றும் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு அரசுக்கு உதவி வருகிறது. மேலும் இத்துறை இம்மாநில பொருளாதார நிலையை தொகுப்பாய்வு செய்து அறிக்கைகளை தயாரித்து அரசுக்கு அளிக்கிறது.

3.3.2. இத்துறையின் முக்கியப் பணிகளாவன:

i. மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

ii. குறிப்பிட்ட பிரிவுகளில் திட்டங்களைச் சிறப்பு மதிப்பீடு செய்தல் மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்; மற்றும்

iii. வருடாந்திர வெளியீடுகளான `தமிழ்நாடு பொருளாதார ஆய்வு' மற்றும் தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு `பொருளாதாரம் மற்றும் பணிவாரியான பகுப்பாய்வு மேற்கொள்ளல்.

3.3.3. தமிழ்நாட்டில் மாநில, மத்திய அரசுகள் மற்றும் உலக வங்கி நிதி உதவியுடன் நடைபெற்று வரும் திட்டங்கள், டானிடா திட்டம், சிடா திட்டம், ஐரோப்பிய பொருளாதாரக் கழகத் திட்டங்கள், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை மற்றும் பன்னாட்டு வளர்ச்சிக் கழகத் திட்டங்கள் ஆகியவை இத்துறையால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. மேலும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களும் அவற்றின் வேறுபட்ட உட்கூறுகளும் தொடர்ச்சியாக மதிப்பீட்டாய்வு செய்யப்படுகின்றன. இவை தவிர, குறுகிய கால உடனடி மதிப்பீடுகளும் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2010 மே 14]

3.3.4. கீழ்க்கண்ட நோக்கங்களைக் கண்டறிவதற்காக மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன:

i. திட்ட வடிவமைப்பு

ii. திட்ட செயல்முறை மற்றும் செயல் விளைவுகளை மதிப்பிடல்

iii. செயல் இலக்கு மற்றும் நிதி இலக்கில் காணப்படும் முன்னேற்றம்

iv. திட்ட நோக்க நிறைவேற்றம்

v. திட்டப் பயன்கள் குறிப்பிட்ட பயனாளிகளைச் சென்றடைகின்றனவா என்று ஆய்வதுடன் செலவழிக்கப்படும் தொகைக்கு உரிய மதிப்பிலான பயன்கள் ஏற்பட்டனவா என்று ஆய்தல்.

ஆய்வின்மூலம் கண்டறியப்பட்ட முடிவுகளும், ஆலோசனைகளும் திட்டத்தைச் செயல்படுத்துபவர்கள் திட்டத்தை நன்கு செயல்படுத்த உதவுகின்றன. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை குறித்த இடைக்கால மதிப்பீட்டாய்வுகளின்மூலம் மத்திய அரசு நிதியினைத் தொடர்ந்து பெற ஏதுவாகிறது. இத்துறை மேற்கொண்ட தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம்-I ஆய்வின்மூலம் அத்திட்டத்தின் செயல்பாட்டினையும் பயன்பாடுகளையும் அறிந்து கொள்ள முடிந்ததோடு அத்திட்டத்தின்-II-க்கான நிதியை பன்னாட்டு நிதி நிறுவனமான ஜப்பான் வங்கியிடமிருந்து பெறவும் முடிந்தது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை குறித்த மதிப்பீட்டாய்வுகளின்மூலம் அதற்கென மத்திய திட்டக் குழுவினால் தோற்றுவிக்கப்பட்ட சிறப்புப் பணிப் பிரிவு உரிய முடிவுகளை எடுக்க முடிகிறது. நிதி வருவாயைப் பெருக்கும் நோக்கத்தை முக்கியமாகக் கொண்டு மதிப்புக் கூட்டு வரி ஆய்வறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள நீர்ப்பாசனப் பரப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கான ஆய்வறிக்கைகள் வேளாண் பொறியியல் துறையால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கணிசமான அளவுக்குக் குழு வியாபாரங்களை மேம்படுத்திக் கொள்ளத் திட்டம் உதவியுள்ளதாகவும், வருவாய் தரும் புதிய உற்பத்தித் தொழில்களைத் தொடங்க வகை செய்துள்ளதாகவும், சுய உதவிக் குழுவினர்க்கான எழுத்தறிவுத் திட்ட மதிப்பீட்டறிக்கை விளக்கியுள்ளது. அதைப் போலவே, கல்வி,

[2010 மே 14

சுகாதாரம், வேளாண்மை, நீர்ப்பாசனம், ஆதி திராவிடர் மற்றும் மலை ஜாதியினர் நலம், பொது வழங்கல் முறை, அரசு வழங்கும் அடிப்படை வசதிகள் குறித்த மதிப்பீட்டு ஆய்வுகள் ஆகியவை இத்திட்டங்களின் செம்மையான செயல்பாட்டுக்கு உதவுகின்றன.

3.3.5. இத்துறை தொடங்கப்பட்டதிலிருந்து, ஜனவரி 2010 ஆம் ஆண்டு வரை, பல்வேறு துறைகளைச் சார்ந்த 613 மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துறைகளாவன: சத்துணவு, சுகாதாரம், நீர்ப்பாசனம், வேளாண்மை, காடு வளர்ப்பு, கல்வி, வீட்டு வசதி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், தோட்டக்கலை, போக்குவரத்து, அடிப்படை வசதிகள், இன்ன பிற.

2010–2011 ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டம்:

3.3.6. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் மற்றும் அலுவலர்களின் பணித் திறனை உயர்த்திடவும் ரூ.14.00 இலட்சம் பகுதி-II திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:

i. வெளி நிபுணர்கள்மூலம் மதிப்பீட்டாய்வுகளை மேற்கொள்ளல்;

ii. கணினி மற்றும் அதனைச் சார்ந்த இதர துணைப் பொருட்கள் வாங்குதல்; மற்றும்

iii. நூலகத்திற்கு நூல்கள் வாங்குதல்.

3.3.7. 2010–2011 ஆம் ஆண்டிற்கான ஆய்வுகள்:

2010-2011 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளையும் சார்ந்த 20 ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், பாசனப் பரப்பு வளர்ச்சித் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம், ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம், நீர்ப்பாசனம், அடிப்படை வசதிகள், இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம், அனைத்துக் குழந்தைகள் கல்வித் திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவை தவிர, தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை மற்றும் தமிழ்நாடு பொருளாதாரம் மற்றும் பணிவாரியான பகுப்பாய்வும் வெளியிடப்படவுள்ளன.

இணைப்பு VI

(255 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண் 50—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011

இம்மானியக் கோரிக்கையில் பின்வரும் பெருந் தலைப்புகள் அடங்கியுள்ளன:—

	(ரூபாய்)
2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	*9,984,75,06,000*
2235. சமூகப் பாதுகாப்பும் நலனும்	*15,77,35,000*
மொத்தம்	*10,000,52,41,000*

2. இந்த மானிய கோரிக்கையின்கீழ் இடம் பெறும் முக்கியமான செலவினம், அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு மானிய உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் அளிப்பது தொடர்பானதாகும். இந்த மானியக் கோரிக்கையில், ஓய்வூதிய இயக்குநரகத்தின் செயல்பாடுகள், விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவப் படை பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள் அளிப்பதும் அடங்கும். இந்த மாநிலத்தில், *31-12-2009* ஆம் நாள் நிலவரப்படி, சுமார் *6,58,482* பேர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுகின்றனர். இம்மாநிலத்தில் உள்ள ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் குறித்த விவரம் வருமாறு:

		கருவூலம் மூலம்	வங்கிகள் மூலம்	மொத்தம்
1.	மாநில அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள்	3,26,963	43,225	3,70,188
2.	ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள்	72,683	6,329	79,012
3.	அரசுப் பணியாளர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள்	1,46,312	7,453	1,53,765
4.	ஆசிரியர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள்	28,484	1,197	29,681
5.	ஓய்வூதியம் பெறும் ஏனைய வகையினர்	25,589	247	25,836
	மொத்தம்	6,00,031	58,451	6,58,482

3. ஓய்வூதியம்

(i) ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்சத் தகுதி பணிக்காலம் 10 ஆண்டுகளாகும். முழு ஓய்வூதியம் பெற குறைந்தபட்ச பணிக்காலம் 33 ஆண்டுகளாக இருந்ததை 30 ஆண்டுகளாக 1-4-2003 முதல் குறைத்து அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், அரசுப் பணியாளர்கள் 1-4-2003 முதல் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது கடைசி 10 மாத பணிக்கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவீதம், இதில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது.

(ii) 1-1-2006 முதல், குறைந்த அளவு ஓய்வூதியத் தொகை மாதம் ரூபாய் 3,050/- என ஆணையிடப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 14]

4. பணிக்கொடை

(i) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக தகுதிப் பணி புரிந்தவர்களுக்கு, அவர்கள் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவுற்ற ஒவ்வொரு ஆறு மாத காலப் பணிக்கும் ½ மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் இப்பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது, ஆற்றிய பணிக்காக அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப் பணிக்கொடையுடன் சேர்த்து ஒரே நேரத்தில் வழங்கப்படுகிற ஒட்டுமொத்தத் தொகையாகும்.

(ii) இறப்புப் பணிக்கொடை

அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போதே மரணமடையும் நேர்வில், பின்வரும் வீதங்களில் இறப்பு பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:—

பணிக்காலம்	பணிக்கொடையின் வீதம்
1. ஓராண்டுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் இரு மடங்கு
2. ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் ஆறு மடங்கு
3. ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் பன்னிரண்டு மடங்கு
4. இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக	அதிகபட்சம் மாத ஊதியத்தில் 33 மடங்கு என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரை மாதச் சம்பளம். ஆனால், அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக்கொடை உயரளவுத் தொகையாக ரூ.10 இலட்சமாக 1-1-2006 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

[2010 மே 14

(iii) ஓய்வுகாலப் பணிக்கொடை

ஒருவர், ஐந்தாண்டும் அதற்கு மேலும் தகுதிப் பணியை முடித்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது உயரளவாக மாத ஊதியத்தில் 16½ மடங்கு என்ற அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாத தகுதிப் பணிக்கும் மாத ஊதியத்தில் நான்கில் ஒரு பங்கு ஓய்வுகாலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்பை 1-1-2006-லிருந்து ரூபாய் 3.50 இலட்சத்திலிருந்து உயரளவுத் தொகையாக ரூபாய் 10 இலட்சமாக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், 1-4-1998 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியின் அடிப்படையில் பணிக்கொடை கணக்கிடப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது. 1-1-2006 முதல் அடிப்படைச் சம்பளம் என்பது தர ஊதியத்தையும் உள்ளடக்கியதாகும்.

5. குடும்ப ஓய்வூதியம்

அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போது அல்லது ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்துவிட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் தம்முடைய பணிக்காலத்தில் ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றியிருக்க வேண்டும். அரசுப் பணியாளர் பணியில் இருக்கும்போது இறக்கும் நேர்வுகளில், குடும்ப ஓய்வூதியம், அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 விழுக்காடு, அவர் இறந்த பின்னர் 7 ஆண்டுகள் வரை வழங்கப்படுகிறது. அதன் பின்னர் குடும்ப ஓய்வூதியம் அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 30 விழுக்காடாக அளிக்கப்படும். மேலும், அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும்போது இறந்துவிடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால் அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன் அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும்.

2010 மே 14]

ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் இறக்கும் போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும். இருப்பினும், ஓய்வுபெற்ற பிறகு இறந்துவிடும் நேர்வுகளில் 10 ஆண்டிற்குக் குறைவாகப் பணியாற்றி ஓய்வூதியத்திற்குத் தகுதியில்லாதவர்களின் குடும்பங்களுக்கும் குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

விதவைக்கு / மனைவியை இழந்த கணவனுக்கு, அவர் மறுமணம் செய்துகொள்ளும் வரையில் அல்லது இறக்கும் வரையில், இதில் எது முந்தையதோ அதுவரையில் அவருக்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு, அவருடைய குழந்தைகளுக்கு 25 வயது ஆகும் வரையிலோ அல்லது அவர்கள் திருமணம் செய்துகொள்ளும் வரையிலோ, இதில் எது முந்தையதோ அதுவரை குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. எனினும் அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட பொருள் ஈட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மன நலம் குன்றியவராக அல்லது மனநலமற்றவராக இருந்தாலோ, மாற்றுத் திறனாளியாக அல்லது ஏலாமையுற்றவராக இருந்தாலோ அவருக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும்.

1-1-2006 முதல் குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியம் மாதம் ரூபாய் 3,050/- என உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

6. கருணைத் தொகை வழங்குதல்

வருங்கால வைப்பு நிதிக்கு பங்குத் தொகை செலுத்தி இறந்துவிட்ட பணியாளர் / மாநில அரசின் ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்தவர்களின் குடும்பங்களுக்கும், 1-1-1986-க்கு முன் பணியிலிருந்து ஓய்வுபெற்ற / பணியிலிருக்கும் போது இறந்துவிட்ட முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியில்லாத நபர்களுக்கும் 1-11-1997 முதல் ரூபாய் 31/- அகவிலைப்படியுடன் சேர்த்து மாதமொன்றுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை ரூபாய் 150/-லிருந்து ரூபாய் 605/- ஆக உயர்த்தி அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. இவர்கள், 1-1-1998 முதற்கொண்டு வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வையும் பெறத் தகுதியுடையவர்கள்.

[2010 மே 14

7. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தல்

ஓய்வூதியம் பெறுவோர், தமது ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியாக $33\frac{1}{3}$ விழுக்காடு வரையிலான ஓய்வூதியத் தொகையினை ஒட்டுமொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் அவர்கள் விண்ணப்பித்திருந்தால், மருத்துவப் பரிசோதனை இல்லாமல், ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற நாளும், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றுக்கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின் அவ்வாறு ஓய்வு பெற்றவர் அவர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது ஓய்வு பெற்ற பிறகு இரண்டாவது மாதத்திலோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால் அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் பெற்றிட அரசு அனுமதியளித்துள்ளது.

8. ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள்

(i) ஓய்வு பெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பில், உயரளவு 240 நாட்களுக்கான ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்து விடுப்புச் சம்பளம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(ii) ஓய்வு பெறும்போது, பணியாளர் கணக்கில் உள்ள சொந்த அலுவலுக்கான விடுப்பில், அதிகபட்சமாக 180 நாட்களை 90 நாட்களாக மாற்றி முழு சம்பளத்திற்கு ஒப்படை செய்து ரொக்கம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(iii) ஈட்டிய விடுப்பின் முழு அளவினையும், சொந்த அலுவல்கள் குறித்த அரை சம்பள விடுப்பினையும் காசாகப் பெற அடிப்படைச் சம்பளத்துடன் அகவிலைப் படியும், வீட்டு வாடகைப் படியும் நகர ஈட்டுப் படியும் சேர்த்துக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது.

2010 மே 14]

(iv) ஓய்வு பெறும் பணியாளர் ஓய்வு பெற்ற பின்னர் தன்னுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் சென்று வசிக்க விரும்பும் ஊருக்குச் செல்வதற்கான பயணப்படி வழங்கப்படுகிறது.

9. ஓய்வூதியம் பெறுவோருக்கான ஏனைய பயன்கள்

(அ) அகவிலைப்படி

(i) ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவது போலவே அகவிலைப்படி வழங்கப்படுகிறது.

(ii) மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் இராணுவ ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப்படியுடன், மாநில அரசின் ஓய்வூதியத்திற்கான அகவிலைப்படியையும் சேர்த்துப் பெற அனுமதிக்கப் படுகின்றனர்.

(ஆ) மருத்துவப்படி

ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு 1-6-2009 முதல் திங்களொன்றுக்கு ரூ.100/- மருத்துவப் படி வழங்கப்படுகிறது.

தற்காலிக ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் அகவிலைப்படி மற்றும் மருத்துவப்படி பெற அனுமதிக்கப் படுகின்றனர்.

(இ) பொங்கல் பரிசு

அரசு (அனைத்திந்தியப் பணி உட்பட), மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் உட்பட ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அனைவருக்கும் ஒட்டுமொத்த பொங்கல் பரிசுத் தொகையாக ரூபாய் 300/-லிருந்து ரூபாய் 500/- 2010 ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்குகிறது.

10. ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம்

தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதி என்ற ஒரு நிதியை ஏற்படுத்தி, ஓய்வூதியம் பெறுவோருக்கு சிறப்பு மருத்துவ

[2010 மே 14

சிகிச்சை / அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்காக அந்நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கும்பொருட்டு, 1-7-1995 முதல் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஓய்வூதியதாரர்களிடமிருந்து மாதமொன்றுக்கு ரூபாய் 100/- பிடித்தம் செய்யப்படுகிறது. ஓய்வூதியதாரர் மேற்கொள்ளும் மொத்த மருத்துவச் செலவினத்தில் 75 விழுக்காடோ அல்லது ரூபாய் 1,00,000/-, இவற்றில் எது குறைவோ அத்தொகை இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது. ஓய்வூதியதாரர்களின் மனைவி / கணவர் ஆகியோருக்கும் இத்திட்டம் 17-2-2009 முதல் விரிவுபடுத்தி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் மனைவி / கணவர் இருவருடைய ஒட்டுமொத்த மருத்துவச் செலவினத்தின் உயரளவாக ரூபாய் 1,00,000/-ஆக அனுமதித்தும் ஆணையிடப்பட்டுள்ளது. அரசு வெளியிட்ட பட்டியலில் உள்ள சிறப்பு சிகிச்சை / அறுவை சிகிச்சையை பட்டியலில் இல்லாத தமிழ்நாட்டில் உள்ள மருத்துவமனையில் மேற்கொண்டாலும் அச்செலவினத்தை மாவட்ட மருத்துவ அலுவலர் / ஊரக மருத்துவ நல இயக்குநர் / மருத்துவக் கல்வி இயக்குநர் ஆகியவர்களின் உரிய சான்றுடன் திரும்ப அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் இதர மாநிலங்களில் உள்ள மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும் சிகிச்சை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் இல்லாத சிகிச்சை மேற்கொள்ளப்படும் நேர்வுகளிலும், மாவட்ட மருத்துவ அலுவலர் / மருத்துவக் கல்வி இயக்குநர் ஆகியோரின் சான்றினை வலியுறுத்தாமல், மருத்துவச் செலவினத்தை திரும்ப அளிக்க ஆணையிடப்பட்டுள்ளன. இதனால் அதிக அளவில் ஓய்வூதியதாரர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகின்றனர். 28-2-2010 வரை ஓய்வூதியதாரர்களிடமிருந்து பெறப்பட்ட 70,610 விண்ணப்பங்களுக்கு ரூபாய் 103.24 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் ரூபாய் 8 இலட்சம் வரை அரசு உதவித் தொகை வழங்குகிறது. மேலும் தேங்கியுள்ள விண்ணப்பங்களைத் தீர்வு செய்யும்பொருட்டு கூடுதல் மானியமாக இத்திட்டம் துவங்கியதிலிருந்து இதுவரை ரூபாய் 33.68 கோடி இத்திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

2010 மே 14]

இத்திட்டத்தில் குடும்ப ஓய்வூதியதாரரையும் அவர்கள் விருப்பத்தின்பேரில், அவர்களின் குடும்ப ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூபாய் 75/- பிடித்தம் செய்து, செப்டம்பர் 2009 முதல் சேர்க்க ஆணையிடப்பட்டுள்ளது.

11. ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்

தமிழ்நாடு அரசு, ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் என்றதொரு திட்டத்தை 1-1-1997 முதல் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி, ஓய்வூதியம் பெறுவோர் இறக்கும் காலம் வரை அவர்தம் ஓய்வூதியத்திலிருந்து மாதந்தோறும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதிக்கு ஒரே சீராக ரூபாய் 70/- பிடித்தம் செய்யப்படுகிறது. இந்த நிதி 1-1-1998லிருந்து செயல்படுத்தப்படுகிறது. இந்த நிதிக்கு ஓர் ஆண்டு தொகை செலுத்திய பிறகு இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு ரூபாய் 25,000/- வழங்கப்படும். 31-1-2010 முடிய இத்திட்டத்தில் 92,197 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. ரூபாய் 230.49 கோடி அளவிற்கு, இறந்துபோன ஓய்வூதியரின் குடும்பங்களுக்கு குடும்பப் பாதுகாப்பு நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

12. தமிழ்நாடு அரசு சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம், 1984

இந்தத் திட்டம் 1.4.1984 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதம் ரூபாய் 20/- வீதம் 148 மாதங்கள் வரை அரசுப் பணியாளரிடம் பிடித்தம் செய்யப்பட்டு, அத்தொகை பணியிலிருந்து ஓய்வுபெறும்போது, அவர் செலுத்திய சந்தாத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக ரூபாய் 10,000/-மும் சேர்த்துக் கொடுக்கப்படுகிறது. அரசு பங்குத் தொகை 15-9-2000 முதல் ரூபாய் 5,000/-லிருந்து ரூபாய் 10,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

11-145—20

13. தமிழ்நாடு அரசு பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000

இத்திட்டம் 1-10-2000 முதல் துவக்கப்பட்டது.

அ. 30-9-2000 வரை அரசுப் பணியில் உள்ள அனைத்து நிரந்தரப் பணி அரசு அலுவலர்களும் விருப்பத்தின்பேரில் இத்திட்டத்தில் சேரலாம். இத்திட்டத்தில் ரூபாய் 50/- வீதம் மாதந்தோறும் செலுத்தி, ஓய்வு பெறும் மாதத்திற்கு முன்மாதம் வரை செலுத்தலாம். அத்தொகை ஓய்வு பெறும்போது வட்டியுடன் திரும்ப வழங்கப்படுகிறது.

ஆ. இத்திட்டம் 1-10-2000 அன்றும், அதற்குப் பின்னும் பணியில் சேருபவர்களுக்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மாதச் சந்தா தொகை ரூபாய் 70/- ஆகும். இத்தொகையுடன் வட்டியும், அரசின் பங்குத் தொகை ரூபாய் 10,000/-மும் பணியில் இருந்து ஓய்வுபெறும்போது வழங்கப்படுகிறது.

ஓய்வூதிய இயக்ககம், இத்திட்டத்தின் வரவு—செலவு மதிப்பீடு செய்து கண்காணித்து வருகிறது. வரவு—செலவுத் திட்டத்தில் அரசால் அனுமதிக்கும் தொகையை, ஓய்வு பெறும் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு, (அரசு உதவி பெறும் பள்ளிகள் / கல்லூரிகள் / தொழில்நுட்பக் கூடங்கள் தவிர) அந்தந்தத் துறைகள் மூலம் இத்திட்டச் செலவு மேற்கொள்ளப்படுகிறது.

14. உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்

அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்றே ஓய்வுக்காலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

2010 மே 14]

15. கடந்த ஆண்டுகளில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பயன்கள் குறித்து ஏற்பட்டுள்ள செலவு வருமாறு:—

ஆண்டு	ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பயன்கள் குறித்த மொத்த செலவு	மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் சதவீதம்
	(ரூபாய் கோடியில்)	
2000-2001	2927.24	15.48
2001-2002	3050.48	16.07
2002-2003	3488.20	16.86
2003-2004	3279.96*	13.84
2004-2005	3921.05	13.78
2005-2006	4488.83	13.22
2006-2007	5461.68	13.35
2007-2008	6038.96	12.71
2008-2009	7776.21	14.13
2009-2010 திருத்திய மதிப்பீடு	8067.54	14.86
2010-2011 திட்ட மதிப்பீடு	10000.52	15.85

* நிலுவைத் தொகை வழங்குவது தள்ளி வைக்கப்பட்டதன் காரணமாக குறைந்தளவு செலவினம்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 14

16. பங்களிப்புத் தொகையுடன்கூடிய ஓய்வூதியத் திட்டம்

1-4-2003 ஆம் நாளுக்குப் பின்னர் பணியில் சேர்ந்துள்ள புதிய பணியாளர்கள் பங்களிப்புத் தொகையுடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். 1-4-2003க்குப் பின்னர் பணியில் புதியதாக பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளர்களிடமிருந்து புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு சந்தாவாக அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப் படியில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது (திருத்திய ஊதிய விகிதங்கள், 2009-ன்படி ஊதியம் திருத்தி அமைக்கப்பட்ட பின்னர் அடிப்படை ஊதியம் என்பது தர ஊதியத்தையும் உள்ளடக்கியதாகும்). இந்தத் திட்டத்தின்கீழ் அதற்கு சமமான அளவு அரசு பங்குத் தொகை செலுத்துகின்றது. மாநிலக் கணக்காயர் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகளைத் தற்போது நிர்வகித்து வருகிறார்.

ஓய்வூதிய இயக்ககம்

17. தமிழ்நாடு அரசு ஓய்வூதிய விதிகள். 1978-ன்படி ஓய்வூதியம் பெறுவதற்குரிய பணி புரிந்து, ஓய்வூதியம் பெறத் தகுதியுள்ள மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஓய்வுபெற்றபின், ஓய்வுபெற்ற காலம் வரை நிர்ணயிக்கும் மற்றும் அவ்வப்போது அரசு அனுமதிக்கும் ஓய்வூதியப் பலன்களில் மறு நிர்ணயம் செய்யும் ஓய்வூதியம், ஒப்பளிப்பு வழங்கும் அலுவலரால் மாநில தலைமைக் கணக்காயர் மூலம் அனுமதிக்கப்பட்டு இந்த ஓய்வூதியத்தை கருவூலம் / சார் கருவூலம் / ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் மற்றும் பொதுத் துறை வங்கிகள் மூலம் பெற்று வருகின்றனர். மேலும் பணி முடித்த ஓய்வூதியதாரர்களைத் தவிர, பணியில் இருக்கும்போது இறக்கும் அரசுப் பணியாளர்கள் மற்றும் மறைந்த ஓய்வூதியதாரர்களின் மனைவி / கணவர் அல்லது தகுதியுள்ள மகள் / மகன் ஆகியவர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. ஓய்வூதியதாரர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் குறைகளைத் தீர்ப்பதற்கும், அவர்களுடைய ஓய்வூதியப் பலன்களை விரைவாகப் பெறுவதற்கும், அவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கு ஒரு தனித் துறை தேவை என அரசு கருதியது.

அதன்படி, அரசு 1-9-1994 முதல் ஓய்வூதிய இயக்ககத் துறையை உருவாக்கியது. இவ்வியக்ககம் நிதித் துறை கூடுதல் செயலாளர்

2010 மே 14]

நிலையில் உள்ள அலுவலரை இயக்குநராகக் கொண்டுள்ளது. இயக்குநரைத் தவிர ஒரு இணை இயக்குநர், ஒரு துணை இயக்குநர், ஒரு கணக்கு அலுவலர், ஒரு உதவிக் கணக்கு அலுவலர், பிற அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்களின் துணையுடன் இவ்வியக்ககம் இயங்குகிறது. இந்த இயக்ககம், கீழ்க்கண்ட பணிகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

1. மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஓய்வூதிய குறைகளைத் தீர்த்தல்.

2. ஓய்வூதியதாரர்களின் குறைகளை, ஓய்வூதிய லோக் அதாலத் அமைப்பு மூலம் தீர்த்தல்

3. அனைத்து துறைத் தலைவர்களும் / தலைமை அலுவலர்களும் ஓய்வூதிய கருத்துருவினை மாநிலக் கணக்காயருக்கு உரிய நாளில் அனுப்பினார்களா என்பதனை உறுதி செய்தல் மற்றும் ஆய்வு செய்தல்

4. மாநிலக் கணக்காயர் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு, ஓய்வுபெறும் நபர்களுக்கு, ஓய்வு பெறும் நாளன்று, அனைத்து ஓய்வூதிய பயன்களும் தாமதமின்றி பெற்றிட ஆவன செய்தல்.

5. ஓய்வூதியதாரர்கள் கோரும் தெளிவுரைகளை வழங்கிடல்.

6. அரசுத் துறைகளின் தொழிற்சாலை பணியாளர்களின் சேம நல நிதித் திட்டம் தொடர்பான பணிகளை நிர்வகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்

7. தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நல நிதித் திட்டம், 1995 நிர்வகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

8. குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம், 1997-ஐ நிர்வகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

9. தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984-ன் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு செய்தல் மற்றும் இத்திட்டத்தை கண்காணிக்கும் பணி.

10. தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000-த்தின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு செய்தல் மற்றும் இத்திட்டத்தைக் கண்காணிக்கும் பணி.

11. ஓய்வூதிய இயக்ககத்தில் பணிபுரிவோரின் ஊதியம் மற்றும் இதர பயன்களின் வரவு-செலவுத் திட்டம் மதிப்பீடு செய்தல் மற்றும் துறைக் கணக்குகளை சம்பளக் கணக்கு அலுவலகம் மற்றும் மாநிலக் கணக்காயர் கணக்குகளுடன் ஒத்திசைவு பணி செய்தல்.

12. அமைப்புசாரா தினக்கூலியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொது மக்களுக்கான தமிழ்நாடு அரசு சமூகப் பாதுகாப்புத் திட்டம், 1974-ஐ நிர்வகித்து நிறைவேற்றுதல்.

ஓய்வூதியதாரர்கள் குறை தீர்வு

ஓய்வூதிய இயக்ககத்தின் மூலம் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்த்தல்

18. பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஓய்வூதியதாரர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலமாகவும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலமாகவும் பெறப்படும் மனுக்கள் மீது உரிய கவனம் செலுத்தப்பட்டு, ஓய்வூதியதாரர்களின் குறைகள் உடனடியாக தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. 2008 ஆம் ஆண்டில் முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலம் பெறப்பட்ட 627 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 509 மனுக்களில் 459 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 28-2-2010 வரை பெறப்பட்ட மொத்தம் 350 மனுக்களில் 253 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. 28.2.2010 வரை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் பெறப்பட்ட 497 மனுக்களில் 495 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. 2009-2010-ல் பல்வேறு மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட 781 ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

19. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தங்களது மாவட்டங்களில் நடத்துகின்றனர். இக்கூட்டத்தில், இயக்குநர்

2010 மே 14]

அல்லது இணை இயக்குநா பங்கேற்று, அம்மாவட்டத்திலுள்ள ஓய்வூதியதாரர்களின் குறைகள் கேட்டறியப்பட்டு, அவற்றை விரைந்து களைந்திட மாவட்ட ஆட்சியருக்கு உதவி புரிகின்றனர். ஓய்வூதிய பலன்கள் தொடர்பான கோப்புகள் மாநிலக் கணக்காயர் அலுவலகத்தில் நிலுவையிலிருந்தால் அவற்றை விரைந்து முடித்திட இவ்வியக்ககத்தால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டவாரியான குறை தீர்க்கும் மனுக்கள்மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மாவட்டங்களில் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டு, துறைவாரியாக ஓய்வூதியதாரர்களின் குறைகள் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஓய்வூதியதாரர் அதாலத்

20. ஓய்வூதியதாரர்களின் குறை தீர்ப்பதற்கென்று லோக் அதாலத் உயர் நீதிமன்ற வளாகத்திலுள்ள தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணையத்தால் 22-2-2002 முதல் அமைக்கப்பட்டு செயல்படுகிறது. ஓய்வூதிய அதாலத் முன்பு வைக்கப்படும் ஓய்வூதியதாரர் குறைகள்மீது வழங்கப்படும் உத்தரவினை செயல்படுத்த தொடர் நடவடிக்கை எடுத்திட, அரசு, ஓய்வூதிய இயக்குநர் சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாநிலக் கணக்காயர் பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழுவினை அமைத்துள்ளது. ஓய்வூதிய இயக்குநர் ஓய்வூதிய அதாலத் ஒருங்கிணைப்பு அலுவலராவார் (Nodal Officer). மாதம் இரு முறை இந்த அதாலத் நடைபெறுகிறது. 28-2-2010 வரை 1,089 ஓய்வூதியதாரர் மனுக்கள் விசாரிக்கப்பட்டு 976 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளன.

ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், தொடர்பு வங்கி அலுவலர்கள் மற்றும் ஓய்வூதிய சங்கங்கள் தொடர்பான கூட்டம்

21. ஓய்வூதிய இயக்குநர், ஓய்வூதியதாரர் சங்கப் பிரதிநிதிகளின் முன்னிலையில் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் மற்றும் தொடர்பு வங்கி அலுவலர்களுடன் மாதாந்திர கூட்டங்கள் நடத்தி, ஓய்வூதியதாரர்களுக்கு வங்கிகள் மூலம் செயல்படுத்தப்படும் பொதுத் துறை வங்கித் திட்டம் மூலமும், ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மூலம் செயல்படுத்தப்படும் முன்னோடித் திட்டம் மூலமும், ஓய்வூதியம் பெறுவதில் ஏற்படும் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன.

[2010 மே 14

ஓய்வூதியர்களின் வழிகாட்டி

22. ஓய்வூதியப் பயன்கள், அவ்வப்பொழுது அரசால் அரசாணை மூலம் வழங்கப்படும் முக்கியமான ஓய்வூதியப் பலன்கள் மற்றும் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் கருத்துரு அனுப்ப வழிகாட்டுதல் ஆகியவற்றை ஓய்வூதியதாரர்கள் தெரிந்துகொள்ளும் பொருட்டு வழிகாட்டி ஏடு ஒன்று தயார் செய்யப்பட்டு இணையதளத்தில் **(www.tn.gov.in/dop)** வெளியிடப்பட்டுள்ளது. ஓய்வூதியப் படிவங்கள் இணையதளத்தில் இருந்து உடனடி உபயோகத்திற்காக பெற்றுக் கொள்ளலாம். மின் அஞ்சல் மூலமாகவும் இத்துறையினை தொடர்பு கொள்ளலாம். இத்துறைக்கான மின் அஞ்சல் குறியீடு **dop@tn.nic.in**

ஓய்வூதிய இயக்குநரக கணினிமயமாக்கம் – கணினி நிர்வாகம்

23. தேசிய தகவல் மையம் உருவாக்கிய மென்பொருளைக் கொண்டு, மருத்துவ நிதி உதவித் திட்டம் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் தேவையான அடிப்படை விபரங்கள் அளிக்கப்பட்டு, ஒப்பளிப்பு ஆணைகள் வெளியிடப்படுகின்றன. அதைப்போன்று, ஏற்கெனவே கணினிமயமாக்கப்பட்டுள்ள குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டமும், தொழிலாளர் சேம நல நிதித் திட்டமும் தேசிய தகவல் மையத்தால் சிறு மாற்றங்களுடன் முழுமைப்படுத்தி, கணினிமயமாக்கப்பட்டு விரைவில் பயன்பாட்டுக்கு வரும். ஓய்வூதியதாரர்களுக்கு தகவல் அறியும் முறையை வலுப்படுத்த கியாஸ்க் (KIOSK) என்ற தகவல் அறியும் சாதனம் அரசால் 2009-2010-க்கான பகுதி II திட்டத்தில் ரூபாய் 1.30 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டு ஓய்வூதிய இயக்ககத்தில் நிறுவப்பட்டுள்ளது. இச்சாதனம் விரைவில் ஓய்வூதியதாரர்களின் உபயோகத்திற்கென அளிக்கப்படும். இத்தகைய ஓய்வூதியதாரர்களின் நலத் திட்டங்களில் பெறும் உதவிப் பணத்தை மின்னணு பணப் பட்டுவாடா முறையில் (ECS) இந்திய ரிசர்வ் வங்கி மூலமாக அவரவர் வங்கிக் கணக்குகளில், கணினி மூலம் நேரடியாக பணம் பட்டுவாடா செய்யும் ஏற்பாட்டை நடைமுறைப்படுத்த தேசிய தகவல் மையம், ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், கருவூலங்கள் மற்றும் வங்கி அலுவலர்களோடு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணினி மூலம் பணம் பட்டுவாடா செய்வதன் மூலம், காசோலை மூலம் பணம் அனுப்புவது நிறுத்தப்பட்டு, உடனடியாக வங்கிகள் மூலம் அவரவர் வங்கிக் கணக்குகளில் பணம் வரவு செய்யும் ஏற்பாடு

2010 மே 14]

செய்யப்படும். மேலும் தேசிய தகவல் மையம் இயக்குநரக இணையதளம் மூலம் மேற்படி நலத் திட்டங்களில் உதவி பெற மனு அளித்த பின் ஒப்பளிப்பு, பணப் பட்டுவாடா போன்ற நிலவரம் அறிய இணையதள மென்பொருள் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் ஓய்வூதியதாரர்களின் தகவல் அறியும் முறை மேலும் வலுப்பெறும்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், முன்னாள் இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய பயன்கள்

24. விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு நமது நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட தியாகிகளுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் உதவிகள் வழங்குவதில் தமிழ்நாடு அரசு எப்பொழுதும் முன்னுரிமை அளித்து வருகிறது. அவர்களின் நலனுக்காக விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்குதல், மருத்துவ வசதி, இலவசப் பேருந்து வசதி அளித்தல், வீடுகள் ஒதுக்கீடு மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளித்தல் போன்ற பல திட்டங்களை தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

25. விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டம் 1-10-1966 முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறையில் அடைக்கப்பட்டவர்களும், துப்பாக்கி சூடு அல்லது சுதந்திரப் போராட்டத்தின்போது காவலர் தடியடி ஆகியவற்றில் இறப்புற்றோ அல்லது நிரந்தரமாக ஊனமுற்றவர்களோ விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். மேலும், இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும், 1946ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், மதுரை சதித்திட்ட வழக்கில் சிறைத் தண்டனை அடைந்தவர்களுக்கும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், சுதந்திரப் போராட்டத்தின்போது பிடியாணை பிறப்பிக்கப்பட்டதைத் தவிர்ப்பதற்காகத் தலைமறைவாக இருந்து சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களும் சொத்து பிணை செய்யப்பட்டவர்களும்

[2010 மே 14

அல்லது பறிமுதல் செய்யப்பட்டவர்களும், அரசுப் பணியிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டவர்களும், விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாக இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளில் ஒன்றான மூன்று மாத கால சிறைவாசம் என்பது 1-4-1980 முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. இந்த ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்ச வரம்பு 11-3-1983 முதல் நீக்கப்பட்டது.

26. விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறும் நடைமுறைகளை அரசு மேலும் எளிமையாக்கியுள்ளது. அதாவது சிறைத் தண்டனைக்கான ஆவணங்கள் கிடைக்காத நிலையில், 1980 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்பு பதவி வகித்த சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கும் 'சக-கைதி' சான்றிதழ்கள, மனுதாரர்கள் சிறை தண்டனை அனுபவித்ததற்கான ஆதாரமாக 1-4-1980 முதல் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால், இந்த முறையில் சில குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால், இவ்வாறு சட்டமன்ற உறுப்பினர்களால் வழங்கப்படும் 'சக-கைதி' சான்றினை ஏற்கும் முறை 1988ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. பொதுத் (அரசியல் ஓய்வூதியம்) துறையின் 16-11-1988 நாளிட்ட அரசு ஆணையின்படி, மாநிலம் முழுவதற்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பதினைந்து சான்றாளர்களுள் எவரேனும் இருவரிடமிருந்து 'சக-கைதி' சான்று பெற்று விண்ணப்பிக்கலாம். பின்னர், 7-2-1996 நாளிட்ட அரசாணையின்படி மாவட்ட அளவிலான சீராய்வுக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டு, அக்குழுவின் தலைவராக மாவட்ட ஆட்சியரும், துணைத் தலைவராக மாவட்ட வருவாய் அலுவலரும், மூன்று முதன்மையான தியாகிகள் உறுப்பினராகவும் செயல்படுகின்றனர். விடுதலைப் போராட்ட ஓய்வூதியம் கோருபவர், தாம் சிறைத் தண்டனை அடைந்த காலத்தில் 18 வயது நிரம்பியவராக இருந்திருக்க வேண்டும்; மேலும், அரசால் அங்கீகரிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட மாவட்ட சான்றாளர் ஒருவரிடமிருந்து சக-கைதி சான்றிதழ் பெற்று விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். அரசால் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி மாவட்ட சீராய்வுக் குழுவினால் இந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, அரசுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் பரிந்துரை செய்யப்படும். பின்னர், அந்த விண்ணப்பங்கள் அரசால் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியான விடுதலைப் போராட்ட

2010 மே 14]

வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்க ஆணை பிறப்பிக்கப்படுகிறது. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்ட விவரம் இணைப்பு-I-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

27. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 15-8-2009 அன்று தனது சுதந்திரத் திருநாள் உரையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் தியாகி கக்கன் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களை முன்னிட்டு சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியம் மாதம் ரூபாய் 4,000/- என்பதை ரூபாய் 5,000/- என்றும்; அவர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்பட்டு வந்த குடும்ப ஓய்வூதியம் மாதமொன்றிற்கு ரூபாய் 2,000/- என்பதை மாதமொன்றிற்கு ரூபாய் 2,500/- என்றும் 1-9-2009 முதல் உயர்த்தி வழங்கிட அறிவிப்பு வெளியிட்டார்கள்.

28. மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர் இறக்க நேரிட்டால், இந்த ஓய்வூதியத் தொகையானது அன்னாரின் மனைவிக்கு / கணவருக்கு / உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. மேற்படி ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனாயிருந்தால் 18 வயதுக்கு மேலும், மகளாயிருந்தால் 21 வயதுக்கு மேலும், சுயமாய் சம்பாதித்து வாழமுடியாத அளவிற்கு மனவளர்ச்சி குன்றியவராகவோ அல்லது மாற்றுத் திறனாளியாகவோ இருக்க நேர்ந்தால், அவர்களது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இந்த குடும்ப ஓய்வூதியத் தொகையும் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு–II-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

29. விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு நாட்டிற்காக குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புறப் பணியாற்றிய மேலோரின் தியாகத்தைப் பாராட்டி அவர்களது வாரிசுகளுக்கும் சிறப்பு ஓய்வூதியமானது அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்படி, சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின்

[2010 மே 14

வழித்தோன்றல்கள், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான வழித்தோன்றல்கள், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வழித்தோன்றல்கள் ஆகியோருக்கு மாதம் ஒன்றிற்கு ரூபாய் 500/- வீதம் அரசியல் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசு மேற்கண்ட சிறப்பு ஓய்வூதியத்தை ரூபாய் 500/-லிருந்து மாதமொன்றிற்கு ரூபாய் 1,000/- ஆக உயர்த்தி 1-12-2008 முதல் வழங்கி வருகிறது. தற்பொழுது, சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் 132 பேர்கள், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான வழித்தோன்றல்கள் 7 பேர்கள், மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வழித்தோன்றல்கள் 76 பேர்களுக்கு உயர்த்தப்பட்ட சிறப்பு ஓய்வூதியம் ரூபாய் 1,000/- மாதமொன்றுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பயனாளிகள் சிறப்பு ஓய்வூதியத்தை அவர்கள் வாழ்நாள் முழுவதும் பெறுவார்கள்.

30. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

(அ) மருத்துவ வசதிகள்:

மத்திய அரசிடமிருந்தோ அல்லது மாநில அரசிடமிருந்தோ அல்லது இரண்டு அரசுகளிடமிருந்தோ ஓய்வூதியம் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் / விதவைகளுக்கும் / உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 15/- வீதம் மருத்துவப்படி வழங்கப்படுகிறது. மேற்கூறிய விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் இலவச மருத்துவ வசதி மற்றும் 'அ' வகுப்பு வார்டு வசதிகள் வழங்கப்படுகிறது.

(ஆ) போக்குவரத்து வசதி:

மத்திய மற்றும் மாநில அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், விடுதலைப் போராட்ட வீரர்களின்

2010 மே 14]

விதவைகள் மற்றும் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) வீட்டு வசதி:

